சித்த

# வைத்திய திரட்டு

[Siddha Pharmacopoeia – TAMIL]

(நான்காம் பதிப்பு)

ஆசிரியர்கள் :

டாக்டர் க. நா. குப்புசாமி முதலியார், H.P.I.

டாக்டர் க. சு. உத்தமராயன், H.P.I.M.

...ரி நிலையம்
...ட்டை·சென்னை·600001

LC
N79
103660

சித்த

# வைத்திய திரட்டு

[ Siddha Pharmacopoeia - TAMIL ]

( நான்காம் பதிப்பு )

ஆசிரியர்கள் :

டாக்டர் க. நா. குப்புசாமி முதலியார், H.P.I.M.

டாக்டர் க. சு. உத்தமராயன், H.P.I.M.

பாரி நிலையம்

184. பிராட்வே · சென்னை · 600001

நான்காம் பதிப்பு: ஜனவரி, 1979

பதிப்பு: உரிமை உடையது.

விலை ரூ. 12-50

ARCHIVES
103660
MADRAS

அச்சிட்டோர்: கற்பகம் அச்சகம், சென்னை-600002.

# பதிப்புரை

சித்தர்கள் நெறி என்பது தமிழ்நாட்டுக்கே பெருமை தரத் தகுந்ததும், தமிழ் நாட்டிலேயே தோன்றிச் செழித்ததுமான ஒரு செம்மையான வாழ்வு நெறியாகும்.

உடலையும் உள்ளத்தையும் நலத்துடனும் வளத்துடனும் முறைப்படுத்தி, அதன்வழி உயிரையும் உயர்த்தியவர்கள் சித்தர்கள். அவர்கள் நெறிகளின் தனித்தன்மை நுட்பமும் திட்பமும் செப்பமும் நிரம்பியதாகும்.

தாம் அறிந்து அநுபவித்துப் பலன் கண்ட உண்மைகளை எல்லாம், உலகத்தார் அறிந்து பயன்படுத்தி மகிழுமாறு, அவர்கள் பல நூல்களையும் செய்துள்ளார்கள். அவை சித்தர் நூல்கள் என வழங்கும்.

யோக ஞான தத்துவ நுட்பங்களுடன், உடல் நோய்களை நீக்கும் எண்ணற்ற மருந்து முறைகளும் அந் நூல்களில் காணப்படுகின்றன. அவை, எல்லா மக்களையும் நல்லுடலோடு நலமாக வாழச் செய்யும் அரிய மருத்துவச் செல்வங்களாகும்.

தமிழ் நாட்டில் பரம்பரை பரம்பரையாகச் சித்த மருத்துவ ஞானம் தொடர்ந்து விளங்கி வருகின்றது. சித்த மருத்துவத்துறையில் ஆயிரக்கணக்கானவர் ஈடுபட்டு, ஆங்காங்குள்ள மக்களுக்கு நோய் நீக்கி நலம் அளித்து வருகின்றார்கள்.

அவர்களுக்கும், சித்த மருத்துவத்தில் ஆர்வமுள்ள பிறருக்கும் பயன்படுமாறு, சிறந்த முறையிலே திரட்டப் பட்டு வெளிவருவது சித்த வைத்தியத் திரட்டு என்னும் இந் நூல் ஆகும்.

இந்திய மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவத் துறையில் டாக்டர்களாகவும் ஆசிரியர்களாகவும் பல ஆண்டுகள் பணியாற்றியும், எண்ணற்ற நோயாளர் களின் நோய்களை நீக்கியும், அநுபவ முதிர்ச்சி பெற்ற டாக்டர்கள் **க. நா. குப்புசாமி முதலியார்** அவர்களும், டாக்டர் **க. சு. உத்தமராயன்** அவர்களும் இந்தத் திரட்டைத் தொகுத்து அளிக்கின்றனர்.

சித்தர்களின் பாடல்களுடனும், தெளிவான உரை யுடனும், செய்ம்முறைகளும் மருந்துகளால் தீரும் நோய் களும் விளக்கமாக அனைவருக்கும் எளிதாகப் புரியும் படியும், அவரவர்களே செய்து அநுபவிக்கும்படியும் இத் திரட்டை அமைத்துள்ள ஆசிரியர்களுக்கு நன்றி பாராட்டுவது தமிழகத்தின் கடமையாகும்.

முதல் மூன்று பதிப்புகள் முன்னரே வெளிவந்து விற்பனையாகியுள்ளன. இந்த நான்காம் பதிப்பு நன்கு முறைபடுத்தி அச்சிடப்பெற்று வெளிவருகின்றது. இதனை வெளியிட அநுமதியளித்த ஆசிரியர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகும்.

இந்நூல் நன்முறையில் வெளிவருவதற்கு, ஒழுங்கு படுத்தியும், அச்சுப் படிவங்களைத் திருத்தியும் தந்த **ஆசிரியர் புலியூர்க்கேசிகன்** அவர்கட்கும் எங்கள் நன்றி.

தமிழ் மக்களும், சித்த மருத்துவர்களும், மருத்துவ மாணவர்களும் இதனை விரும்பி வரவேற்றுப் பயன் பெறுவார்கள் என்று நம்புகின்றோம்.

**பாரி நிலையத்தார்**

# முகவுரை

செந்தமிழ் நாட்டின் சித்தர்கள், மக்கள் நீடுழி நோய் இன்றி வாழும்வண்ணம் செய்த நூல்கள் யாவும், "சித்த மருத்துவ நூற்கள்" எனப்படும். இம் மருத்துவ நூற்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் இயற்றினவைகளாகை யால், அவைகள் சிதைவுண்டிருந்தன. இம் மருத்துவத்தைக் கைப்பற்றிவந்த மருத்துவப் பெரியார்கள், தமக்குக் கிடைத்த வற்றை எழுதிவைத்தனர். காலப்போக்கில், அச்சுப்பொறி வந்தபின்னர், அந்நூல்களை ஒழுங்குபடுத்தாது, கிடைத்தது கிடைத்தவாறே அச்சிடலாயினர். ஆதலின், இன்றைக்கு நமக்குக் கிடைக்கும் சித்தநூற்கள் யாவும்,ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் சிதைந்து காணப்படுகின்றன. மருத்து வம் செய்வோரும், அவரவர் மனப்பான்மையேபோல உவந் தவற்றைப் படித்தலும், மருந்துகளைச் செய்தலுமாகவே இருந்துவருகின்றனர்.

இக் குறையை நீக்கும்பொருட்டே, சித்தர் அருளால், 1925-ஆம் ஆண்டில், சென்னையில் முதல் மந்திரியாய் இருந்த பனகல் ராஜா அவர்களின் முயற்சியால், இறையாளர் இந்திய மருத்துவப் பள்ளியை நிறுவினர் போலும். இப் பள்ளியை நிறுவியபின்னர், அந்நாள் சித்த வகுப்பின் தலைமை ஆசிரியராக இருந்த, காலஞ்சென்ற வைத்தியரத்தினம் **க. ச. முருகேச முதலியார்** அவர்கள், தம் ஊக்கத்தினாலும் உழைப்பினாலும் பல நூற்களை ஆராய்ந்து ஒழுங்குபடத் திரட்டிச் சில நூற்களை வெளியிட்டனர்; சீர்திருத்தங்களும் சில வந்தன. அவற்றுள் ஒன்று: மருந்துகளைச் செய்வோர் அவரவர் மனப்பான்மையேபோற் செய்தலும், ஒரு மருத்துவர் கொடுக்கும் மருந்தின் குணம்

முதலியவற்றை மற்ற மருத்துவர் அறியாதிருத்தலுமான குறையை நீக்கும் பொருட்டாக, பிரிட்டிஷ் பார்மகோபீயாவில் மருந்துகளின் பெயர், மருந்துகளின் செய்வகை, மருந்துகளின் அளவு, தீரும் நோய்கள் முதலியன கூறப்பட்டவைகளையே பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் வழங்கல் வேண்டும் என்ற விதிப்படியே, சென்னை இறையாளரால் அமைக்கப்பட்ட எல்லா மருந்துச் சாலைகளிலும், அவர்களால் குறிப்பிட்ட மருந்துகளையும், அவைகளைச் செய்யும் முறைகளையுமே வழங்கல்வேண்டும் என்ற ஒரு வரையறையைச் செய்தனர்.

Authorised list of prepared medicines, drugs and medicinal plants to be used in the Hospital and Dispensaries maintained or aided by Government or Local bodies or by both-Issued under G. O. No. 2411. P. H. of 4-10-29.

இவ் விதிக்கிணங்க, மருந்துகளின் பெயர், செய்முறைகள், துணைமருந்துகள், தீரும் நோய்கள் யாவற்றையும் பல நூல்களைக் கொண்டு ஆராய்ந்து தேர்ந்தெடுத்துச் சிலமுறைகளையும், அந்நாளில் பெயரும் புகழுமோடு வாழ்ந்த பெரிய மருத்துவர்கள் ஆண்டு அனுபவித்த முறைகளையுஞ் சேர்த்து, அதனிலும் மருந்து செய்தலில் கேடின்றி எளிதில் செய்து முடிக்கக் கூடியதுமான முறைகளைத் தொகுத்து, ஓர் பட்டியலும் அத்துடன் வெளியாகியது.

இப் பட்டியலில் கூறிய மருத்துகளின் தலைப்புக்களின் படியே, அவைகளைக் கூறும் பாடல்களைச் சித்தர் நூற்களிலிருந்து திரட்டி, "சித்த வைத்தியத் திரட்டு" என்ற பெயரால், 1933-ஆம் ஆண்டில் எம்மால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது.

இச் சித்தவைத்தியத் திரட்டிலுள்ள மருந்து வகைகளே, இறையாளரால் அமைக்கப்பட்ட எண்ணிறந்த



மருத்துவ சாலைகளிலும், ஏனைய மருத்துவர்களாலும் கையாளப்பட்டு, மருத்துவர்களுக்கும் நோயுற்றோர்களுக்கும் அன்று முதல் இன்றைய வரையில் நற்பலனை அளித்து வந்தது.

இந்நூல் முதற்பதிப்பு வெகுநாட்களுக்கு முன்பே விலையாகி விட்டமையால் இரண்டாம் பதிப்பை உரையுடன் வெளியிட்டோம். இப் பதிப்பு உரையுடன் இருந்ததால் மருத்துவர்கட்கும், மருத்துவ மாணவர்கட்கும் பயன் மிகுதியாக அளித்து வந்தது.

1951-இல் வெளிவந்த இரண்டாம் பதிப்பிற்குப் பின்னர், 1966-இல் மூன்றும் பதிப்பு வெளிவந்தது. இப்போது, 1979-இல் நான்காம் பதிப்பாகச் சிறந்த முறையில் வெளிவருகின்றது.

சித்த மருத்துவத்திற்கான பல தொண்டுகள் புரிந்த காலஞ்சென்ற, **வைத்திய இரத்தினம் க. ச. முருகேச முதலியாரின் நினைவாக** இந்நூல் வெளியாகிறது.

இந்நூலை அழகாகவும் பிழையின்றியும் அச்சிட்டு வெளியாக்கிய பதிப்பகத்தார்க்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

**க. நா. குப்புசாமி முதலியார்**

**க. சு. உத்தமராயன்**

## பொருளடக்கம்


| எண் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மாத்திரைகள் | ... | 1 |
| 2. | பற்பங்கள் | ... | 84 |
| 3. | செந்தூரங்கள் | ... | 151 |
| 4. | சுண்ணங்கள் | ... | 186 |
| 5. | கருப்புகள் | ... | 187 |
| 6. | பதங்கங்கள் | ... | 192 |
| 7. | மெழுகு, குழம்பு முதலியவைகள் | ... | 197 |
| 8. | சூரணங்கள் | ... | 246 |
| 9. | வடகங்கள் | ... | 267 |
| 10. | கற்பங்கள் | ... | 271 |
| 11. | இரசாயனங்கள் | ... | 275 |
| 12. | இலேகியங்கள் | ... | 277 |
| 13. | நெய்கள் | ... | 290 |
| 14. | வெண்ணெய்கள் | ... | 299 |
| 15. | மணப்பாகுகள் | ... | 301 |
| 16. | தயிலங்கள் | ... | 303 |
| 17. | குடிநீர்கள் | ... | 341 |
| 18. | தீநீர்கள் | ... | 347 |
| 19. | புகைநீர்கள் | ... | 348 |
| 20. | கண்ணிலிடும் மருந்துகள் | ... | 350 |
| 21. | மூக்கிலிடும் மருந்துகள் | ... | 354 |
| 22. | வெளிமருந்துகள் | ... | 356 |


# சித்த வைத்தியத் திரட்டு

## 1. மாத்திரைகள்

### 1. அமுர்தாதி குளிகை

எண்சீர் விருத்தம்

இதனைப்பார் அதிமதுரங் கோஷ்டம் ஏலம்
    இனியகோ ரோசனையுஞ் சாத்திர பேதி
இதனைப்பார் சண்பகப்பூ மாசிக் காயும்
    இலவங்கப் பூவுடனே வகைக்குக் கால்தான்
இதனைப்பார் இவையெல்லாங் கல்வத் திட்டே
    எழில்வெட்டி வேர்மாசிப் பத்திரி வேரும்
இதனைப்பார் கருந்துளசி விலாமிச் சோடு
    இன்பமதாய் நால்வகையுஞ் சார்பி ழிந்தே. 1

பிழிந்துமே கல்வத்தில் வார்த் தரைத்துப்
    பிலமாக விருசாமம் விடாம லாட்டுக்
கழிந்துமே குன்றிபோ லுண்டை செய்து
    கண்மணியே நிழலுலர்த்திச் செப்பில் வைத்து
வழிந்துமே வாலைமனோன் மணியைப் போற்றி
    வகையான மாசிபத்திரிக் கியாழந் தன்னில்
அழிந்துமே குளிகையொன்று கொடுத்துப் போடு
    அரகரா முன்சொன்ன மாந்தம் போமே. 2

மாந்தம்போம் லவங்கப்பூக் கியாழந் தன்னில்
    மகத்தான மாந்தசுரம் வாந்தி தீரும்
மாந்தம்போம் முலைப்பாலில் கொடுப்பீ ராகில்
    வதைத்துவரும் குடற்படுவன் நீர்ப்பாடு தீரும்

மாந்தம்போம் கரப்பன்நா வறட்சி தீரும்
வயிற்றெரிவு வன்னிவிடாச் சுரமுந் தீரும்
மாந்தம்போம் உப்பிசமும் இருமல் போகும்
மகத்துவமாம் அமுர்தமெனுங் குளிகை பாரே. 3

அதிமதுரம், கோஷ்டம், ஏலம், கோரோசனை, சாத்திர பேதி, சண்பகப்பூ, மாசிக்காய், லவங்கம் வகைக்கு ¼ பலம். இவைகளைத் தனித்தனி சுத்தித்துப் பொடிசெய்து, குழிக்கல் லிலிட்டு, வெட்டிவேர், மாசிப்பத்திரிவேர், கருந்துளசி, விலாமிச்சை இவைகளின் சாறுகளைக்கொண்டு முறையே இரண்டிரண்டு சாமம் அரைத்து, குன்றியளவு மாத்திரை செய்து, நிழலிலுலர்த்திக் கொள்ளவும்.

அளவு:—குளிகை 1.

இதனை மாசிப்பத்திரிக் குடிநீரில் கொடுக்க மாந்தமும், இலவங்கக் குடிநீரில் கொடுக்க மாந்தசுரமும், வாந்தியும், முலைப்பாலில் கொடுக்கக் குடற்படுவன், நீர்ப்பாடு, மாந்தம், கரப்பான், நாவறட்சி, வயிற்றெரிவு, விடாச்சுரம், உப்பிசம், இருமல் முதலியனவும் தீரும்.

## 2. அஷ்ட பயிரவக் குளிகை

எண்சீர் விருத்தம்

தானான வாளமரைப் பலந்தா னப்பா
தாக்கான பூரமுடன் லிங்கங் கந்தி
வானான வீரமுட னாபி சூதம்
வளமாக இத்தனையுஞ் சுத்தி செய்து
மானான விவையாறும் வராக னென்று
மகத்தான திரிகடுகு சாதிக் காயும்
தேனான பத்திரியும் லவங்கந் தானும்
திறமாக இவையெல்லாம் கல்வத் திட்டே,
இட்டுமே பழச்சாற்றிற் சாம மிரண்டு
இதமான முலைப்பாலிற் சாம மிரண்டு
கட்டுமே பொடுதலையின் சாற்றிற் சாமம்
கருவான பொற்கையான் சாற்றிற் சாமம்



நட்டுமே நாவற்பட்டைச் சாறு சாமம்
நலமாகச் சாமமஃ தேழுமாட்டி
வட்டுமே வழித்தெடுத்து மிளகுபோல
வளமாக உலர்த்தியதைச் செப்பில் வையே. 5

வையப்பா முலைப்பாலிற் கொடுத்தா யானால்
வகையாக அறுபத்து நான்கும் போகும்
செய்யப்பா தேனிலே கொடுத்தா யானால்
தீராத தோடமெல்லாந் தீருந் தீரும்
பையப்பா லவங்கப்பூக் கியாழத் திற்றான்
பகரவே கொண்டுவிட விடதோ டங்கள்
நையப்பா தீர்ந்துவிடும் நோய்களெல்லாம் 6
நலமாகக் கொண்டுவிட வெல்லாம் போமே.

வாளம் ½ பலம்; இரசகர்ப்பூரம், இலிங்கம், கந்தகம், வீரம், நாபி, இரசம், திரிகடுகு, சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கம் வகைக்கு 1 வராகன். இவைகளைத் தனித்தனி சுத்தி செய்து, முறைப்படி பொடித்து, குழிக்கல்லில் சேர்த்து, பழச்சாறு முலைப்பால் இவைகளைக் கொண்டு இரண்டிரண்டு சாமமும், பொடுதலைச்சாறு, பொற்றலைக்கையான் சாறு, நாவற்பட்டைச்சாறு இவைகளினால் ஒவ்வொரு சாமமும் அரைத்து, மிளகளவு மாத்திரை செய்து உலர்த்தவும்.

இதனை முலைப்பாலில் கொடுக்க 64-சுரங்களும், தேனில் கொடுக்கத் தீராத தோடங்களும், இலவங்கக் குடிநீரில் கொடுக்க விஷ தோடங்களும் நீங்கும்.

## 3. ஆனந்த பயிரவம்

எழுசீர் விருத்தம்

மாறிலாநந்த வயிரவ முரைக்கில்
வங்கங்கா ரீயம் வெங்காரம்
வீறிலா லிங்கம் கந்தக மிரதம்
மிக்கதாம் பிரமரி தாரம்

கூறிலாச் சாந்த லோகமோர்
சமனாய்க் கூட்டியே திரிபலைக் குடிநீர்
தீறிலா வின்பம் பெறவரைத் திப்பால்
தீயினிற் பட்சமே காய்ந்தால் 7

காய்ந்திடு கஷாயத் தோர்தினந் தோலா
யந்திர மாயுறக் கூட்டித்
தோய்ந்திட வெரித்துத் துகளற வாங்கித்
தொடர்பணிப் பிச்சாறா லரைத்து
வாய்ந்திடக் குன்றி யளவுறு குளிகை
மருவிய நிழல்தனி லுலர்த்தி
ஆய்ந்திடு மனுபா னங்களிற் கொடுக்க
அகற்றிடுஞ் சீ தாங்களைத் தானே. 8

வெள்வங்க பற்பம், கருவங்க பற்பம், வெங்காரம், இலிங்கம், கந்தம், இரசம், தாம்பிர பற்பம், தாளகம், அயச் செந்தூரம் இவைகளைச் சமஅளவாகச் சேர்த்துத் திரிபலைக் குடிநீரினால் நன்றாக அரைத்து உருட்டி, 15-நாள் வெயிலில் காயவைத்து, பிறகு ஷை குடிநீரில் தோயும்படி எரித்து, கல்வத்திலிட்டு, நல்ல பாம்புப் பித்துகொண்டு அரைத்துக் குன்றியளவு குளிகை செய்து, நிழலிலுலர்த்தித் தக்க அனுபானங்களிற் கொடுக்கச் சீதாங்க சன்னி தீரும்.

## 4. இரசபூபதி

எழுசீர் விருத்தம்

கர்மமாஞ் சந்நி வினையெலா மொழியக்
கழறுவன் குளிகையின் வகைகள்
மர்மமாம் ரசத்தின் பூபதி யுரைக்கில்
மாசிலாச் சுத்தித்த ரசந்தான்
கர்மமில் லாத கந்தகத் தோடு
கருக்கின்ற நாபியு முருக்கும்
அர்மமா மராவும் பொடிசம னாக்கி
யவைநிறை வகைவகைச் சமனே.



வகைவகைச் சமனாய்க் கல்வமே யிட்டு
வளம்பெறு செருப்படைச் சாற்றில்
தகையவே மூன்று நாளரைத் திட்டுத்
தக்கதாம் ரவியினி லுலர்த்திப்
புகையவே பொடித்துக் காசியாங் குப்பிப்
புகழ்கின்ற சீலைமண் செய்தே
இகையவே வாலுகா யந்திரம் அதனில்
எரித்திடு பனிரண்டு சாமம். 10

பனிரண்டு சாமமுத் தீயுமே யெரித்துப்
பதனமா யாறின பின்பு
முனியவே யெடுத்து இஞ்சியின் சாற்றில்
முடுகியே யரைத்தொரு சாமம்
உனியவே யுழுந்து மிளகதுபோல
வுண்டைசெய் திட்டுமே யுலர்த்திப்
பனியவே யனுபா னத்திலிக் குளிகை
பயின்றிட மூன்றுநாள் தானே. 11

மூன்றுநாள் கொள்ளத் திலமொடு கடுகு
முரிந்திடும் புளியொடு மாம்சம்
தான்றொடு கைப்புத் தள்ளியே யுப்பு
தன்னொடு வற்றலு மாகும்
தோன்றுமோ சந்நி சுரமொடு குளிரும்
சூலையுங் கடுப்புமுப் பிசமும்
பான்றொடு விஷங்கள் பலபல கூடியும்
பறக்குமே பாரினிற் றானே. 12

இரசம், கந்தகம், கருநாபி, உருக்கு, தாம்பிரப்பொடி சம அளவு. இவைகளை முறைப்படி சுத்திசெய்து, செருப்படைச் சாற்றால் மூன்றுநாள் அரைத்து, வெயிலிலுலர்த்திப் பொடித்து, சீலைமண் செய்த காசிக்குப்பியில் அடைத்து, மணல் இயந்திரத்தில் வைத்து 12 சாமம் எரித்து ஆறவிட்டு எடுத்துக் கொள்ளவும். பிறகு இஞ்சிச்சாற்றால் நன்றாக ஒரு சாமம் அரைத்து உளுந்தளவாகவும், மிளகளவாகவும் உருட்டி உலர்த்திக் கொள்ளவும்.

தக்க அனுபானத்தில் குளிகை ஒன்றை இட்டு, இருவேளை மூன்றுநாள் கொள்ளச் சன்னி, குளிர்சுரம், சூலை, வயிற்றுக் கடுப்பு, உப்புசம், விஷங்கள் பற்பல கடிகள் தீரும்.

எள், கடுகு, புளி, மாமிசம், கைப்புச் சுவையுள்ள பொருள்கள் ஆகா. உப்பும் வற்றலுமாகும்.

## 5. இராமபாணம்

சுத்திசெய் வன்னிக் கர்ப்பம திரண்டுசுக
    சுத்தியெலி கொல்லி மூன்றுமா மருளூ
மத்தநீர் தனின் மூன்று நாளரைத் ததனை
    மணிசிறிய பயறளவி லமுத மதிலிடவே
சர்க்கரையி லிட்டிட வெதுப்புச்சுர மாறும்
    தனிப்பாலி லேகஞ்சி பத்தியமு மாகும்
உற்றதொழில் சுரராம பாணமிது வாகும்
    உண்டையது பழகியிட வோடும்வெகு சுரமே. 13

இலிங்கம் 2 பங்கு, எலிகொல்லி பாஷாணம் 3 பங்கு, இந்த இவ்விரண்டையும் நன்றாகச் சுத்தித்து கல்லத்திலிட்டுப் பொடித்து, மருளூமத்தைச் சாற்றால் 3-நாளரைத்து, சிறிய பயறளவு மாத்திரைகளாகச் செய்து, தாய்ப்பாலிலும் சர்க்கரையிலும் அனுபானித்துக் கொடுக்கப் பல சுரங்கள் நீங்கும். மருந்தருந்துங் காலத்து பாற்கஞ்சி உணவாகும்.

குறிப்பு;- மாத்திரையைப் பழகியபின் பயன்படுத்த வேண்டும்.

## 6. இராஜராஜேஸ்வரம்

எழுசீர் விருத்தம்

காத்திடு ராசரா சந்தனைக் கூறில்
    சமூறிய பாரதந் துத்தம்
ஏத்திடு லிங்கம் கந்தக நாபி
    யியல்சிலை யிவைசம னகச்



சேர்த்திடு வேப்பீர்க் குக்குடி நீரில்
    அரைத்தபின் திரட்டியே குகையில்
கூர்த்திட வடைத்துச் சீலைமண் பூசிக்
    குக்குட புடமொரு புடமே. 14
புடம்பெற வைத்தங் காறியே யெடுத்துப்
    புகழுறு சாகத்தின் பிச்சும்
தடம்பெறு கடாவின் பிச்சினு மிருநாள்
    தனித்தனி யரைத்தபின் வாங்கித்
திடம்பெறு குன்றி யளவுற வகுத்துத்
    திரிகடு கஷாய நீர் தன்னில்
படம்பெற வுரைத்துக் கரைத்திடு மளவிற்
    பறந்திடுஞ் சந்நிபன் மூன்றும். 15

இரசம், துத்தம், இலிங்கம், கந்தகம், மனோசிலை இவைகளைச் சம அளவு சேர்த்து, வேப்பீர்க்குக் குடி நீராலரைத்து, சிறிய மாத்திரைகளாகத் திரட்டி, நிழலிலுலர்த்தி, குடுவையில் இட்டுச் சீலை செய்து, குக்குட புடமிட்டு ஆறியபின் எடுத்து, நாபியைக் கூட்டி, வெள்ளாட்டு பிச்சிலும் எருமைக்கடாப் பிச்சிலும் முறையே இரண்டிரண்டு நாளரைத்துக் குன்றியளவு மாத்திரைகள் செய்யவும்.

இதனைத் திரிகடுகு குடிநீரில் உரைத்துக் கொடுக்க 13 வகைச் சன்னிகளும் தீரும்,

## 7. இலிங்க பூபதி

அறுசீர் விருத்தம்

லவங்க மோமம் நற்காவி
    ரசசெந் தூரம் ரசபூரம்
செவந்த லிங்க மெடைசரியாய்ச்
    சிறக்க வரைத்துத் தண்ணீரால்
உவந்த பயறு போற்றிரட்டி
    யுரைத்தா லுயர்ந்த மருந்தெதிலும்
இவர்ந்த பிணிகள் பலவகலு
    மிதன்பேர் லிங்க பூபதியே. 16

இலவங்கம், ஓமம், காவி, இரசசெந்தூரம், ரசகற்பூரம், இலிங்கம் சமஎடை எடுத்துக் கல்வத்திலிட்டு, தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, பயறு போலுருட்டி உலர்த்தித் தக்க அநுபானங்களில் கொடுக்கப் பல பிணிகள் நீங்கும்.

## 8. எமதண்டக் குளிகை

எண்சீர்ச் சந்த விருத்தம்

நாபி சூத மனோசிலை கந்தகம்
நல்ல ரோசனம் வீரமும் பூரமும்
காவிக் கல்லுடன் லிங்கமும் வெள்ளையும்
கண்டரி தாரமு மேலங்கி ராம்புடன்
மேவு காமனுஞ் சுக்குட னக்கரா
விண்ணுடன் கூட்டி யேரச செந்தூரம்
ஆவி யேவருங் கோஷ்டமும் ரோகணி
யடைவு பால்துத்தஞ் சோம்பது கூட்டியே 17

கூட்டியே யீஸ்வரி ரசிதங் காரமுங்
குற்றமில் லாமலே குழிக்கல்லி லிட்டதை
மாட்டியே கோகன மூலியின் சாற்றினால்
மைந்தனே சாமமு நான்கது மாகவே
நாட்டி யேயரை பயறள வுண்டைசெய்
நமனார் வந்திடு போதே நீயீந்திட
ஓட்டு மேபக டேறிவந் தோனையே
உத்தம எமதண்டக் குளிகையே. 18

குளிகை யொன்றது பூரச மேகொடு
சொல்லு மெண்பது வாயு சுரங்களும்
அழிவு செய்திடு தோஷமும் விக்கலு
மப்பனே பக்க வாதகுன் மங்களும்
சுளி சுளித்திடுங் கோழை யிருமலும்
சொல்ல வொண்ணாப்பதின் மூன்று சந்நியும்
பளிவு செய்திடு வெகுரோகந் தானுமே
பறக்கு மென்றர னுமைக்கருள் செய்ததே. 19



நாபி, இரசம், மனோசிலை, கந்தகம், கோரோசனை, வீரம், பூரம், காவிக்கல், இலிங்கம், வெள்ளைப்பாடாணம். அரிதாரம், ஏலம், கிராம்பு, திப்பிலி, சுக்கு, அக்ராகரம், கற்பூரம், இரச செந்தூரம், கோஷ்டம், கடுகுரோகணி, பால்துத்தம், சோம்பு, கௌரி பாடாணம், வெள்ளிப்பற்பம், வெங்காரம் இவைகளைத் தூய்மையாக்கிப் பொடிசெய்து, முறைப்படி சேர்த்துக் குழிக்கல்லில் இட்டு கையாந்தகரைச் சாறுவிட்டு நான்கு சாமம் அரைத்து, பயறளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி, வேளைக்கு ஒன்றாகத் தேனில் அனுபானித்துக் கொடுக்க 80 வாயுக்கள், சுரங்கள், தோடம், விக்கல், பக்கவாதம், குன்மம், கோழையுடன் கூடிய இருமல், 13 சன்னிகள் நீங்கும்.

குறிப்பு;—இதனைச் சிறப்பாகக் கபவாத சுரத்தில், (Pneumonia) வழங்குவதுண்டு.

## 9. கண்காச மாத்திரை

எழுசீர்ச் சந்த விருத்தம்

சங்கு சுக்கொடு மிளகு திப்பிலி
தாரமோடதி மதுரமும்
புங்கம் வித்தொடு பீதரோகணி
புதிய துத்த மனோசிலை
அங்கரைப்பது நந்தி பத்திரி
யான தேனோ டளாவியே
கங்குல் பற்றிய கண்ணிலிட்டிடு
காச படலமு நாசமே 20

வலதுசங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, அரிதாரம், அதிமதுரம், புங்கம்பருப்பு, பீதரோகணி, பால்துத்தம், மனோசிலை, இவைகளை முறைப்படி தூய்மையாக்கி, குழிக்கல்லிட்டுப் பொடித்து, நந்தியாவட்டப் பூச்சாற்றாலரைத்துக் கயிறுக்கி உலர்த்திக் கொள்ளவும். இதனைத் தேனிலுரைத்துக் கண்ணிலிட, கண்காசம், கண்படலம் நீங்கும்.

## 10. கணேச குளிகை

அறுசீர் விருத்தம்

இரதமொரு கழஞ்சுடனே நாபியாறும்
இங்குலிக மிரண்டுகந் தகமுமூன்று
சதுராய்ப்பொன் னூமத்தைச் சாறுவிட்டுச்
சாமமரை யுழுந்தளவு வுண்டை செய்து
சிதறாத சகலசுரந் தனக்கு மாத்திரை
திப்பிலியுந் தேன்கூட்டிக் கொடுக்கத்தீரும்
பதறாமல் முன்னூலில் போகப்பேரும்
பருகணேச குளிகையெனப் பகருந்தானே. 21

இரசம் கழஞ்சு 1, நாபி கழஞ்சு 6, இலிங்கம் கழஞ்சு 2, சுந்தகம் கழஞ்சு 3, இவைகளை முறைப்படி சுத்தித்துச் சேர்த்துக் கல்வத்திலிட்டு, பொன்னூமத்தைச் சாறுவிட்டு ஒரு சாமமரைத்து, உளுந்தளவு மாத்திரை செய்து நிழலி லுலர்த்தி, வேளைக்கு ஒன்றாகத் திப்பிலிச் சூரணத்துடன் தேன் கூட்டிக் கொடுக்கச் சகல சுரங்களுந் தீரும்.

குறிப்பு:—இம் மருந்தைப் பழகின பின்னரே பயன் படுத்த வேண்டும். இம் மருந்தரைப்பதற்குப் பொன்னூமத்தைச் சாற்றை உபயோகிப்பதனால், இம்மருந்து வெறிநாய்க் கடிக்கும் வழங்கப்படுகிறது. இம்மருந்துக்கு உப்பு ஆகாது. பாற்சோறு, பாற்கஞ்சி ஆகும்.

## 11. கபாட மாத்திரை

அகவல்

ஆதிக் கிராணி யதிசார பந்தனம்
சாதிக்காய் மேற்பத்திரி காயநற்சீரி
விடையங் கிராம்பு அபினியும் வெந்தயம்
கடைவன்னிக் கர்ப்பங் கழற்சிப் பருப்பொடு
குராசானி யோமங் கூட்டிச் சமன்கொண்டு
ஆனந்த மூலிச்சா றடைவரைத் துண்டைசெய்



மேலு மிலந்தையின் விரைப் பிரமாணம்
நிழலி லுலர்த்தி மதுவிலிடு மூன்றுநாள்
தாக்கக் கழிச்ச லானாற் றணிவாம்
பூந்தாது நற்கனி நீர்தனி விடவே
இரத்தக் கடுப்பு மூலத்துட் கடுப்பு
இரத்தஞ் சீக்கிரா ணிசலக் கிராணி
சங்கர கிராணி சலமலக் கிராணி
தொங்குவாயுக் கிராணி சோறாக் கழிகிராணித்
திறமறுங் கிராணிக் கபாடம துண்மையே. 22

சாதிக்காய், சாதிபத்திரி, பெருங்காயம், நற்சீரகம், அதிவிடையம், கிராம்பு, அபினி, வெந்தயம், இலிங்கம், கழற்சிப் பருப்பு, குரோசானி ஓமம், சுத்தித்து, சமவெடை கொண்டு, கல்வத்திலிட்டு பொடித்துக் கஞ்சாச்சாற்றால் (கஞ்சாக்குடி நீரால்) நன்றாக அரைத்து, இலந்தை விதை அளவு மாத்திரை செய்து, நிழலிலுலர்த்தித் தேனில் மூன்று நாள் கொடுக்க கழிச்சலும், வாழைப்பூச் சாற்றில் கொடுக்க இரத்தக்கடுப்பு, மூலக்கடுப்பு, இரத்தக்கிராணி, சீக்கிராணி, சலக்கிராணி, சங்கரகிராணி, மலக்கிராணி, வாயுக்கிராணி, சோறாக்கழி கிராணி, அதிசாரக் கடுப்பும் தீரும்.

## 12. கரவால வயிரவம்

எழுசீர் விருத்தம்

அதிகர வால வயிரவ முரைக்கில்
அரன்விந்து சத்தியெவாச் சாரம்
கொதிபடி காரந் திரிகடு திரிபலை
கொடிவேலி பஞ்சமார் லவணம்
துதியெவாச் சார கந்தக நாபி
சுடர்ப்பெருங் காயமும் பிரண்டை
கதிவனக் கருணை மாவெருக் கின்வேர்
கருதியே சமனுறக் கூட்டி, 23

கூட்டிய வெருக்கம் வேர்க்கஷா யத்தில்
குழைத்திரு தினமுற வரைத்தே
வாட்டிய தெடுத்து வாலுகேந் திரத்தில்
வைத்திரு யாமமே யெரித்துக்
காட்டிய சுணங்கன் பிச்சினி லரைத்துக்
காய்ந்திடு நாரிகேர ளத்தில்
சூட்டிய குன்றி யளவிடி லபிநியா
சனித்துரத் திடுமது காண்க. 24

இரசம், சத்திச்சாரம், எவாச்சாரம், படிகாரம், திரிகடு, திரிபலை, கொடிவேலி, ஐந்துப்பு, கந்தகம், நாபி, பெருங் காயம், பிரண்டை, காட்டுக் கருணை, எருக்கன்வேர் சுத்தித்து முறைப்படி தூள் செய்து, கல்வத்தில் எருக்கன் வேர்க் குடிநீரினால் இரண்டு நாளரைத்து உலர்த்திக் குப்பி யிலடைத்து, மணல் இயந்திரத்தில் வைத்து இருசாமம் எரித்து, பிறகு நாய்ப் பிச்சினுலரைத்து, குன்றியளவு மாத் திரைகள் செய்து உலர்த்தவும்.

இளநீரில் அனுபானித்துக் கொடுக்க அபிநியாச சன்னி தீரும்.

## 13. கல்யாண வயிரவம்

### எழுசீர் விருத்தம்

உற்ற கல்யாண வயிரவ முரைக்கில்
உருத்திரன் விந்துகந் தகஞ்சேர்த்
துத்தங் காரீயந் திப்பிலி லவங்கம்
சுவேதபா ஷாணமை நாபி
பெற்றதோர் சமனய்க் கூட்டியே பொடித்துப்
பின்கொடி வேலியின் தண்ணீர்
வற்றநா லொன்றய்ச் செய்தபாக் கியத்தை
வார்த்தொரு நாளரைத் துருட்டி, 25



உடையாக் குகையில் வைத்து மண்பூசி
உயர்வாலு கேந்திரத் தொருநாள்
தொடர்கம லம்போ லெரித்தபின் வாங்கித்
துய்யசேற் பிச்சினு லரைத்துக்
கடைபெறுங் குறிப்பிற் சணவிதை யளவே
கழறனு பானத்தி லூட்டித்
தடையுற விளநீர் சருக்கரை பால்சேர்த்
தளித்திடக் கர்ணிகன் நாடான். 26

இரசம், கந்தகம், துத்தம், காரீயபற்பம், திப்பிலி, இலவங்கம், வெள்ளைப் பாஷாணம், நாபி, சம அளவு நிறுத்துச் சுத்திசெய்து முறைப்படி கல்வத்திட்டுப் பொடித்து, கொடிவேலி வேர்ப்பட்டைக் குடிநீரினால் ஒரு நாளரைத்து உருட்டி, உலர்த்திக் குகையில் வைத்துச் சீலைசெய்து, மணல் இயந்திரத்தில் வைத்து ஒருநாள் கமலாக்கினியாக எரித்து, பிறகு மீன் பிச்சினுலரைத்து, சணல் விதை அளவு மாத் திரையா யுருட்டி நிழலிலுலர்த்திக் கொள்ளவும். இதனை இளநீர், சர்க்கரை, பால் சேர்த்துக் கொடுக்கக் கர்ணிக சன்னி தீரும்.

## 14. கத்தூரி மாத்திரை

### நேரிசை வெண்பா

கத்தூரி யொன்று கமழ்துருக்கம் பூவிரண்டு
சத்தாவின் கோரோ சனமூன்று—முத்தார
மெல்லியர்க டம்முலைப்பால் விட்டரைத்துக் குன்றியெடை
சொல்லுருண்டை செய்வாய் துணிந்து. 27

துணிந்துருண்டை வைத்திருக்கிற் றேடசந்நி பாதம்
பணிந்தபித் தஞ்சேத்மம் வாய்வும்—தணிந்துவிடும்
முத்தாரம் பூண்ட முகிழ்முலையீர் யோகப்பேர்
கத்தூரி மாத்திரையாங் காண். 28

கஸ்தூரி 1 பங்கு, குங்குமப்பூ 2 பங்கு, கோரோசனை 3 பங்கு. கல்வத்தில் சேர்த்துத் தாய்ப்பால் விட்டு நன்றாக

அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து, நிழலிலுலர்த்தவும். தக்க அனுபானத்தில் கொடுக்க சந்நிவாத தோடம், பித்தம், கபம், வாயு தீரும்.

## 15. காருண்ய வயிரவம்

எழுசீர் விருத்தம்

செய்யதாங் காருண்ய வயிரவ முரைக்கில்
திகழுறு மிரதமப் பிரகம்
துய்யதற் சமனுக் கூட்டியே பொடித்துத்
துதிகையாந் தகரையின் சாற்றால்
உய்யதா யரைத்துத் திரட்டியே குளிகை
உற்றதை வாலுகேந் திரத்தில்
வையமே யாமம் வைத்தெரித் தெடுத்துப்
பன்றிமா யூரமார் பிச்சில், 29

பிறித்திடு மிரண்டு தினமுற வரைத்துப்
பெரிதுற வேணுவி லடைத்துக்
குறித்திடு நலங்கள் தேசகா லங்கள்
கோலிய குணங்களை நோக்கி
மறித்திடு மதற்கு மாடமாத் திரமே
வகுத்தனு பானத்தி லூட்ட
வெறித்திடு பிரலா பமறும் பத்தியம்
மிக்கதக் கிரோதன மிடுவார். 30

இரதம், அப்பிரகம் இவைகளைச் சமஎடையாகச் சேர்த்துப் பொடித்து, கையாந்தகரைச் சாற்றாலரைத்து உருட்டி உலர்த்திக் குகையிலிட்டு, மணல் இயந்திரத்தில் வைத்து ஒரு சாமம் எரித்தெடுத்து, பிறகு பன்றி, மயில் இவைகளின் பிச்சினால் முறையே இரண்டு இரண்டு நாளரைத்து, உழுந்தளவு மாத்திரை செய்து, நிழலிலுலர்த்தி மூங்கில் குழாயில் பத்திரப்படுத்தவும். இதனைத் தக்க அனுபானத்தில்



உடல் வன்மையையும் காலத்தையும் அறிந்து கொடுக்கப் பிரலாப சன்னி தீரும்.

பத்தியம்:—மோர்ச்சோறு.

## 16. குஷ்ட கஜ கேசரி

அப்ரகபற்பம், காந்தச் செந்தூரம், அயச்செந்தூரம், இரசபற்பம், இந்நான்கிலும் சம எடை எடுத்து சவுரிப்பழச் சாற்றில் அரைத்துப் பயறளவு மாத்திரை செய்து, சர்க்கரை தேன் முதலிய அனுபானங்களில் தக்க அளவு கொடுக்க, குஷ்டம், மேகம் முதலிய துர்ப்பிணிகள் நீங்கும்.

## 17. கோடாசூரி குளிகை

எண்சீர் விருத்தம்

தானேதான் கோடாசூரி சாற்றக் கேளாய்
தாளகமுஞ் சூதம்வசு வாசி சந்தம்
தேனேதான் சினகாரம் பச்சை நாபி
தேவதாரு கோஷ்டிலவம் கடுகு லிங்கம்
மானேதான் ரோகணியுஞ் சித்திரமூல
மகத்தான குரோசனி கஞ்சா வித்து
நானேதான் பேரீச்சு முந்தி ரிகை
நலமான பச்சைக்கர்ப் பூரங் கூட்டே. 31

கூட்டு திரிபலை சவர்க்காரம் காரம்
கொள்ளன்ன பேதிதுரு சோமங் கந்தி
நீட்டியதோர் மஞ்சிட்டி சுக்கு திப்பிலி
நேர்ந்தவபின் மடல்துத்தங் கௌரி தொட்டி
தாட்டியே சாதிக்காய் சிலைசவ் வீரம்
சார்வான பெருங்காயம் வலம்பு ரிக்காய்
விட்டியே நேர்வாளங் கரிநாபி யுப்பு
வெள்ளைப்பா ஷாணமுள்ளி நாற்பத் தஞ்சே. 32

அஞ்சான மருந்தெல்லாம் சழுஞ்சு வீதம்
அப்பனே யேழுநாள் கையான் சாற்றால்
மிஞ்சாம லரைமைபோல் வாரமொன்று
விட்டபின் ஞெச்சிச்சா றேழ்நா ளப்பால்
கஞ்சாம லரைத்துவிடி ஞளீரேழு
கடந்தபின் கொட்டைக் கரந்தை யேழ்நாள்
துஞ்சாமல் மூவேழுந் தானரைத்துச்
சுகிர்தமுடன் சிறுபயறு யுண்டை யாக்கே. 33

ஆக்கியே நிழலுலர்த்தி வைத்துக் கொள்பின்
அறுகம்வேர்க் கியாழத்தீ வெட்டை போகும்
நோக்கியே காசநோய் கமலச் சாற்றில்
நுகரவே தீருமடா விடத்துக் கெல்லாம்
பாக்கியே சம்பழச்சா றரைத்துப் பூசப்
பறக்குமடா விடங்களறு பத்து நான்கும்
தாக்கியே தேள்காலி விடத்துக் கெல்லாந்
தடவுவாய் கடிவாயிற் றீருங் காணே. 34

தீருமே தேனுக்குக் கண்ணிற் போட்டால்
தீராத சந்நிகளுக் கிஞ்சிச் சாற்றால்
மாறுமே சர்க்கரையிற் சுரதா கம்போம்
அப்பனே மோரிலதி சார சுரம்போம்
ஈறுமே பித்தசிலேத் துமங்க ளெல்லாம்
அஞ்சியிலே தாக்கிவிட வேகு மேகும்
மூருமே நாலுநாள் மாறற் காய்ச்சல
முடக்கற்றான் கியாழத்தில் முழுதும் போமே. 35

போகவே வேப்பிலைச்சார் தான்றிக் காயும்
புகழான மிளகுடனே சுக்குங் கூட்டி
ஆகவே யாவின்கோ மயமுஞ் சேர்த்தங்
கருந்திடவே விடபாக மணுகா தப்பா
ஏகவே காமாலை சோகை பித்த
மியம்பியமுற் பாகஞ்செய் யேகு மேகும்
சாகவே யெதிரிவைத்த பில்லி சூன்யம்
தண்ணீரிற் குளிகையிட்டுக குளிக்கப் போமே. 36



குளித்தபின்பு குளிகையொன்று குளிசம் போலக்
குருமுள்ளிப் பழத்திட்டுக் கையி விட்டால்
விளித்தபில்லி சூனியமு மோடிப் போகும்
மிகுபூலா விருட்சத்தோல் தூள தாக்கி
யளித்தபின் னமுக்காரத் தூளுங் கூட்டி
யருந்திடவே யண்டத்தின் வாதந் தீரும்
முளித்தடுத்த மாலைக்கண் குருடு காச
முக்கியாரைச் சாற்றிலஞ் சனத்தைத் தீட்டே. 37

தீட்டவே சம்பழச்சாற் றரைத்துத் தீட்டு
சீர்சாதிக் காயுஞ்சர்க் கரையுஞ் சேர்த்து
மூட்டவே மூலவகைக் கிராணி தீரு
முகந்தகரியூ மத்தைச் சாற்றினைச் சேர்த்
தூட்டவே நஞ்சுதின்ற பேர்கட் குத்தாக்
குடன்மீளு நஞ்சது தானுலகத் தோரே
நாட்டவே மாவிலிங்கச் சாற்றிற் கொள்ள
நாற்பத்தி ரண்டிரட்டி வாய்வுந் தீரும். 38

தீருமடா கொம்மட்டிக் காய்ச்சாறு தன்னில்
தீக்கிரந்தி யஷ்டகுன்ம மெட்டுந் தீரும்
தீருமடா மேற்படிச்சா றநுபா னத்திற்
றசைவாயு விப்புருதி சுவாச காசந்
தீருமடா பீலிகை நீராம்பற் கோளந்
திரும்பாச்சித் தப்பிரமை விகாரத் தோடு
தீருமடா கவிசிரைப்பு மந்தார காசஞ்
சிலேத்துமந் தொண்ணூற்றாறுந் தீர்ந்து போகும்
தீருமடா முசல்வலிக்குக் கரியூ மத்தைச்
சேர்சாற்றில் நசியமிடத் தீரும் பாரே. 39

பாரப்பா மிளகுசுக்கு திப்பிலி யோடும்
பண்பாகப் பொடித்துண்ணக் கபால குஷ்டஞ்
சீரப்பா பறக்குமடா கிரந்தி சூலை
சில்விடமுங் கடிவிடமு மோடித் தீரும்

ஆரப்பா வறிந்தவர்கள் வாய்நீ ரோடே
யநுபான மறிந்திடவே தீருந் தீரும்
சாரப்பா பதசக்கரம் பாதப் புற்று
சாதிக்காய்த் தயிலத்தி லுறைத்துப் போடே. 40

போடவே கொடுங்கோடா சூரி யுண்டை
புண்ணான கண்டமாலைக்குப் பூச
ஆடவே பசுவெண்ணெய் கலந்து மர்த்தி
அழிவான பிளவைப் புண்ணான தற்கும்
கூடவே யெந்தெந்தப் புண்க ளுக்குங்
குழைத்திடுவா யாவெண்ணெய் கூறக் கேளாய்
நாடவே யஞ்சுருண்டை யரத்தை நீரி
ணடக்கையிலே யுள்ளங்கால் வைத்துப் பூசே. 41

பூசினால் முக்காத முடனே யோடிப்
போய்மீண்டு முக்காதம் வரவே செய்வாய்
ஆசுவாய் பறித்த கட்டிற் குளிச மாக்கி
அபிஷேகம் பூசை பண்ணித் தேவ ருக்கு
வாசிகலை யுள்ளடங்கும் வசிய மாகும்
வாதமுதல் ஞானசித்தி வணங்குந் தானே
தேசிகனார் சுப்பிரமணிய ரெனக்குத் தானுஞ்
செப்பியகோ டாசூரி யுரைத்தேன் முற்றே, 42

தாளகம், ரசம், சாதிபத்திரி, சந்தனம், படிகாரம், பச்சைநாபி, தேவதாரு, கோஷ்டம், இலவம்பிசின், கடுகு, இலிங்கம், கடுகுரோகணி, சித்தரமூலவேர்ப் பட்டை, குரோசானி ஓமம், கஞ்சாவிதை, பேரீந்து, முந்திரிகை, பச்சைக் கர்ப்பூரம், திரிபலை, சவர்க்காரம், வெங்காரம், அன்னபேதி, துருசு, ஓமம், கந்தகம், மஞ்சிட்டி, சுக்கு, திப்பிலி, அபின், மடல்துத்தம், கௌரி, தொட்டிப் பாஷாணம், சாதிக்காய், மனோசிலை, சவ்வீரம், பெருங்காயம், வலம்புரிக்காய், நேர்வாளம், கரிநாபி, உப்பு, வெள்ளைப் பாஷாணம், உள்ளி இந் நாற்பத்தைந்து சரக்குகளையும் வகைக்கு 1½ வராகன் எடை வீதம் முறைப்படி சுத்தித்து, கல்வத்தில் சேர்த்து, 7-நாள் கையாந்தகரைச் சாறுவிட்டு மைபோல அரைத்துப்



பிறகு நொச்சிச்சாறு, கொட்டைக் கரந்தைச்சாறு இவைகளைக் கொண்டு முறையே ஏழு ஏழு நாள் முன்போல அரைத்து, சிறுபயறளவு உருண்டை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரையை அறுகன் வேர்க் குடிநீரில் கொடுக்க வெட்டையும், தாமரைப்பூச் சாற்றில் கொடுக்கக் காசமும்; எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக் கடிவாயில் பூச தேள் நண்டுவாக்காலி போன்ற 64-கடி விஷங்களும்; இஞ்சிச் சாற்றிலுரைத்து கண்ணில்விடச் சன்னிகளும்; சர்க்கரையில் கொடுக்கச் சுரதாகங்களும்; மோரில் கொடுக்க அதிசாரச் சுரங்களும்; இஞ்சிச்சாற்றில் கொடுக்கப் பித்த கபநோய்களும்; முடக்கறுத்தான் குடிநீரில் கொடுக்க நான்கு நாள் மாறல் காய்ச்சலும்; வேப்பிலைச் சாற்றில் தான்றிக்காய்த் தூள், மிளகுத்தூள், சுக்குத்தூள், பசுவின் நீர், இவைகளைக் கூட்டிக் கொடுக்க விடபாகம், காமாலை, சோபை, பித்தமும்; குளிகையைத் தண்ணீரிலிட்டு குளிக்கும்படி செய்து அதே குளிகையை முள்ளிப்பழத்திலிட்டுக் குளிசம்போல் கையில் கட்ட எதிரிவைத்த பில்லி சூன்னியமும்; பூலாத் தோல் சூரணமும் அமுக்கராச் சூரணமும் கூட்டி அருந்த அண்டவாதமும்; ஆரைச்சாற்றில் குழைத்துக் கண்ணில் தீட்ட மாலைக்கண், குருடு, கண்காசமும்; பழச்சாற்றில் சாதிக்காய்த்தூள் சர்க்கரை சேர்த்துக்கொடுக்கமூலக்கிரகணியும்; கரிஊமத்தைச் சாற்றில் கொடுக்க நஞ்சும்; மாவிலிங்கச் சாற்றில் கொடுக்க 84-வாய்வும்; கொம்மட்டிக்காய் சாற்றில் கொடுக்கக் கிரந்தியும்; எண்வகை குன்மமும், தசைவாயு விப்புருதி, சுவாசகாசம், பிலீகம், நீராம்பல், சித்தப்பிரமை, விகாரம், கவிசை, இரைப்பு, மந்தாரகாசம், கபம் 96-ம்; கரிஊமத்தைச்சாற்றில் நசியமிட முயல்வலியும்: திரிகடுகுத் தூளில் கொடுக்கக் கபால குஷ்டம், கிரந்தி, சூலையும்; வாய் நீரில் கொடுக்கச் சில்விடம், கடிவிடமும்; சாதிக்காய்த் தயிலத்திலுரைத்துப் போட பாதச்சக்கரமும் பாதப்புற்றும்;

வெண்ணெயில் கலந்து பூசக் கண்டமாலை, பிளவைப்புண், புண்களும் தீருமென்க.

## 18. கோரோசன மாத்திரை

பதினான்குசீர் விருத்தம்

கோரோச னஞ்சிவப் பாமல ரசிதளங்
குலக்காய் லவங்க மேலம்
குஷ்டச்க ராகாரஞ் சசியிரத செந்தூரங்
குலவுமப் பிரக பற்பம்
நேரோது பன்னொன்று முக்கழஞ் சொன்றினிறை
நிலவநன் றிவைகள் பொடிசெய்
நிகழ்சந்த னத்துகட் சண்பகப் பூவிவைக
ணீதனிக் குடிநீர் புரீ இ
யோரோச னையின்றி நந்நான்கு சாமமரை
யுண்டபின் குங்குமப்பூ
யுண்மையாய்க் கியாழமிட் டரைசெய் திருசாம
முண்டையது குன்றி மணிசெய்
காரோதி மங்கையர் முலைப்பாலி லீயொன்று
காணுறாஉ மயக்கம் வளி
கபரோக சலதோஷ சந்நிமண் டைச்சூலை
கதிர்கண்பனியா மரோ. 43

கோரோசனம், குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், சாதிக்காய், இலவங்கம், ஏலம், கோஷ்டம், அக்ரகாரம், கற்பூரம், இரச செந்தூரம், அப்பிரக பற்பம் வகைக்கு 3¼ வராகனெடை. இவைகளை முறைப்படி சுத்தித்துக் கல்வத்திலிட்டு பொடித்துச் சந்தனக்கட்டை சண்பகப்பூ சேர்ந்த குடி நீரிலும், முறையே நன்னான்கு சாமம் அரைத்தபின், குங்குமப்பூ குடிநீரில் இரண்டு சாமமரைத்து, குன்றிமணி அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். முலைப்பாலில் ஒரு மாத்திரையை அனுபானித்துக் கொடுக்க மயக்கம், வாயு, கபநோய், சலதோடம், சன்னி, மண்டைச்சூலை தீரும்.



நேரிசை வெண்பா

கோரோச னக்குளிகை கொள்ளினண் டத்தைலத்
தேரு வருத்து மிசிவுவளி—நேராகும்
அள்ளுமுக்கு மாந்த மகலுங் கியாழமதில்
கொள்ளுமூன் றைந்துநாள் கொள். 44

கோரோசனக் குளிகையை அண்டத்தைலத்தில் கொடுக்க இசிவுவாதமும் (வலிப்பு), மாந்தக்கியாழத்தில் கொடுக்க அள்ளுமாந்தமும், முக்கு மாந்தமும் தீரும். இதை மூன்று அல்லது ஐந்து நாள் கொள்ளவும்.

## 19. சங்கர வயிரவம்

கொடுத்திடு சங்கர வயிரவ முரைக்கில்
கூறிய தாம்பிர பற்பம்
அடுத்திடு மிரத மிரும்பெவாச் சாரம்
அரியதாஞ் சத்தியின் சாரம்
எடுத்திடு படிகா ரத்துட னாறும்
இவைசம பாகமாய்க் கூட்டித்
தடுத்திடு பஞ்ச கோலமாங் குடிநீர்
தன்னிலோர் நாளுற வரைத்தே. 45

அரைத்தபின் தோலா யந்திரத் ததனை
அமைத்தொரு சாமமே யெரித்து
நிரைத்தது வாங்கிக் கபப்பிசி னென்ன
நெகிழ்ந்திட வரைத்திரு மாடம்
கரைத்திடு மனுபா னங்கண மதுவிற்
கலந்திடக் கணத்தினிற் றானே
உரைத்திடுங் கொடிய குணவுருத் தாகன்
உடற்புகுந் தொளித்திடா தகல்வான். 46

தாம்பிரபற்பம், இரசம், இரும்பு, எவாச்சாரம், சத்திச்சாரம், படிகாரம் சமஅளவு எடுத்து கல்வத்திட்டுப் பொடித்துப் பஞ்சகோலக் குடிநீரில் ஒருநாள் நன்றாக அரைத்து

உருட்டி மேற்படி குடிநீரில் தோலாயந்திரமாக ஒரு சாமம் எரித்து எடுத்து, கல்வத்தில் அரைத்து, இரண்டு உழுந்தளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும். இதனைத் தேனில் கொடுக்க உருத்தாக சன்னி தீரும்.

## 20. சஞ்சீவி மாத்திரை

அறுசீர் விருத்தம்

இருவி நாபி யரிதார மிரதங் கந்தகம் வெங்காரம்
வருமே தான்றிக் காய்ச்சுக்கு வருந்து மிளகு திப்பிலியும்
தருமே வகையொன் றேர்கழஞ்சு தானே வாள [மைங்கழஞ்சு-
அருமைச் சுத்தி செய்திலக்க மான கழஞ்சு பதினைந்தும். 47

கையாந் தகரை யின்சாற்றால்
கணக்காயேழு நாட்களிலும்
மெய்யா யொருநாட் கொருசாமம்
விடாம னன்றாய்த் தானரைத்து
உய்யக் குன்றிப் பிரமாண
முண்டை செய்து நிழலிலுலர்த்
தையா சஞ்சீ விக்குளிகை
யருளிச்செய்தா ரகத்தியனார். 48

மூல வாயு சாதிக்காய் முனிபல் வாயு சிறுநீரில்
ஆலந்தரித்த பாம்புகடிக் கறிந்து தேசிப் பழச் சாற்றில்
மூலவி யாதி வலிகுன்ம முளைத்த நொச்சிச் சாற்றினிலும்
சூலை வலிக்கு முருங்கைமரத் துற்ற பட்டைச் சாற்றி [னிலும். 49



கயத்து வகைகள் பத்துக்கும்
காண்வெள் ளாட்டுப் பாலினிலும்
வயத்த நோய்க டாந்தீர
வருந்திப் பத்தியமாகக் கொள்
மயத்துச் சாம்பல் பூசிநனி
மகிழ்ந்தே யாடு மரன் பாதம்
முயல்சஞ் சீவிக் குளிகைக்கு
முதலநு பான மிவை யன்றே. 50

இருவி, நாபி, அரிதாரம், இரசம், கந்தகம், வெங்காரம், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை; நேர்வாளம் $6\frac{1}{4}$ வராகனெடை; இவைகளை முறைப்படி சுத்தித்து, தனித்தனிப் பொடித்து, கல்வத்திலிட்டு கையாந்தகரைச் சாற்றில் ஏழுநாள் நன்றாக அரைத்து குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். இதனை ஒரு குளிகையாக சாதிக்காய் குடிநீரிலிட மூலவாய்வும், சிறுநீரில் கொடுக்க பல வாயுக்களும், பாம்புக்கடிக்கு பழச்சாற்றிலும், மூலநோய், வலிகுன்மத்துக்கு நொச்சிச்சாற்றிலும், சூலைவலிக்கு முருங்கைபட்டைச் சாற்றிலும், கயம் பத்துக்கு வெள்ளாட்டுப்பாலிலும் பத்தியமாகக் கொள்ளத் தீரும்.

## 21. சந்நிபாத வயிரவம்

எழுசீர் விருத்தம்

நாட்டிய சந்நி பாதவை ரவந்தான்
நவின்றிடி லிரதமப் பிரகம்
காட்டிய கந்த கங்கரு நாபி
கருதுகா ரீயம்வெங் காரம்
கூட்டிய தற்சம மாப்பெறப் பொடித்துக்
குலவிட வெருக்கமார் பாலில்
ஊட்டிய தினந்தா னேழுநா ளரைத்தே
யுற்றதோ லாந்திரத் தோர்நாள், 51

ஒங்குற மூட்டி யெரித்தபின் வாங்கி
    உயர்கடா மஞ்ஞைமீன் பிச்சில்
தேங்குற மூன்று தினமுமே யரைத்துச்
    செப்பிய வேணுவி லடைத்துப்
பாங்குற வுழுந்து மாத்திர மெடுத்துப்
    பரவிய குணங்களை நாடித்
தாங்குறு கணத்திற் கஷாயமே விட்டால்
    தனிரக்திஷ் டீவியைச் சயிக்கும். 52

இரசம், அப்பிரகம், கந்தகம், கருநாபி, காரீயம், வெங்காரம் சம அளவு எடுத்து, முறைப்படி சுத்தித்துக் கல்வத்திலிட்டு பொடித்து, எருக்கம்பாலால் ஏழுநாள் அரைத்து உருட்டி, எருக்கம்பாலில் தோலாந்திரமாக 1-நாள் எரித்து வாங்கி, எருமைக்கடா, மயில், மீன் இவைகளின் பிச்சினால் முறையே மூன்று நாள் அரைத்து மூங்கிற் சிமிளில் அடைத்து, வேண்டும்பொழுது உளுந்தளவு எடுத்து, திப்பிலிக் குடிநீரில் ஈய இரக்திஷ்டீவி சன்னி தீரும்.

## 22. சாந்த சந்திரோதயம்

### கலிநிலைத் துறை

காந்த ரிப்பகை பொரிபூ ரந்தொடி கடையாதி
சாந்த மொன்றரை யொன்றரை யொன்றரை சம்பீரத்
தாய்ந்த ரைத்தழன் மணியென மணிபுரி யதனைமஞ்
சாந்த சந்திரோ தயமென வழனேய் தரியாதே. 53

வெங்காரம் ½ பலம், இரசகற்பூரம் 1 பலம், கப்புமஞ்சள் 3 பலம், எலுமிச்சபழச் சாற்றால் 4-சாமம் அரைத்து, மிளகளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். தேனில் பித்த சுரங்கட்கு கொடுக்க தீரும்.



## 23. சாம்பிராணிப்பூக் குளிகை

### எண்சீர் விருத்தம்

போமப்பா வின்னமொரு குளிகை கேளாய்
    புண்ணியனே சாம்பிராணி முதற்ற ரந்தான்
நாமப்பா பளிங்காக நாலுபலம் வாங்கி
    நன்றாகப் பொடிசெய்து சட்டி யிட்டு
ஓமப்பா மேற்சட்டிக் குள்ளே நீயும்
    உத்தமனே காகிதத்தை யுருப்போ லொட்டி
நாமப்பா மேன்மூடிச் சீலை செய்து
    நன்மையுள்ள வடுப்பேற்றித் தீபம் வையே. 54

வைத்தக்கால் பசுநெய்யாற் றீப மேற்றி
    மைந்தனே யடிச்சட்டித் தூறிற் சூடு
தைத்தாக்கா னாற்சாமஞ் சென்ற பின்பு
    தண்மையுடன் தானிறக்கிப் படுக்கப் போடு
செய்ததொரு சீலைமண் ணவிழ்த்து மெள்ளத்
    திறமான மேற்சட்டிக் காகி தத்துள்
நைத்ததொரு வப்பிரக பற்பம் போலே
    நன்மையுள்ள வாசமதாய் மணக்கும் பாரே. 55

பாரப்பா வப்பூவை யெடுத்து நீயும்
    பாங்கான வெற்றிலைபாக் குண்ணும் போது
நேரப்பா மிளகளவு தின்று வந்தால்
    நேர்மையுள்ள தாதுவிர்த்தி நிலைக்கும் பாரு
காரப்பா வப்பூவுங் கழஞ்சி ரண்டு
    கனமான கிராம்புமோ கழஞ்சு மூன்று
கூறப்பா கோரோசனை கழஞ்ச தொன்று
    கூட்டியரை வெற்றிலையின் சாற்றினாலே 56

சாற்றினா லிருநாழி யரைத்து மைந்தா
    தண்மையுள்ள குன்றிபோற் குளிகை கட்டி
ஆற்றிநன்றாய் நிழல்தனிலே பதனம் பண்ணி
    அப்பனே தேனிலொரு குளிகை யீந்தால்

போற்றியே மூன்றுநா ளாறு போதில்
பொல்லாத சூதகத்தின் சுரங்கள் தீரும்
பார்த்திபனே நெய்மிளகி லீந்தா யானல்
பறந்துபோஞ் சூதகத்தின் சயங்க டானே. 57

சயமான சர்க்கரையி லேழு நாள்தான்
தண்மையுடன் ருன்கொடுக்கத் தயவாய்க்கேளு
மயமான சூதகத்தின் வாய்வி னேடு
மைந்தனே யுதிரத்தின் கட்டுத் தீரும்
நயமான வெற்றிலையில் மென்று தின்ன
நன்மையில்லாச் சுகசந்நி நாடா தோடும்
பயமென்ன பத்தியங்கள் பயமோ வில்லை
பரமான பூரணத்தின் பதிவு தானே. 58

நாலுபலம் பளிங்கு சாம்பிராணியைப் பொடிசெய்து ஒரு குடுவையிலிட்டு, வாய் பொறுத்தமுள்ள மற்ருெரு குடுவையின் உட்புறத்தில் வெண்மையான காகிதத்திஞல் ஒட்டி, வாய் பொறுத்தத்திற்கு சீலைமண் செய்து,நெய் விளக்கேற்றி, சட்டித்தூறில் சூடுபடும்படி நான்கு சாமம் எரித்து ஆற விட்டெடுத்துச் சீலையைப் பிரித்துப் பார்க்க, மேற்சட்டி உட்புறத்தில் ஓட்டபட்ட காகிதத்தில், மிக்க வாசனையுடன் அப்பிரக பற்பம் போல, சாம்பிராணிப்பூ பதங்கியிருக்கும்.

வெற்றிலைப் பாக்கு போட்டுக்கொள்ளும் பொழுது மிளகளவு சாம்பிராணிப்பூச்சேர்த்து உண்டால், தாது விருத்தியுண்டாகும்.

சாம்பிராணிப்பூ 2½ வாரகனெடை, கிராம்பு 3¾ வராகனெடை, கோரோசனை 1¼ வராகனெடை இவைகளை, கல்வத்திலிட்டு வெற்றிலைச் சாற்றினல் இரண்டு நாழிகை(48 நிமிடங்கள்) அரைத்துக் குன்றிபோல் குளிகை செய்து நிழலில் உலர்த்தவும். ஒரு மாத்திரை தேனில் இருவேளை மூன்று நாள் கொடுக்க சூதகசுரம் தீரும். மிளகுப்பொடியுடன் நெய் சேர்த்துக் கொடுக்கச் சூதகக்குறைவு தீரும். சர்க்கரையில் ஏழு நாள் கொள்ளச் சூதகவாய்வு, சூதக்கட்டு தீரும். வெற்றிலையில் வைத்து மென்று தின்னச் சுகசன்னி தீரும்.



குறிப்பு:— சாம்பிராணிப் பதங்கம் எடுப்பதில், மேற்கூறிய முறையைவிடக் கீழ்க் கூறப்படும் முறையில் மிகுதியாகப் பதங்கத்தைச் சேகரிக்கலாம்:

ஒரு வாயகன்றதும் குழிந்து ஆழமானதுமான ஒரு சட்டிக்கு, வாயைப் பட்டுத் துணியால் கட்டி, அத்துணிக்கு மேல் வேண்டிய அளவு சாம்பிராணியை நறுக்கி வைத்து, வாய் குவிந்த மேற்சட்டி உதடு மறையும் மட்டும் குழி வெட்டி, அக்குழிக்குள் சிறிது சேறிட்டுச் சட்டியைப் பதிய வைத்து, மேற்சட்டி உதடுவரை மண்ணையிட்டு மூடி, வரட்டியிட்டுப் புடமிடச் சாம்பிராணிப்பூ கீழ்ச்சட்டியில் தங்கும்.

## 24. சித்த வயிரவம்

எழுசீர் விருத்தம்

இனிதரு சித்த வயிரவ மிசைக்கில்
இரதங்கந் தகமரி தாரம்
தனிதரு சமனுக் கூட்டியே பொடித்துத்
தளருருக் குமரிநீர் விடுத்து
நனிதரு யாம மரைத்தவவ் வளவே
நண்ணுதோ லாந்திரத் தெரித்து
முனிதரு முத்தீ மீன்பெறு பிச்சின்
முதிர்ந்திட வரைத்தபி னெண்ணே. 59

எண்ணிய கழையி லடைத்துவைத் ததனை
இருசண விதைப்பிர மாணம்
நண்ணிய கால பலமறிந் தெடுத்து
நண்மது திப்பிலி கூட்டிப்
பண்ணிய வனுபா னம்பெறக் கரைத்துப்
பரவிய குணந்தரக் கொடுக்கில்
திண்ணிய சிம்மகன் றன்னையே தீர்க்கும்
திக்கெலா மிக்கதாய்ப் புகழ. 60

இரசம், கந்தகம், அரிதாரம், முறைப்படி சுத்தித்து, கல் வத்திட்டுப் பொடித்து, கற்றாழைச் சாற்ருல் ஒரு சாமம் அரைத்து உருட்டி, தோலாந்திரமாக மேற்படி சாற்றில் ஒரு சாமம் முத்தீயால் எரித்து, எடுத்து, மீன் பிச்சால் நன்ருய் அரைத்து, மூங்கிற் சிமிளில் அடைக்கவும். இருசணல் விதைப் பிரமாணம் தேன், திப்பிலிப் பொடி கூட்டிக் குழைத்துக் கொடுக்க சிம்மக சன்னி தீரும்.

## 25. சுவச்சந்த வயிரவம்

### எழுசீர் விருத்தம்

தீதில்சு வச்சந்த வயிரவ முரைக்கின்
திகழ்வங்க பற்பம்வெங் காரம்
கோதில்நற் கந்தகம் வச்ச நாபங்
குலவிர தம்மிவை சுத்தி
ஓதில்மிக் குறவே சமன்பெறக் கூட்டி
உதகமாந் திரிபலைக் குடிநீர்
போதிலங் கதனு லிரண்டுநா ளரைத்துப்
பொற்புறத் திரட்டியந் நீர்க்கே, 61

நீடிய தோலா யந்திர மாகத்
தூக்கியே நிகரிரு யாமம்
கூடியவ் வளவு மெரித்தபின் வாங்கிக்
கோலத்தின் பிச்சினு லரைத்துத்
தேடிய குன்றி யளவுற வுலர்த்தித்
திகழிஞ்சிச் சாற்றினி லிடவே
ஓடிய கண்ட குப்சசன்னிவிட் டகலும்
ஓதனந் ததிதண்ணீ ருண்ணே. 62

வங்கபற்பம், வெங்காரம், கந்தகம், வச்சநாபி, இரசம் இவைகளை ஓரளவாகத் தூக்கி, முறைப்படி சுத்தித்து, கல் வத்திலிட்டுப் பொடித்து, திரிபலைக் குடிநீரினுல் இரண்டுநாள் நன்ருக அரைத்து உருட்டி, ஷை குடிநீரில் தோலாந்திரமாக



இரண்டு சாமம் நீர் வரளும் மட்டும் எரித்து எடுத்துப் பன்றிப் பித்தினுல் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி, இஞ்சிச்சாற்றில் ஈய, கண்ட குப்ச சன்னி தீரும். தயிர்ச்சோறு, தண்ணீர் உண்ணலாம்.

## 26. சூலைக் குடாரம்

### அகவல்

இரதம் வெங்காரம் இசைந்த கந்தகம்
திரிபலை திரிகடுகு தாளக நாபி
தாம்பிரம் வாளம் தற்சமன் கூட்டி
ஆங்கரி சாலை நீரறை முந்நாள்
குன்றி யளவு கூட்டிடு மாத்திரை
ஒன்றை யிஞ்சியி னுயரிய சாற்றில்
நன்றிடு சூலை குன்மமு நாடா. 63

இரசம், வெங்காரம், கந்தகம், திரிபலை, திரிகடுகு, தாளகம், நாபி, தாம்பிரபற்பம், நேர்வாளம் ஒருநிறையாய் நிறுத்து, முறைப்படி சுத்தித்து, கல்வத்திலிட்டுக் கரிசாலைச் சாற்ருல் மூன்றுநாள் அரைத்துக் குன்றியளவு மாத்திரையாய்ச் செய்து நிழலில் உலர்த்தவும். இஞ்சிச் சாற்றில் மாத்திரை ஒன்ருகக் கொடுக்கக் சூலை குன்மம் தீரும்.

## 27. சூலை பூபதி

### அகவல்

இரசந் தொடி மூன் றிரவிபற்பம்
கரிய நாபி கந்தகம் வாளம்
வகைக்கோர் தொடியாம் வைத்திடு குழிக்கல்
தகவரை திருகு கள்ளிச் சாற்றில்
எருக்கம் பாலி லியலொவ் வோர்நாள்
சிறுமாத் திரையாய்ச் செய்து நிழலில்
உலர்த்து பின்குப்பி யுள்ளிட் டதனை
நல்மணற் பொறியில் நாட்டி யெரிப்பது
பன்னிரு சாமம் பகர்விளக் கைப்போல்

நன்று யாறின் நாபிகால் கூட்டித்
திருகு கள்ளி செழுமயில் மீனரா
காட்டுப் பன்றி யெருமைக் கடாப்பிச்
சரைத்துக் குன்றி யளவு செய்து
விரைந் தொன்றீய வெருவுஞ் சூலை
ஆதலிற் சூலைபூ பதியென வறைக. 64

இரசம் 3 பலம், தாம்பிரபற்பம், கருநாபி, கந்தகம்' வாளம் வகைக்கு 1 பலம், முறைப்படி சுத்தித்துக் குழிக்கல்லில் சேர்த்து நன்றாகத் திருகுகள்ளிச் சாற்றில் ஒரு நாளும், எருக்கம்பாலில் ஒருநாளுமாக அரைத்து, சிறு சிறு மாத்திரைகளாகச் செய்து, குப்பியில் அடைத்து, மணல் பொறியில் அமைத்து 12-சாமம் விளக்கைப்போல் எறித்து எடுத்து ஆறியபின் மருந்தெடைக்குக்கால்பங்கு நாபி சேர்த்து, திருகுகள்ளிச்சாறு, மயில், மீன், பாம்பு, காட்டுப்பன்றி, எருமைக்கடா இவைகளின் பிச்சாலரைத்துக் குன்றியளவு செய்து நிழலில் உலர்த்தவும். தக்க அனுபானத்தில் கொடுக்கச் சூலை தீரும்.

## 28. தாழம்பூ மாத்திரை

### எழுசீர் விருத்தம்

மாமகனி லிங்கரச செந்தூர கந்தகம்
வாளமிவை யான தொடியும்
நாமகணி லத்தேக மொன்றென்று திரியுபய
நற்கைதை மலரா மறை
சாமநா லானபின் கறிபுரையு மணிசெய்து
சாத்தி ராநுபானத் திட
வாமமுறு வளிகுடல் வாயுமுத லேகுறும்
வன்கைதை மலர்மணி யிஃதே. 65

வீரம் 1 பலம், இலிங்கம் 1 பலம், இரச செந்தூரம் 1 பலம், கந்தகம் 3 பலம், வாளம் 2 பலம் இவைகளை முறைப்படி சுத்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து நல்ல



மணமுள்ள தாழம்பூச் சாற்றால் நான்கு சாமம் நன்றாக அரைத்து, மிளகு அளவு மாத்திரை செய்து, தக்க அனுபானத்திலிட குடல் வாயு, மற்ற வாயுக்களும் தீரும்.

குறிப்பு:—சிறப்பாக இம்மருந்து பழக்கத்தில் நெறிக்கட்டுச் சுரத்திலும், அது சம்பந்தமான தசை அண்ட வீக்கத்திலும் உபயோகப்படுத்தப் படுகின்றது.

## 29. திரிலோக ரட்சாமணி

### அறுசீர் விருத்தம்

பொன்வெள்ளி செம்பு காந்தம்
புகல் லோகம் நாபிதுத்தம்
மின்வஜ்ஜிரம் வங்க பற்பம்
வெங்காரம் சிலையுங் கந்தி
தன்னவாச் சாரஞ் சரியாய்ச்
சார்நொச்சி வேளை சாலை
இன்னிவை யொவ்வோர் தாளா
மியன்றரை சங்குட் சேரே. 66

சேர்த்துமண் சீலை நன்றாய்ச்
செய்தானைப் புடஞ்செய் நீக்கிச்
சேர்த்தசங் குடன் பொடித்த
செவ்வெடைக் கிரதங் காலும்
ஆர்த்தரைக் கந்தியுஞ் சேர்த்
தரைசெருப் படைமுச் சூலி
கார்த்தலூ மத்தைச் சாற்றில்
கணக்கொரு நாளு மரையே. 67

அரைத்துமாத் திரைகள் செய்தே
அடைகுப்பி மண்ணின் சீலை
மறைத்ததை மாக்கல் மூடி
மணற்பொறி நான்கு சாமம்

எரித்தது குளிர்ந்த பின்னர்
எடுத்தெடை நாலி லொன்று
இருப்புச் செந்தூர மரைக்கால்
ஏமபற் பந்தான் சேரே. 68

சேர்த்திடு நாபி வீசம்
நிர்விட மரைய தற்கு
வார்த்திடு நாக தாளி
வளர் தேவதாளிச் சாறு
சேர்த்தவெண் காக்க ணந்தான்
திகழ்பழு பாக விஞ்சி
ஆர்த்தமண் பனை யரைத்தே
யதுபுரி குன்றி யளவே. 69

பொன்பற்பம், வெள்ளிபற்பம், செம்புபற்பம், காந்த பற்பம், அயபற்பம், நாபி, துத்தம், வைரபற்பம், வங்கபற்பம், வெங்காரம், மனோசிலை, கந்தகம், நவாச்சாரம், சம அளவு எடுத்து சுத்திசெய்ய வேண்டியவற்றைச் சுத்தித்து, முறைப்படி கல்வத்திலிட்டுப் பொடித்து, 'நொச்சிச்சாறு, வேளைச்சாறு, கரிசாலைச்சாறு இவற்றால் முறையே ஒவ்வோர் நாளரைத்து, ஒரு சங்கினுள் அடைத்து, சீலைமண் செய்து, ஆனைப்புடம் போட்டு, ஆறவிட்டெடுத்து, அவ்வெடைக்கு இரதம் $\frac{1}{4}$ பங்கும் கந்தி $\frac{1}{2}$ பங்குமாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து, செருப்படைச்சாறு, சிறு குறிஞ்சான் சாறு, கருவூமத்தைச் சாறு, இவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருநாள் அரைத்து மாத்திரை செய்து உலர்த்தி, மண்சீலை செய்த காசிக்குப்பியில் அடைத்து, குப்பி வாயை மாக்கல் அடைப்பானால் மூடி, மணற்பொறியில் நான்கு சாமம் எரித்துக் குளிர்ந்தபின் மருந்தை நிறுத்து, அவ்வெடைக்கு நாலில் ஒன்று இரும்புச் செந்தூரமும், $\frac{1}{8}$ பங்கு பொன்பற்பமும், வீசம் பங்கு நாபியும், 1/32 பங்கு நிர்விஷமும் சேர்த்துக் கல்வத்திலிட்டு நாகதாளிச்சாறு, தேவதாளிச் சாறு, வெண்காக்கணஞ் சாறு, பழுபாகல்சாறு, இஞ்சிச்



சாறு இவற்றால் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்யவும்.

பொருத்தமான அனுபானத்தில் கொடுக்க, மேகம், க்ஷயம், தாது க்ஷீணம் இவைகள் தீரும்.

## 30. நவலோகாக்கினி குமாரன்

எழுசீர் விருத்தம்

ஓடிடு நவலோ காக்கினி குமாரனை
உரைத்திடச் சுத்தித்த சூதம்
தேடிடு பொன்னும் வெள்ளிசெம் பிரும்பு
திகழ்ந்த காரீயம் வெள்ளீயம்
சேடிடுங் காந்தம் வெண்கலத் தோடு
திகழ்ந்த அப்பிரக மொன் பதுமே
பாடிடும் பற்பம் தாக்கியோர் நிறையாய்ப்
பணைத்திடு மெருக்கம்வே ராமே. 70

எருக்கம்வேர்க் கியாழந் தன்னினு லரைத்தே
இயல்பெற அஞ்சுநாள் தானும்
மருக்கமாங் காசிக் குப்பியி லடைத்து
மண்செய்து வாலுகை வைத்துப்
பருக்க வீராறு சாமந்தீ யிட்டுப்
பண்புடனுறின பிறகே
பெருக்கமாங் கல்வத் திட்டுமே பொடியாய்ப்
பெருமையக் கியாழத்தி லாட்டே. 71

ஆட்டியே குன்றி நிறையள வாக
அடர்ந்தோர் நிழல்தனி லுலர்த்திப்
பாட்டிய அனுபா னந்தனிற் குளிகை
பருகிடச் சகலமாஞ் சுரங்கள்
நாட்டிய சந்நி நடுக்கலுங் குளிரும்
நாவினில் வரட்சியுந் திமிரும்
காட்டிய பரிதி முன்பனி போலக்
கலங்கியே நடுங்கிடுந் தானே. 72

இரசம், பொன், வெள்ளி, செம்பு, காந்தம், காரீயம், வெள்ளீயம், வெண்கலம், அப்பிரகம் இவற்றின் பற்பங்களைச் சம அளவாக எடுத்துக் கல்வத்திட்டு, எருக்கன்வேர்க் குடிநீரினால் ஐந்து நாள் அரைத்துச் சிறு சிறு மாத்திரைகளாகச் செய்து, சீலைமண் செய்த காசிக்குப்பியில் அடைத்து, மணற்பொறியில் 12-சாமம் எரித்து, ஆறவிட்டு எடுத்து கல்வத்திலிட்டுப் பொடித்து, எருக்கன்வேர்க் குடிநீரினால் அரைத்து, குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும். தக்க அனுபானத்திலிட சுரங்கள், சன்னி, நடுக்கல், குளிர், நாவரட்சி, திமிர் இவைகள் தீரும்.

## 31. பச்சைக் கர்ப்பூர மாத்திரை

பதினான்குசீர்க் கழிநெடிலடி விருத்தம்

சீர்பெருகு பசியகர்ப் பூரமில வங்கமுஞ்
செம்மை யாகுங்கு லக்காய்
தேசுதிகழ் ரசபற்பங் கந்தகஞ் சுத்தியாய்ச்
செய்யுமல பந்தாரியும்
நீர்பெருகு தொடிசமன் கொண்டரை கற்றாழை
நீரினாற் சிக்கு மளவை
நேர்மையாய் மாடநிறை கணிபுரிந் தநுபான
நிர்மலப் பிரச மிஞ்சி
ஏர்பெருகு சாறுகளி லீந்திடோர் மணிவேளை
யீரிரண் டலிநா ளினில்
இயமனொப்பு வெப்புச்சு ரந்தாப சுரமுடனே
யிகல்வாத மெண்ப தோடும்
பார்பெருகு பித்தமீ ரிருபானுஞ் சேத்துமம்
பகர்தொண்ணூற் றாறு முடனே
பாற்றிடும் பாம்பின்வாய்த் தேரைபோ லிஃதுண்மை
பச்சைக்கர்ப் பூர மணியே. 73



பச்சைக்கர்ப்பூரம், லவங்கம், சாதிக்காய், இரசப்பதங்கம், கந்தகம், வாளம் வகைக்கு 1 பலம் முறைப்படி சுத்தித்து, கல்வத்திலிட்டுப் பொடித்து, கற்றாழை நீரினால் பக்குவம் வருமட்டும் அரைத்து, உழுந்தளவு மாத்திரைகள் செய்து, நிழலிலுலர்த்தவும். தேன் இஞ்சிச்சாறு இவைகளில் வேளைக்கு ஒரு மாத்திரையாகக் கொடுக்க, வெப்புச்சுரம், தாபச்சுரம், வாதம்-80, பித்தம்-40, சேத்துமம்-96 ம் தீரும்.

## 32. பால சஞ்சீவி

**எண்சீர் விருத்தம்**

திரிகடுகு வெங்காரஞ் சாதி லிங்கஞ்
சிறந்திடவே யைம்மருந்துஞ் சமன தாக
நெறிபடவே யெலுமிச்சம் பழத்தின் சாற்றால்
நெகிழ வரைத் தொருசாம நிறைய தாகக்
குன்றியுடனே யுண்டைதனைப் பயற்றிற் பாதி
குளிர்நீழ றனிலுலர்த்திக் குழவிக் கீய
மறிபடவே பாலசஞ்சீவி யென்று
வகுத்துரைத்தார் மலைமுனிவர் மண்ணு
ளோர்க்கே. 74

மலைமுனிவர் தானுரைத்த வகையே தென்னில்
மாந்தகண சுரதோடம் வயிற்றி னோட்டம்
கொலைசெய்யும் பித்தமுத லிருமல் வாந்தி
குலைந்திடு நோயுள்ளதுவுங் குடிதான் போக
நிலைபெறவே பத்திரியைப் பிட்ட தாக்கி
நீர்வாங்கித் திரிகடுகு கற்க மாக்கி
உலையுயர்ந்த கியாழமதில் கற்க மோடு
உண்டை யொன்று தானெடுத்தி டாயே. 75

உரைத்திடுமே புறவிருமல் கணநா முள்ளு
உவந்த கோரோசனமு மொக்கக் கூட்டிக்
கரைத்திடுங்கா லிரத்தகண மூலங் கண்டால்
கடுகவே சாதிக்காய் புளிவித்தோடு

அரைத்திடுமே யுண்டையொன்று சுக்குங்கூட்டி
யருந்திடவே வில்வப்பழச் சதைக்குள் வைத்து
வரைத்திடுமென் றருள்முனிவர் விபரஞ் சொன்ன
வாலசஞ் சீவியென்றே வகுக்க லாமே. 76

வகுக்குங்கால் பத்திரிதன் வகையைக் கேளு
மணித் துளசி செம்முள்ளி யாடாதோடை
பகுத்திடுவாய் தூதுவளை விட்ணு காந்தி
பண்புசெறி கண்டங்கத் தரியிஞேடு
நிகழ்த்திடுமே வெதுப்படக்கி பேய்ப்பு டோலும்
நின்றசங்க ணிலைநொச்சில் நிறைதான் கூட்டிச்
செகுத்திடுமே சுவாசசுர கணதோ டங்கள்
தெரிந்துரைத்தார் மாமுனிசஞ் சீவி யென்றே. 77

திரிகடுகு, வெங்காரம், இலிங்கம் சம எடையாக எடுத்து, முறைப்படி சுத்தித்து கல்வத்திலிட்டுப் பொடித்து, பழச்சாற்ருல் ஒரு சாமம் நன்ருக அரைத்து, பாசிப்பயற்றில் பாதியிருக்கும் படியாக உருட்டி நிழலில் உலர்த்தவும். குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தம், கணம், சுரதோடம், வயிற்ருேட்டம், பித்த இருமல், வாந்தி இவைகளுக்கு மாசிப்பத்திரி, பிட்டவியல், சுரசத்தில், திரிகடுகு, கற்கம் சேர்த்து மாத்திரையுடன் கொடுக்கத் தீரும். சுரம், இருமல், கணம், நாமுள் இவைகளுக்குக் கோரோசனத்தைக் கூட்டிக் கொடுக்கத் தீரும். இரத்தகணம், மூலம் இவைகட்கு சாதிக்காய், புளியம்வித்துத் தோல், சுக்கு,வில்வப் பழச்சதை இவைகளுடன் கொடுக்கத் தீரும். மணித்துளசி, செம்முள்ளி, ஆடாதோடை, தூதுவளை, விஷ்ணுகாந்தி, கண்டங்கத்தரி, வெதுப்படக்கி, பேய்ப்புடல், சங்கனிலை, நொச்சி இவைகளின் சாறுகளைச் சமமாகக் கூட்டி அளவுடன் மாத்திரைக்கு அனுபானித்துக் கொடுக்கச் சுவாச சுரம், கணதோஷங்கள் தீரும்.



## 33. பாஷாண மாத்திரை

### அகவல்

பாஷாண மாத்திரைப்பேர் பாண்டி தோத்தமக்கிரீடை
பாசுப தாத்திரப்பேர்ப் பாணமாம் பிணிப்படைக்கே
பாழான காத்திரத்தைப் பாலருளா யிற்போற்றும்
பாதாதி கேசமட்டும் பாய்ச்சிய கவசமாகும்
பாவக மாஞ்சுரத்தைப் பாறமோதிடு தண்டாகும்
பாஷண மொருதொடிக்குப் பாவிரி யறலிரண்டு
பாய்ச்சிமத் தித்துமேலொன் பான்றினம் வெயில்ற்சிலை
பார்த்திபத் தொருபுடஞ்செய் பாடலத்தினுமவ் வாறே
பாசரை யிலுமவ்வாறே பான்மையிற் பருப்பஞ்செய்த
பாண்டுவை லிகுசச்சாற்ருல் பாவிரு நாளரைத்துப்
பால்பிரித் தரை மாலூரில் பாங்குற வுருட்டி யீரம்
பாறுமாத் திரையைத் தேனில் பாரணித் திடக்குன்
[மம் போம்

பானீயத் துண்ணிற்சீத பாவக வெப்பமாயும்
பாவைய ரமுதிலுண்ணிற் பாண்டுரோ கங்கள்நீங்கும்
பாசாங்கு சேந்த்ரபத்திர பானீயத் தினிலேயுண்ணிற்
பாஷாண்ட சுரங்கள்சன்னி பாதங்கள் வலிகள்போகும்
பாஷாண மாத்திரைப்பேர்ப் பாக்கிய வவிழ்தமீதே. 78.

பாஷாணம் 1 பலம் முறைப்படி சுத்தித்து, 2 பலம் பாகலிலை இரசம்விட்டு, ஒன்பது நாள் அரைத்து வில்லை செய்து காயவைத்து, ஓட்டிலிட்டு சீலை செய்து மணல் மறைவில் 3 வரட்டியில் புடமிடவும். மேற்படியாகவே பாதிரிப்பூ இரசத்திஞலும் பசரைக்கீரைச் சாற்றிலும் அரைத்துப் புடமிட்டு எடுக்கப் பற்பமாகும். இப்பற்பத்தை எலுமிச்சம் பழச் சாற்ருலும் வில்வயிலைச்சாற்ருலும் முறையே இரண்டிரண்டு நாள் அரைத்துப் பயறளவு மாத்திரையைத் தேனில் இழைத்துக் கொடுக்கக் குன்மம்போம். தண்ணீரில் உண்ண சீதபித்த சுரம்போம். முலைப்பாலில் உண்ண பாண்டுரோகம் போகும்.

அறுகம் புல் சாற்றில் கொடுக்கப் பழைய சுரங்கள், சன்னி கள், வலிகள் தீரும்.

குறிப்பு:—இம் மாத்திரை செய்து ஒரு திங்கள் பழகிய பிறகே பயன் படுத்துவது நலம்—பத்தியம் உப்பு நீக்கிய கஞ்சிகளே நல்லது.

## 34. பிரதாபாக்கினி குமாரன்

எழுசீர் விருத்தம்

பாரினிற் பிரதா பாக்கினி குமாரன்
பகர்ந்திடச் சுத்தித்த ரசந்தான்
தாரினிற் றும்பிர பற்பமு நாபி
தனித்திடு முளகுசுக் கோடே
ஏரினி லெவாச்சா ரஞ்சத்திச் சாரம்
இயல்சீன காரமு மாகும்
காரினிற் கடனீர் காய்ச்சிய வுப்பு
கனமிலா வட்டுப்பு மாமே. 79

ஆமென்ற வளையலி னுப்போடு சிவந்த
அமிர்தமா முப்போடு சரக்கும்
தாமென்ற சமனுய்க் கல்வத்தி விட்டுத்
தனித்திடு மிஞ்சியின் சாற்றில்
ஓமென்ற வொருநா ளரைத்துமே யுலர்த்தி
உறுதியாங் குப்பியி லடைத்து
வாமென்ற வாலுகா யந்திரத் தொருநாள்
மந்தமா மக்கினியிற் போடே. 80

போட்டுமே யெரித்துவிட் டான பின்பு
பொடித்துமே நாபியோர் பங்கு
வாட்டுமே யிஞ்சிச் சாற்றினி லரைத்து
வகைக்குன்றி யளவதா யுருட்டி



ஊட்டுமே யிஞ்சிச் சாற்றிலோ ருருண்டை
யுரைத்திட மூன்று நாள் தானும்
பாற்றுமே சகல சந்நியுஞ் சுரமும்
பலபல குணமறும் பேசே. 81

இரசம், தாம்பிரபற்பம், நாபி, மிளகு, சுக்கு, யவாச் சாரம், சத்திச்சாரம், சீனகாரம், கடல்நீர்காய்ச்சிய உப்பு (சோற்றுப்பு), அட்டுப்பு, வளையலுப்பு, இந்துப்பு இவற்றைச் சம நிரையாக நிறுத்து முறைப்படி சுத்தித்து, கல்வத்திலிட்டு பொடித்து, இஞ்சிச்சாற்றில் ஒரு நாள் நன்ருக அரைத்து, சிறு மாத்திரைகளாக உருட்டி உலர்த்திச் சீலைசெய்த குப்பி யில் அடைத்து, மணல் இயந்திரத்தில் ஒருநாள் சிறுதீயாக எரித்து ஆறவிட்டு எடுத்து, எடைக்கு 12-ல் ஒருபங்கு நாபி சேர்த்து, இஞ்சிச்சாற்றினில் அரைத்துக் குன்றியளவாக மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும். வேளைக்கு ஒன்ருக இருவேளை மூன்று நாள் இஞ்சிச்சாற்றில் கொடுக்க, எல்லா வகையான சன்னியும், சுரமும் தீரும்.

## 35. பிரமாநந்த வயிரவம்

எழுசீர்ச் சந்த விருத்தம்

டங்க ணம்பரை நாத கண்டிபம்
தாரமாம் விட நாகரம்
தங்களுக் கெடை தான்நி றைச்சரி
ஜாதி லிங்கமோ டேழுமே
அங்கதுள் விட மாற்றி யல்லநீ
ராட்ட நற்றின மாமணி
சங்க ரித்திடு மிஞ்சி நீர்மது
சாற்றச் சந்நிசு ரங்களே. 82

வெங்காரம், கந்தகம், மனேசிலை, அரிதாரம், நாபி, சுக்கு, வகைக்கு 1 பங்கு, இலிங்கம் 6 பங்கு, இவைகளை முறைப்படி சுத்திசெய்து, இஞ்சிச்சாற்றில் நன்ருக 1-நாள்

அரைத்து, மிளகளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். இம் மாத்திரையைத் தேன் இஞ்சிச் சாறுடன் அனுபானித்துக் கொடுக்கச் சன்னி சுரங்கள் தீரும்.

## 36. பூத வயிரவம்

எழுசீர் விருத்தம்

எண்ணிடு வயிர வம்பதின் மூன்றும்
இதனிற் பூத வைர வந்தான்
பண்ணிடி விரதங் கந்தகந் தாம்பிர
பற்பமுஞ் சமனு றக்கூட்டி
நண்ணிடு கொடிவே லிக்குடி நீரால்
நன்றுற வரைத்தபி னெடுத்தே
மண்ணிடு குகையி லடைத்து மண்பூசி
வாலுகா யந்திரத் தொருநாள் 83

ஒழித்திடா தெரித்துத் தணிந்தபின் வாங்கி
ஓங்கிய வெருகுறு பிச்சின்
வழித்திடா திரண்டு யாமமே யரைத்து
வளம் பெறக் குன்றியி னளவே
அழித்திடா தினிய பானமாம் விசேடத்
தமைத்திடிற் றுந்திரி கன்கண்
விழித்திடா வின்பம் விளைத்தகங் களிக்க
முனிவர் வேண்டிய தளிப்பர். 84

இரசம், கந்தகம், தாம்பிரபற்பம், சம அளவாக கொடிவேலிக்குடி நீரால் நன்றாக அரைத்து மாத்திரைகளாக உருட்டிக் காயவைத்து, குடுவையில் இட்டு சீலை செய்து மணல் இயந்திரத்தில் ஒருநாள் எரித்து ஆறவிட்டு எடுத்து, பூனையின் பிச்சினால் இரண்டுசாமம் அரைத்துக் குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும். தேனில் கொடுக்க தாந்திரிக சன்னி தீரும்.



## 37. பூர மாத்திரை

எழுசீர் விருத்தம்

இரசகர்ப் பூரமைந் நிட்கமசை யேலமலர்
இன்வசம் புக்கரி யொடே
சரதமதி விடயமா சிக்காயி வாறினிறை
தனித்தனிக் காற்றொடிய தாய்
விரதமொடு விஷ்ணுக்க ரந்தைமா சிப்பத்திரி
வேர்கள்சாற் றெவ்வோர் சாமம்
பரவியரை கொத்துமலி யளவுருண் டைபுரிவை
பகர்பூர மாத்திரை யிதே. 85

வெண்பா

எல்லாமாந் தங்கட்கு மேற்றகியா ழுஞ்சுரசத்
தெல்லானை நேசியொன் றீயவே — நல்லாய்கேள்
பொன்போற் சரீரத்தைப் பூவுலகி லேமாற்று
மன்மாந்த மில்லையெனு மால். 86

இரசகற்பூரம் ½ பலம், சீரகம், ஏலம், இலவங்கம், வசம் புக்கரி, அதிவிடயம், மாசிக்காய் இவைகள் வகைக்கு ¼ பலம்; இவைகளை முறைப்படி சுத்தித்து, கல்வத்திலிட்டுப் பொடித்து, விஷ்ணுக் கரந்தை வேர்ச்சாறு, மாசிப்பத்திரி வேர்ச்சாறு, இவற்றால் முறையே ஒவ்வோர் சாமம் நன்றாக அரைத்து, கொத்துமல்லி விதையளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தவும். மாந்தங்கட்கு தக்கவாறு குடிநீரிலேனும் சுரசத்திலேனும் கொடுக்கத் தீரும்.

## 38. மஹா ஏலாதி குளிகை

பதினான்குசீர்க் கழிநெடிலடி விருத்தம்

ஏலமில வங்கமும் வால்மிளகு சந்தனம்
மிருவேலி விலாமிச் சகில்
எழுபதும் கேசரம தன்வளை மதுரமும்
மெழுகார மசுவ கந்தி

வாலகுங் குமசாந்தி கர்ப்பூரங் கஸ்தூரி
வன்கலைக் கோடு மாஞ்சில்
மகிழுமுருத் திராக்கமொடு கோரோசனை
யம்பரும் வகைவகைக் கிருகழஞ் சாய்
சாலசாம் பிராணிபொன் னப்பிரகம்
வெள்ளியுந் தண்டரள பவள மோடு
சாற்றுமிப் பற்பங்கள் வெவ்வேறு சேர்த்
ததிற்றுன் கழஞ்சிட் டரைத்தே
மேலுமா துளையுமிள நீர்முலைப் பாலென்று
மிவைய ரைத் துண்டை குன்றி
விசுவா சம்மிதை யநுபான விதியினால்
விசுவாச முட னுண்ப ரே. 87

உண்பரவு வநுபான மிளநீர்பால் சர்க்கரை
யோதுதேன் கனிவர்க் கமும்
ஒளிர்முகத் தழகுதவு முத்தமத் தானமுட
னொருமண்ட லங்கொள்ள வே
பண்பரவு சங்கீத சாகித்திய வித்தையும்
பகருமவ தான நினைவும்
பாவையர்க் கநுகூல மதனெனவே யாயுசும்
பாரு லகில் பெற்று வாழ்வர்
கண்பரவு பிணிதாப தாகச்சு ரங்கள் போகி
கண்காசங் கள்ளெரிவு போம்
காமாலை நீரிழிவு சோபைரோ கம்முழலை
கைத்தெடுத் திடுவாந்தி போம்
எண்பரவு புவிராசர் மெச்சுமௌ ஷதமிது
விமையோர்கள் போற்றி செய்ய
மெண்டிசைக் கருள்வைத்திய சூடாம ணிக்குளருள்
ஏலாதி யுண்டை யிஃதே. 88

ஏலம், இலவங்கம், வால்மிளகு, சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், அகில்கட்டை, [தாமரை மகரந்தம்,



தாமரை வளையம், அதிமதுரம், அக்ராகாரம், அசுவகந்தி, குங்குமப்பூ, பச்சைகற்பூரம், கஸ்தூரி, மான்கொம்பு, சடாமாஞ்சில், உருத்திராக்கம், கோரோசனை, அம்பர் இவைகள் வகைக்கு 2½ வராகனெடை, சாம்பிராணிப்பூ, அப்பிரகபற்பம், வெள்ளிபற்பம், முத்துபற்பம், பவளபற்பம், இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை, சுத்திக்க வேண்டியவைகளைச் சுத்தித்து, பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்து, குழிக்கல்லில் சேர்த்து, மாதுளைப்பூ இரசம், இளநீர், முலைப்பால் இவைகளில் தனித்தனி நன்றாக அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும். இளநீர், பால், சர்க்கரை, தேன், பழரசங்கள் அநுபானங்களாம். இதனை ஒரு மண்டலம் கொண்டால் முக அழகு, நல்லதொனி, மதனை ஒத்த அழகும், நீண்ட ஆயுளும் உண்டாகும். தாபச்சுரம், கண்ணோய், தாகச்சுரம், கண்காசம், கல்லடைப்பு, காமாலை, நீரிழிவு, சோபை, உழலை, வாந்தி இவைகள் தீரும்.

## 39. மதன வயிரவம்

### எழுசீர் விருத்தம்

ஆணிதரு மதன வயிரவ முரைக்கில்
அரன்விந்து கந்தகத் துடனே
மணிதரு மினிய சயிந்தவ லவணம்
மனோசிலை தாம்பிர பற்பம்
கணிதரு சமனாய்க் கூட்டியே கண்டங்
கத்திரி சிறுவழு தலைதான்
பணிதரு பழத்தின் சாற்றினா லரைத்துப்
பதம்பெறுந் தகையினில் வைத்தே. 89

வைத்தபின் கலந்திடு மணல்நடு வாக
மருவுறச் சிறுபுடங் குழியில்
வைத்தபின் குளிர வாறியே யெடுத்து
வழுத்திடாப் பிச்சினி லரைத்து

வைத்தபின் சணபிர மாணமாங் குளிகை
வைத்திடு திரிகடுக் குடிநீர்
வைத்ததிற் கோத நீரினி லொன்றில்
வளர்சித்தப் பிரமனே மாற்றும். 90

இரசம், கந்தம், இந்துப்பு, மனோசிலே, தாம்பிரபற்பம் சம அளவு சேர்த்து, இவைகளை முறைப்படி சுத்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சிறு வழுதுணைச்சாற்றால் பதம் வரும் வரையில் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி, மணல் மறைவில் ஒரு சிறு குழிப்புடம் இட்டு, ஆறவிட்டு எடுத்துப் பசுவின் பிச்சினால் அரைத்து. சணல்வித்துப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும். இதனைத் திரிகடுக் குடிநீரில் ஈயச் சித்தப்பிரமை சன்னி தீரும்.

## 40. மனோகர வயிரவம்

### எழுசீர் விருத்தம்

தாக்கிய மனோகர வயிரவ முரைக்கில்
தர்மமாஞ் சத்தியிட சாரம்
தேக்கிய விரதந் திகழ்படி காரம்
செப்புமை விதமுறு லவணம்
ஆக்கிய யவாச்சா ரஞ்சம பாகம்
ஆருறக் கூட்டியே பொடித்துத்
தூக்கிய எருக்கம் வேர்க்குடி நீரில்
துவண்டிட மூன்றுநா ளரைத்தே. 91

அரைத்திடு மினிய வஜ்ஜிரக் குகையில்
அடைத்திடு சீலைமண் பூசி
எடுத்திடு மதனை வாலுகேந் திரம்பண
இருத்தியோர் நாளுற வெரித்து



விடுத்திடு மருந்தைக் கரத்துறு பிச்சின்
மேவவே யரைத்துளுந் தளவாய்க்
கொடுத்திடு குளிகை மதுப்பெற வளிக்கின்
குலவு சந்திகனைத் தீர்க்கும். 92

சத்திச்சாரம், இரசம், படிகாரம், பஞ்சஉப்பு, யவாச்சாரம் சம அளவில் முறைப்படி சுத்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து, எருக்கம்வேர்க் குடிநீரினால் மூன்று நாளரைத்து மாத்திரைகள் செய்து உலர்த்தி, வஜ்ஜிரக் குகையில் அடைத்து, சீலை மண் செய்து, வாலுகா இயந்திரத்தில் ஒரு நாள் எரித்து ஆறவிட்டு எடுத்து, கழுதைப் பிச்சினால் அரைத்து, உழுந்தளவு மாத்திரை செய்யவும். இதனைத் தேனில் கொடுக்கச் சந்திக சன்னி தீரும்.

## 41. முருக்கம் விதை மாத்திரை

### எண்சீர் விருத்தம்

திரிகடுகுஞ் சீரகமுங் கடுகரோ கணியும்
சேர்ந்தமுருக் கம்வித்துஞ் சமனாய்ச் சேர்த்து
நெறியுடைய நேர்வாள மிதற்குச் சமமாய்
நீர்வார்த்த ரைத்துண்டை சுண்டை போல
அரியபனை வெல்லமிள நீர்நெய் பாலும்
ஆனபழஞ் சீனிதனி லுள்ளே கொள்ள
கிருமியுடன் மாந்தமுஞ் சீதக் கட்டும்
கெண்டைவயிற் றுப்பிசமுங் கவிகை போமே. 93

திரிகடு, சீரகம், கடகரோகணி, முருக்கம்வித்து, (பலாசு வித்து) சம அளவு, இவைகள் எல்லாம் சேர்ந்த எடை நேர்வாளம் முறைப்படி சுத்தித்து, கல்வத்திட்டுப் பொடித்து, நீர் விட்டரைத்து சுண்டையளவு மாத்திரைகள் செய்யவும். பனைவெல்லம், இளநீர், நெய், பால், சீனி ஆகிய அநுபானங்களில் கொள்ள கிருமி, மாந்தம், சீதக்கட்டு, கெண்டை, வயிற்றுப்பிசம், கவிகை போகும்.

## 42. மேகநாதக் குளிகை

எண்சீர் விருத்தம்

பொருந்தியதோர் மேகநாதக் குளிகை தன்னைப்
புகழ்ச்சியுடன் சொல்லுகிறேன் பெரியோர் முன்பில்
கருதியதோர் வெங்காரம் சாதி லிங்கம்
கனமான சிவதைவேர் வசம்பு சுக்கு
நிருதியதோர் சயிந்தவமும் வாய்வி ளங்கம்
நேரான வோமமொடு பெருங்கா யந்தான்
விருதியதோர் காட்டாம ணக்கன் வேரும்
வினவுடனே தாமெடுப்பாய் பலமொன் றுமே. 94

பலமொன்றாய்ப் பார்த்தெடுத்துக் கல்வத் திட்டுப்
பண்புடனே தானரைத்து மைபோ லாக்கிப்
பலமான நேர்வாளஞ் சரக்கி னெடைநேர்
பிரியமுடன் சேர்த்துச்சம் பழத்தின் சாற்றால்
கலமாக்கை விடாமல்தான் நன்று யாட்டிக்
கண்ணிவிடு மயனமதாய்க் கருதிப் பாரு
நலமாக வழித்தெடுத்துக் குன்றி யைப்போல்
நயனமென வுருட்டியொரு குழலில் வையே. 95

குழல்தனிலே வைத்துநம தாதி யோடு
குணமான பராபரத்தைத் தியானஞ் செய்து
விழலான குன்மமொடு குளிர்சு ரங்கள்
விதிபொல்லா வயிற்றில்நிற்குந் திரைகள் வாதம்
உழலான பித்தநீர் சோகை பாண்டும்
உதித்தவித க்ஷயரோகம் வயிர் வலித்தல்
தழலான அஜீரணங்கள் கனத்த நோய்கள்
தப்பாமல் நீங்கிவிடுந் தணிந்து பாரே. 96

வெங்காரம், இலிங்கம், சிவதைவேர், வசம்பு, சுக்கு, இந்துப்பு, வாய்விடங்கம், ஓமம், பெருங்காயம், காட்டா மணக்குவேர், வகைக்குப் பலம் ஒன்று, இவைகளை முறைப்படி



சுத்தித்துக் கல்வத்திட்டுப் பொடித்து மொத்த எடைக்குச் சமன் சுத்தித்த நேர்வாளம் சேர்த்து, எலுமிச்சம் பழச்சாற்றால் நன்றாக மெழுகு போல் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும். ஒன்றிரண்டு மாத்திரைகள் கொடுக்க, குன்மம், வயிற்றுத்திரை, வாதம், பித்தம், சோகை, பாண்டு, க்ஷயம், வயிற்றுவலி, அசீரணம் இவைகளில் ஏற்படும் மலக்கட்டு நீங்கி, நோய் தணியும்.

## 43. வசந்த குசுமாகரம்

எழுசீர்ச் சந்த விருத்தம்

வனி டங்கண மலரம் பொலி வகை யக்கர மதுரம்
இன கஃசெடை யிடு வச்சல மணி காஸ்மீர மீசன்
தனி நிட்கம தள தள விஞ்சுறவ் சனுயாலரை சதுநாள்
பனி யின்பய றளவா மது பகல் முன்பனி பிணியே. 97

பிணியெ னத்தெறி பேசு நூற்சுரம்
தணியு மேகப காச தாகநீர்
துணியு மூத்திரம் தும்ம லேப்பமும்
அணுகி டாதிதை யன்பொ டுண்ணவே. 98

இலிங்கம், வெங்காரம், இலவங்கம், திப்பிலி, கோஷ்டம் அக்ராகாரம், அதிமதுரம் வகைக்கு $\frac{1}{4}$ பலம், கோரோசனம்; குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம் வகைக்கு ஒரு வராகனெடை; இவைகளை முறைப்படி சுத்தித்து கல்வத்திலிட்டு பொடித்து இஞ்சிச்சாற்றில் இரண்டுநாளும் முலைப்பாலில் இரண்டு நாளுமாக நன்றாக அரைத்து, பனிப்பயறளவு உருட்டி நிழலிலுலர்த்தவும். தக்க அநுபானத்தில் கொடுக்க சுரங்கள், கபகாசம், தாகம், சிறுநீர்நோய், தும்மல், ஏப்பம் இவைகள் தீரும்.

## 44. வாத ராட்சசன்

எண்சீர் விருத்தம்

போமப்பா வாதராட் சசனைக் கேளாய்
புதுமையாம் வேந்தனோடு நாற்றங் காந்தஞ்
சேமப்பா வப்பிரகம் தாம்பிர பற்பம்
திறமாக வஞ்சுவிதம் சமனாய்க் கூட்டிச்
சாமப்பா வெள்ளைச்சா ரணையின் சாற்றால்
தளமாக நாற்சாம மரைத்த பின்பு
வேமப்பா சீந்திலிட கியாழந் தன்னால்
வெகுசுருக்காய் நாற்சாம மரைத்தி டாயே. 99

அரைத்திடுவாய் கொடிவேலிக் கியாழந் தன்னால்
அருந்துளசிச் சாறுதிரி பலைக்கி யாழம்
அரைத்திடுவாய் வெவ்வேறே சாமம் ரண்டு
அழகாக மொத்தையா யுருட்டிக் கொண்டு
அரைத்திடுவாய் சாரணையி னிலைய ரைத்து
அன்பாக மருந்தையுள்ளே வைத்து மூடி
அரைத்திட்ட விலைகருகப் புடத்தைப் போடு
ஆறினபின் னெடுத்ததனி லரைக்கக் கேளே. 100

கேளப்பா சித்திரமூ லத்தின் கியாழங்
கிருபையாய் நாற்சாம மரைத்துக் கொண்டு
நாளப்பா மும்மூன்று வராகனெடை வீதம்
நலமாக வேயுருட்டி வைத்துக் கொண்டு
தாளப்பா நிழலுலர்த்திச் செப்பில் வைத்துத்
தளமாக சன்னிவகை தோஷ மெல்லாம்
வேளப்பா வனுபான மறிந்து போடு
வெகுசுருக்காய் வாதமெல்லாம் விழலாய்ப்
[போமே. 101

இரசம், கந்தகம், காந்தம், அப்பிரகபற்பம், தாம்பிர பற்பம், சம அளவில் சுத்திக்க வேண்டியவைகளைச் சுத்தித்



துக் கல்வத்திட்டுப் பொடித்து, வெள்ளைச்சாரணையின் சாற்றாலும், சீந்தில் குடிநீரினாலும், முறையே நன்னான்கு சாமம் அரைத்த பிறகு, கொடிவேலி வேர்ப்பட்டைக்குடிநீர், துளசிச் சாறு, திரிபலைக் குடிநீர் இவைகளினால் முறையே இரண்டிரண்டு சாமம் அரைத்து, ஒரே உருண்டையாக உருட்டி, சாரணை இலைக் கற்கத்தின் நடுவில் வைத்து, இலை கருகும்படியாக ஒரு இலகு புடம்போட்டு, ஆறவிட்டு எடுத்து, சித்திரமூல வேர்ப்பட்டைக் குடிநீரினால் நாற்சாமம் அரைத்து, மும்மூன்று வராகனிடை அளவாக மாத்திரைகள் உருட்டி, நிழலில் உலர்த்திக் கொள்ளவும். சன்னி, தோஷம், வாதம் இவைகட்கு, தக்க அனுபானத்தில் அளவுப்படி உரைத்துக் கொடுக்கத் தீரும்.

## 45. விதாரண வயிரவம்

எழுசீர் விருத்தம்

புவிபெறு மினிய பிராணனை யளிக்கும்
விதாரண வயிரவ முரைக்கில்
குவிபெறு மிரதந் தாம்பிரம் வங்கம்
குருலிங்கந் தானுங் கூட்டித்
துவிபெறு மெருக்கம் பால்விட் டரைத்துத்
துய்யதோ லாந்த மதனில்
அவிபெறுங் கடிகை யாமமே யெரிப்ப
தாக்கியே யெடுத்துமான் பிச்சில், 102

பிலப்படு கல்வத் தரைத்துமே வெயிலின்
பெரிதுற வைத்தபின் னெடுத்துக்
குலப்படு சுக்கு மிளகுதிப் பிலிகள்
கூட்டிய கஷாயமேற் குன்றி
கலப்படு மளவாய் வகுத்ததிற் கரைத்து
நண்ணிய குணமறிந் திடவே
புலப்பட மெய்யி விதப்பட நடுங்கிப்
புக்கநேத் திரனகல் வானே. 103

இரசம், தாம்பிரம், வங்கம், இலிங்கம், சம அளவில் எடுத்து, முறைப்படி சுத்தித்து, இரசத்தையும் வங்கத்தையும் தொந்தித்துக் கொண்டு, எல்லாவற்றையும் கல்வத்திட்டுப் பொடித்து. எருக்கம்பால் விட்டு நன்ருக அரைத்து, எருக்கம் பாலில் தோலாந்திரமாக ஒரு சாமம் எரித்து, மான்பிச்சில் அரைத்துக் குன்றிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து உலர்த்திக் கொள்ளவும். திரிகடுகுக் குடிநீரில் கொடுக்கப் புக்னநேத்திர சன்னி தீரும்.

## 46. விரேசன பூபதி மாத்திரை

அறுசீர் விருத்தம்

வேதி பூபதி வாலர்க்கு
விலங்கிடும் வகையைக் கேளு
சோதிசே ரீரதஞ் சுக்கு
சேர்ந்தவெண் காரங் கெந்தி
நீதிசேர் நாலு நேராம்
நிறையின்நேர் வாளங் கூட்டி
ஆதியாஞ் சுத்தியாச் செய்
தறிந்துதண் ணீரைக் கூட்டே, 104

கூட்டிடு மைந்துஞ் சுத்தி
குளிர்ந்தநீர் விட்ட ரைத்து
பாட்டிடும் பனியின் பாசிப்
பயற்றள வாக்கி கொண்டு
நீட்டிடு முரைத்து நீரில்
சிறியவர் தமக்கே யீயப்
போட்டிடு மூது மாந்தப்
பொருமலும் வாதம் போமே. 105

இரசம், சுக்கு, வெங்காரம், கந்தகம் இந்நான்கும் சம அளவு; இவையெல்லாம் கூடிய அளவு நேர்வாளம்; இவை



களை முறைப்படி சுத்தித்துக் கல்வத்திட்டுப் பொடித்து, தண்ணீர் விட்டு நன்ருக அரைத்து, பயறளவு மாத்திரைகளாக உருட்டி, நிழலில் உலர்த்தவும். சிறியவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகள் நீரில் அநுபானித்துக் கொடுக்க, மலம் கழிவதுமன்றி, ஊதுமாந்தம், பொருமல், வாதம் இவைகள் தீரும்.

## 47. விஜய வயிரவம்

எழுசீர் விருத்தம்

அளிதரு விஜய வயிரவ முரைக்கில்
அரன்விந்து நாபியப் பிரகம்
ஒளிதரு வங்கங் காரீய பற்பம்
ஓர்சம பாகமாய்க் கூட்டித்
தெளிதரு சுக்கு திப்பிலி மிளகு
சேர்த்திடு குடிநீ ரதனுல்
குளிதரு மிரண்டு யாமமே யரைத்துக்
குறுகிய குப்பியி லடைத்தே, 106

அடைத்திடுங் குப்பிச் சீலைமண் செய்து
வாலுகா யந்திரத் தமைத்துப்
படைத்திடு மிரண்டு சாமமே யெரித்துப்
பண்புறக் குளிர்ந்தபி னெடுத்துக்
கிடைத்திடு சுணங்கன் பிச்சினி லரைத்துக்
கிளர்சண விதைப்பிர மாணம்
உடைத்திடு மிளநீர் காய்ச்சியந் தகற்கிட்
டுண்பதற் கிச்சையே கொடுப்பார். 107

ரசம், நாபி, அப்பிரகபற்பம், வங்கபற்பம், காரீயபற்பம் சமஅளவு கூட்டித் திரிகடுகுக் குடிநீருல் இரண்டு சாமம் அரைத்துச் சிறு மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி, சீலை செய்த குப்பியில் போட்டு, வாலுகாயந்திரத்தில் இரண்டு

சாமம் எரித்து, ஆறவிட்டு எடுத்து, நாய்ப் பிச்சில் அரைத்துச் சுணல்விதைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து உலர்த்தி காய்ச்சிய இளநீரில் கொடுக்க, அந்தக சன்னி தீரும்.

## 48. விஷ்ணு சக்கர மாத்திரை

### சந்த விருத்தம்

ஆதிவிந்து சாதிலிங்க மானசத்தி நாபியும்
சோதிதுத்த தாரமுந் துலங்குகாந்த முஞ்சிலை
நீதிநிம்பச் சாறுவிட்டு நேரக்குன்றி நேரெடை
பாதிமேனி யாயிருந்து பாரளந்தோன் சக்கரம். 108

சக்கரத்தி லோர்மணி தனித்திரி கடுகுடன்
மிக்கதேனு மிஞ்சிநீரும் விட்டுநீ யுரைத்திடப்
பக்கவாதம் விக்கல் சோகை பத்துமூன்று சந்நியும்
தக்கவேப்ப மிக்க மூர்ச்சை சகலவாய்வுந் தீருமே. 109

இரசம், இலிங்கம், கந்தகம், நாபி, பலகரை, துத்தம், தாளகம், காந்தம், மனோசிலை இவைகளைச் சம அளவு தூக்கி, முறைப்படி சுத்தித்துக் கல்வத்திட்டுப் பொடித்து, வேப்பம்பழச் சாற்றால் நன்றாக அரைத்துக் குன்றியளவு மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்தவும். இம்மாத்திரையை திரிகடுகுத்தூள், இஞ்சிநீர், தேன் இவைகளைச் சேர்த்து அனுபானித்திடப் பக்கவாதம், விக்கல், சோபை, சன்னி 13, ஏப்பம், மூர்ச்சை, வாயு இவைகள் தீரும்.

## 49. வெங்கார மாத்திரை

### சந்த விருத்தம்

வெண்காரமுஞ் சிறுதிப்பிலி மிளகிந்தது சுக்கு
பண்பாகிய நேர்வாளமும் படையாம் பொடிக் காந்தம்
நண்பாகவே பெருங்காயமு நன்றாங் கழல் விதையும்
தண்போறன மாதேயிவை யெடையானது சரியே 110



எடையானது சரியாகவே யெடுத்திந்த மருந்தை
அடைவாகவே தண்ணீரைவிட் டரைத்துண்டைகள்செய்
படர்தாளற வெருக்கம்பழுப் பதினா லதைமூடிக்
குடைவாகிய வொருபானையைக் கொண்டே யெருப்
[புடமே, 111

எருகோழியி னுயரத்திடு வியல்பாரு மருந்தைக்
கருபோலுர மருவாகிய கடுநீர்தனி லரைத்துச்
சிறுதேற்றுறு விதையாம்படி திரட்டாய் குளிகையைநீ
ஒருவாமலொன் றெடுஎண்ணெயி லூற்றேகனி
[யுண்ணே. 112

உண்ணக்கழி யும்மாலஃ துற்றலஃ தேகக்
கண்போன்மட நங்காய்நல தண்ணீரது கண்டே
பண்டாங்கரங் கால்வாய்முகங் கழுவாய் பின்பு
[பலவாய்
விண்டேகுறு கொடிதாகிய வியாதிப்பெயர் கேளாய்: 113

கேளாயட்ட குன்மஞ்சூலை கிளருங்குலை வாதம்
கோளாரண்ட வாதங்குலை முட்டுஞ்சல வாம்பல்
மாளாதவிப் புருதிகன பாண்டும்மகோ தரமும்
காளாங்கம்புள் காடைகவு தாரிப்பொரு ளுண்ணே. 114

வெண்காரம், திப்பிலி, மிளகு, இந்துப்பு, சுக்கு, நேர்வாளம், காந்தப்பொடி, பெருங்காயம், கழற்சிப்பருப்பு இவைகளைச் சமஅளவில் முறைப்படி சுத்தித்து, கல்வத்திட்டுப் பொடித்து, நீர்விட்டு அரைத்து உருட்டி, இவ்வுண்டையை எருக்கம் பழுப்பினால் மூடி, ஒரு குடைவு பானையில் வைத்து, மேல்மூடிச் சீலைசெய்து கோழிப்புடம் போட்டு எடுத்து, கல்வத்திட்டுக் கடுக்காய்க் குடிநீரினால் அரைத்து, சிறு தேற்றான் விதைப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தவும். இம்மாத்திரையை எண்ணெயில் தோய்த்து அருந்த மலம் கழியும். நல்ல தண்ணீரில் அநுபானித்திட, கால், கை,

வாய், முகம் இவ்வுறுப்புக்களில் ஏற்படுகின்ற நோய்களும், எண்வகைக் குன்மம், பலவகை சூலை, வாதம், அண்டவாதம், நீராம்பல், விப்புருதி, பாண்டு, மகோதரம், இவைகளும் தீரும். இதற்குப் பத்தியம், காடை, கவுதாரி, காளான், மீன், சம்மங் கோழி.

## 50. ஜலோதாரி மணி

### சந்த விருத்தம்

பொரியுந்திரி கடுகும்படி கியுநன்கட னுரையும்
புகழ்சூரையின் விரையிந்துவின் லவணம் மழல்காயம்
மருவும்பலம் வகையொன்றிடு முபயம்பல வாளம்
வகையோர்தர மிளநீர் தனி வரையுந்திரி சாமம். 115

இலவம்பெரு விரையந்தெடை யேயஃதை யுலர
இடவுங்கொட முதமும்பிடி பொடியந்தர வாயு
பெருகும்புது மதுவும்பவ னமுமங்கதி விடவே
இரைஞ்சுர வாய்வோடிரு மலுநீங்கிடு மினிதே. 116

விறிகுஞ்சன மதிலங்கவை யடையும்பெறு மடைபோல்
உளதிங்கிவை முனிபுங்கவ னருளுஞ்சல மணியாம்
மலமுஞ்சரி சலமுஞ்சரி சலமுஞ்சரிப் பயனும்
வகைமஞ்சரி சலோதாரியின் மணிகண்டிடு மாலோ. 117

வெங்காரம், திரிகடுகு, படிகாரம், கடல்நுரை, சூரை வித்து, இந்துப்பு, காயம், வகைக்குப் பலம் ஒன்று; நேர்வாளம் பலம் இரண்டு; முறைப்படி சுத்தித்துக் கல்வத்திட்டுப் பொடித்து, மூன்று சாமம் இளநீரினல் அரைத்து, இலவம் விதை அளவு உருட்டி, நிழலில் உலர்த்தவும். இதனைத் தேன் பால் இவைகளில் அனுபானித்துக் கொடுக்க அந்தரவாயு, சுரவாயு, இருமல், நீரடைப்பு, சதையடைப்புத் தீரும்.



## 51. பிரளயகால ருத்திரன்

### நேரிசை வெண்பா

செம்புடனே தாளகமுஞ் சேர்க்குமெடை யொவ்வொன்றும்
வெம்பு மிருபூரம் வெங்காரம்—செம்பெனடக்குக்
காலாகக் கொண்டு கருமா னுலையிட்டு
மேலாக வூதியெடு மே. 118

செய்த களங்கதனைத் தேனி லிழைத்தூட்ட
வெய்த விஷபேதி விஷசுரமும்—பய்யவதி
சாரச் சுரமுடனே தாவசீர் ணச்சுரமும்
பாறுமே பேருரைக்கிற் பார். 119

செம்புப்பொடி, தாளகம் வகைக்கு 1 பங்கு; இரசகற்பூரம், வெங்காரம் வகைக்கு ¼ பங்கு; இவைகளைப் பொடித்து சீமை மூசையிலிட்டு, சில்லிட்டுச் சீலை செய்து, கருமான் உலையிலிட்டு மூசை பழுக்கும்படி ஊதச் செம்பு உருகி இருக்கும். இதைச் செங்கல்லில் பள்ளம் செய்து அதில் ஊற்றி ஆறவிட்டெடுக்கச் செம்பு களங்காக இருக்கும். இக் களங்கைத் தேனில் இழைத்துக் கொடுக்க, காலரா, விடசுரம், அதிசாரம், அசீரண சுரம் இவைகள் தீரும்.

## 52. ஊழி காலன்

### சந்த விருத்தம்

ஊழிகாலனை யாழிமேதினி யோதச் சூதமும் தாரமும்
ஓதுவீரமும் பூரகந்திசெந் தூர வெள்ளையும் கௌரியும்
வாழிகாந்தமு மபினியிவ்வகை கூறுநிட்கமுங் காலதாம்
வந்தலிங்கமு மாறேகால்கர்ப் பூரவிதளமு மீர்தனி

ஆழுமோசனை யாயக்கடை யிரண்டவைக ணீங்க
[மற்றவைகளை
ஆரத்தூள்புரி கடையிரண்டையு மவைகள்
[போல்புரிந் திடையிடை
சூழவிட்டெரி யெண்ணெயின்ததி தொக்க தாயரை
[குன்றியாய்த்
தூக்கியீயவே வாந்திபேதியும் சோர்ந்துபோய்
[விடுந் திண்ணமே. 120

இரசம், தாளகம் வீரம், பூரம், கந்தி, இரசசெந்தூரம், வெள்ளைப் பாடாணம், கௌரி, காந்தம், அபினி இவைகள் வகைக்கு வராகனெடை $\frac{1}{4}$; இலிங்கம் $6\frac{1}{4}$ வராகனெடை; கற்பூரம், சாம்பிராணி வகைக்கு $12\frac{1}{2}$ வாரகனெடை, எல்லாவற்றையும் தனித்தனிச் சுத்தித்து, சாம்பிராணி கற்பூரம் நீங்கலாக மற்றவைகளைத் தனித்தனியாக பொடிக்கவும். சாம்பிராணியும் கற்பூரத்தையும் அரைத்து, மேற்படி பொடியைச் சிறிது சிறிதாகத் தூவியரைக்க, மெழுகுபோல் ஆகும். இதில் குன்றியளவு தக்க அனுபானத்தில் கொடுக்க வாந்திபேதி நீங்கும்.

## 53. கல்லுடைக் குடோரி

### அறுசீர் விருத்தம்

இரதமொன்று கந்தகமு மிரண்டதாகும்
இவைவெள்ளைச் சாட்டரணை நீரிலரைசெய்
பிறகுகுகை யிடுசீலை செய்துமணலில்
பின்புடமிட் டவ்வெடைபீளைத்தூளிட்டு
மறுமுறையுஞ் சுத்திநீர் தன்னுலாட்டி
மாடநிறை வெள்ளரிக் குடிநீர் காலை
சிறுமாலை நெருஞ்சிநீர் தன்னிலீயச்
சேராது கல்லடைப்புச் செய்துபாரே. 121

இரசம் 1 பங்கு, கந்தகம் 2 பங்கு; இவைகளை முறைப்படி சுத்தித்துக் கல்வத்திட்டுப் பொடித்து, வெள்ளைச்சாட்



டரணைச் சாற்றில் அரைத்து, சிறு மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி, குகையிலிட்டு, சீலைசெய்து, மணல்மறைவில் புடமிட்டு எடுத்து, எடைக்குச் சமன் சிறுபீளைச் சூரணம் சேர்த்து, சத்திச்சாரணைச் சாற்ருல் அரைத்து, உழுந்தளவு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தவும். ஒவ்வொரு மாத்திரையை வெள்ளரிக் குடிநீரில் காலையிலும், நெருஞ்சிச்சாற்றில் மாலையிலும் கொடுக்கக் கல்லடைப்புத் தீரும்.

## 54. ஊழி மாத்திரை

### அகவல்

ஊழி யுருண்டை யுரைக்கக் கேளாய்
பூரம் சூடன் புகல்பெருங் காயம்
ஆருநெல்லி யருங்குலக் காய்கறி
கிராம்பு வெந்தயம் கிளர்கரி வேற்பிசின்
அபின்பதும் சரியெடை யரைகஞ் சாநீர்
சாம மொன்று தாழ்ந்தாற் குன்றி
யாமென மாத்திரை யளவாய்ச் செய்து
தகுதுணை மருந்திற் ருக்கிட வூழி
புகுபல பேதிகள் போமென
மிகுமருத் துவர்கள் மிளிர்ந்துரைத் தனரே. 122

இரசக்கற்பூரம், சூடம், பெருங்காயம், நெல்லிவற்றல், சாதிக்காய், மிளகு, கிராம்பு, வெந்தயம், கருவேலம்பிசின் அபின் இவைகள் சமஎடை எடுத்து, முறைப்படி சுத்தித்து, கல்வத்திட்டுப் பொடித்து, கஞ்சாக் குடிநீரால் ஒரு சாமம் அரைத்து, குன்றியளவாக மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்தவும். தக்க துணை மருந்துடன், வேளைக்கு ஒரு மாத்திரையாகக் கொடுக்க, ஊழி, அதிசாரம், கிரகணி முதலிய கழிச்சல்கள் போம்.

## 55. இலவங்காதி மாத்திரை

அகவல்

இலவங் காதி மாத்திரை யிசைக்கின்
இலவ மாறு மெடுபொரி மூன்று
பூர மிரண்டு புசழ்லிங் கமுமொன்
றூரத் தொகையே யதிலிடு சோபி
பழச்சா றிரண்டு பாணி யிரண்டு
தழைத்த சாமந் தானரை குன்றி
மாத்திரை செய்து மக்க ளுடலறிந்
தேத்தித் தினமு மிடின்மலம் போக்கி
நல்ல நிலையில் நாட்டிடு முடலை
அல்ல லகன்ற வகத்தியன் மொழியே. 123

இலவங்கம் 6 பங்கு, வெங்காரப் பொரி 3 பங்கு, இரசக் கற்பூரம் 2 பங்கு, இலிங்கம் 1 பங்கு, வாளம் 12 பங்கு; இவைகளை முறைப்படி சுத்தித்து, கல்வத்திட்டுப் பொடித்து, பழச்சாற்றால் இரண்டு சாமமும், தண்ணீரால் இரண்டு சாமமும் அரைத்து, குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். உடல் நிலைக்குத் தக்கவாறு அளவுபடுத்திக் கொடுக்கப் பேதியை யுண்டாக்கி உடலை நன்னிலைபடுத்தும்.

## 56. குங்குமப்பூ மாத்திரை

அகவல்

குங்குமப் பூவிற் கூறு மாத்திரை
குங்கும மடைவெண் வால்கறி கணைமலர்
ஓம மேல மொலிவெங் காரம்
வாம லிங்கம் வளர்கோ ரோசனம்
குங்குமப் பூவுங் கூறுசாம் பிராணியிற்
றங்குறு பூவுஞ் சரியெடை கூட்டிக்
குங்குமப் பூவின் குடிநீர் தன்னில்
மங்கிடச் சாமம் மயனம் போல



அரைத்துப் பயறள வாக்கித் தேனில்
விரைத்த மூலைப்பால் விரும்பி யீய
ஐய குன்மமு மாழ்மலச் சிக்கலும்
மெய்யில் வியர்வையும் விட்டகன் றிடுமே. 124

சுக்கு, வெண்மிளகு, வால்மிளகு, திப்பிலி, இலவங்கம், ஓமம், ஏலம், கோஷ்டம், வெங்காரம், இலிங்கம், கோரோசனம், குங்குமப்பூ, சாம்பிராணிப்பூ சரி எடை; இவைகளைக் கல்வத்திட்டுப் பொடித்துக் குங்குமப்பூ குடிநீரில் ஒரு சாமம் மெழுகு போலரைத்துப் பயறளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். தேன், மூலைப்பால் இவைகளில் ஈய, ஐயகுன்மம், நாள் பட்ட மலக்கட்டு, வியர்வை இவைகள் தீரும்.

## 57. இரசசிந்தாமணி மாத்திரை

இரட்டை யாசிரிய விருத்தம்

இரதசிந் தாமணியை யீண்டிசைப் பேன்பரம
னெங்கள்முத் துக்குமர வேள்
இணையடிக ளநுதினந் துணைக்கொண்டு கேளணங்
கின்னிசைக் கொல்லி மொழியே!
இரதமுத் துச்செம்மை யாதனந் தங்கமுய
ரிரசிதமும் பவழ லிங்கம்
எதிரியை வெல்லும்வில் கந்தக மப்பிரக
மிவைபது கழஞ்சுபயமே

சுரதவிளை யாட்டயர் குகப்பயசு கொடிவேலி
சூழ்ந்தெரித் திட்ட நீரில்
சொன்னவகைச் சாமநா லாட்டுபின் சதாபுட்பி
தூயபா றன்னிற் சாமந்
தூவியரை பின்னர்வழி யெடுபினுட னடையதைச்
சோகிகளிற் கொள்ளு மளவே
சூழ்ச்சியாய் மூலமூ லிகைசமூ லச்சாம்பர்
துகளில்மட் பாண்டத் தினில்

விரதமுட னேயடைபி னிடைமருந் துளசோகி
மேவவை வரிசை வரிசை
மேலும்மேலும் முனர்ச் சாம்பர்பெய் வலிவதா
மேன்மூடு சீலை மண்ணேழ்
மேவப்பு ரிந்தாத வன்வைகஜ புடமாக்கு
மிருதுகுளி ராயி னெடுபின்
மிகுதியெடை சூதம்விடு முக்காற் கழஞ்சுநிறை
மெல்லப்பொ ருத்தி யெல்லாம்

சரதமுடன் முக்கடுகு முக்கனிக் கியாழநீர்
சாற்றெருக் குறிசா றிவை
சதுர்வித் துவியெனுஞ் சாமமாய் வகைவகை
சதுரிஞ லரைசெய் விரல்போற்
றணலவனி லாதுலர்த் தெந்தையை வணங்கியே
தக்கவநு பானத் தினில்
தந்திடோர் குன்றிசுர சந்நிதிரி சத்ததோ
டங்கணம தூத ருளவோ. 125

இரசம், முத்து, செம்பு, தங்கம், வெள்ளி, பவளம், இலிங்கம், மனோசிலை, கந்தகம், அப்பிரகற்பம் வகைக்கு 2½ வராகனெடை. இவைகளை முறைப்படி சுத்தித்துக் கல்வத்திட்டுப் பொடித்து, முலைப்பால், கொடிவேலிவேர்க் குடிநீர் இவைகளில் முறையே நான்கு நான்கு சாமம் அரைத்து, பிறகு எருக்கம்பாலால் இரண்டு சாமம் அரைத்து எடுத்துப் பலகரைகளில் அடைத்து, கொடிவேலி சமூலம் சுட்ட சாம்பலை ஒரு சட்டியில் பாதியிருக்கும்படி கொட்டி அழுத்தி, அதன்மீது மருந்து நிறப்பப்பட்டச் சோகிகளை வரிசையாக வைத்து, மேலும் மேற்படி சாம்பலால் மூடி, சட்டி வாய்ப் பொருத்தமான மற்றொரு அகலால் மூடி, வன்மையாய் ஏழு சீலைமண் செய்து, வெய்யிலில் காயவைத்து, கஜபுடம் இட்டு, ஆறவிட்டு எடுத்து, அத்துடன் இரசம் ¾ கழஞ்சு (30 குன்றிமணியெடை) சேர்த்து, திரிகடுகுக் குடிநீர், முப்பலைக் குடிநீர், எருக்கன்சாறு இவைகளில் முறையே



நான்கு, இரண்டு இரண்டு சாமங்கள் அரைத்து, விரல்கனம் உள்ள நீட்ட மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்தவும். குன்றியளவு தக்க அனுபானத்தில் கொடுக்க, சுரம், சன்னி, 21 தோஷங்கள் தீரும்.

## 58. அர்த்த நாரீஸ்வரம்

### பதினறடி விருத்தம்

அண்ணலுமை யீஸ்வரனே வணங்கிப் போற்றி
யர்த்தநா ரீஸ்வரத்தை யறையக் கேண்மோ!
அரியவிர தங்கந்தி நாபி கார
மவைநான்குந் தொடிசரிநிற் குண்டிச் சாற்றால்

திண்ணமிரு சாமமரை குகையில் வைபின்
சிலையேழ் செய்பாண்ட மொன்றின் மேல்கீழ்
சேருப்பு கொட்டுவா யிடைகுகையை வைமேல்
செஞ்சட்டி முடியேழ் சீலைபல மாச்செய்,

நண்ணடுப் பேற்றுதா மரைவன்னி நான்கு
நற்சாம மெரிசெய்து குளிரவிட் டதனை
நல்லசெங் கழுநீர்க்கி ழங்குநொச்சி பாகல்
நாட்டுசா றில்வகையி னற்சாம மாட்டி

வண்ணரவி யுலரவைத் தொருபணமு நொச்சி
மழையிற் சுரங்களும் மாற்றிநசி யத்தை
மாட்டிலவ் வப்புறச் சுரமுமிலை யிதற்கே
மறிபாலிற் கஞ்சிகொளல் மறையோது விதியே. 126

இரசம், கந்தி, நாபி, வெங்காரம் இவை நான்கும் வகைக்கு 1 பலம் சுத்தித்து, கல்வத்திட்டுப் பொடித்து, நொச்சிச்சாற்றால் இரண்டு சாமம் அரைத்து, சிறுமாத்திரைகளாகச் செய்து உலர்த்தி, குகையிலிட்டு ஏழுசீலை செய்து, ஒரு பானையில் பாதி உப்பு இருக்கும்படி கொட்டி, அதன்மீது மேற்படி குகையை வைத்து, மேலும் உப்பினால் மூடி, மேற்

சட்டி கொண்டு மூடி, சட்டி வாய்க்கு ஏழுசீலைமண் செய்து அடுப்பின் மீது வைத்து, தாமரை அக்கினியாக நான்கு சாமம் எரித்து, ஆறவிட்டு எடுத்த மருந்தைச் செங்கழுநீர்க் கிழங்குச் சாறு, நொச்சிச்சாறு, பாகற்சாறு இவற்றினால் முறையே நந்நான்கு சாமம் அரைத்து, குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும். இதனை நொச்சிச்சாற்றில் கொடுக்கச் சுரங்கள் தீரும். இத்துடன் நசியமும் இட, உடலின் ஒருபக்கமாக ஏற்படுகிற காய்ச்சலை நீக்கும். இதற்குப் பத்தியம் ஆட்டுப்பால் சேர்ந்த கஞ்சி.

## 59. இருமல் மாத்திரை

### கலி விருத்தம்

காத்திடும் பச்சைக் கர்ப்பூரஞ் சீரகம்
கோத்தி டுங்கலைக் கொம்புகோ ரோசனை
சாற்றிடுங் கந்தகஞ் சாம்பிரா ணிமலர்
சேர்த்திடு வகைக்குக் கழஞ்சி யதிலிடே. 127

இட்டுப் பேய்ப்புட லும்பேய்ப் பீர்க்கனு
முட்டு நெருஞ்சிலு முள்ளியின் விதை
நெட்டிடு மிளநீர் விட்டுக் காய்ச்சியே
தொட்டி டுமரைத் தும்மெழு காக்கிடே. 128

ஆக்கிக் குன்றிபோ லாகக் குளிகையும்
நீக்கி நல்ல நிழலி லுலர்த்தியே
நோக்கி நாளிரு போதுமூ வைந்துநாள்
தாக்கு மிருமல் க்ஷயம்விழச் சாடுமே. 129

பச்சைக் கர்ப்பூரம், சீரகம், கலைக்கொம்பு, கோரோசனை, சந்தனம், சாம்பிராணிப்பூ வகைக்கு 1¼ வராகனெடை; இதனை கல்வத்திட்டுப் பொடித்துப் பேய்ப்புடல், பேய்ப் பீர்க்கன், நெருஞ்சில், வெங்காயவிதை இவைகளை இளநீர் இட்டுக் காய்ச்சிய நீரில் நன்றாக மெழுகுபோல் அரைத்துக் குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும்.



பதினைந்து நாட்கள் இருவேளையாக தக்க அனுபானத்தில் கொடுக்க இருமல், க்ஷயம் தீரும்.

## 60. நவகண்ட பூபதி

### அறுசீர்க்கழி நெடில் விருத்தம்

இரதங் கந்தகஞ் சாதிலிங்க
மெஃகரப் பொடி தாம்பிரமும்
விரத காந்த மரிதாரம்
விளங்கு நாபி வெங்காரம்
சுரதப் பாக விலைச்சாறும்
சொல்லும் செருப்படை வெற்றிலையின்
அரிதா மிவைகள் சாறுவிட்
டரைத்துத் தற்சம னிரெண்டே, 130

இரண்டு நாளுங் குறையாம
னேர வரைத்து வைத்தந்த
வுண்டைக் காசிக் குப்பிதனி
லுலர்ந்த மருந்து தானடைத்துக்
கொண்டே வலப்பக் கல்லதனாற்
குப்பி மூடிச் சில்லிட்டு
அண்ட வேத்திச் சீலைமண்டா
னடங்க வேழ்செய் யன்புறவே, 131

உறவே சட்டிக் குண்ணாலங்
குலத்தி னுயர மணலிட்டுப்
பிறகே குப்பி நடுநிறுத்திப்
பின்னு நிரம்ப மணல்சொரிந்து
மறவாச் சட்டி படியவிட்டு
மன்னு மூன்று மண்செய்து
துறவோர் புகழு மருந்துதன்னைச்
சூட்டு நாழிகை தோற்றெரியே. 132

எரியிடாய் தீபம் போலு
மெழுந்ததா மரைப் பூப்போலும்
சரியிடாய் நாற்பத் தஞ்சு
சாற்றுநா ழிகையே தோற்ற
தெரியிடாய் தீயைச் சாங்க
சீதள மாகக் குன்றி
தெரிபட விஞ்சிச் சாற்றி
வரைத்துண்டை செலுத்த லாமே. 133

செலுத்திட விஞ்சிச் சாற்றில்
செலுத்துபூ பதிநேர் கொள்ளப்
பெலத்திடும் வலிய நோய்கள்
பேராத பிணிகள் தோடம்
அலுத்திடு வனுபா னத்தி
னடைவறிந் தருந்த விந்தத்
தலத்து ளோர்க்கே வகண்ட
பூபதி தனையு யுரைத்தார். 134

இரசம், கந்தகம், இலிங்கம், எஃகுப்பொடி, தாம்பிரப் பொடி, காந்தம், அரிதாரம், நாபி, வெங்காரம் இவைகள் சமன் சுத்தித்துக் கல்வத்திட்டுப் பொடித்து, பாகல் இலைச் சாறு, செருப்படைச்சாறு, வெற்றிலைச்சாறு இவைகளில் முறையே இரண்டிரண்டு நாட்கள் அரைத்து உலர்த்தி, காசிக்குப்பியில் அடைத்து, குப்பி வாயை வலப்பக்கல் அடைப்பானுல் மூடி, ஒரு சட்டியில் 4 அங்குலம் மணல் கொட்டி, அதன்மேல் குப்பியை வைத்து, பின்னும் மணல் கொட்டி, மேலொரு வாய்ப்பொருத்தம் உள்ள சட்டியால் மூடி, சட்டி வாய்க்கு 3 சீலைமண் செய்து, தீபாக்கினியாகவும் கமலாக்கினியாகவும் 45 நாழிகை எரித்து, ஆறவிட்டு எடுக்கவும். எரிந்து எடுத்ததை இஞ்சிச்சாற்றினுல் அரைத்து, குன்றியளவு மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்தவும். இதனை இஞ்சிச்சாற்றில் கொடுக்க வன்மை பொருந்திய



நோய்களும், தீராப்பிணிகளும், தோஷங்களும் தீரும். ஈதன்றி தக்க அனுபானத்தில் கொடுக்க, அநேக பிணிகள் தீரும் என்க.

## 61. நவக்கிரக பூபதி

### அறுசீர் விருத்தம்

சுத்தி மனோசிலை யரிதாரஞ்
சூட்டு மிரதங் கந்தகமு
முற்ற வெங்காரந் தற்சமனு
யோரொன் ருய்த்தனி சுத்திபண்ணிப்
பெற்ற செருப்படைச் சாற்றரைத்துப்
பேணி யுலர்த்திப் பின்னெடுத்துச்
சித்த மகிழக் குப்பிதனிற்
செலுத்திச் சீலை மண்டிருத்தி, 135

திருத்தமாய்ச் சீலை மண்டான்
சிக்கென வேழுஞ் செய்து
பொருத்தியே குப்பி வாயின்
புரையெலா மடங்கச் செய்து
கருத்துறப் பானைக் குள்ளாய்க்
கனக்கநால் விரனேர் மண்மே
விருத்தியே குப்பி மூட
விடுநிறை மணலென் பாரே. 136

### எண்சீர் விருத்தம்

என்பார்கள் வாயளவா மணல் நிரப்பி
யெதிர்சட்டி படியவிட் டிறுக்கிச் செம்பி
வன்பார்த்துத் தீமூட்டி நாற்பத் தஞ்சு
வகைநாழி தொகையறிந் தெரிதீ மாற்றி

இன்பார வெடுத்தபின் பிஞ்சிச் சாற்று
விறுகரைத்துக் கடலைபோ விதமாய்ச் செய்து
முன்பார மாய்விளங்கு மநுபா னத்தில்
முளைந்திடத் தவிருநோய் முடிகச் சொல்வாம். 137

அறுசீர் விருத்தம்

முடுகுநீ ராம்பல் வல்லை
முற்றிய வயிற்று நோதல்
படுகள மாகக் கொல்லும்
பாதகிக் காய்ச்சல் தோடம்
கெடுமுறைக் காய்ச்சல் சந்தி
கிலேசம்வேர் விவையு மாண்டு
விடுமென மறைநூ லோதும்
வேதவி யாசர் சொன்னர். 138

மனோசிலை, அரிதாரம், இரசம், கந்தகம், வெங்காரம், இவைகள் சம அளவு தனித்தனி நன்ருகச் சுத்தித்துக் கல்வத்திட்டு பொடித்து, செருப்படைச் சாற்றால் அரைத்து உலர்த்தி, சீலைசெய்த குப்பியில் அடைத்து, குப்பிவாயை அடைத்து, வாலுகா இயந்திரத்தில் 45 நாழிகை முத்தீயால் எரித்து, ஆறவிட்டு, மருந்து எடுத்து இஞ்சிச்சாற்றால் நன்ருக அரைத்து, கடலை அளவு மாத்திரைகளாக உலர்த்தி, ஒரு மாத்திரையை இஞ்சிச்சாற்றில் அனுபானித்துக் கொடுக்க, நீராம்பல், வல்லை, நாட்பட்ட வயிற்றுநோய், தீராதகாய்ச்சல், தோஷம், முறைக் காய்ச்சல், சன்னி, விடாவியர்வை இவைகள் தீரும்.

## 62. பிரதாபாக்கினி பூபதி

சந்த ஆசிரிய விருத்தம்

துய்ய தாம்பிர பற்ப நாபியுஞ்
சுத்தி கந்தக சூதமுந்
தொடரும் பஞ்ச லவணஞ் சுத்திசெய்
சத்திசார நவாச் சாரமும்



எய்ய சுக்குவெங் கார மிளகுடன்
யாவுந் தற்சமஞ் சுத்தியாய்
இசைத்த விஞ்சியின் ரசத்தைவிட்டரைத்
தெடுத்து லர்த்தியுங் குப்பிவாய்

செய்ய மருந்தடை பலப்ப வாய்ப்
புரை சேரவே யடைத் திறுக்கியே
செலுத்திச் சீலைமண் வருத்தி யேழதாந்
திருத்திச் சிக்கென விறுக்கியே
பையக் குடுவையி னுல்விர லுயர்
பரிந்து மணலிடு குப்பிநேர்
பார்த்து மணனிறை யேத்தி யதிலெதிர்
படிக மிடவுரை பன்னுமே. 139

பன்னி யறுபது நாழிகைதான்
பதிந்த தாமரைப் பூப்போல
நன்று யெரித்து மாறியபின்
நலஞ்சேர் மருந்தில் பத்திலொன்று
தின்னச்சீவ நாபியிட்டுச்
சேரவிஞ்சிச் சாற்ற ரைத்துக்
குன்றி யளவு பிரமாணம் குளிகை
பண்ணிக் கூட்டுவீரே. 140

கூட்டி வியாதி குணந்தெரிந்து
கொடுவநு பானத் தடை வறிந்து
நாட்டிக் கொடுக்க வெண்பத்து
நாலு வாத நவ சுரமும்
பூட்டுஞ் சுவாசங் காமாலை
பொல்லாப் பாண்டு க்ஷயம் பலவும்
ஓட்டும் பிரதாப வக்கினிபூ
பதியி னுகந்த வுக்கிரமே. 141

தாம்பிரபற்பம், நாபி, கந்தகம், இரசம், பஞ்சலவணம், சத்திச்சாரம், நவாச்சாரம், சுக்கு, இவைகளைச் சம அளவு சுத்தித்துச் கல்வத்திட்டுப் பொடித்து, இஞ்சிச்சாறுவிட்டு நன்

ளுக அரைத்து, உலர்த்திப் பொடித்துக் குப்பியில் அடைத்து, வலப்பக்கல் அடைப்பானுல் குப்பி வாயை மூடி, ஏழுசீலை மண்செய்து உலர்த்தி, வாலுகாயந்திரத்தில் 60 நாழிகை கமவாக்கினியாக எரித்து, ஆறவிட்டு எடுத்து, எடுத்த மருந்தில் எடைக்கு 10-ல் ஒன்று நாபி சேர்த்து, இஞ்சிச்சாற்ருல் அரைத்து, குன்றியளவு மாத்திரைகள் செய்து, நிழலிலுலர்த்தவும். தக்க அநுபானத்தில் கொடுக்க வாதம் 84, 9 வகை சுரம், சுவாசம், காமாலை, பாண்டு, க்ஷயம் இவைகள் தீரும்.

## 63. பூமணி மாத்திரை

### எழுசீர் விருத்தம்

பூமணி மாத்திரை செயுமுறை யீண்டு
　　புகல்கிறேன் கேண்மட மாதே
மாமணி வாளம் ரோகணி யிருப்பை
　　மலர்திரி துவியொன் ருென்று
தேமணி புனைகும ரிச்சா றேயரை
　　செய்வது சாமநா லாமேல்
ஆமணி தூதுளங் காயது வாமள
　　வநுபா னமினி மேலே. 142

### எண்சீர் விருத்தம்

இஞ்சிரசந் தேன்கூட்டி யொரு மாத்திரையை
　　யீயவே காலையில் சுரமுஞ் சந்நி
சஞ்சமாய் விடாச்சுரமும் விட்டே யேகுந்
　　தாரணியி லுள்ளியின் தைலத் தியப்
பஞ்சிபோற் ருேடமேழ் பறந்தே போகும்
　　பாலையே முத்தெண்ணெய் தன்னி லீய
விஞ்சுபுகழ் கொண்டதோர் வாயு வெல்லாம்
　　வெகுசுருக் காகவே விலகிப் போமே. 143



நேர்வாளம் 2 பங்கு, கடுகரோகணி 1 பங்கு, இலுப்பைப்பூ 1 பங்கு; இவைகளை முறைப்படி சுத்தித்துக் கல்வத்திட்டுப் பொடித்துக் கற்ருழைச்சாற்ருல் நான்கு சாமம் அரைத்து, தூதுளங்காய் அளவு மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்தவும். இம் மாத்திரை ஒன்று அல்லது இரண்டு, தேன் இஞ்சிச்சாற்றுடன் கூட்டிக் காலையில் கொடுக்க, மலங் கழிதலுடன், சுரம், சன்னி, விடாச்சுரம் தீரும். வெள்ளைப் பூண்டின் தைலத்தில் கொடுக்க 7 தோஷங்களும் தீரும். முத்தெண்ணெயில் ஈய வாய்வுகள் தீரும்.

## 64. பூரண சந்திரோதயம்

குந்த னப்பொற் றகடதுதான் கொண்டே
　　யொருபல மதனேடே
வந்த விரதம் பலமெட்டு மகிழ்ந்து
　　சுத்த கௌரி யெனுங்
கெந்தக மோர்பலம் பதினுறு
　　குளிர்ந்தகுழிக் கல்வி லிவையிட்டுச்
சிந்தை மகிழ்ந்த மருந்துபலஞ்
　　செழித்த திருபத் தைந்தாமே. 144

செம்ப ருத்திச் சாற்ருெருநாள்
　　திகழுங் குமரிச் சாற்றிருநாள்
அம்பு பெறவே தானரைத்தங்
　　கான கடலைப் பிரமாணம்
உம்பர் புகழுஞ் சூரியனு
　　ருகந்த புடத்திற் பொடி செய்து
இன்பு ருக்குங் காசிதனி
　　லியன்ற குப்பி யதனிலிடே. 145

இட்ட குப்பி வாய்தனக்கே
　　யியன்ற வெண்கற் சுண்ணும்பு
அட்ட திக்கெண் வெல்லமுட
　　னதைச்சில் மூடிப் பூசியிடு

திட்ட முடனே சீலைமண்டான்
    செய்தே யெழுநாள் தானுலர்த்தி
வட்ட மான பானையிலே
    மணலை யிட்டுக் குப்பிவையே. 146

வைத்த குப்பி யதன்மேலே
    மணலை விட்டுச் சட்டியைக்கொண்
டித்தல மென்னத் தான்மூடி
    யேகச் சீலைமண் டான்கட்டி
அத்தி முகவன் தனைப்பணிந்தே
    யவன்றாட் பூசை தான்முடித்துச்
சத்தி யாம ஞற்சாமந்
    தாமரைப் பூப்போ லெரியிடவே. 147

எரியிடு காடாக் கினியாக
    விருபது சாம மெரித்துவிட
வரிநேர் குழலா யாறவிட்டு
    வயிரவன் கணபதி துர்க்கையுடன்
பரிநே ராகப் பூசைபண்ணிப்
    பார்த்து மாந்து ளிர் நிறமாக
இருக்கு மந்த மருந்தோடே
    யியன்ற பச்சைக் கர்ப்பூரம், 148

குங்கு மப்பூ கத்தூரி
    குலவுஞ் சாதிக் காயாகும்
எங்கு மென்றிம் மருந்தோடே
    யியன்ற சாதி பத்திரியும்
பங்க மின்றி மத்தித்துப்
    பரணி தனிலே தானடைத்து
அங்க மதனைச் சுத்திபண்ணி
    யான பெரியோர் பூசைபண்ணே; 149



தெய்வ பூசை தான்பண்ணித்
    தினமே பொருந்து நாளாகக்
கைய மருந்து பணவெடைதான்
    கதித்த பசுவின் வெண்ணெயுடன்
மெய்யாஞ் சர்க்கரை யிஞ்சியிலு
    மேவுங் குளிகை கொண்டிடவே
ஐய மில்லை களபமுட
    னத்திர பூடண மாம்பெண்ணே. 150

தீரும் வியாதி பதினென்று
    தியக்குங் கயமு மட்டகுன்மம்
போரே செய்யுஞ் சுவாசகாசம்
    புகழ்ந்த பாண்டு வீக்கமுடன்
பாருஞ் சன்னி பதின்மூன்றும்
    பரிந்திந் திரிய நட்டமது
தீருங் கண்டீர் நிசமாமத்
    திடமாம் பூரண சந்திரனே. 151

சுத்தித்த இரசம் 8 பங்கு, சுத்தித்த கந்தகம் 16 பங்கு, தங்கரேக்கு 1 பங்கு; ஆக இந்த 25 பங்கையும் கல்வத்திட்டுப் பொடி செய்து, செம்பருத்திப் பூச்சாற்றால் ஒரு நாளும், கற்றாழைச் சாற்றால் இரண்டு நாளும் நன்றாக அரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து, வெய்யிலில் உலர்த்தி, பொடி செய்து, ஏழு சீலைசெய்த காசிக்குப்பியில் அடைத்து, குப்பிவாயை நடுவில் துளையிடப்பட்ட வலப் பக்கல் அடைப்பானால் மூடி, கற்சுண்ணாம்பும் வெல்லமும் சேர்த்தரைத்த சாந்தால் அடைப்பான் பொருத்து வாயைச் சீலைசெய்து 7 நாள் உலர்த்தி, ஒரு சட்டியில் பாதியிருக்கும் படி மணலைக்கொட்டி, அதன்மீது குப்பியை வைத்து, பிறகு குப்பியின் கழுத்து வரை நாற்பக்கமும் மணலைக் கொட்டி, மேற்சட்டி கொண்டு மூடி, பொருத்து வாயைச் சீலைசெய்து, அடுப்பின்மீது வைத்து, முதன் முதல் 4 சாமம்

தாமரைப் பூ எரி இட்டு, பிறகு காடாக்கினியாக இருபது சாமம் எரித்துக் குளிர ஆறவிடவும். மருந்தை எடுத்துப் பார்க்க மாந்துளிர் நிறமாக இருக்கும். இம்மருந்து எடைக்கு பச்சைக்கற்பூரம் ¼ பங்கு, சாதிபத்திரி 1/8 பங்கு, குங்குமப் பூ 1/8 பங்கு, சாதிக்காய் 1/8 பங்கு, கஸ்தூரி 1/8 பங்கு ஆக எல்லாம் சேர்த்து, செம்பருத்திப்பூச் சாறுவிட்டு நன்றாக அரைத்துப் பயறளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். வெண்ணெய், சர்க்கரை, இஞ்சிச்சாறு ஆகிய ஒன்றில் குளிகையை அநுபானித்திட, க்ஷயம், எட்டுவகை குன்மங்கள், சுவாசகாசம், பாண்டு, சோபை, 13 வகை சன்னிகள், இந்திரிய நஷ்டம், இவைகள் தீரும்.

## 65. காக்கண மாத்திரை

**அகவல்**

காக்கண மாத்திரை கழறக் கேண்மோ
காக்கண மூலம் கணைபடை காரி
சோபி பூரம் தூய லிங்கம்
நீபிற கேழும் நாலொன் ருென்ருென்
றிரண்டின் டிரண்டா யெடுத்திடு முன்பின்
புரண்டி டாமல் போட்டரை மிச்சம்
பழநீர் சாமம் ஒன்றரை பயரும்
நிழலுலர்த் தொன்றி நேர்தே ரோமக்
குடி நீர் சுக்குக் குடிநீர் மாந்தம்
குடிபோ மென்று கூறினர் முனியே. 152

காக்கணவேர் 4 பங்கு, திப்பிலி 1 பங்கு, சுக்கு 1 பங்கு, கண்டங்கத்திரி 1 பங்கு வாளம் 2 பங்கு, பூரம் 2 பங்கு, இலிங்கம் 2 பங்கு இவைகளை முறைப்படி சுத்தித்துக் கல்வத்திட்டுப் பொடித்து, பழரசம் விட்டு 1½ சாமம் அரைத்து, பயறு அளவாக மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்தி,



ஒரு மாத்திரை ஓமக்குடிநீர், சுக்குக் குடிநீர் இவைகளில் கொடுக்க மாந்தம், கிருமி இவைகள் தீரும்.

## 66. சுவாச குடோரி

வெண்பா

வெள்ளெருக்கம் பூமிளகு வேண்டிச் சரிநிறையைத்
தள்ளா தரைத்துத் தனிக்குன்றி—விள்ளொன்று
தாளிசபத் திரிக்குடிநீர் தாக்கச்சு வாசமுடன்
கோளிருமல் காசமிலை கூறு. 153

வெள்ளெருக்கம்பூ, மிளகு இவற்றைச் சரி நிறையாகக் கல்வத்திட்டு நன்றாக அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து, நிழலில் உலர்த்தி, ஒன்று அல்லது இரண்டு மாத்திரை தாளிசபத்திரிக் குடிநீரில் கொடுக்க சுவாசம், இருமல், காசம் தீரும்.

## 67 திரிதோட மாத்திரை

**வெண்பா**

மிளகுநால் வீரமொன்று வீழ்த்தரையக் காய்நீர்
மிளகளவா யுண்டை விரவித்—தளராமல்
முத்தோட முண்டானல் மூட்டொன்று தக்கபடி
முத்தோட மாத்திரையா முன். 154

வீரம் 1 பங்கு (சுத்தித்தது), மிளகு 4 பங்கு, இவற்றைக் கல்வத்திட்டு மிளகுக் குடிநீரினல் நன்றாக அரைத்து, மிளகளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். தக்க அநுபானத்தில், மாத்திரை ஒன்றாக ஈய, சன்னி, குளிர்சுரம், கபசுரம் இவைகள் தீரும்.

குறிப்பு:—இம்மாத்திரை செய்து ஒரு திங்கள் பழகிய பிறகே பயன் படுத்துவது நலம். பத்தியம் உப்பு நீக்கிய கஞ்சியைப் பயன் படுத்தவேண்டும்.

## 68. நீர்க்கோவை மாத்திரை

நேரிசை யாசிரியப்பா

கப்பு மஞ்சள் கஸ்தூரி மஞ்சள்
அப்பு காரம் அருஞ்சாம் பிராணி
மிளகு சுக்கு மேவுசா திக்காய்
கழறு மோமம் மலர் கர்ப்பூரம்
பத்தும் ஒன்றென் றரைபத் தில்லரை
பிற்ற மூன்றும் பிரித்தொன் கால்காலே
அரைபழச் சாற்று லளவிரு சாமம்
தரையி லிலந்தை விரையள வாக்கி
உலர்த்திடு தந்நீ ருயர்முலைப் பாலில்
மலர்த்தித் தலையில் தடவிட வாங்கும்
தலைவலி சலதோ ஷங்கள்
நிலையறு மென்று நிகழ்த்தினர் மாதோ. 155

கப்புமஞ்சள் 1 பங்கு, கஸ்தூரிமஞ்சள் 1 பங்கு, பொரிகாரம், சாம்பிராணி, மிளகு, சுக்கு, சாதிக்காய் இவ்வைந்தும் வகைக்கு ½ பங்கு, ஓமம், இலவங்கம், கற்பூரம் இம்மூன்றும் வகைக்கு ¼ பங்கு. இவைகளைப் பொடித்துக் கல்வத்திட்டுப் பழச்சாற்றால் இரண்டு சாமம் நன்றாக அரைத்து, இலந்தை விதைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்தி, முலைப்பாலில் இழைத்துத் தலையில் பற்றிடத் தலைவலி, சலதோடம் நீங்கும்.

## 69. கந்தி மாத்திரை

கலி விருத்தம்

கந்தி நாபி கறிசூதம் பூசுணை
தந்த வித்து சமனெடை தாக்கியே
யந்த மாகப் பழச்சாற்றி லாட்டியே
பந்த மாகப் பனிப்பய ருண்டையே. 156



உண்டை செய்து நிழலி லுலர்த்திப்பின்
கொண்டி டாயநு பானங் குறித்ததில்
பண்டை யான பழஞ்சுரம் பாறுமே
கண்டி டாயிது கந்திக் குளிகையே. 157

கந்தகம், நாபி, மிளகு, இரசம், பூசுணை விதை இவைகள் சம அளவு முறைப்படி சுத்தித்துக் கல்வத்திட்டுப் பொடித்து, பழச்சாற்றால் நன்றாக அரைத்துப் பயறளவு மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்தவும். தக்க அநுபானத்தில் கொடுக்கப் பழஞ்சுரங்கள் தீரும்.

## 70. மகாராஜ மிருகாங்கம்

பதினான்குசீர் முடுகு விருத்தம்

துரிய நீலமி ராஜ வர்த்தசிலை
துப்பு மேகருடப் பச்சையும்
தூய வெள்ளிவை கிராந்த நாபிபொன்
நிமிளை யோடுகரும் பொன்னதும்
அரிய பற்பமப் பிரக செம்மையிவை
யான நிட்கமொவ் வொன்றதாய்
ஆணி முத்துகோ மேத கம்மிவை
களாகு மோரிரு நிட்கமாம்
உரிய விந்துபொடி மூன்று வைரவனை
நான்கு பசியபொன் னறதாம்
உற்ற ஞாழலே ழொன்று சேர்த்துகலு
வத்தி லொன்று பட தாமரை
பரிவு பாசடையி னீரில் முத்திவசம்
பைய வேயரைத் துண்டைசெய்
பாக மானபின் குப்பி யிட்டுமணல்
பதிய வைத்தனலை மூட்டிடே. 158

மூட்டி யாறியபி னதனை யம்மிகுழி
தன்னி லிட்டுமுறை யாகவே
மோக மானகத் தூரியா னதையோர்
நிட்க மிட்டுபின் குங்குமங்
கூட்டி வைத்தகுடி நீரை விட்டுமதி
கோள மாகபய றளவதாய்
கொண்டு நீழலி லுலர்த்தி தக்கவநு
பான மொன்றிற் கொடுத்திட
கோட்ட மாமிருமல் சுவாச காசமொடு
கொடுமை பீனசவி ராஜநோய்
குலவு மார்புநோய் கிரகணி வாதவளி
சோபை பாண்டுகா மாலைநோய்
ஓட்ட மிட்டலறச் செய்து பின்னுடலை
யுரம தாக்கியொளி தந்திடும்
உன்னு தற்கரிய பெயரை யோதிடிற்
பெரிய ராஜமிரு காங்கமே. 159

நீலம், ராஜவர்த்தக்கல், பவளம், கருடப்பச்சை, வெள்ளி, வைக்கிராந்தம், பொன்னிமிளை, அயம் இவைகளின் பற்பங்கள் வகைக்கு 1 வராகனெடை, அப்பிரக செந்தூரம், முத்துபற்பம், கோமேதகபற்பம் இவை வகைக்கு வராகனெடை, இரசபற்பம் 3 வராகனெடை, வைரபற்பம் 4 வராகனெடை, பொன்பற்பம் 6 வராகனெடை, நாபி 1 வராகனெடை, குங்குமப்பூ 8 வராகனெடை-இவற்றில் கடைசி இரண்டு சரக்குகள் நீங்கலாக, மற்றவைகளைக் கல்வத்திட்டு தாமரையிலைச் சாற்றினாலே மூன்று நாள் நன்றாக அரைத்து, கடலைப்பிரமாணம் மாத்திரைகள் செய்து உலர்த்தி, சீலைசெய்த காசிக்குப்பியில் அடைத்து, வாலுகா இயந்திரத்தில் பதம்வர எரித்து, ஆறவிட்டு எடுத்துக் கல்வத்திட்டு, கடைசி இரண்டு சரக்குகளாகிய நாபியும் குங்குமப்பூவும், கஸ்தூரி 1 வராகனெடையும் சேர்த்து, குங்குமப்பூக்



குடிநீரால் நன்றாக அரைத்துப் பயறளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். வேளை ஒரு மாத்திரையாக தக்க அநுபானத்தில் கொடுக்க இருமல், சுவாசகாசம், பீநசம், க்ஷயம், மார்புநோய் (தமரகவாயு), கிரகணி, வாத நோய், வாதசோபை, பாண்டு, காமாலை இவைகள் நீங்குவதன்றி, உடலை உரம் பெறச்செய்து ஒளியும் தந்திடும்.

## 71. மகா வசந்த குசுமாகரம்

அறுசீர் விருத்தம்

சீரா ரேமங் கரும்பொன்னுஞ்
சிறந்த முத்தும் பவழமுடன்
நேரா மப்பிர கங்காந்தம்
நீடும் வங்க நிமிளையுடன்
நாராங் கந்தி சிருணியின்
நயந்த பற்பம் நாபியுமே
சேராங் கெல்லாஞ் சமனெடையாய்த்
திருந்தக் கலுவந் தன்னிலிடே.. 160

இட்டே குமரிச் சாறதனா
லிழைப்பாய் மூன்று நாளளவுங்
கட்டே யான பின்பதனைக்
கடிதே முத்துச் சிப்பிதனி
லுட்டோ யச்செய் ததைமூடி
யுயவெங் காரங் குன்றியையும்
விட்டே பழச்சாற் றினிலரைத்தே
மெள்ள மெள்ளக் கவசமிடே. 161

இடுவா யாற்றி யாற்றியதை
யிறுகி யுலர்ந்த பின்னதனை
யடுவாய் மணற்சட் டியில்பின்ன
ராரச் செய்சீ லையைநீக்கிக்

கொடுபோய் மருந்தைச் சிப்பியுடன்
குலவக் கலுவத் தினிவிட்டு
விடுவாய் கழுநீர் கோங்கின்மலர்
விரிந்த மரைப்பூ மாதுளம்பூ 162

பூக்கட் சாறு தனித்தனியாய்
புகவிட் டரைத்தே யதன்பின்னர்
தாக்கு வெட்டி விலாமிச்சந்
தனித்த குடிநீ ரொவ்வொருநாள்
சேக்க வரைத்த மருந்தினுக்குச்
சேரெட் டொன்ருய் நாளமுடன்
சேக்குங் குமப்பூ விற்பாதி
திறமாம் பச்சைப் பூரமுமே. 163

பூர்த்தியாகக் குழிக்கல்லிற்
பூட்டி வெட்டி வேர்க்கியாழும்
வார்த்தே மூன்று நாளரைத்து
வகையாய்க் குன்றி யளவாக
கூர்ந்தே யுருட்டுங் குளிகைதனைக்
கொடுக்கும் விபரந் தனைக்கேளாய்
பார்த்தே குளிகை யதிலொன்றைப்
பஞ்ச தாமரை தனிலீயே. 164

தன்னி லீயப் பைத்தியமும்
சதுரா யம்பிற் றேனிவிட
மன்னுங் கபங்க ளரத்தைசுக்கில்
வாட்டு மசீரண வாய்வுகளும்
பின்னு மசுவ கந்திதனிற்
பெருகு மிஞ்சிச் சாறதனி
லுன்னி யீயக் காசங்க
ளோதரி சனமுந் திப்பிலியே. 165



திப்பிலி சுவாச காசங்கள்
திகிரி யுப்பு லவங்கமதில்
கப்புங் கயநோய் மிரியல்சர்க்
கரையில் சுரமும் துருமமுதும்
செப்பும் பசுவின் நெய்யதனில்
சேரு மசீரண பித்தமும்போம்
எய்ப்பில் தேற்ருன் நெல்லிவிதை
யெலும்பை யுருக்கும் நோய்போமே. 166

போமே விளாம்பழத் தில்வீக்கம்
புகல்கொடி வேலிக் கியாழத்தில்
நாமே வின்வோம மூலமதும்
நயந்து சீந்திற் சர்க்கரையில்
தாமே விளித்த பிறமேகம்
சர்க்கரை வெள்ளரி விதையுடனே
தேமே வியநல்கர்ப் பூர
சிலாசத் திவையி னீர்க்கட்டே. 167

காட்டாத் திப்பூ வதிசாரம்
கசக சாவி லூழியதும்
வாட்டிய சுக்கில் கிராணியதும்
வாகாஞ் சிவதை நெல்லிவிதை
யோட்டங் கொள்ளும் வயிற்றுவலி
யுயர்திப் பிலியிந் துப்பதனில்
கோட்டஞ் செய்மந் தாக்கினியுங்
கோமூத் திரத்தில் சோபையுமே. 168

சோங்கும் முப்பலை யிற்பாண்டு
தூய கரிப்பனிற் காமாலை
யேங்குங் கார்போ கியற்குட்ட
மேகும் படிகா ரத்துரநோய்

தாங்கும் யவாக்ஷா ரங்குன்மம்
சாகும் நொச்சில் மதில்சந்தி
நீங்கில் குடசப் பாலைவிதை
சிகரஞ் சூதக வாயுவுமே. 169

மேதிப் பயசி லபஸ்மாரம்
வெள்ளைக் காக்கணம் பூச்சாற்றில்
பேதித் திடுமுன் மாதங்கள்
பிறிது முள்ள நோய்களெல்லாஞ்
சோதித் திதனைத் தருவீரேல்
சுகங்கண் டின்புற் றிருப்பீரால்
வார்த்தித் திட்ட பெயருமகா
வசந்த குசுமா கரமாமே. 170

பொன். அயம், முத்து, பவளம், அப்பிரகம், காந்தம், வங்கம், நிமிளை, கந்தி, செம்பு, இவைகளின் பற்பங்கள், நாபி, அளவு சமன்- இவைகளைக் கல்வத்திட்டுக் குமரிச்சாற்றிலுல் 3 நாள் அரைத்துத் திரண்ட பிறகு, முத்துச்சிப்பியினில் வைத்து, மற்றொரு முத்துச்சிப்பியினுல் பொருந்த மூடி, வெங்காரத்தையும், குன்றிமணிப் பருப்பையும் பழச்சாற்றிலுல் அரைத்து ஷெ முத்துச்சிப்பிக்கு கவசம் இட்டு, உலர்ந்த பின், மேலும் கவசித்து உலர்த்தவும். இவ்வாருக நன்ருக இறுகி உலரும் வரை மேற்படியாகக் கவசம் இடவும். இதை மணல் மறைவில் எரித்துப் பதம் வந்தபிறகு ஆறவிட்டெடுத்து, சீலையை நீக்கிச் சிப்பியுடன் கல்வத்திட்டுப் பொடித்து, செங்கழுநீர்ப் பூச்சாறு, கோங்கிலவம் பூச்சாறு, தாமரைப் பூச்சாறு, மாதுளம் பூச்சாறு இவைகளில் தனித் தனியாக நன்ருக அரைத்த பிறகு, வெட்டிவேர்க் குடிநீர், விலாமிச்சம் வேர்க் குடிநீர் இவைகளில் முறையே ஒவ்வொரு நாள் அரைத்து, மருந்து எடைக்கு 1/8 பங்கு கஸ்தூரி, 1/8 பங்கு குங்குமப்பூ, 1/16 பங்கு பச்சைக்கற்பூரம் சேர்த்து, வெட்டிவேர்க் கியாழத்திலுல் 3 நாள் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும்.



மாத்திரை ஒவ்வொன்று சர்க்கரையில் கொடுக்கப் பயித்தியமும், தேனில் கொடுக்கக் கபநோய்களும், அரத்தையும் சுக்கும் சேர்ந்த குடிநீரில் கொடுக்க அசீரணமும், வாய்வுகளுக்கு அசுவகந்தி சூரணமும், இஞ்சிச்சாற்றில் காசங்களும், மஞ்சளும் திப்பிலியும் சேர்ந்த குடிநீரில் கொடுக்க சுவாச காசங்களும், கடுக்காய் உப்பு இலவங்கம் சேர்ந்த சூரணத்தில் கொடுக்க க்ஷயநோயும், மிளகும் சர்க்கரையும் சேர்ந்த சூரணத்தில் கொடுக்க சுரமும் மனக்கலக்கமும், பசுவின் நெய்யில் கொடுக்க அசீரணப் பித்தமும், இளைப்பு நோயில் தேற்முன் விதைச் சூரணமும், எலும்புறுக்கி நோயில் நெல்லி விதைச் சூரணமும், விளாம்பழத்தில் விக்கமும், கொடிவேலி வேர்ப்பட்டைக் குடிநீரில் மூலமும், சீந்திற் சர்க்கரையில் பிரமேகமும், வெள்ளரிவிதை சிலாசத்துப் பற்பம் சர்க்கரை சேர்ந்த அநுபானத்தில் கொடுக்க நீர்க்கட்டும், காட்டாத்திப்பூக் கஷாயத்தில் அதிசாரமும், கசகசாப் பொடியில் ஊழியும், வெதுப்பிப் பொடித்த சுக்குத்தூளில் கிராணியும், நெல்லிவிதை சிவதை சேர்ந்த சூரணத்தில் வயிற்றுவலியும், திப்பிலி இந்துப்பு சேர்ந்த பொடியில் மந்தாக்கினியும், பசுமூத்திரத்தில் சோபையும், முப்பலைச் சூரணத்தில் பாண்டும், கரிப்பான் கற்கத்தில் காமாலையும், கார்போகியில் குட்டமும், படிகாரப் பொடியில் மார்புநோயும், யவாச்சாரத்தில் குன்மமும், நொச்சி இஞ்சி சேர்ந்த குடிநீரில் சன்னியும், குடசப் பாலை இலவங்கம் சேர்ந்த பொடியில் சூதகவாயுவும், எருமைப்பாலில் அபஸ்மாரமும், வெள்ளைக்காக்கணப் பூச்சாற்றில் பயித்தியங்களும் தீரும். இன்னும் பிற நோய்களும் தக்க அநுபானங்களில் கொடுக்க தீரும் என்பதாம்.

## 72. மதகஜ கண்டீரவம்

நேரிசை யாசிரியப்பா

மதகஜ கண்டீ ரவத்தின் மாண்பு
இதமுட னுரைப்ப னினிதாக் கேண்மோ
இனிமை நாற்ற மிலிங்கமப் பிரகங்

கருந்தா துடனே கடல்நுரை நாபி
திரிகடு கடுக்காய் சித்திர மூலம்
அசம தாக மதிவிடை டங்கணங்
காட்டாத் திப்பூ கழற்சிப் பருப்பு
வில்வப் பழச்சதை விளாவில் லம்பிசின்
மாதுளை யோடு மருவுசா திக்காய்
குடசப் பாலை கொடுமத் தன்விதை
யடைவா யிவைகட் கபினி சமனெடை
குழிக்கல் லதனிற் கூட்டியூ மத்தைச்
சாற்றினை யூற்றிச் சாடுவா யொருநாள்
கோரக்கர் மூலிச் சாற்றினைக் கொண்டு
அரைத்தோர் நாளி லழற்கா யளவு
மாத்திரை யாக்கி மகிழ்வாய் நீழலில்
அத்திப் பின்தகு மநுபா னத்தில்
ஊட்டக் கிரகணி யுதர சூலை
வாட்டதி சாரம் வாடிப் போமெனத்
தேட்ட மாகச் செப்பினர்
கோட்டமி லகத்தியர் கொள்கையீ தென்றே. 171

இரசம், கந்தகம், இலிங்கம், அப்பிரகபற்பம், அயச்செந்தூரம், கடல்நுரை பற்பம், நாபி, திரிகடுகு, கடுக்காய், கொடிவேலிவேர்ப்பட்டை, ஓமம், அதிவிடயம், வெங்காரம், காட்டாத்திப்பூ, சழற்சிப்பருப்பு, வில்வப்பழச்சதை, விளாம்பிசின், இலவம்பிசின், மாதுளைஓடு, சாதிக்காய், குடசப்பாலை வித்து, ஊமத்தன் விதை, அபினி சமஅளவு- இவைகளைக் கல்வத்திட்டு, ஊமத்தைச் சாற்றில் ஒருநாள் அரைத்து, பிறகு கஞ்சாக் குடிநீரினுல் ஒருநாள் அரைத்து, மிளகளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தவும். தக்க அநுபானத்தில் ஒரு மாத்திரை கொடுக்க, கிரகணி, வயிற்றுச்சூலை, அதிசாரம் தீரும் என்க.



## 73. இலங்கேஸ்வரம்

எண்சீர் விருத்தம்

பாதரச மப்பிரக பற்பமது கந்தி
பாபியெனு நாபியிவை பத்திலரை யாகும்
ஊதிவரு வெண்சங்கங் கணைசெம்பு பற்பம்
ஒத்தவிரு நான்குபங் கோதுமய பற்பம்
சாதியெனும் லிங்கமிவை சாற்றிலொரு மூன்று
தாழ்த்திகுழிக் கலிலிஞ்சிக் சாற்றிலொரு நாளுங்
கோதில்திரி பலையான குடிநீரி லோர்நாள்
குலையாம லரையுண்ட குன்றியள வென்னே. 172

கலி விருத்தம்

குன்றி யான குளிகையி லொன்றினைத்
தின்றி டற்குத் திறமாந் துணைமருந்
தொன்றி லீயகி ராணியுஞ் சூதிகஞ்
சென்றி டுமிலங் கேஸ்வரஞ் செப்பவே. 173

இரசம், அப்பிரகபற்பம், கந்தி நாபி வகைக்கு 5 பங்கு, சங்கு பற்பம், செம்புபற்பம் வகைக்கு 8 பங்கு, அயபற்பம், இலிங்கம் வகைக்கு 3 பங்கு- இவைகளைக் கல்வத்திட்டு, இஞ்சிச்சாற்றில் ஒரு நாளும், திரிபலைக் குடிநீரில் ஒரு நாளும், தனித்தனி அரைத்துக் குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும். தக்க அநுபானத்தில் ஒரு மாத்திரை கொடுக்கக் கிராணியும், சூதிகா வாயுவும் தீரும்.

## 74. வாலை சிந்தாமணி

இரசம், கந்தகம், இலிங்கம், வெங்காரம், சுக்கு, திப்பிலி, சாதிக்காய், மிளகு, சாதிபத்திரி இவைகளை—வகைக்கு ஒரு விராகனெடை எடுத்து, பழச்சாற்று லரைத்துப் பயறளவு மாத்திரை செய்து 1 அல்லது 2 மாத்திரை தேன் அல்லது இஞ்சிச்சாற்றிலீயச் சுரம் நீங்கும்.

# 2. பற்பங்கள்

## 1. அய பற்பம்

### அயசுத்தி

வஞ்சி விருத்தம்

பொன்னைத் துல்லிய மாக்க வெண்ணினாற்
    புகலு கின்றனன் சந்திர மந்திரி
புன்னை யிவ்விரு மூலமுஞ்சரி
    பொன்ன தற்குநா லிரண்டி லொன்றதாய்
பன்னு காடிமுன் சொன்ன தற்குநேர்
    பாய்ச்சி யெண்ணியே பகலி ராவெலாம்
வன்னி தீவிதை யென்னவே யெரி
    வாரொ ருதரங் காடி பின்னுமே. 174

(ப-ரை) பொன்னை-கரும்பொன் என்னும் அயத்தை, துல்லியம் ஆக்க எண்ணினால்-சுத்திசெய்ய நினைப்பாயானால், புகலுகின்றனன்-சொல்லுகின்றேன் கேள், சந்திரமந்திரி-அல்லி, புன்னை-புன்னை, இவ்விரு மூலமும்- இவ்விரண்டு வேர் களும், சரி-சமமாக, பொன் அதற்கு நாலிரண்டில்-பொன் னுக்கு எட்டுகொண்ட அளவு எடுத்து, ஒன்றதாய்-ஒன்றாகச் சேர்த்து, பன்னுகாடி - சொல்லுகின்ற காடி, முன்சொன் னதற்கு நேர்-முன் சொன்ன 16 பலம், பாய்ச்சி-வார்த்து, பகல் இரா எல்லாம் எண்ணி-இரவும் பகலும், தீவிகை வன்னி என்ன எரி-தீபாக்கினியாக எரி, பின்னும்-அப்படி



யெரித்து வரண்டால், பின்னும் ஒருதரம்-மற்றொருதரம் காடி வார்-காடி வார்ப்பாயாக, (எ-று)

(க-ரை) ஒரு பலம் அயத்தை ஒரு பாண்டத்திலிட்டு அத்துடன் அல்லிவேர் எட்டுப் பலமும், புன்னைவேர் எட்டு பலமும் இடித்துப் போட்டு, பதினாறு பலம் காடி வார்த்து, இரவும் பகலும் தீபாக்கினியாய் எரிக்கவேண்டும். அப்படி எரிக்கும்போது காடி குறைந்து விட்டால், மறுபடியும் அந்த அளவு காடி வார்த்து எரிக்கவேண்டும். அப்படி எரித் தால் அயம் சுத்தியாகும் என்பதாம். ஏகாரங்கள் இரண்டும் ஈற்றசைகள்.

### அய பற்பம் செய்முறை.

கழிநெடில் விருத்தம்

பொன்னெனு மிரும்பின் பற்பமுண் டவரே
    பொன்னுல கரசரா யிருப்பர்
போசன மிகுந்து புசிக்கவுந் திராணி
    பூட்டிடு மதுசெயு முறைகேள்
முன்னுநற் சுத்தி செய்ததைக் கைசா
    மூன்றுட னொன்றுற வதற்கு
மூவிரு பங்கு மாதவி மலர்நீர்
    மூன்றுநா டினமும்விட் டரைத்துப்
பின்னதை யுருட்டிப் பில்லைசெய் துலர்த்திப்
    பிற்றைநாள் புளியிலை யரைத்துப்
பேசிடு கூறு மூசையில் வைத்துப்
    பித்திகை மூடிமண் செய்து
மன்னுமே மூாநா ளுதயகா லையினில்
    வல்லெரு வொன்பதா றிரட்டி
வைபுட மொருநா ளாறவிட் டெடுத்தால்
    வாசவன் மகன்பரி யாமே. 175

(ப-ரை) பொன்னெனும் இரும்பின் பற்பம் உண்ட வரே பொன்னுலகு அரசராய் இருப்பர்-இரும்பின் பற்ப

முண்டவர்களே தேவலோகத்திற்கு அரசராக இருப்பார்கள். போசனம் மிகுந்து புசிக்கவுந் திராணி பூட்டிடும்-அதிகமாக போசனஞ்செய்ய தீபனத்தை யுண்டாக்கும், அது செய்யும் முறைகேள் அவ்வித அயபற்பஞ் செய்கின்ற முறையைச் சொல்லக் கேட்பாயாக: முன்னு நற்சுத்தி செய்ததை-நினைக்கப்பட்ட உயர்ந்த சுத்தி செய்த அயம், கைசாமூன்றுடன்-முக்கால் பலத்துடன், ஒன்றும்-ஒரு கால்பலமும் சேர ஏற்பட்ட ஒரு பலமான, அதற்கு-அந்த அயத்துக்கு, மூவிரு பங்கு-ஆறு பங்கு, மாதவி மலர்நீர்-குறுக்கத்திப் பூச் சாற்றை, தினமும்-நாடோறும், மூன்று நாள் விட்டரைத்து-மூன்று நாள் விட்டரைத்து, பின் நாலாவது நாள், அதை உருட்டிப் பில்லை செய்து உலர்த்தி-அந்த அயத்தைப் பில்லை தட்டிக் காயவைத்து, பிற்றை நாள்-ஐந்தாவது நாள், புளியிலை அரைத்து-புளியினிலையை (போதுமான அளவு எடுத்து) அரைத்து, பேசு இரு கூறும் மூசையில் வைத்து-இரண்டு பாகமாகப் பிரித்து, ஒரு பாகத்தை மூசை செய்து அதில் ஷை பில்லையை வைத்து, பித்திகை மூடி-மற்றொரு பங்கை பில்லை செய்து மூடி, மண் செய்து-சீலைமண் செய்து, மன்னும் ஏழாம் நாள்-ஐந்தாவது ஆறுவது நாளும் (உலர்த்தி) ஏழாவது நாளின், உதயகாலையினில்-அதிகாலையில், வல்லெரு-பெரிய எருமுட்டை, ஒன்பதாறிரட்டி-நூற்றெட்டு வறட்டியில், வைபுடம்-புடம்போடு; ஒருநாள் ஆறவிட்டு-ஒருநாள் நன்றாய் ஆறினபின்பு, எடுத்தால் (புடம் பிரித்து) எடுத்தால், வாசவன் மகன் பரியாம்-வெள்ளை நிறத்தை யடையும். (எ-று)

(க-ரை) ஒரு பலம் அயத்தைக் கல்வத்திட்டு நாளொன்றுக்கு ஆறுபங்கு குறுக்கத்திப் பூச்சாறு விட்டு, மூன்றுநாள் அரைத்து, நான்காவது நாள் பில்லை செய்து உலர்த்தி, ஐந்தாவது நாள் போதுமான புளியிலையை அரைத்து இரண்டு பாகமாக்கி, ஒரு பாகத்தை மூசைசெய்து அதில் பில்லையை வைத்து, மற்றொரு பாகத்தால் பில்லை செய்து மூடி, சீலை மண் செய்து, அன்றும் ஆறுவது நாளும் உலர்த்தி, ஏழாவது நாள் நூற்றெட்டு வலிய வறட்டியில் புடம்போட்டு, ஒரு நாள் ஆறவிட்டு, மறுநாள் பிரித்து எடுத்தால் வெண்மையாகும் என்பதாம்.



ஏகாரம் ஈற்றசை.

### அயபற்பத்தால் தீரும் நோய்கள்

நடை விருத்தம்

வெளுத்தபொன் பற்பங் கொள்ள
மேகரோ கங்கள் பாண்டு
நளிர்சுர மத்தி வெப்பம்
நாட்பட்ட பழஞ்சு ரங்கள்
கிளைத்தமே கப்புண் ணூறல்
கிரந்திகா சச்சு வாச
முளைப்புவிப் புருதி யாவு
மோட்டமா யோடும் பாரே. 176

(ப-ரை) வெளுத்த பொன் பற்பங் கொள்ள-வெண்மையான அயபற்பத்தை யுண்டால்—மேகரோகங்கள், பாண்டு, நளிர்சுரம், அத்திசுரம், நாட்பட்ட பழைய சுரங்கள், தளிர்த்துண்டான மேகப்புண்கள், ஊறல்கள், கிரந்தி, சுவாசகாசம், உளைப்பு, விப்புருதி ஆகிய இவைகளெல்லாம் ஓட்ட மாயோடும், பார்-நீ இதை ஆராய்ந்து பார். (எ-று)

(க-ரை] மேற்படி அயபற்பத்தால் மேலே சொல்லப்பட்ட ரோகங்களெல்லாம் தீரும் என்பதாம்.

### அயபற்பத்தின் அநுபானமும் பத்தியமும்

நடை விருத்தம்

உணும தற்கநு பானங்கே
ளுத்தமந் தேனக் காரம்
கணைகறி யிரண்டாம் பட்சங்
காலைமா லைகளே காலம்

பெணுமெளுங் கடுகுங் கொள்ளும்
பேசொணா தரைபு ளிப்புங்
குணமுற வேண்டு மாகில்
கூட்டிடேல் வார நாட்கே. 177

(ப-ரை) உணும் அதற்கு அநுபானம் கேள்-அவ்வாறுண்ணும் அயபற்பத்திற்குத் துணைப் பொருட்களைக் கேட்பாயாக, தேன் அக்காரம் உத்தமம்-தேனும் சர்க்கரையும் உத்தமமாகும், கணை கறி இரண்டாம் பட்சம்-திப்பிலியும் மிளகும் இரண்டாம் பட்சமாகும், காலம்-உண்ணும்காலம், காலை மாலைகளே-அந்தி சந்தியேயாம், பெண்ணும் எள்ளும் கடுகுங் கொள்ளும் பேசொணாது-பெண் போகம், என், கடுகு, கொள் இவைகளைச் சேர்க்கக்கூடாது. அரை புளிப்பும்-அரைப் புளிப்புக் கூட்டவும், குணமுற வேண்டுமாகில்-சுகத்தையடைய விரும்பினால், வார நாட்கு கூட்டிடேல்-ஒருவாரம் வரைக்கும் சேர்க்காதே. (எ-று)

(க-ரை) இந்த அயபற்பத்தை உண்பதற்கு அநுபானமாவன;- தேனும், சர்க்கரையும் உத்தமம். திப்பிலியும், மிளகும் இரண்டாம் பட்சம். இது தின்னுங்காலம் அந்தி சந்தியே. பத்தியம்—ஒரு வாரம் வரைக்கும் பெண்போகம், என், கடுகு, கொள், புளிப்பு இவைகள் சேர்க்கக் கூடாவாம்.

### அயபற்பத்தின் மகிமை

நடை விருத்தம்

சொல்லுமிவ் வயபற்பத்தால் துர்ப்பிணி யனைத்து நீங்கு
மொல்லையி லெஞ்சு நோயு மொழிந்திடும் பையப் பையக்
கல்லெனத் தேகந்துன்னக் கண்ணுறுங் காந்தஞ் செய்ய
வல்லரே லஃது நன்றாம் மற்றதும் பகர்து மன்றே. 178

(ப-ரை) சொல்லும் இந்த அயபற்பத்தால்-சொல்லப்பட்ட இந்த அயபற்பத்தால், துர்ப்பிணி அனைத்து நீங்கும்-பலவீனத்தைக் கொடுக்கின்ற ரோகங்கள் யாவும் நீங்கும், ஒல்லையில்-விரைவாக, எஞ்சும் நோயும்-மற்ற நோய்களும், பையப்பைய-மெதுமெதுவாக, ஒழிந்திடும்-முற்றும் நீங்கும், கல்லெனத் தேகம் துன்ன கண்ணுறும்-மலைபோல் சரீரமாம். (இனி) காந்தஞ் செய்ய வல்லரேல்-காந்த பற்பத்தை செய்ய வல்லவர்களானால், அஃது நன்றாம்-அஃது நல்லதாம். (ஆகையால்) அதும்-அதையும், பகர்தும்-சொல்லுகிறோம். (எ-று)



(க-ரை) இந்த பற்பத்தால் பலவீனத்தைக் கொடுக்கும் ரோகங்கள் யாவும் விரைவில் நீங்கும். மற்ற நோய்களெல்லாம் மெதுவாக முற்றுங் குணமாம். சரீரம் மலைபோலாம், இனி காந்தபற்பஞ் செய்தால் மிகவும் நன்றாம்; அந்த முறையையும் சொல்லுகிறோம் என்பதாம்.

மற்று, அன்று, ஏ இவைகள் அசைச் சொற்கள்.

## 2. காந்த பற்பம்

### காந்த சுத்தி

நடை விருத்தம்

முன்னரக் காந்தசுத்தி முறையறைகின்றேன் கொன்றைப்
பன்னநீர் தொடிக்கெண்கூறு பாய்ச்சிநித் தியமொன்பானா
ளுன்னவா தபத்தின்மீட்டு மொன்பது பிருந்தைச் சாற்றிற்
பின்னரப் படிவல்லாரை பேசுதா ரகைநா ளாமே. 179

(ப-ரை) முன்னர்-முன்னதாக, அ காந்த சுத்தி முறை அறைகிறேன்-அந்தக் காந்தத்தைச் சுத்திசெய்யும் முறையைச் சொல்லுகின்றேன்: தொடிக்கு-ஒரு பலம் காந்தத்துக்கு, நித்தியம்-தினமும், கொன்றைப்பன்னநீர்-கொன்றையிலைச்சாறு, எண்கூறு பாய்ச்சி-எட்டுப் பங்காகிற எட்டுப் பலம் விட்டு, ஒன்பான் நாள்-இப்படி ஒன்பது நாள் ஆனபின், ஆதபத்தில் உன்ன-சூரியனில் உலர்த்தி, மீட்டும்-மறு

படியும். ஒன்பது-ஒன்பது நாள், பிருந்தைச்சாற்றில்-துளசிச் சாற்றிலும் அக்கணக்காகவே (செய்துலர்த்தி), பின்னர்-மறு படியும், வல்லாரை - வல்லாரைச்சாற்றிலும், அப்படி-முற் படி ஒன்பது நாள் செய்து உலர்த்திஞல், (இதுவரைக்கும் சேர்ந்தது) பேசு-சொல்லுகின்ற, தாரகை நாள் ஆம்-இருபத் தேழு நாளாகும். இப்படிச் செய்து அலம்பிக் கொண்டால் காந்தஞ் சுத்தியாகும்.) (எ-று)

(க-ரை) ஒரு பலம் காந்தத்திற்கு எட்டுப்பலம் கொன் றையிலைச்சாறு நித்தியமும் வெவ்வேருக ஒன்பது நாள் விட்டு, அதை வெயிலில் உலர்த்தி, மறுபடியும் ஒன்பது நாள் வரைக்கும் தினமும் எட்டுப்பலம் வீதம் துளசிச்சாறு விட்டு அதை வெயிலில் உலர்த்தி, மறுபடியும் ஒன்பது நாள் தினமும் எட்டுப்பலம் வீதம் வல்லாரைச் சாறுவிட்டு நன் ருய் வெயிலில் உலர்த்தி, பின்னர் கழுவிக் கொண்டால், அக் காந்தம் சுத்தியாகும் என்பதாம்.

### காந்த பற்பம் செய்யும்முறை

இணைமட்டு விருத்தம்

சுத்திசெய்த காந்தத்தை நிறுத்துக் கொண்டு
தொடியொன்றுக் கிரண்டுபலந் துளசிச்சாறு
துய்க்கநித மிவ்வாறே மூன்று வைகல்
துய்ப்பித்தங் கூறியபி ஞலா நாளில்
அத்திப்பால் நாற்ரெடிவிட் டதைமத் திப்ப
தப்படிநா ளிரட்டையிணை யான பின்ன
ரதையுருட்டி வில்லைசெய்து ரவியோர் நாள்வை
யையிரண்டா நாளிலதைச் சீலை மண்செய்
வித்தொருநாள் வெயிலுலர்த்திப் பதிஞ்ரா நாள்
விராட்டியெழு பத்திரண்டு மிருபத் தெட்டும்
மேவுபுட மிட்டதனை யொருநா ளாற
விட்டெடுத்துப் பதின்மூன்ரு நாளிற் பார்க்கச்



சுத்தமக பதியுணவு போலத் தோன்றுஞ்
சுரரெனவே திறமாவர் துய்த்த பேர்கள்
சொல்லுமதைப் படைத்தவயித் தியர்வல் லாண்மை
சுவேதவா கனனெனவே துலங்கு வாரே. 180

(ப-ரை) சுத்தி செய்த காந்தத்தை தொடி ஒன்றுக்கு நிறுத்துக் கொண்டு-முறைப்படி சுத்தி செய்த காந்தத்தை ஒரு பலம் நிறுத்துக்கொண்டு (அதற்கு), நிதம்-பிரதி தின மும், இரண்டுபலந் துளசிச்சாறு-இரண்டு பலந் துளசிச்சாறு துய்க்க-மிதக்க விட்டு, இவ்வாறே மூன்று வைகல் துய்ப் பித்து, இப்படியே முன்றுநாள் வார்த்து, அங்கு-அப்போது, ஊறியபின்-நன்ருய் ஊறினபின், நாலாநாளில்-நான்காவது நாளில், அதை-அந்தக் காந்தத்தை, அத்திப்பால் நாற்ரெடி விட்டு மத்திப்பது-நான்கு பலம் அத்திப்பால் விட்டரைக்க வேண்டும், அப்படி நாளிரட்டை யிணையான பின்னர்-அப் படியே நாளொன்றுக்கு நான்கு பலம் வீதமாக நான்கு நான்கு நாளரைத்த பின்னர் (எட்டாவது நாளில்), அதை-அப்படி யரைத்து முடிந்த காந்தத்தை, உருட்டி வில்லை செய்து-உருட்டிப் பில்லையாகச் செய்து, ரவி ஓர் நாள்வை-அஃதாவது ஒன்பதாவது நாள் வெயிலில் உலர்த்து, ஐயி ரண்டா நாளில் அதற்குச் சீலைமண் செய்வித்து, ஒருநாள் வெயிலில் உலர்த்தி-அன்று வெயிலில் உலர்த்தி, பதிஞ்ரா நாள்-பதிஞ்ராவது நாள் காலையில், விராட்டி யெழுபத் திரண்டும் இருபத்தெட்டும் மேவு புடமிட்டு-நூறு விராட்டி யில் புடமிட்டு, அதனை ஒருநாள் ஆறவிட்டு-அதைப் பன் னிரண்டாவது நாளாகிய ஒருநாள் ஆறவிட்டு, பதின்மூன்ரு நாள் எடுத்துப் பார்க்க-பதின்மூன்ருவது நாளில் எடுத்துப் பார்த்தால், சுத்த மகபதி உணவுபோல தோன்றும்-சுத்த மான தேவேந்திரனது உணவான தேவாமிர்தம் போன்று வெண்மையாகக் காணப்படும், துய்த்த பேர்கள்-இதை உண்டவர்கள், சுரரெனவே திறமாவர்-தேவர்களைப் போல் பலமுள்ளவர்களாவார்கள், சொல்லும் அதைப் படைத்த வயித்தியர்-அங்ஙனம் பெருமை பெற்ற அந்தக் காந்தபற்பத்

தைச் செய்து முடித்து வைத்திருக்கின்ற வயித்தியர்கள், வல்லாண்மை-வலிய நோயைப் போக்குவதில் ஆண்மை (பெறுவதால்), சுவேத வாகனனெனவே துலங்குவார்-சுவேத வாகனனைப்போல் விளங்குவார்கள், (எ-று)

(க-ரை) சுத்தி செய்த ஒரு பலம் காந்தத்தை தினமும் இரண்டு பலம் துளசிச்சாறு விட்டு மூன்று நாள் ஊற வைத்து, ஊறியபின் நான்காவது நாள் காலையில் அத்திப் பால் நாளொன்றுக்கு நாலு பலம் விழுக்காடாக நாலு நாள் விட்டரைத்து, எட்டாநாள் மாலையில் அதை உருட்டிப் பில்லைசெய்து,) அன்றைக்கும், அடுத்த ஒன்பதாவது நாளும் வெயிலில் உலர்த்தி, பத்தாவது நாளில் சீலைமண் செய்து, அன்றைக்கும் வெயிலில் உலர்த்தி, பதினோராவது நாள் நூறு வறட்டியில் புடமிட்டு, பன்னிரண்டாவது நாள் ஆறவிட்டு, பதின்மூன்றுவதுநாள் பிரித்துப் பார்த்தால் அமிர்தம் போன்ற நிறமாயிருக்கும் என்பதாம். இதனால் வைத்தியர்கள் நோய்களை ஒழிக்கத் திடமுள்ளவர்களாவார்கள். ஏகாரங்கள் நான்கும் அசையிடைச் சொற்கள்.

### காந்த பற்பத்தை உண்ணும் அளவும் அநுபானமும், தீரும நோயும்

#### நடை விருத்தம்

காந்தபற் பத்தையுண்ணக் கடிப்பகை தினைநெல்குன்றி
யாந்தர வமிழ்தந்தின்னு மனுபான மதுநெய் வெல்லம்
சீந்திலுப் பசதிவெப்புச் சீதவெப் பிரத்தகாசம்
மாந்தையச் சுரஞ்சுவாசம் வாதபித் தங்கள் போமே. 181

(ப-ரை) காந்தபற்பத்தை உண்ண-காந்த பற்பத்தை யுண்ண, கடிப்பகை தினை நெல் குன்றியாம்-கடுகு, தினை, நெல், குன்றி இவ்வளவிலாம். தர அமிழ்தம் தின்னும் அனுபானம்-உயர்ந்த இந்த அமிழ்தத்தை உண்ணும் அநுபானமாவது, மதுநெய் வெல்லம் சீந்தில் உப்பு-தேன், நெய், வெல்லம் சீந்தில் சருக்கரை இவைகளாம், அசதிவெப்பு, சீதவெப்பு, இரத்தகாசம், மாந்தை, அச்சரம், சுவாசம், வாதபித்தங்கள்-ஆகிய இவைகள், போம்-தீரும். (எ-று)



(க-ரை) காந்தபற்பத்தைக் கடுகு, தினை, நெல், குன்றி இந்த அளவுகளில் தேன், நெய், வெல்லம், சீந்திற் சர்க்கரை ஆகிய அனுபானங்களில் உட்கொண்டால், அசதிவெப்பு. சீதவெப்பம், இரத்தகாசம், உளமாந்தை, அச்சரம், சுவாசம், வாதபித்தங்கள் ஆகிய இவைகள் தீரும் என்பதாம்.

### காந்த பற்பத்தின் பத்தியம்

#### நடை விருத்தம்

பத்திய மிச்சாபத்தியம் பறங்கிக்கொள் கடுகுகாடி
சுத்தமா காதுநேயம் சுதைசருக் கரைகோதுமை
யுத்தம நென்மாமத்தி யுறவொண்ணு திறுங்கெப்போதும்
நத்திடில் விருதாவாம் பெண்ணுமினி யுரைப்பதென்ன. 182

(ப-ரை) பத்தியம்-பத்தியமாவது, இச்சாபத்தியம்-இச்சபாத்தியமாகும். பறங்கி கொள் கடுகு காடி சுத்தம் ஆகாது-பூசனிக்காய் கொள் கடுகு காடி இவைகள் முற்றும் ஆகாது. நேயம் சுதை சருக்கரை கோதும்பை உத்தமம்-நெய் பால் சர்க்கரை கோதுமை இவைகள் உத்தமமாகும். நெல் மா-நெல்லரிசி மா, மத்தி-மத்திமமாகும். இறுங்கு எப்போதும் உறவொண்ணுது-எப்போதுஞ் சோளஞ் சேரக் கூடாது. பெண்நத்திடில் விருதாவாம்-பெண்ணை விரும்பினுல் கொண்ட மருந்து அபலமாய்விடும். இனி நாம் உரைப்பதென்-இன்னும் நாம் சொல்வது என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. (எ-று)

(க-ரை) இதற்கு இச்சாபத்தியம், பூசனிக்காய், கொள், கடுகு, காடி, இவைகள் சுத்தமாக ஆகா. நெய், சர்க்கரை,

பால், கோதுமை இவைகள் உத்தமம். நென்மா, மத்திமம், சோளத்தை எப்பொழுதும் சேர்க்கக்கூடாது. பெண் போகத்தை விரும்பினுல் தின்ற மருந்து விருதாவாய் விடும் என்பதாம்,

என்-எவன் என்பதின் விகாரம். ஏகாரம் ஈற்றசை,

## காந்த பற்பத்தைப் பிரயோகிக்கும் நாளளவு

### நடை விருத்தம்

ஒருமதி யமையுமுன்னே யோடிடும் பிணிகளெல்லாம்
வருமுடற் கதிகலாபம் மாதமற் றிரண்டேயாகில்
பெருமித மாகுமிப்பாற் பேர்பெரு மிரண்டுகூற்றில்
நிருமல மாவில்வாதி லேகிய மியம்பக்கேளே. 183

(ப-ரை) ஒரு மதி அமையும் முன்-ஒரு மாதம் சாப்பிட்டபின் பிணிகள் எல்லாம் ஓடிடும்-நோய்களெல்லாம் நீங்கும், மாதம் இரண்டு ஆகில்-இரண்டு மாதமானுல், உடற்கு அதிக லாபம் வரும்-சரீரத்திற்கு அதிக பலன் உண்டாகும், பெருமிதம் ஆகும்-மிக்க கீர்த்தியையுண்டாக்கும், இப்பால்-இதன்பிறகு, பேர்பெரும் இரண்டு கூற்றின்-மிக்க பெருமையுடைய இரண்டு பிரிவினதான, நிருமலம்-பரிசுத்தமாகிய, மா வில்வாதி லேகியம்-மகா வில்வாதி லேகியத்தை, இயம்பக் கேள்-சொல்லக் கேட்பாயாக (எ-று)

(க-ரை) காந்த பற்பத்தை ஒரு மாதம் சாப்பிட்டால் நோய்களெல்லாம் நீங்கிப்போகும். இரண்டு மாதம் சாப்பிட்டால் சரீரத்திற்கு மிக்க பலத்தைத் தரும். இனி இரண்டு பிரிவினையுடையதாகிய வில்வாதி லேகியத்தைச் சொல்லுகின்றேன் என்பதாம்.

மூன்று ஏகாரங்கள், மற்று-அசை இடைச் சொற்கள்,



## 3. வங்க பற்பம்

### வங்கசுத்தி

### சந்த விருத்தம்

வங்க சுத்தியை யிங்கு ரைத்திடு
வாகடாதியர் மேதையோர்
தங்களுக்கொரு நண்பு ளப்பெயர்
சார வோதினர் தேரனு
ரிங்கி தத்தொ டியம்பு மித்தமி
ழீதுகோரகை கோவைவேர்
பங்கி டிட்டற லுங்கு டித்திடு
பாயமூடிவை வாரமே. 184

(ப-ரை) வங்கசுத்தியை-வெள்வங்க சுத்தியை, இங்கு-இவ்வுலகின் கண், உரைத்திடு-சொன்ன, வாகடாதியர்-வாகடத்திற்குத் தலைவர்களான, மேதையோர்-பெரியோர்கள், தங்களுக்கு-ஆகிய அவர்கட்கு, ஒரு நண்புளப் பெயர் சார-ஒப்பற்ற நட்புபாராட்டும் பேரைடைய, இங்கு-இவ்விடத்தின் கண், இதத்தொடு-நன்மையுடன், இயம்பும் இத்தமிழ்-(பெரியோர்களால்) சொல்லப்பட்ட இந்தத் தமிழால், ஈது-இடி வங்கசுத்தியை, தேரனுர் ஓதினர்-தேரையர் சொன்னுர், (அது எப்படி யென்றுல்), கோரகை கோவை வேர்-கஞ்சா கோவைவேர் ஆகிய இவைகள் வகைக்கு, பங்கு இடு இட்டு-(மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாத தனையும் முட்டின்றி முடித்தல், என்னும் உத்தியால்), இங்கு எடை சொல்லாமையால் காரீயசுத்திக்குச் சொன்ன எடைப்படி, ஒவ்வொருவீசை சதைத்து ஒரு பாண்டத்தில் இட்டு, அதில் ஒரு பலம் வங்கத்தை, குடித்திடு அறலும்-குடிக்கத்தக்க நல்ல சலமும் (முன்போல் ஆறு விசைவிட்டு) பாய-நன்றுய்ப் பரவும்படி, வாரம் மூடிவை-ஒரு வாரம் மூடிவை. (எ-று)

(க-ரை) கஞ்சா ஒரு வீசையும் கோவைவேர் ஒரு வீசையும் எடுத்துச் சதைத்து, ஒரு பானையிலிட்டு, அதில் ஆறுவீசை சலம் விட்டு, அதன் மத்தியில் ஒரு பலம் வெள்வங்கத்தைப் போட்டு, ஒருவாரம் மூடிவைக்க வேண்டும் என்பதாம்.

( இதுவுமது )

மட்டு விருத்தம்

ஆகியபி னடுப்பேற்றி யெரிப்பா யூறு
மல்வீயஞ் செவ்விதுறு மிரண்டு நாளில்
யோகியர்க்கு மகிமைதரு மஃதி னாலே
யுண்டாருக் குண்டாகு முரமுஞ் சீரும்
பாகியலா ளொருபாக ரிருக்கு மூரைப்
பார்க்க வென்றா லதுதானே படிவங் காட்டும்
தேகியராய்ச் சுரவெதுப்பைக் காணா ராகிச்
சுகித்திருக்கப் பண்ணுவதவ் வங்கந்தானே. 185

(ப-ரை) ஆகியபின்-அவ்வாறு ஒருவாரம் ஊறினபின், அடுப்பேற்றி எரிப்பாய்-அடுப்பிலிட்டு எரிப்பாய், ஊறும் அல்வீயம்-ஊறின அந்த வெள்ளீயம், இரண்டு நாளில் செவ்விது உறும்-இரண்டு நாள் எரித்தமட்டிலேயே செம்மையாகும், அஃதினாலே-அப்படி சுத்தியானமையால், யோகியர்க்கு மகிமை தரும்-யோகிகளுக்கு மகிமையைக் கொடுக்கும், உண்டாருக்கு-இதை (பற்பித்து) உண்டவருக்கு, உரமும் சீரும்-பலமும் சீர்த்தியும், உண்டாகும்-உண்டாம், பாகியலாள் ஒரு பாகர் இருக்கும் ஊரைப் பார்க்க வென்றால்-பரமேஸ்வரனுடைய கைலாயத்தைப் பார்க்க வேண்டுமானால், அது தானே-அந்தவங்கமே, படிவம் காட்டும்-தன்னிடத்தில் அந்த வடிவத்தைக் காட்டும் (என்றால் சுத்தியடைந்த வங்கமானது வெள்ளி போலிருக்கும்.) தேகியராய்-சுத்த தேகமுள்ளவர்களாய், சுரவெதுப்பைக் காணார் ஆகி-சுரரோகம் வரப்பெறாதவர்களாய், சுகித்திருக்கப் பண்ணுவது-சுக



மாயிருக்கச் செய்வது, அவ் வங்கந்தானே-அவ் வெள்வங்கமே யாகும்.

(க-ரை) அவ்வாறு ஒரு வாரம் ஊறிய, வங்கமுள்ள பாண்டத்தை அடுப்பிலேற்றி, இரண்டு நாள் எரித்தால், வெள்ளி போல் மிக்க துல்லியமான சுத்தியை யடையும் என்பதாம்.

## 4. வெள்ளீய பற்பம்

ஆசிரியத்துறை நெடில்

வெள்ளீய பற்பத்தை நன்று யுரைப்பன்
வினவா யதனட்பு வேராதி யெல்லாம்
வீசைக்கு நாற்கூறு தண்ணீர் கடம்பெய்
வீதப்படிக் கோர்தொடிக் கேய தாகும்
விரைவா யடுப்பிட்டு நாளேழ் வரைக்கும்
விளக்கா யெரிப்பா யெரித்தான பின்பு
விம்பத்தின் விதைபீர்க்கின் வித்திந்த இரண்டும்
விதமாகு மல்லைந்து தொடியொக்க விட்டு

மெள்ளப் பொடித்தன்று கல்வத்தி லிட்டு
மெய்ச்சாறு தொடியாறு மேல்விட் டரைத்து
வேறான மறுநாள்மூன் னிறையாக வல்லி
மேனாளில் மாக்கல்வ ரசமந்த வழியே
விரைவா யதைக்கொண்டு குகைசெய்து மத்தி
வெந்தேழ் தினஞ்சென்ற வெள்ளீய மதனை
வெள்ளுள்ளி ரசமாறு தொடிவிட் டரைத்து
விவரித்த நாளொன்றி லேசெய்து வில்லை

கொள்ளொன்ப தானுளி லுதயத்தி லந்தக்
குகையூடு வைத்தின்ப வெற்பேந்தி யெண்ணெய்
கூறுந் தொடிக்குத்த நிறைமீது செய்து
குகைமீது வைத்தைந்து கடிகைக்குள் வேறே
குடசத்தி னிலையா லரைத்தப்பு மேலே
குணமா யுலர்த்தைந்து கடிகைக்கு ளப்பால்

கோணாது மேற்சீலை மண்செய்து மற்ற
குறைநா ழிகைப்போது வெயிலா லுலர்த்தி

எள்ளப் படாமற்ற நாள்பத்து நாளாம்
எய்தப் பகற்போதி லியலான முட்டை
யிருநா ளிரட்டிக் கிரட்டிக் கிரட்டி
யிசைவா யடுக்கிப் புடத்திட் டெடுத்தால்
இசைமாது மெய்ச்சந்த வின்பந் தழைக்கும்
எங்கெங்கு மேலாகி யென்றுஞ் சிறக்கும்
இனிதான துன்பங் களின்கட் டறுக்கும்
இசைவா கடஞ்சொன்ன முறையீது தானே. 186

(ப-ரை) வெள்ளீய பற்பத்தை நன்றாய் உரைப்பன் வினவாய்-வெள்ளீய பற்பத்தை நான் நன்றாகச் சொல்லுகிறேன்; மாணாக்கனை நீ கேட்பாயாக! அதன் நட்பு வேராதியெல்லாம்-வெள்ளீய பற்பத்தின் பெயரையுடைமையால் அதன் நட்பு என்கிற ஈயக்கொடி வேர் முதலிய சர்வாங்கமெல்லாம் (சதைத்து), வீசைக்கு-ஒரு வீசைக்கு, நாற்கூறு தண்ணீர்-நான்கு பங்காகிய (நான்குவீசை) தண்ணீர், கடம்பெய்-ஒரு பாண்டத்தில் ஊற்று, வீதப்படிக்கு-இந்த அளவுப் பிரமாணம், ஓர் தொடிக்கு அது ஆகும்-ஒருபலம் வெள்ளீயத்திற்கே யாகும்; (பிறகு இந்த ஈயத்தை அந்த கடத்திலிட்டு) விரைவாய் அடுப்பிட்டு-சீக்கிரம் (காலையில்) அடுப்பிலேற்றி, நாள் ஏழ்வரைக்கும் விளக்காய் எரிப்பாய்-தீபாக்கினியாக ஏழுநாள் வரைக்கும் எரிப்பாய், எரித்து ஆன பின்பு-அப்படி எரித்தான பிறகு, விம்பத்தின் விதை பீர்க்கின் வித்து இந்த இரண்டும்-கோவைப் பழத்தின் விதை, பீர்க்கம் பழத்தின் விதை, ஆகிய இந்த இரண்டு விதைகளும், அவ்வைந்து தொடி விதமாகும்-வகைக்கு அவ்வைந்து பலம், ஒக்கவிட்டு-சரியாகச் சேர்த்து, அன்று-அன்றைக்கு, மெள்ளப் பொடித்து-மிருதுவாகப் பொடி செய்து, (பிறகு) கல்வத்தில் இட்டு-கல்வத்திற் போட்டு, மேல்-பிறகு, மெய்ச்சாறு-குப்பைமேனிச்சாறு, தொடி ஆறுவிட்டு-ஆறுபலம் விட்டு, அரைத்து-அரைத்து, வேறான மறுநாள்- மறுநாளில், முன் நிரையாக-முன் எடைப்படி, வல்லி-வெற்றிலைச்சாற்றாலும், மேல்நாளில்-மறுநாளில், மாக்கல்வரசம்-செங்கழுநீர்ச் சாற்றாலும், அந்த வழியே - அந்த ஆறுபலச் சாற்றினாலேயே அரைத்து, விரைவாய்-உடனே, அதைக் கொண்டு குகை செய்து-அந்த விழுதால் மூசைசெய்து (பிறகு), வெந்து ஏழ் தினம் சென்ற வெள்ளீயம் அதனை-முன்னே ஏழுநாள் எரித்தெடுத்த வெள்ளீயத்தை (கல்வத்திலிட்டு), வெள்ளுள்ளி ரசம் ஆறு தொடி விட்டு அரைத்து-(எட்டாவதுநாள்) ஆறு பலம் வெள்ளுள்ளிச்சாறு விட்டரைத்து, விவரித்த நாள் ஒன்றிலே வில்லை செய்து-சொன்ன எட்டாவது நாளில் மாலையிலேயே வில்லை செய்துகொள், ஒன்பதாம் நாள் உதயத்தில்-ஒன்பதாவது நாள் காலையில், அந்த குகையூடு-முன் செய்த மூசையில், மத்திவைத்து-(முன் செய்த வில்லையை) மத்தியில் வைத்து, இன்பம்-நன்றாயிறங்கின, வெற்பேந்தி எண்ணெய்-வெற்பேந்தி எண்ணெயில், கூறும் தொடிக்கு அத்தம் நிறை மீதுசெய்து-சொல்லுகின்ற பலத்துக்குப் பாதியான அரைப்பலம் எண்ணெயை (மூசையில் வைத்த வில்லையின்) மேல் வார்த்து, மீது குகைவைத்து-மேல் மூசை மூடி, ஐந்து கடிகைக்குள்-ஐந்து நாழிகைக்குள், குடசத்தின் இலையால் அரைத்து-குடசப்பாலை யிலையை யரைத்து, வேறே மேலே அப்பு-முன் மூசையின் மேல் கவசஞ்செய், ஐந்து கடிகைக்குள்-பின் ஐந்து நாழிகைக்குள், குணமாய் உலர்த்து-நன்றாய் உலர்த்து, அப்பால்-பிறகு, கோணாது-குற்றமில்லாமல், மேல்-அதன்மேல், சீலைமண் செய்து-மண்சீலை செய்து, மற்ற குறை நாழிகைப்போது-மிகுதி யிருக்கின்ற இருபது நாழிகை வரைக்கும், வெயிலால் உலர்த்தி, எள்ளப் படா-இகழ்ச்சி செய்யப்படாத, மற்ற நாள் - மறுநாளான பத்து நாளாம் எய்த-பத்தாவது நாள் வரை, பகற்போதில்-அந்தப் (பத்தாவது நாள்) பகலில், இயலான முட்டை யிருநாள் இரட்டிக்கு இரட்டிக் கிரட்டி யிசைவாய் அடுக்கிப் புடத்திட்டு எடுத்தால்-பிரமாணத்தோடு கூடிய வறட்டி அறுபத்து நான்கு அடுக்கிப் புடம் போட்டு (ஆறினபின்) எடுத்தால், இசைமாது-சரஸ்வதியின், மெய்-சரீரம் போன்ற

வெண்மையும், சந்தம்-அழகும், இன்பம்-இனிமையும், தழைக்கும்-விருத்தியாம். எங்கெங்கும் மேலாகி-எவ்விடத் துள்ளாரும் உயர்வாகக் கொள்வதாய், என்றும் சிறக்கும்-எந்நாளுஞ் சிறப்பை யடையும், இனிது ஆன-இன்பத்தால் உண்டான, துன்பங்களின் கட்டு அறுக்கும்-துன்பங்களின் கட்டுக்களை நீக்கும், இசைவாகடஞ் சொன்ன-கீர்த்தியை யுடைய வாகடத்திற் சொல்லப்பட்ட முறை, ஈதுதானே-இதுவே யாகும். (எ-று)

(க-ரை) ஒரு மண்பாண்டத்தில் ஈண்டு என்று சொல்லப்படுகின்ற ஈயத்தண்டின் சமூலம் ஒரு வீசை எடுத்து, நறுக்கிச் சதைத்திட்டு, நான்கு வீசைத் தண்ணீர்விட்டு, அதில் ஒரு பலம் வெள்ளீயத்தைப் போட்டு மேல்சட்டி மூடி, அடுப்பிலிட்டு, ஏழுநாள் வரைக்கும் தீபாக்கினியாய் எரித்து, எட்டாவது நாள் காலையில் அவ் வெள்ளீயத்தை எடுத்து அலம்பி, உடனே வெள்ளைப் பூண்டுச் சாறு ஆறுபலம் விட்டு, அந்த வெள்ளீயத்தை யரைத்து, அன்றையநாள் முடிவில் வில்லை செய்து, இதைக் கோவைப்பழ விதை ஐந்து பலமும், பீர்க்கம் பழவிதை ஐந்துபலமும் எடுத்து, அம்மியில் மிருதுவாகப் பொடித்து, பின் கல்வத்திலிட்டு, அதில் குப்பைமேனிச்சாறு ஆறுபலம் விட்டு ஒருநாளும், வெற்றிலைச் சாறு ஆறுபலம் விட்டு ஒருநாளும், செங்கழுநீர்ப்பூச் சாறு ஆறுபலம் விட்டு ஒரு நாளுமாக அரைத்து, மூசை செய்ததில் ஒன்பதாவது நாள் காலையில் வைத்து, வெற்பேந்தி எண்ணெய் அரைப்பலம் விட்டு மேல் மூசை மூடி, ஐந்து நாழிகைக்குள் குடசப்பாலையிலையை யரைத்து கனக்கப்பூசி, மறு ஐந்து நாழிகைக்குள் சீலைமண் செய்து, மற்ற இருபது நாழிகை வெயிலில் உலர்த்தி, பத்தாவது நாள் காலையில், அறுபத்து நான்கு வறட்டியில் புடம்போட்டு, ஆறவிட்டு எடுத்தால், சரஸ்வதியின் சரீர நிறம்போல வெண்ணிற மடைந்திருக்கும்.



LC
1174
ARCHIVES LIB
No.
103660

### வெற்பேந்தி எண்ணெய்

நடை விருத்தம்

முன்னர்வெற் பேந்தியெண்ணெய்
  முறைமையு மொழியக் கேண்மோ
சொன்னவப் பூண்டை யெல்லாந்
  துணித்ததை யுலர்த்திப் பானை
தன்னில்வைத் ததைமேன் மூடித்
  தாழ்புழை கடங்கீழ் வைத்து
வன்னிமே விடநா ளொன்றில்
  வருமுடு கெண்ணெய் தானே. 167

(ப-ரை) முன்னர்-வெள்ளீய பற்பத்தில் எடுத்துக் காட்டாகச் சொல்லப்பட்ட, வெற்பேந்தி எண்ணெய் முறைமையும்-வெற்பேந்தி எண்ணெய் செய்யும் முறையையும், மொழிய-சொல்ல, கேண்மோ-கேளுங்கள், சொன்ன-வெற்பேந்தி என்று சொல்லப்பட்ட மலைதாங்கி என்னும், அ பூண்டை எல்லாம்-அந்த பூண்டின் சமூலமும், துணித்து-துண்டு துண்டாக நறுக்கி, அதை உலர்த்தி - அதை உலர வைத்து, தாழ்புழை பானைதன்னில் வைத்து - அடியில் துவாரமிட்ட ஒரு பானையில் போட்டு, அதை மேல்மூடி-வேறொருசட்டி கொண்டு மேல்மூடி (சீலைமண் செய்து), கடம் கீழ் வைத்து-அந்தப்பானையின் அடியில் பானையை வைத்து, மேல் வன்னி இட-மேலே வறட்டி யடுக்கிப் புடம் போட, நாள் ஒன்றில்-புடமிட்ட அத்தினத்திலேயே வருகின்ற, முடுகு எண்ணெய் தான்-முடுகெண்ணெ யாகும்.

(க-ரை) ஒரு மண்பானையில் அடியில் நாலைந்து துவாரமிட்டு, அந்தப் பானைக்குள் மலைதாங்கிப்பூண்டின் சமூலமும் துணித்து உலர்த்திப்போட்டு மேல்மூடிச் சீலைசெய்து, பள்ளந் தோண்டி, அதில் ஒரு சட்டியைப் புதைத்து, அந்தச் சட்டியின்மேல் சரக்குப்போட்ட பானையை வைத்து, மேலே வறட்டியடுக்கிப் புடம் போட்டால், உள்சரக்கினின்றும்

தைலம் அடிச்சட்டியில் இறங்கும். இதுவே வெற்பேந்தி எண்ணெயாம்.

ஏகாரம்-ஈற்றசை.

அநுபானம், தீருநோய்

நடை விருத்தம்

பகருமித் தைலத்தாலாம் பற்பமுண் பதற்குச் சொல்வேன்
புகல்சருக் கரைநெய் தண்ணீர் போசன குடாரிகீரம்
சுகாங்கிபித் தாக்னிகாய்ச்சற் சுரங்கபச் சுரம்பயித்யம்
மகோதர மேகவெட்டை வாதவெப் பத்துக்காமே. 188

(ப-ரை) பகருப்-சொல்லுகின்ற, இ தைலத்தால் ஆம்-இந்த ''வெற்பேந்தி எண்ணெய்யால்'' செய்த, பற்பம்-(வெள்ளீய) பற்பத்தை உண்பதற்கு சொல்லுவேன்-கொள்வதற்கு அநுபானஞ் சொல்லுவேன், புகல்-சொல்லுகின்ற-சருக்கரை-சர்க்கரையும், நெய்-நெய்யும், தண்ணீர்-குளிர்ந்த நீரும், போசனகுடாரி-சீரகமும், கீரம்-பசும்பாலும், சுகாங்கி-மஞ்சளும் ஆகிய இவைகள், பித்தாக்னி காய்ச்சல்-பித்தோஷ்ணசுரம், சுரம்-சுரம், கபச்சுரம்-கபசம்பந்தமான சுரம், பயித்தியம்-உன்மாதம், மகோதரம்-பெருவயிறு, மேகவெட்டை-மேக உஷ்ணம், வாத வெப்பத்துக்கு-வாதசுரம் ஆகிய இவைகளுக்கு, ஆம்-அனுபானமாம்.

(க-ரை) வெற்பேந்தி எண்ணெய்யால் முடிக்கப்பட்ட வெள்ளீயபற்பத்தை, சர்க்கரை, நெய், குளிர்ந்த தண்ணீர், சீரகம், பசும்பால், மஞ்சள் இவ்வநுபானங்களில் கொண்டால், பித்தோஷ்ண சுரம், சுரம், கபச்சுரம், உன்மாதம், மகோதரம், மேகோஷ்ணம், வாதோஷ்ணம் இவைகள் நீங்கும்.

ஏகாரம்-ஈற்றசை,



மருந்துண்ணும் அளவும், பத்தியமும்

நடை விருத்தம்

ஆகுமிவ் வனுபானத்தி லவிழ்தமுண் ணளவோகுன்றி
போகுமே மதிக்குணோய்கள் புளிகடு கச்சமாக
தோகையர் நினைவுண்டானாற் றுய்த்திடு மவிழ்தந்தானே
யாகுமோன் னலரைப்போலே யழித்திடு மெய்யை மெய்யே. 189

(ப-ரை) ஆகும்-முன்சொல்லிய, இ அநுபானத்தில்-இந்த அநுபானத்தில், அவிழ்தம் உண்-மேற்படி வெள்ளீயத்தை உண்கிற, அளவோ-பிரமாணமோ, குன்றி-குன்றிமணியாகும். (அந்தப் பிரமாணத்திற் சாப்பிட்டால்) மதிக்குள்-ஒருமாதத்திற்குள், நோய்கள்-முன்சொன்ன நோய்கள், போகும்-தீரும், புளி-புளியும், கடுகு-கடுகும், அச்சம்-அகத்திக்கீரையும், ஆகா-ஆகாவாம், தோகையர் நினைவு உண்டானால்-பெண்கள்மேல் ஆசைப்பட்டால், துய்த்திடும் அவிழ்தம் தானே-உண்கின்ற இந்த அவிழ்தமே, ஒன்னலரைப்போல ஆகும்-பகைவர்களைப் போலாகும், மெய்யை-சரீரத்தை, அழித்திடும்-கெடுக்கும், மெய்யே-இது உண்மையேயாம், (எ-று)

(க-ரை) முன்சொன்ன அநுபானத்தில், மேற்படி வெள்ளீய பற்பத்தில் வேளைக்கு ஒரு குன்றியளவாகச் சாப்பிட்டால், ஒரு மாதத்திற்குள் நோய்களெல்லாந் தீரும். புளி, கடுகு, அகத்திக்கீரை, பெண்போகம் இவைகள் ஆகாவாம்.

ஏகாரம்-அசையிடைச்சொல்.

உண்ணும் நோயாளிகளுக்கு உறுதிமொழி கூறுகின்றார்

நடை விருத்தம்

ஆகை யினாலே சொன்னே னயிலுநோ யினர்எஞ் ஞான்றும்
ஓகை யினாலே பத்ய வுறுதிகொண் டனுபானத்தை
யூகை யினாலே நாளு முண்பன கடைப் பிடிக்கிற்
போகை யினாலே நோய்கள் புரந்தர னாக வாழ்வார். 190

(ப-ரை) ஆகையினால் சொன்னேன்-இங்ஙன மிருத்தலால் நான் சொன்னதாவது, அயிலும் நோயினர்-மருந்துண்ணும் நோயாளிகள், எஞ்ஞான்றும்-எப்பொழுதும், ஓகையினால் பத்யம் உறுதிகொண்டு-களிப்புடன் பத்தியத்தைக் கைப்பிடியாகப் பிடித்து, உண்ணான நாளும்-மருந்துண்ணுங் காலத்தில் (அநுபானத்தை), ஊகையினால் கடைப்பிடிக்கில்-யுக்தியால் உறுதியாகப் பிடித்தால், நோய்கள் போகையினால்-ரோகங்கள் போவதினால், புரந்தரனாக வாழ்வார்-இந்திரனைப்போல சுகமாய் வாழ்வார்கள்; (எ-று.)

ஏகாரங்கள் நான்கும், இசை நிறைக்க வந்த அசை இடைச்சொற்கள்.

## 5. காரீய பற்பம்

### காரீய சுத்தி

துள்ளல் ஆசிரியம்

காரீயசுத்தி முறை சொல்லுவேன் பாடலக்
கவிகையொரு வீசை யுடனே
காடி முக்கூறதற் காகவொரு பானையிற்
காணவிட் டதுக லந்து
காரீயமொரு தொடியதற் குண்டு வைத்ததைக்
கனவிளக் காக விருநாள்
காய்ச்சியதுபோன மூன்றாநா ளுதயத்திற்
காஞ்சனியி னதள் முற்படி
யாரவிடுகாடி தனிலப்படி யிரண்டுநா
ளட்டபின் பாடா தொடை
யதள்வேர் பொடித்தளிர் முன்புபோல காடி
யட்டதை யிரண்டு நாளே
சேரவிரு மூன்றுதின மானபின்னது மகா
தேசுமிகு மறுமா செலாந்
திவ்யமாங் குறையுநிறைய தேயடையாள
திட்டமா மஃதுண் மையே.





(ப-ரை) காரீயசுத்திமுறை சொல்வேன்-காரீயத்தைச் சுத்திசெய்ய வேண்டிய முறைமையைச் சொல்கிறேன், ஒருபானையில்-ஒரு பானையில், பாடலக்கவிகை ஒரு வீசை-பாதிரியிலை ஒருவீசை இடித்துப்போட்டு, உடன்-அத்துடன், காடி-காடியை, இதற்கு-அந்தப் பாடலக் கவிகைக்கு, முக்கூறு ஆக காண-மூன்று பங்கான மூன்று வீசை காணும்படி, விட்டு-விட்டு, அது கலந்து-அந்த இரண்டையுங் கலந்து, காரீயம் ஒருதொடி-ஒரு பலம் காரீயத்தை, அதற்குள்-அந்தச் சரக்கின், நடு வைத்த-நடுவிலே வைத்து, அதை-அந்தப் பாண்டத்தை (அடுப்பிலேற்றி), இருநாள்-இரண்டு நாட்கள், கனவிளக்காகக் காய்ச்சி-பெருந்தீபம்போலத் தீப்படும்படி எரித்துக் காய்ச்சி, அது போன-அப்படி இரண்டு நாட்கள் எரித்த பின், அந்த மூன்றான நாளின் உதயத்தில்-மூன்றாவது நாள் காலையில், காஞ்சனியின் அதள்-மஞ்சளின் அதளை, முற்படி-முற்போல, ஆர-ஒரு வீசையளவு பொருந்த, காடி தனில் இடு-மூன்று பங்கு காடியில் இடு (பிறகு), அப்படி-அது போல, இரண்டுநாள் அட்ட பின்பு-இரண்டு நாள் (எரித்துக்) காய்ச்சின பின்பு, ஆடாதொடை அதன் வேர்-ஆடாதொடை வேர்ப்பட்டை ஒரு வீசை, பொடித்த தளிர்-பொடிசெய்த மேற்படி தளிர், முன்புபோலே காடி-முன்போல் காடி மூன்று பங்கு விட்டு, அதை இரண்டு நாள் அட்டு-அதை இரண்டுநாள் எரித்துக் காய்ச்சி, சேர இரு மூன்று தினம் ஆனபின்-(இவ்வாறு மும்முறைக்குப்) பொருந்த ஆறுநாள் ஆனபிறகு, அது-அந்தக் காரீயம், அறும் மாசு எலாம்-அழுக்கெல்லாம் நீங்கும், (அதனால்) மகா தேசுமிகும்-மிக்க விளக்கத்தை யடையும், திவ்யமாகும்-திவ்யமான பொருளாகும், நிறையது குறையும்-எடை குறையும், அடையாளம் திட்டமாம்-அப்படிக் குறைவதே காரீயஞ் சுத்தியானதற்கு அடையாளமாம், அஃது உண்மை-அங்ஙனம் சொன்னது உண்மையாகும்; (எ-று.)

(க-ரை) ஒரு பானையில் ஒரு வீசை பாதிரியிலையை இடித்துப்போட்டு, அதில் மூன்று வீசை காடி விட்டு, அதன்

மத்தியில் ஒரு பலம் காரீயத்தை இட்டு, கனதீபாக்கினியாக இரண்டுநாள் எரித்து, பிறகு மூன்ருவது நாள், நான்காவது நாளாகிய இரண்டு நாட்கள், மஞ்சளினதளையும் காடியும் சேர்த்து முன்போலவே எரித்து ஐந்து ஆறு நாளாகிய, இரண்டு நாட்கள் ஆடாதோடை வேர்ப்பொடியும் தளிர்ப் பொடியும் காடியும் சேர்த்து முன்போலவே எரித்து, இப் படி ஆறு நாளான காரீயத்தை எடுத்துப் பார்த்தால், எடை குறைந்து, சுத்தத்தை யடையும் என்பதாம்.

ஏகாரங்கள் ஐந்தும் அசை இடைச்சொற்கள்.

### காரீய பற்பம செய்தல்

இணையிரட்டை மகுடப்பா

காரீய பற்பவகைக் கூறக் கேண்மோ
கசடகலச் சுத்தி செய்த காரீயத்தைக்
கைசா நாற்கு முப்பாலாகப் பூனைக்
காலிரச மிட்டரைத்தோர் நாண்மட்டாகக்
காந்திமெய்யி னிரதமுமப் படியே யோர்நாள்
கழித்தபி னேடகசோ கனகச் சாறுங்
கணக்கதுவே யாயிடநா ளுன்கு நீங்கும்

பேராகு மைந்தா நாளதை யுருட்டிப்
பில்லைசெய்து நிழலுலர்த்தி யிருநா டீரப்
பிறகுநிலை யாவாரை யிருநாற் கூறு
பிருந்தைரச மொருகூற்ரு லரைத்து மூசை
பெலமாகச் செய்தொருநா ளுலர்த்தி முன்கொள்
பில்லையறு நாளான காரீ யத்தைப்
பின்னரந்த மூசையில்வைத் ததற்கு நேராய்ப்
பிணிமுகவால் வரனையா லாகுநேயம்

வாரதனை மேல் மூசை யாலேமூடி
வகைமூசை யரைசேற்றை மேலே பூசி
வைத்தமறு நாளதற்குச் சீலைமண் செய்
வைரவியி லப்படியே யிருநாள் செய்வாய்



மலிநாட்க ளொன்பதுபோய்ப் பத்தா நாளில்
வயிரவரைப் பூசை செய்து சுபாவமான
வல்லெருவெண் ணுன்பதுமூ வாறு மூட்டி
வைபுடத்தை யாறியபின் னெடுத்துப் பார்க்கப்

பாரதிநே ராயிருக்கு மைய மில்லை
பற்பமென்ருல் பற்பமதே பார்க்கு முன்போம்
பல்லைமகோ தரமீளை யிருமல் காசம்
பாண்டுவிட சுரம்மேகம் பயித்தியஞ் சந்நி
பல்வலிகா திரைச்சறலை யிடிப்புச் சூலை
பகரவிழ்தப் பிரமாணந் தினைநெல் குன்றி
பங்குநன்மை யிடைதீமை மதுநீர் நேயம்
பாலிளநீர் மோர்களறு பானந் தானே. 192

(ப-ரை) காரீய பற்பம்வகை-காரீய பற்பஞ் செய்யும் விதத்தை, கூறக் கேண்மோ-சொல்லக் கேளுங்கள், கசடு அகல-அழுக்கு நீங்க, சுத்திசெய்த-முறைப்படி சுத்தி செய்த, காரீயத்தை-காரீயத்தை, கைசா நாலுக்கு-ஒரு பலத்துக்கு, பூனைக்காலிரசம்-சிறு பூனைக்காலிச்சாறு, முப்பாலாக இட்டு-(மூன்றுபங்கு அதிகமான) மூன்று பலம் விட்டு, ஓர்நாள் மட்டாக அரைத்து-ஒரு நாளரைத்து, காந்தி மெய்யின் இர தமும்-குப்பை மேனிச்சாற்ருலும், அப்படியே ஓர் நாள்-அப் படியே மூன்று பலம் விட்டு ஒரு நாளரைத்து, கழித்தபின்-ஆனபின், ஏடகக் கோகனகச் சாறும்-ஓரிதழ்த் தாமரைச் சாற்ருலும், கழித்து ஒரு நாள் ஆகியபின்-(மூன்ருவது நாளா கிய) ஒருநாள் அரைத்தானபின், விம்பச்சாறும்-(நான்காவது நாளாகிய ஓர்நாள்) கோவைச் சாற்ருலரைத்து, கணக்கதுவே யாயிட-அக்கணக்கான பின், நான்கு நாள் நீங்கும்-நான்கு நாள் கழியும்.

(அதை-இப்படி யரைத்து முடிந்த காரீயத்தை) பேராகும் ஐந்தாநாள்-ஐந்தாவது நாள் காலையில், அதை உருட்டி வில்லை செய்து-அரைத்த காரீயத்தை வில்லையாக வுருட்டி, நிழல் உலர்த்தி-நிழலில் உலரச்செய்து, இருநாள் தீர-

முன்னாளும் இந்நாளும் சேர்த்து இரண்டு நாளான, பிறகு-இவ்வாறு உலர்ந்த பிறகு, நிலையாவாரை இருநாற் கூறு-நாட்டு நிலாவாரையிலை பச்சையாக எட்டுப்பலம் எடுத்து, அதை, பிருந்தை ரசம் ஒரு கூறால் அரைத்து-துளசிரசம் ஒருபலம் விட்டு அரைத்து, பெலமாக மூசைசெய்து-வலிவாக மூசை செய்து, ஒருநாள் உலர்த்தி-ஒருநாள் உலரச் செய்து, அறுநாள் ஆன முன்கொள் வில்லை காரீயத்தை-ஆறுநாளான முன் அரைத்து வைத்திருக்கின்ற காரீய வில்லையை, பின்னர்-பிறகு ஏழாநாள், அந்த மூசையில் வைத்து-அந்த மூசையில் வைத்து, அதற்கு நேராய்-அந்தக் காரீயத்திற்குச் சரி எடை, பிணி முகவால் வரனையால் ஆகும் நேயம்-மயிலிறகு, வாய்விளங்கம் ஆகிய இவற்றால் செய்கின்ற தைலத்தை, வார்-வில்லை வைத்துள்ள அந்த மூசையில் வார்த்து, அதனை-அந்த மூசையை, மேல் மூசையாலே மூடி-மேல் மூசையால் மூடி, வகை மூசைமேலே-இரண்டு பிரிவாக மூடி யிருக்கின்ற மூசையின்மேல், அரைசேற்றை பூசிவைத்து-அரைத்த சேற்றைப் பூசி அன்றைக்கு வைத்து, மறுநாள்-எட்டாவது நாள், அதற்குச் சீலைமண் செய்-அந்த மூசைக்கு மண்சீலை செய், வை ரவியில்-வெயிலில் வை.

அப்படியே இருநாள் செய்வாய்-அவ்விதமே மறுநாளும் ஒரு மண்சீலை செய்து வெயிலில் உலர்த்துவாய், (இப்படிச் செய்ய) மலிநாட்கள்-வந்த நாட்கள். ஒன்பதும் போய்-ஒன்பதுஞ் சென்று, பத்தா நாளில்-பத்தாவது நாள் காலையில், வயிரவரைப் பூசை செய்து-வைரவ மூர்த்தியைப் பூசை செய்து, சுபாவமான வல்லெரு-நன்றாய் உலர்ந்த வலிய வறட்டி, எண்ணெண்பது மூவாறு-தொண்ணூறு, மூட்டி-அடுக்கி, வைபுடத்தை-புடம் போடு, ஆறியபின்-ஒரு நாள் நன்றாய் ஆறினபின், எடுத்துப் பார்த்து-எடுத்துப் பார்த்தால், பாரதி நேராய் இருக்கும்-சரஸ்வதிக் கொப்பான வெண்மையா யிருக்கும், ஐயம் இல்லை-இதில் சந்தேகமில்லை, பற்பம் என்றால் பற்பம் அதே - பற்பமென்று சொன்னால் அதுவே பற்பமாகும்.



பார்க்கும் முன்-அப் பற்பத்தை பார்ப்பதற்கு முன்னே, பல்லை, மகோதரம், ஈளை, இருமல், காசம், பாண்டு,விடசுரம், மேகம்,பயித்தியம், சந்நி, பல்வலி, காதிரைச்சல், தலையிடிப்பு சூலை-ஆகிய இவைகள், போம்-தீரும், பகர்-சொல்லப்பட்ட, அவிழ்தப் பிரமாணம்-பற்பத்தை பிரயோகிக்கும் அளவு, தினைபங்கு நன்மை-தினையளவு உத்தமம், நெல்பங்கு இடை-நெல் அளவு மத்திமம், குன்றி பங்கு தீமை-குன்றியளவு அதமம், மது-தேன், நீர்-குளிர்ந்த நீர், நேயம்-பசுவின் நெய், பால்-பசும் பால், இளநீர்-இளநீர், மோர்கள்-பசுவின் மோர் ஆகிய-இவைகள், அநுபானந்தானே-அனுபானமாகும், (எ-று.)

(க-ரை) சுத்தி செய்த காரீயம் ஒரு பலத்தைக் கல்வத்திலிட்டு, சிறு பூனைக்காலிச்சாறு மூன்று பலம் விட்டு ஒரு நாளரைத்து, மறுநாள் குப்பைமேனிச்சாறு மூன்று பலம் விட்டரைத்து, மூன்றாவதுநாள் ஒரிதழ்த் தாமரைச் சாறு மூன்று பலம் விட்டரைத்து, நான்காவது நாள் கோவைச் சாற்றாலரைத்து, ஐந்தாவது நாள் காலையில் அதை யுருட்டி வில்லை செய்து, ஆறாவது நாள் நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, பச்சையாயிருக்கின்ற நாட்டு நிலையா வாரையிலை நான்கு பலத்தை ஒரு பலம் துளசிச்சாற்றால், அரைத்து மூசை செய்து ஒரு நாள் உலர்த்தி, முன் வில்லை செய்த காரீயத்தை ஏழாவது நாள் காலையில் மூசையில் வைத்து, வரனைத் தயிலம் ஒரு பலம் அந்த மூசையில் வார்த்து மேல் மூசையால் மூடி, அரைத்த சேற்றை அந்த மூசையின் மேலே பூசி, எட்டாவது நாள் ஒரு மண்சீலையும், ஒன்பதாவதுநாள் ஒரு மண்சீலையுஞ் செய்து உலர்த்தி, பத்தாவதுநாள் காலையில், வயிரவரைப் பூசித்து, தொண்ணூறு வலிய வறட்டியில் புடமிட்டு, ஒருநாள் ஆறவிட்டு எடுத்துப் பார்க்க, சரஸ்வதிக்கு ஒப்பான வெண்மையான பற்பமாயிருக்கும். இந்தப்பற்பத்தை உத்தமமான தினையளவிலும், மத்திமமான நெல் அளவிலும், அதமமான குன்றி அளவிலும், தேன், குளிர்ந்த தண்ணீர், பசுநெய், பசும்பால், இள

நீர், மோர் ஆகிய அனுபானங்களில் பிரயோகஞ் செய்தால், பல்லை, மகோதரம், ஈளை, இருமல், காசம், பாண்டு, விட சுரம், மேகம், பயித்தியம், சந்நி, பல்வலி, காதிரைச்சல், தலையிடிப்பு, சூலை இவைகள் தீரும்.

### காரீய பற்பத்தின் பத்தியமும் மருந்தளவும் நாளளவும்

#### நடை விருத்தம்

அனுபானித் தவிழ்தமிவ்வா றயிலுமுன் னினைத்த பத்தியந்
தினைவர கபினிகொள்ளு சிந்தமச் சங்கூஷ் பாண்டம்
வனிதைய ராகாதாகில் வாட்டுமிவ் வவிழ்ந்தானே
வினையரை யரைமதிக்குள் வீயுமற் றதும்பின் னுலே. 193

(ப-ரை) இவ்வாறு அவிழ்தம் அனுபானித்து-இவ்விதமாக காரீய பற்பத்தை அநுபானித்து, அயிலும் முன்-சாப்பிடுவதற்கு முன், நினைத்த-எண்ணின, பத்தியம்-பத்தியமாவது, தினை வரகு அபினி, கொள், புளி, அகத்திக்கீரை, கலியாணப் பூசனிக்காய் இவைகளும், வனிதையர்-பெண்போகமும், ஆகாது-ஆகாது, ஆகில்-ஆகுமென்று புசித்தால் அது அவிழ்தம் தானே வாட்டும்-அந்த மருந்தே சரீரத்தைக் கெடுக்கும், அரையரை மதிக்குள்-ஒருமாதம் சாப்பிடுவதற்குள், முன் சொன்ன நோய்கள் தீர்வதன்றி, வினை மற்றதும் பின்னுல் வீயும்-எஞ்சிய வினைகளெல்லாம் பிறகு தீரும், (எ-று).

(க-ரை) முன் சொன்ன அநுபானத்தோடு ஒருமாதம் சாப்பிட்டு தினை, வரகு, அபினி, கொள்ளு புளி, அகத்திக் கீரை, கலியாணப் பூசனிக்காய், பெண்போகம் இவைகளை நீக்கினுல், முன்னே சொன்ன நோய்கள் தீருவதன்றி, எஞ்சிய ரோகங்களெல்லாம்-மருந்து விட்டபின் தீரும் என்பதாம்.



### காரீய பற்பத்தாலுண்டாகிற பலத்தைக் கூறுகின்றுர்

#### நடை விருத்தம்

அப்புறம் வச்சிரகாய மாமிகு பசியுண் டாகும்
ஒப்பில்மன் மதனேராகு மொண்கதிர் நிறமுண் டாகும்
துப்புறு திறமுண்டாகுந் தொட்டவை வசிய மாகும்
தப்பல மகிமை யுண்டாந் தரணியின் மீதுதானே. 194

(ப-ரை) அப்புறம்-மருந்து சரீரத்தில் ஊறலூற, வச்சிர காயம் ஆம்-வச்சிரத்தைப் போல் சரீரமாகும், மிகுபசி உண்டாகும்-மிகுந்த பசியுண்டாகும், ஒப்பில்-அளவு சொல்லப் படாத, மன்மதன் நேராகும்-அழகு மன்மதனுக்கு ஒப்பாகும், ஒள் கதிர் நிறம் உண்டாகும்-ஒள்ளிய சூரியன் போன்ற காந்தி யுண்டாகும், துப்பு உறு திறல் உண்டாகும்-மிக்க பல முண்டாகும், தொட்டவை வசியம் ஆகும்-தொட்ட பொருள்கள் வசியமாகும், மகிமையுண்டாம்-கீர்த்தியுண்டாகும். தப்பல-பொய்யல்ல, தரணியின் மீது-இவ்வுலகத்தில், (எ-று.)

(க-ரை) இம் மருந்து சாப்பிட்டுச் சரீரத்தில் ஊறலூற வச்சிரகாயமாம். மிக்க பசி, மன்மதனைப்போல் அழகு, சூரியன் போன்ற காந்தி, பலம், உண்டாகும்; தொட்ட பொருள்கள் வசியமாகும்; நல்ல கீர்த்தியுண்டாகும் என்பதாம்.

தான், ஏ அசைகள்,

### வரணைத் தைபிலம்

#### பதினுன்குசீர்க் கழி நெடிலடி விருத்தம்

வரணைத் தையில முறைமைகே ளதனுல்
வருகின்ற தண்டுலம் வீசை
மயிலிற கதற்கு நாலிலொன் றுக
மத்தனஞ் செய்தவை யிரண்டும்
அரமகளிலையி னிரதமுன் னவைகட்
கத்தமா யிட்டரைத் ததனை

யாறவிட் டொருநாள் பச்சையா மலகத்
தருங்கனி யிரதமுற் படியே

யிருதினமாகு மானபின் னதனை
யெடுத்தொரு மொத்தமாயுருட்டி
யிரண்டுநா ளிரவியி லாததை யுலர்த்தி
யீரிரு நாளகன் றதற்பின்

பொருவரு மைந்தா நாளதைக் கடத்திற்
போட்டதன் கீழ்க்கடம் வைத்துப்
புழையுற வல்லெரு வடுக்கிப்
புடமிடத் தைலமாய் விழுமே. 195

(ப-ரை) வரணனைத் தைலம் முறைமைகேள்-வரணனைத் தையிலத்தின் முறையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக, அதனால் வருகின்ற தண்டுலம் வீசை-வரணனை என்னும் பெயரால் வருகின்ற அரிசி என்னும் விதையாகிய வாய்விளங்கம் ஒரு வீசை, அதற்கு-அந்த ஒரு வீசைக்கு, மயிலிறகு நாலில் ஒன்றாக-கால் வீசை மயிலிறகாகச் சேர்த்து, அவை யிரண்டும்-அந்தச் சரக்குகள் இரண்டையும், அரமகள் இலையின் இரதம்-தேவப்பெண்ணான இந்திராணி என்னும் பேருள்ள நொச்சியிலைச் சாறு, முன்னவைகட்கு அத்தமாய் இட்டு-முன்சரக்குகள் இரண்டிற்குஞ் சேர்ந்த ஐம்பது பலத்துக்குப் பாதியான இருபத்தைந்து பலம் விட்டு, அதனை மர்த்தனஞ் செய்து அரைத்து-அந்த சரக்கு இரண்டையும் பொடித்து நன்றாயரைத்து, ஆறவிட்டு-அன்று ராத்திரி ஆறவிட்டு, பச்சை ஆமலகத்து அருங்கனி இரதம்-பச்சை நெல்லிக்காய்ச் சாற்றால், முற்படியே ஒருநாள்-முன் போலவே ஒருநாள் அரைத்து, (அன்றிரவு ஆறவிட்டு), இருதினம் ஆகும்-இவ்வாறு செய்ய இரண்டு தினமாகும், ஆன பின்-அப்படியான பின், அதனை எடுத்து-அப்படி யரைத்ததை எடுத்து, ஒரு மொத்தமாய் உருட்டு-ஒரு மொத்தையாயுருட்டி, அதை இரண்டு நாள்-அந்த மொத்தையை இரண்டு நாள் வரைக்கும், இரவியிலாது உலர்த்தி-நிழலில் உலர்த்து,-



ஈரிரு நாள் அகன்றதன் பின்-இவ்வாறு அரைப்பு இருநாள், உலர்த்தல் இருநாள், ஆக நான்கு நாள் சென்றதன்பின், பொரு அரும் ஐந்தாம் நாள்-ஒப்பற்ற ஐந்தாவது நாளில், அதை-அந்த மொத்தையை கடத்தில் போட்டு-ஒரு அடித் துவாரமிட்ட மண்பானையில் போட்டு, அதன்கீழ் கடம் வைத்து-(ஒரு பள்ளந்தோண்டி) அதன்கீழாக ஒரு சட்டி வைத்து, புழைஉற-சரக்குப் பானையின் துவாரம் அடிச் சட்டியில் பொருந்த, மீது-அடிச்சட்டியின் மேல் வைத்து, வல் எரு அடுக்கி-மேலே வலிமையான வறட்டி அடுக்கி, புடம் இட-புடம் போட, தைலமாய் விழும்-அடிச்சட்டியில் தைலமாய் இழியும், (எ-று).

(க-ரை) வாய்விளங்கம் ஒருவீசை, மயிலிறகு ¼ வீசை ஆகிய இரண்டையும் கல்வத்திலிட்டு நொச்சியிலைச்சாறு இருபத்தைந்து பலம் விட்டு ஒரு நாள் அரைத்து, மறுநாள் நெல்லிக்காய்ச் சாற்றாலரைத்து, ஒரு மொத்தையா யுருட்டி, இரண்டுநாள் நிழலில் உலர்த்தி, ஐந்தாவது நாள், அடியில் துவாரமிட்ட ஒரு பானையிலிட்டு மேல்மூடிச் சீலைசெய்து, பூமியில் ஒரு குழி தோண்டி அதில் ஒரு சட்டி பதிய வைத்து, அதன் மேல் சரக்குப் போட்டிருக்கும் பானையை வைத்து, மேலே எருவடுக்கிப் புடம் போட, அச்சட்டியில் தைலம் வந்திறங்கும் என்பதாம்.

ஏகாரம்-ஈற்றசை,

### மேற்படி தனித் தைலத்தால் தீரும்நோய்

### நடை விருத்தம்

சரதமா யிறங்குமிந்தத் தைலத்தைக் கருநென் மாவோ
டொருபொழு தேனுமுண்டா லுடலிடை செறிந்த பொல்லா
விரகுடைக் கடிக ளெல்லாம் வீட்டிடும் விடமு மாறு
மிரவிபோற் றேக மின்னு மேதகு கவினுண் டாமே. 196

(ப-ரை) சரதமாய்-சத்தியமாக, இறங்கும்-இறங்குகின்ற, இந்தத் தைலத்தை-இந்த வரணனைத் தைலத்தை, கரு நெல் மாவோடு-கருங்குருவையரிசி மாவில் அநுபானித்து, ஒரு பொழுதேனும் உண்டால்-ஒரு நாளாவது சாப்பிட்

டால், உடலிடை செறிந்த-சரீரத்தில் நிறைந்த, பொல்லா-கொடிய, விரகுடைக் கடிகள் எல்லாம்-சர்வகடிகளை யெல்லாம், விட்டிடும்-கொன்றுவிடும், விடமும் மாறும்-விஷமும் நீங்கும், இரவிபோல் தேகம் மின்னும்-சூரியனைப்போல் சரீரம் காந்தியாகும், மேதகு கவின் உண்டாம்-மிக்க அழகும் உண்டாகும், (எ-று).

(க-ரை) இவ்வாறு இறங்குகின்ற இந்த வரனைத் தைலத்தைக் கருங்குருவையரிசி மாவில்விட்டு, ஒரு நாள் சாப்பிட்டாலும், சரீரத்திலுண்டாகின்ற கொடிய கடிகள், விஷங்கள் இவைகள் நீங்கி, சூரியனைப்போற் காந்தியும், மிக்க அழகும் உண்டாகும் என்பதாம்.

ஏகாரம்-ஈற்றசை

## 6. அப்பிரக பற்பம்

### அப்பிரக சுத்தி

சந்தம்

அப்பிரக சுத்தியல தெப்படி யுடற்குரிமை
யப்புமது செப்பு முறையே
அச்சமல ரைச் சிதை யதைப்பிழி கடத்தினிடை
யப்புற மிதைப்பெ யதிலே
முப்பொழு திருக்கவை யதற்குளது மக்குமதை
முற்படி புளித்த கழுநீர்
முத்தின மிருக்கவைய தற்பின தெடுத்துமறு
முத்தின மருக்கலரி னீர்
இப்படி யிருக்கிலது சுத்திபெறு மொத்த நிறை
யெட்ட திக மற்ற ரசமே
எத்தினமு மெத்தினி சுமப்பிரக முற்றளவு
மிக்கணித மெத்த லகுவே
தப்பித மிலைச்சிறிது தப்பிலது தப்புமிகு
தத்துவரு முப்பிச மிதே
சத்திய மிசைத்தபடி சுத்திபெறு நித்தியமுறு
சற்குரு வளித்த பொருளே. 197



(க-ரை) அகத்திப்பூவை இடித்துப் பிழிந்த சாற்றை ஒரு கடத்திலே ஊற்றி, அதில் கருப்பு அப்பிரகத்தை இடித்துத் தூளாக்கிப் போட்டு, மூன்றுநாள் ஊரவைத்து, சாற்றை நீக்கி, மேற்படியாகவே புளித்த அரிசி கழுவிய நீரில் மூன்று நாள் ஊரவைத்துக் காடியை நீக்கி, எருக்கம்பூச் சாற்றில் மூன்றுநாள் ஊரவைக்கச் சுத்தியாகும். சாற்றின் அளவுகள் அப்பிரகத்திற்கு எண் மடங்கு இருத்தல் வேண்டும். நாள் தோறும் சாறுகளைப் புதிதாக உபயோகித்தல் வேண்டும். நன்றாகச் சுத்தியாகாமலும், சரிவர முடியாமலுமுள்ள அப்பிரக பற்பத்தை வழங்கின் உப்பிசம் வரும். (உப்பிசம்-இரைப்பிருமல்.)

விருத்தம்

சுத்திசெய்யா வப்பிரகந் தனைவழங்கும்
பண்டிதர்க்குத் துணையா வாரேல்
அத்திசெய்யாக் காமவல்லி மழையிலிலாக்
கொட்டை யுடை யக்கரத்தராக
உத்திசெய்யா தொழிந்தோருஞ் செயம்பெறுவர்
தப்பிதம்வந் துற்றால் வேறே
புத்திசெய்யா திவையிரண்டுங் குடிநீராய்க்
குடிக்கிலது போந்தப் பாதே. 198

(க-ரை) நன்றாக முடியாத அப்பிரக பற்பத்தை உண்பதால் உண்டாகும் இரைப்பிருமல் உப்பிசத்திற்கு, வெற்றிலைச் சாற்றையும், இஞ்சிச் சாற்றையும் சம அளவு ஒன்று சேர்த்து, காலை மாலை இருவேளையும், கால் முதல் அரை ஆழாக்கு வீதம் தோடம் நீங்கும் வரை கொடுக்கவும்.

### அப்பிரக பற்பம் செய்தல்

கலித்துறை

முன்ன மிசைத்த முறையன்றி வேத முறைநெறியே
இன்ன மொருமுறை யப்ரக பற்ப மிசைக்கலுற்றேன்
கன்ன மதகரி வத்திர ரத்தர் கவுரிதுர்க்கி
சொன்ன வயிரவர் சித்தர் பதாம்புயந் தோத்தரித்தே. 199

(க-ரை) விநாயகர் முதலியோரை வணங்கி, முன் சொன்ன முறையின்றி இன்னமொருமுறை அப்பிரக பற்பஞ் சொல்லுகிறேன் என்பதாம்.

ஏகாரம்-ஈற்றசை.

## இரட்டையிணைக் கட்டளைக் கலிப்பா

சுத்திசெய்த கிருட்டினவப்ரகந்
தொடியொன்றுக்குத் தினத்திற்குச் சோடசம்
தோன்றிமூல மிருபங்கு நாற்பங்கு
தொகுகஷாயஞ் செய்தந்த நீரினுற்
றேயவைத்துத் தினமிரு நாள்மட்டுஞ்
சுடரிலாம லுலர்த்திய பின்னதைத்
துலையி லேற்றியதற்கிணை யாகவே
துய்யநீபச் சளியுல ராததை

ஒத்திடச்செய் ததனுக்குப் பாதியா
யுறக்கலந்தபின் காந்திமெய்ச் சாற்றினல்
ஓதுமுற்படி நாளெட் டிடைவிடா
தூறவைத்தபி னூறியு லர்ந்ததை
யுண்மையாகிய மாறன்று ரெண்ணெயை
யொட்டி ரெட்டி நிறையிதற் காகவே
யூட்டி யாட்டுவ தாறு திவசமே
யுருட்டி வில்லை வெயிலு லர்த்தையில்

அத்தியின்சுதை மீதி லடிக்கடி
யப்புமூன்று தினமு மொருநிறை
யான பின்னதைச் சீலைமண்மீ மிசை
யாக்கிநாளொன் றகன்றபின் வல்லெரு
வாறுபத்துடன் புடமிட் டெடுக்கவே
யாறுயேத லாயுதன் வண்ணமாம்
அதையருந் தநு பானஞ் சருக்கரை
யாநெய் வெற்றிலைச் சாற்றி லயிலவே

பித்தமேகப் பிரமிய நீரிழி
பிணிசு ரப்பிணி பிரமை சொறிப்பிணி



பீசவாயு மகோதர மார்வலி
பிளவுடன் பெரு குஞ்சல நோயனல்
பேருமண்டலந் தன்னிலோர் மண்டலம்
பிசகிடாமனற் பத்தியம் புளிபுகை
பெண்கடிப் பகைள்ளச்ச மற்றிடிற்
பிணிக ளற்றுடல் பேரின்ப மெய்துமே.

(க-ரை) சுத்திசெய்த கிருஷ்ண அப்ரகம் ஒருபலத்தை ஒரு பாத்திரத்திலிட்டுக் கொண்டு, மருதோன்றிவேர் 16 பலத்தை இடித்து வேறொரு பாண்டத்திலிட்டு, 64 பலம் தண்ணீர் விட்டு, அடுப்பேற்றிச் சிறுக எரித்து 4-ல் ஒரு பங் கான 16 பலமாகச் சுண்டக்காய்ச்சி வைத்துக் கொண்டு, நாளொன்றுக்கு இரண்டுபலம் வீதம் அந்த அப்ரகத்தில் 8-நாள் வார்த்து ஊறவைத்து, நிழலில் உலர்த்தி, அது நன்று யுலர்ந்தபிறகு, அந்த அப்ரகத்தை நிறுத்து, அப்போதிருக்கும் எடைக்கு இரண்டுபங்கு கடப்பம் பிசினை அதிற் சேர்த்து, அந்த இரண்டுபங்கு பிசின் ஆறி, ஒருபங்காய்க் குறைந்த பிறகு, முன்போல நாளொன்றுக்கு இரண்டு பலம் வீதம் குப்பைமேனிச்சாறு எட்டுநாள் வரைக்கும் விட்டு, ஊற வைத்து நிழலில் உலர்த்தி,

உலர்ந்தபின், அந்த அப்ரகத்தைக் கல்வத்திலிட்டு, அப்ரகம் இருக்கும் எடைக்கு இரண்டுபங்கு வேப்பெண் ணெய் தினமும் விட்டு, அப்படி ஆறுநாளரைத்து, வில்லை செய்து வெயிலில் உலர்த்தும்போது, வில்லையை நிறுத்துக் கொண்டு, அந்த எடைக்குச் சரியெடை ஏறும்படி மூன்று நாள் வரைக்கும் அத்திப்பாலை அந்த வில்லைக்கு அடித்து, உலர்ந்த பின் (அதை அகல்லிட்டுச்) சீலைமண் செய்து, அறுபது வறட்டியில் புடமிட்டு, நன்றுயாறினபின் எடுத் தால், பரசுராமன் நிறமான வெண்மையாயிருக்கும்.

அந்த அப்ரக பற்பத்தைப் பிரமாணப்படி சர்க்கரை யிலாவது, நெய்யிலாவது, வெற்றிலைச் சாற்றிலாவது அநு பானஞ் செய்து, புளி, புகையிலை, பெண்போகம், கடுகு,

மதுபானம், அகத்திக்கீரை இவைகளை நீக்கி, நல்ல பத்தியத்துடன் ஒரு மண்டலம் வரைக்கும் சாப்பிட்டால், பித்த மேகப் பிரமியம், நீரிழிவு நோய், சுரம், உன்மாதம், சொறி, விதைவாதம், மகோதரம் மார்நோய், பிளவையோடு வருகின்ற வெகு மூத்திரம், அதனாலுண்டாகும் வெப்பம் இவைகள் நீங்கி உடல் சுகமடையும் என்பதாம்.

நடை விருத்தம்

இந்த வப்ரக பற்பத்தா லெவர்க்கு மின்பங்க ளுண்டா
முந்து மிச்சரக்கின் சுத்திமுறையெனிலின்றேற் றுன்பம்
வந்திடு மிதனுன் மெத்த மருந்திடு கெடுதிபோல
அந்தநோ யகற்று மாறேதறிந் திடிற் றேன்றிசுக்கே. 201

(க-ரை) முறைப்படி சுத்தி செய்த இந்த அப்ரகபற்பத்தை கொள்பவர்களுக்கு இன்பமுண்டாகும் சுத்தி செய்யாமற் செய்ததானுல், மருந்தீட்டாலுண்டாகுங் கெடுதி போல, அநேக துன்பங்களுண்டாகும். அந்தத் துன்பங்களை மருதோன்றிவேரும், சுக்கும் நீக்கும் என்பதாம்,

'அறைந்திடில்' எனவும், 'அறிந்திடு' எனவும் பாடங் கூறுதலுமுண்டு.

நடை விருத்தம்

சொல்லுமிவ் விரண்டின் முன்வேர் தொடியொ வ்வொன்
நல்லதண் ணீரதற்கு நாலைந்து பால்மே லாகப் [றுக்காக
புல்லவிட்ட தற்குக்காலாய்ப் பொங்கவிட்டி றக்கிமாந்தச்
சொல்லுமப் பிணிகொட்டாலைத் துன்பறுங்
குணமதாமே. 203

(க-ரை) மருதோன்றி வேர் ஒரு பலம், சுக்கு ஒருபலம் நையவிடித்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, 20 பலம் தண்ணீர் விட்டு நான்கில் ஒன்ருய்க் காய்ச்சி யிறக்கிக் குடிக்க, அந்தக் குற்றத்தாலுண்டாகும் நோய்கள் நீங்கிக் குணமுண்டாகும் என்பதாம்.

ஏ-ஈற்றசை



## 7. தாம்பிர பற்பம்

### தாம்பிர சுத்தி

சந்த விருத்தம்

தாம்பிர சுத்தி யாம்படி யுத்தி தருவாயே
தரணி யிலோங்கும் பெரியவர் சேர்த்த சபை பாராய்
தீங்கறு மெத்த நீங்கு மலைச்சலத் தெளிவாமே
செயுமுறை தான் கேள் பெரியமுளாங்கி சிறுபீளை
சேம்புபருத்தி நான்குமரைத்துச் சிறுநீராற்
சிறுகுட மீண்ட வுடனிரு நான்கு தினமூற
வேம்பொழு திற்பெய் மீண்டதை யட்டு மிதமோர்நாள்
விடமலநீங்கு மதுவது வாங்கு மிகையாமே. 203

(க-ரை) ஒரு சிறு பானையில் சிறுநீர் விட்டு, அதில் முள்ளங்கிக்கிழங்கு, சிறுபீளை, சேம்பு, பருத்தி இந்தநான்கையும் அரைத்துக் கலந்து, அதில் செம்பையிட்டு, எட்டு நாள் ஊற வைத்து, ஒன்பதாவது நாள் அடுப்பிலேற்றி எரித்து, அதில் விட்ட சிறுநீர் வறண்டபின், மறுபடியும் சிறுநீர் விட்டெரித்து இறக்கி, பத்தாவது நாளில், மறுபடியுங் கொஞ்சம் சிறு நீர் விட்டு ஊறவைத்தால், தாம்பிரம் சுத்தியாகும் என்பதாம்.

### தாம்பிர பற்பம் செய்தல்

திபதை

தாம்பிர பற்பந் தனதுமெய்ப் பெருமை
மேம்பட வுலகில் விளம்புகின் றேன்யான்
சீருணி தனைத்துகள் செய்தொரு தொடிக்குப்
பூருவ மாகிய பூதத்தின் முலைப்பால்
பலநாலு விட்டுநற் பஞ்சமி நாளே
நலமாக நித்தியமு நாட்டிலிவ் வளவே
ஆகிய பின்ன ராநிம்பச் சாற்றிலும்
பாகமாய் நித்யமும் பஞ்சமித் தினமே
பல்லிய மெழுப்பிவேர்ப் பசையுறு மெண்ணெயும்

சொல்லிய மூன்னிறைத் தொகையுறு நாள்களும்
புன்னைவித் தெண்ணையும் புகலுமுன் னிறைநாள்
வன்னமாங் காட்டா மணக்கெண்ணெய் தனிலும்
பண்டுபோ லாமிரு பத்தைந்து தினமும்
விண்டபின் காந்தியால் விண்டுவா மதனை
அவன்மரு மகணிற மாக்கு முபாயம்
இவரு நிலப்பனை யீகை முளாங்கி
மூன்னிரு செடிகளு முதலினி லெடுத்துப்
பின்னொரு முற்சாறு பிழிந்துவிட் டரைத்து
மூசைசெய் திதுவெயின் முன்னலா துலர்த்திப்
பேசுபின் னதுநீர் பிழிந்துசீ ருணிக்கும்
அறுபது நாழிகை யதையறிந் தரைத்துப்
பெறுமதை யுருட்டியோர் பில்லையா யுலர்த்தி
மூசையுள் வைத்து மொழிந்தகோ ரகையின்
ஏசில்வித் தெண்ணெ யிருப்புக் கரண்டி
தனில்விளக் கனலொரு சாம வரைக்கும்
தணியுற வதற்குச் சுறுக்குக் கொடுப்ப
தொருபலஞ் சீருணிக் கொருபல மவ்வெண்ணெய்
திருகுமதில் மூடிச் சீலைமண் செய்துபி
னினைவுட னேதின நிழலி லுலர்த்தி
தினமொரு மூன்றுமுச் சீலைமண் ணுடனே
யானபின னதனை யையாறு நாட்காலை
யானை முகனை யன்புடன் பணிந்து
இயற்கையா கியவல் லெருவொரு சதத்தால்
மயக்கமி லாப்புடம் வைத்தது தணிந்த
பின்னெடுத் ததைப்பார் பிடகர்தம் புகழ்போல்
வன்னமாய் விளங்கும் வரன்முறை யிதுவே. 205

(க-ரை) சுத்தி செய்த தாம்பிரப்பொடி ஒரு பலத்துக்கு நான்கு பலம் நாட்பட்ட ஆலம் விழுதுச் சாறுக 5-நாளும் விட்டு, பிறகு எலுமிச்சம் பழச்சாறு அப்படியே நாளொன்றுக்கு 4-பலம் வீதம் 5-நாள் விட்டு, பிறகு வட்டக் கிலுகிலுப்பைவேர்க் குழித்தைலலம் நாளொன்றுக்கு 4-பலம்



வீதம் 5-நாள் விட்டு, பிறகு புன்னைவிதைக் குழித்தைலம் நாள் 1-க்கு 4 பலம் வீதம் 5 நாள் விட்டு, பிறகு காட்டாமணக்கு விதைக் குழித்தைலம் நாள் 1-க்கு 4 பலம் வீதம் 5 நாள் விட்டு. ஆக 25 நாள் ஆனபின், அதைப் பார்த்தால் நீலநிறமாயிருக்கும். அதைப் பற்பஞ் செய்வது எப்படி யென்றால், அப்படியான தாம்பிரப் பொடியை முள்ளாங்கிச் சாற்றால் 60 நாழிகை யரைத்து, வில்லை செய்துலர்த்தி, அதை ஒரு இரும்புக் கரண்டியில் வைத்து, ஒரு பலமான அந்த வில்லைக்கு ஒரு பலம் கஞ்சாவிதைத் தைலம் விளக்கனலில் ஒரு சாமம் சுருக்குக் கொடுத்து வைத்துக் கொண்டு, பிறகு நிலப்பனங்கிழங்கும், ஈகைவேரும் ஆகிய இரண்டையும் முள்ளாங்கிச் சாற்றாலரைத்து மூசை செய்து, அந்த மூசையில் முன் வில்லையை வைத்து, மேல்மூசை மூடி, நாளொன்றுக்கு ஒரு சீலையாக மூன்று நாளைக்கு 3 மண்சீலை செய்து, தினமும் நிழலில் உலர்த்தி, 20-ஆவது நாள் காலை விநாயகரைப் பூசை செய்து, 100 வறட்டியில் புடமிட்டு, அது நன்றாய்த் தணிந்தபின் எடுத்துப் பார்த்தால், வெண்மையான பற்பமாம் என்பதாம்.

### தாம்பிர பற்பத்தால் தீருநோய்

#### கழிநெடில் விருத்தம்

இவ்வகை புரிந்த தாம்பிரப் பொடியி
னியற்கையை யின்சொல்வேன் பிசகி
னிடையருக் களிம்பாற் கொல்லுவ ததுவே
யெலுமிச்சை சுக்கினு லதுபோம்
வெவ்விய கபங்கால் பயித்தியங் கயமெய்
வெளுப்பொடு கறுப்பரு மேகம்
வெருவுமுன் வாதப் புரட்டினுல் முடிந்து
விடமித்த சந்தியா னதும்போம்
ஒவ்வுதேன் கிருதஞ் சருக்கரை யிளநீ
ரொன்றிரு வகைக்கநு பான

முளதிது வேனும் வெற்றிலை துளசி
யுத கமு முயர்பிணிக் கலமையுஞ்
செவ்விய வளவு கடுகினி லிரட்டி
தினமிரு பொழுதெனிற் றிலமே
சிந்தமீ னச்சங் கடிப்பகை காணந்
திலமிலை யறினல மிகுமே. 205

(க-ரை) இவ்வாறு செய்த தாம்பிர பற்பமானது முறை பிசகுமானல், அதை உண்கிறவர்களை மிக்க களிம்பாற் கொல்லும். அந்தக் குற்றம் எலுமிச்சந்தோல், சுக்கு இந்த இரண்டையும் கஷாயஞ் செய்து கொடுத்தால் தீரும். அந்த மருந்தைக் கபரோகத்திற்கும் வாதரோகத்திற்கும் தேனிலும், பித்தரோகத்திற்கும் க்ஷயரோகத்திற்கும் நெய்யிலும், சரீர வெளுப்பிற்கும் கருப்பிற்கும் சர்க்கரையிலும், நீங்காத மேக ரோகத்திற்கும் தோஷ சந்நிக்கும் இளநீரிலும் அநுபானித்து, ஒரு நாளைக்கு ஒரு வேளையானல் இரண்டு கடுகளவும், இரண்டு வேளையானல் எள்ளளவும் கொடுக்க வேண்டும். இன்னும் உயர்ந்த நோய்களுக்கு வெற்றிலைச் சாற்றிலும் துளசிச்சாற்றிலும் கொடுக்கலாம். புளி, மீன், அகத்திக்கீரை, கடுகு, கொள் எள் இவைகளைச் சேர்க்காமல் பத்தியமாயி ருந்தால், மிகவும் நன்மையுண்டாகும், என்பதாம்

### தாம்பிர பற்பத்தின் பத்தியம்

நடை விருத்தம்

புளியொன்று தவிரவெல்லாம் புசிக்கினு நவையுருதே
இளைபெரு நெருப்புக் கீரமில்லை யென்பது போலாகும்
அளைமுசர் லிகுசங் காடியா மலியடாது பாகற்
சுளையர மகட்பழ நெய்சுதை சருக்கரை மாநன்றே. 206

(க-ரை) புளி தவிர மற்ற அபத்திய வஸ்துக்களை யெல் லாம் புசிக்கலாம். அப்படிப் புசிப்பதால் பெருநெருப்பினிடத் தில் ஈரல் நில்லாததுபோல், தாம்பிர பற்பமாகிய பெரு நெருப்புக்கு அபத்திய வஸ்துக்களாலுண்டாகும் ஈரம் ஒன்றுஞ் செய்வதில்லையாம் ஆயினும், இதற்கு தயிர், எலுமிச்சம் பழம், காடி, நெல்லி இவைகள் ஆகா. பாகற் காய், பலாப்பழம், வாழைப்பழம், நெய், பால், சர்க்கரை இவைகள் ஆகும் என்பதாம்.



### தாம்பிர பற்பத்தின் அநுபானமும் நன்ருய் முடியாப் பற்பத்தின் தீமையும்

சந்த விருத்தம்

முசுமுசுக் கையிலை துளசிபத் திரிரச
மொழியிவை கலவை செய்ததில்
முனையெளிற் சிறிது புளியின்வித் தளவில்
முழுகவைத் ததையுண யிலவே
முதன்மிருத் தையடு மதையடக்க
பழுமுறியு மற்றதுவு முறியுமே
முதலறக் கிளைகளற லினப்பிணிகண்
முழுதுமிற்று விடுமிது மெய்யே 207

பிசகுபற்ப முறையெனின லத்தினெறி
பிறமு மச்சமிகு மிருமலே
பெருகுவிக்க லொடுதலை திருப்பிவரும்
பிரமை மிகுத்துவரு மறல்கள் வாய்
பெருகியக் குலருமுர மெரிச்ச லுறும்
பிளிரல் மெத்தவரு மிவைகடீர்
பெலமருத்து முறையுணர் மருத்துவர்கள்
பெலமுரைப் பரியதவர் செய்வார் 208

முசிவகற்று மதை நெளிவு பத்யவழி
முறைகொளப் பிணிகள் வதித்தல்போ
முளரியொத்த கடுபசி மிகுக்கவெரி
முடுகு மற்றவது தணியவே
முகிலெனக் கிருதமிழுது மப்படை
முதிய சர்க்கரைகள் தூரியாம்
முனையவற் பொறிபயறு கனித்திரள்கள்
முதலுணப் பரவுமுட லெலாம் 209

இசையரத்தை மிகுதசை யழுத்தமிகு
மெழில் விருத்தியுறு மொளிவுசே
ரிரணியத்தை நிகர்வண முனப்பரவு
மிசைவு நித்யமக லதிசமா
மினியுரைப் பதிலையதன் மகத்துவ
மகியிடை மருத்துவர்க ளறியவே
இரகசியப் பொருளை வழுவறச்
சொலுவ ரெவரு மச்சமிலை சரதமே. 210

முசுமுசுக்கை யிலையின் இரசம், துளசி இலையின் இரசம் இவைகள் கலந்ததில், ஒரு புளியங்கொட்டை அளவு எடுத்துக்கொண்டு, அதில் எள்ளின் மூக்களவு தாம்பிர பற்பத்தைக் கலந்து உண்ண, சாவைத் தடுத்து, அதற்குக் காரணமாயிருக்கின்ற கபம் நீங்கி, அதற்குத் துணையாயுள்ள மற்ற நோய்களும் தீரும்.

நன்முக முடியாத பற்பத்தைக் கொடுத்தால், வயிற்றெரிவு, மார்பில் பயம், இருமல், மிகுவிக்கல், தலை திருப்பல், பிரமை, வாய்நீர் சுரத்தல், தொண்டை உலரல், மார்பு எரிச்சல், பிதற்றல், அதிபசி, உயிர் நீங்கல் என்னும் குறி குணங்கள் உண்டாகும். தீக்குணங்களில் முதன்மையான அதிகப் பசியைப் போக்க நெய், வெண்ணெய், அப்பம், அடை, சர்க்கரை, பூரி, அவல், பொரி, பயறு, பழவகைகள் ஆகிய இவைகளைக் கொண்டு செய்த உணவாதிகளைக் கொடுக்கலாம். இதனால், இரத்தம் பெருகி, தசை அழுந்தி, அழகுடன் உடலுக்கு ஒளி உண்டாகும். உடல் பொன்னிற மடையும்.

## 8. அயபற்பம் (வேறு)

"இந்திரனிலவனச் சாரலிலேயடுத்தே
யிருப்பான் வேளையிலே பாவகமுனி
தந்திரு வருளாலே யிருபது நாளையிலே
சதுர்வித வோமப் புகையாலே பற்பமென்கிற
சந்திராத் திரந்தன்னைத் தருமன்பெற் றுன்பின்னும்" 211



(கருத்து) மருத நிலத்துண்டாகும் சித்திர மூலயிலைச் சாற்றைக் கொண்டு, நான்கு புடமிட அயம் பற்பமாகும்.

### வேறு முறை

ஒரு பலம் சுத்தித்த அயப்பொடிக்கு, வெள்ளைக்கொடிவேலி இலைச்சாறு 6 பலம் விட்டு அரைப்பதற்கு, முதல் நாள் இரவே ஊறவைத்துச் சாறுமுற்றும் சுவரும் வரை பகல் எல்லாம் அரைத்து, பிறகு வில்லை செய்து, இரவில் பனியில் வைத்து, பகலெல்லாம் 6 பலம் சாறுவிட்டு அரைத்து வில்லை கட்டிப் பனியில் வைக்கவும். மீண்டும் இவ்வாறே இரண்டு நாள் செய்யவும். ஐந்தாம் நாள் காலை சீலைசெய்து உலர்த்தி 40 வறட்டியில் புடமிடவும். இவ்வாறே மீண்டும் மூன்று முறை செய்யவும். ஒவ்வொரு புடத்திற்கும் பத்துப் பத்து வறட்டி குறைத்துக்கொண்டே வரவும், அயம் பற்பமாகும்.

## 9. கல்நாரு பற்பம்

பிழைப்பதற்குக் கல்நாரின் பற்பஞ் சொல்வேன்
பொல்லாத கல்நாரை நீற்று வாரார்
உழைப்பதற்குக் கல்நாரைச் சேர்தான் வாங்கி
யுத்தமனேபசுவினிட நீரிற்போட்டே
பழைக்கசடு தானகலப் பத்து நாள்தான்
பழைப்பகற்றி ஆடுதின்னுப் பாலை தன்னில்
பாங்காகக் கசபுடந்தான் போடு போடே
போட்டபின் பாறவிட் டெடுத்துப் பாராய்
பொல்லாத கல்நாரும் தவளம் போலாம். 212

ஒரு சேர் கல்நாரை ஒரு பாத்திரத்தில் போட்டு, முழுகும்படி பசு மூத்திரத்தை ஊற்றி ஊறவைக்கவும். இவ்வாறு 10-நாள் செய்யக் கல்நார் சுத்தியாகும். மூத்திரத்தைத் தினம் புதிதாக மாற்றவும். ஆடு தின்னுப்பாலை கற்கத்தில் சுத்தித்த கல்நாரை நடுவில் வைத்து, கஜபுடமிட்டு, ஆறவிட்டு எடுக்க வெண்மை நிறமான பற்பமாகும்.

(குறிப்பு) கற்கம் மருந்து எடைக்கு 4 பங்கு இருத்தல் வேண்டும்.

## 10. சிலாசத்து பற்பம்

கேளப்பா சிலாசத்து யார்தான் காண்பார்
கிருபையுள்ள கர்ப்பூர சத்து வாங்கி
நாளப்பா சுத்திசெய்து கல்வத் திட்டு
நன்மைசிறு செருப்படியின் சாற்ரு லாட்டிக்
கேளப்பா லேசாக வில்லை செய்து
குணமாகக் காயவைத்தே யோட்டில் வைத்துத்
தாளப்பா சீலைமண் பலமாய்ச் செய்து
தன்மையுடன் ஐம்பதெருப் புடத்திற் போடே 213

போட்டுமே ஆறவிட்டு முன்போற் போடு
புண்ணியனே மூன்றுவிசை யரைத்துப் போடு
நாட்டுமே வெண்மையாய்ப் பற்ப மாகும்
நன்மையுடன் மேலெரிவு பித்த வெட்டை
பாட்டுமே பசுவெண்ணெய் தன்னி லீயக்
கனமான நீர்க்கடுப்புங் காணு தோடும்
காட்டுமே பத்தியங்க ளுண்டோ இல்லை
பாலகனே பற்பமுறை பரிந்து பாரே. 214

வேண்டியவளவு சிலாசத்தை எடுத்துச் சுத்தித்து, கல்வத் திட்டுப் பொடித்து, சிறு செருப்படியின் சாற்ருல் நன்ருக அரைத்து, சிறுசிறு வில்லைகளாகச் செய்து காயவைத்து, ஓட்டிலிட்டுச் சீலைசெய்து காயவைத்து, 50 வறட்டியில் புடம் போடவும். இவ்வாறு மும்முறை செய்யப் பற்பமாகும். இதை நோயளவு அறிந்து மருந்தை வெண்ணெயில் கொடுக்க, உடல் எரிவு, பித்தவெட்டை, நீர்க்கடுப்புத் தீரும். பத்தியம் இல்லை.

(குறிப்பு) வறட்டியின் எண் 50 எனக்கூறி மருந்தளவு கூருமையினுல், வறட்டியின் அளவைக்கொண்டு மருந்தாகிய சிலாசத்தின் அளவை 10 பலம் என்று கொள்ளலாம்.



## 11. முத்து பற்பம்

நித்திலவி பூதியிது நித்திலவி பூதி
நிற்சலவி பூதியுட னித்தியவி பூதி
நித்திலம தோர்தொடி நிறுத்ததிலி ரட்டி
நிர்க்குண்டி ரசமளவ நிற்பதிரு நாளே

நிரைத்ததை யரைத்திலை மினிற்படிவ மாக்கி
நின்றபுட மொன்றுபுரி நின்றதை யெடுத்து
நிலைப்பனை ரசத்தினும் நிறைப்படி முன்ருக
நிரைநிரை யியற்றிவரு நித்தில பருப்பம்

நிறைப்படி யுரைப்படி நினைத்தடலை தன்னை
நிகழ்த்துமற லிற்கொள நிசிப்படலை மாறும்
நிறைச்சுதை யினிற்றின நிற்கனலி வாங்கும்
நிலத்துளசி யிற்றினமு ணிர்ப்பந்த வலிபோம்

நிருவிட மதிற்பருக நித்திரை மருட்போம்
நிலவிளா வறலிலுண நிகழ்பித்த மிவைபோம்
நிர்க்குண்டி நீரிலுண நிட்டூர வளிபோம்
நிலமான கத்தி நிலையாது வாய்வு

நிமலபத் திரியிலுண நிற்குமதி சாரம்
நிலவுமைத் ததியிலுண நிவப்புவளி விடுமே
நிகழிக்கி லுண்ணவறு நிர்ப்பந்த வனிலம்
நிறைவிசய மதனிலுண நிபவாந்தி நலிபோம்
நிறையாச்சி யத்திலுண நித்தவனல் வினைபோம்

நிகழ்வெண்ணெய் தனிலுண்ண நிலையாது மூலம்
நிசப்பட மொழிந்ததிதை நித்தியம தாக
நிறுத்துவர் மருத்துவர் நிலத்தின்மிசை தானே
நிடதமிது லேசரூப நிடதமிது தானே! 215

ஒரு பலம் சுத்தித்த முத்துக்கு 1 பலம் நொச்சிச்சாறு விட்டு 2 நாள் ஊறவிட்டு, நன்ருக இரண்டுநாள் அரைத்து, இலைபோன்ற மெல்லிய வில்லைகளாக்கி உலர்த்திச் சில்லிட்டுச் சீலைசெய்து, 20 வறட்டியில் புடமிடவும். பிறகு நிலப்

பனங் கிழங்கின் சாற்றினால் மேற்படியாகவே அரைத்து 10 வறட்டியில் புடமிடப் பற்பமாகும். இதனை அளவுப்படி தண்ணீரில் கொடுக்க மாலைக்கண் போம். பாலில் கொள்ள விடாக் காய்ச்சல் போம். நிலத்துளசிச் சாற்றில் கொள்ள சர்வாங்க வலிபோம். நிருவிஷத்திற் கொள்ளத் தூக்கத்தில் உண்டாகும் பிரமைபோம். நிலவிளா இரசத்தில் கொள்ளப் பித்தம் போம். நொச்சிச் சாற்றில் கொடுக்க மிக்க வலியைக் கொடுக்கக் கூடிய வலி போம். அகத்திச் சாற்றிலுண்ண வாய்வு தீரும். வில்வஇலைச் சாற்றில் கொடுக்க அதிசாரம் போம். ஆட்டுத்தயிரி லுண்ண மிக்க வாய்வு தீரும். கரும்பு ரசத்தில் கொள்ளத் துன்புறுத்துகின்ற வாய்வுகள் தீரும், சர்க்கரையிலுண்ண வாந்தியும் அதனாலுண்டாகும் நோக்காடும் தீரும். பாலிலுண்ண உட்காய்ச்சல் தீரும். வெண்ணெயிலுண்ண மூலந் தீரும்.

## 12. வெள்ளி பற்பம்

செய்யவே யின்னமொரு பற்பங் கேளு
செயமான ஊதுகட்டி வெள்ளி தன்னைத்
துய்யமாய்க் குகையிலிட்டு உருகும் போது
துரையான வெள்ளியெடை மகிழம்பூச் சாறு
ஐயனே இரண்டு எடை விட்டுருக்க
அப்பனே வெள்ளியது மடிந்து போகும்
பொய்யல்ல வப்பொடியை முன்சாற் றாலே
புகழாக வரைத்து வில்லை உலர்த்திக் கேளே. 216

உலர்த்தியதோர் வில்லைக்குக் கவசங் கேளு
உண்மையுடன் முட்காவேளை வேரைத் தானும்
பிலக்கவதை முன்னீரா லரைத்துக் கட்டிப்
பிரியமுடன் குகையிலிட்டுச் சில்லு மூடி
உலர்த்தி நன்றாய் மண்சீலை வலுவாய்ச் செய்து
உள்ளபடி நூறெருவிற் புடத்தைப் போடு



பெலத்ததோ ரசிதமென்ற வெள்ளி பற்பம்
பெருமையுள்ள வெண்ணெயிலே கொடுத்துப் பாரே. 217

கொடுத்துமிகப் பார்க்கையிலே தீரும் நோய்கள்
குணமில்லாக் காசமோ டிரத்த காசம்
அடுத்துநின்ற மேகசயம் மந்தார காசம்
அப்பனே திப்பிலியி லகலுஞ் சொன்னோம்
தொடுத்துமிகப் புளிபுகையுந் தவிர்க்க வேண்டும்
சுயமாக வேளைக்குப் பணவெடையிற் பாதி
கடுத்துநின்ற பவுத்திரமு மூலஞ் சூலை
காணும லோடுமடா கண்டு பாரே. 218

ஒரு பலம் சொக்கவெள்ளியைக் குகையிலிட்டு, உருகும் பொழுது இரண்டு பலம் மகிழம்பூச்சாறு விட்டு உருக்க, வெள்ளி மடிந்து போகும். மடிந்த வெள்ளிப் பொடியைக் கல்வத்திலிட்டு, மேற்படி சாற்றால் நன்றாக அரைத்து வில்லை தட்டி உலர்த்தவும். முட்காவேளை வேரை மகிழம்பூச்சாற்றால் அரைத்துக் கற்கமாக்கி, வில்லையை நடுவில் வைத்து, ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 100 எருவில் புடம்போட வெள்ளி பற்பமாகும்.

குன்றியளவு பற்பத்தை வெண்ணெயிலே கொடுக்க இரத்தகாசம், காசம், மேகம் தீரும். திப்பிலிச் சூரணத்திலே கொடுக்கச் சயம், மந்தாரகாசம் தீரும். மேலும் பொருத்தமுள்ள அநுபானங்களில் கொடுக்கப் பவுத்திரம், நோயுடன் கூடிய மூலம் தீரும்.

(பத்தியம்: புளி, புகையிலை நீக்கவும்)

(குறிப்பு) அளவு அரைப் பணவெடை என்று கூறியிருப்பினும், தற்கால மக்கள் உடல் வன்மைக்குத் தக்கவாறு, ஒரு குன்றியளவு என்று கூறினோம்.

## 13. சாதிலிங்க பற்பம்

சாதிலிங்க மீதுசங்க நீரதிற்று வைத்ததை
வாதுகொண்ட பானைஇரண் டடுக்கியே யெரித்திடு
நீறுகொண்ட சங்கநீரி லேயரை யெரியனல்
கூறுகொண்டு கீழுமே யிருந்திடு மதை
ஆட்டுசங்க நீரிலே யரைத்தெரியோ ரைந்தரம்
நீட்டுகீழ்க் கடமதில் நிலைத்துநீற தாய்விடும்
சாதிவெல்ல மீதிலே பணவெடை யிரண்டுகாண்
பேதிசூசி சோகைமாலை பாண்டுடன் மகோதரம்
அட்டகுன்ம வாயுவுதர வாய்வுநாபி சூலைகள்
கட்டுநீர் மலமடைப்பு கிராணிமூல மாசுரம்
ஓதியநடுக் கொடுக்கு முற்றமேக வாய்வுடன்
வாததோட சந்நிமா கிரந்திமா முடக்கலும்
அண்டவாய்வு மூலவாய்வு தானறும் மகாரச
சண்டபற்ப மீதிட ப்ரசண்ட நோய்க ளோடுமே. 219

குறிப்பு:—சங்கநீரைத் தனியாகக் கூறப்படும்.

சாதி இலிங்கத்தைச் சங்கத் திராவகத்தால் அரைத்து, வில்லைகட்டிக் காயவைத்து, அடிகனத்த மட்சட்டியிலிட்டு, வாய் பொருத்தமான மற்றொரு சட்டியால்மூடி, ஏழு சீலை வன்மையாய்ச் செய்து எரிக்க, பதங்கம் ஏறும். மறுபடியும் அப்பதங்கத்தை ஷை சங்கநீரால் அரைத்து முன் போலவே எரிக்கவேண்டும். பதங்கம் மேல் ஏறுமல் அடிச்சட்டியில் தங்கி நிற்கும்வரை எரித்து எடுத்த பற்பத்திற்கு சண்டரச பற்பம் என்று பெயர்.

''இலிங்கத்தைத் திராவத்திற் தோய்த்து எரிக்க'' என்று நூலில் கூறி யிருப்பினும், செய்பாக முறைப்படி திராவகத்தில் அரைத்து எரிப்பதே சிறந்தமுறை என்றும், ஐந்துமுறை எரித்தலே போதுமெனக் கூறியிருப்பினும், பதங்கம் ஏறுவரையில் எரிக்கவேண்டு மெனவும் கூறினாராயிற்று. அளவு பண வெடை ½ எனக் கூறியிருப்பினும், இக்கால மக்கள் உடல நிலை கருதி, கடுகளவு கொடுப்பதே சாலச் சிறப்புடையது.



பனை வெல்லத்தில் கடுகளவு கொடுக்கச் சூதிகாவாதம், சோபை, காமாலை, பாண்டு, மகோதரம், எண்வகை குன்மங்கள், வாய்வு, உதரவாய்வு, நாபிசூலை, நீர் அடைப்பு, மலவடைப்பு, கிராணி, மூலம், பெருங்காய்ச்சல், காய்ச்சலுடன் கூடிய நடுக்கல், கீல்களை முடக்கச் செய்கின்ற மேகவாய்வு, தோஷச்சன்னி, சன்னிதோஷம், மூலவாய்வு, அண்டவாய்வு கிரந்தி இவைகள் தீரும்.

## 14. சண்டரச பற்பம்

இரசத்தை வேண்டிய அளவு எடுத்து வெடியுப்புத் திராவகத்தால் அரைத்து, வில்லைதட்டிக் காயவைத்து, மூன்று பங்கு உப்பும் ஒரு பங்கு செங்கல் தூளும் கலந்ததில், பாதியை ஒரு சட்டியில் கொட்டி, அதற்குமேல் வில்லையை வைத்து மேல் சட்டி மூடிச் சீலைசெய்து, முத்தீயாக 12-மணி நேரம் எரிக்கவும். இது ஆறினபின், மேல்சட்டியில் படிந்துள்ள பதங்கத்தை எடுத்து, ஷை திராவகத்தை விட்டு, முன் போல அரைத்து வில்லைசெய்து எரிக்கவும். இதுவே சண்டரசபற்பம். கால்முதல் அரை அரிசி அளவுவரை தக்க அனுபானத்தில் கொடுக்க, மேகம், மேகவிரணம், குன்மம், சூலை, குட்டம், கபநோய்கள், சந்நிபாத சுரங்கள், வாதரோகங்கள் தீரும். அநுபானமறிந்து அநேக நோய்களுக்கும் கொடுக்கலாம். கடும் பத்தியம் வைக்கவும்,

## 15. சூத பற்பம்

பார்புக ழினியொரு சேரெடு சுத்திசெய்
நீரழ லுப்பொடு செங்கலி லிட்டதை
மேலிடு கடமெரி சுடுதழல் தனிலெடு
சாலிடு நீறினை யேசரி நிறையே
எடுவிடு சங்கநீ ரதிலரை ரவியில்வை
கடுமதி நிறமது காசரை யிருகால்
நீர்தனி விடுநா ளேழதில் வெகுரணம்

வேர்கெடும் ரணசூலைகள்வெடி சூலைகள்
திண்படு வரிகிரந் திகள்பல வகைசேர்
புண்படு ரணவிப் புருதிகள் பிளவைகள்
வாதம் படுவ னருமரை யாப்பு
மத மிரண மேக முதிர
வாயுவுக ணெஞ்சடை வலிரணம் வயிற்றுநோய்
தேயுந் துடைரணம் சிராவண முதலாம்
ரணமதில் வருமறு நூற்றுக் கும்வெகு
குணமிகு பாத ரசமதை யுள்ளிடக்
களிகடு கருவேல் கருநெலி நாவல்
வளிதீ யெரிநீர் வைத்திடு கொப்புளி
வாய்வேக மதுவிடும் வைத்திடு வறுகும்
காய்நீர் மிளகுட னிட்டிடு வெண்ணெயை
அதிலிடு குதிரச வீறது அடிபடும்
அதிகுண பாத ரசபற்ப மதற்கே. 220

செங்கல் தூளையும், உப்பையும் சரியளவாக எடுத்துக் கலந்து ஒரு சட்டியில் பாதி இருக்கும்படி கொட்டி அழுத்தி, அதன்மீது நடுவில் பள்ளம் செய்து, ஒருசேர் இரசத்தை ஊற்றி மேலும் செங்கல் உப்புத்தூளால் மூடி, வாய் பொறுத்தமான மற்றொரு சட்டியால் மூடி, பொருத்து வாய்க்கு வன்மையாகச் சீலை மண்செய்து எரிக்க, மேற்சட்டியில் பதங்கம் ஏறி இருக்கும். அப்பதங்கத்தை சங்கத் திராவகம் விட்டரைத்து,வெய்யிலில் வைக்கப் பூத்துப் பற்பமாகும். இதனை அரிசியளவு, வெல்லத்தில், நாளுக்கு ஒரு வேளையாக மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழுநாட்கள் கொடுக்க விரணம், இரணசூலை, வெடிசூலை, அரிகிரந்தி, விப்புருதி, பிளவை, வாதம், படுவன், அரையாப்பு, இரணமேகம், நெஞ்சடைப்பு, வலிப்பு, வயிற்றுநோய், தொடையிரணம், சிராவணம், முதலிய விரணங்கள் தீரும். மருந்தின் வேகம் அடங்கக் களிப்பாக்கு, கடுக்காய், கருவேலம்பட்டை, நெல்லிப் பட்டை, நாவல்பட்டை இவைகளின் குடிநீரால் வாய் கொப்பளித்து, அறுகு வேர்க்கட்டை மிளகு சேர்ந்த குடிநீரில் வெண்ணெய் சேர்த்துண்ண இரசத்தின் வீறு தணியும்.



## 16. நவநீத பற்பம்

ஐய விபூதி யவிரி கிலுகிலுப்பை
யைய விபூதி யறமிரட்டி—யையவி
யேகமட்ட மீன மிரட்டை துலாந்தனுவோ
யேகமட்ட மீனவனி யில் 221

சுத்தித்த ரசத்தை, (1) நீலி இலைச்சாறு, (2) வட்டக்கிலுகிலுப்பைச்சாறு, (3) சீந்திலிலைச்சாறு. (4) குப்பைமேனிச் சாறு, இவ் ஒவ்வொரு சாற்றிலும் முறையே எட்டெட்டு நாளரைத்து, எட்டெட்டு நாளுலர்த்தி, எட்டு வறட்டியில் தனித்தனிப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அளவு:—ஒன்று முதல் எட்டுக் கடுகு.

வாதமேகத்திற்கு தேனிலும், பித்தமேகத்திற்கு பனித் தண்ணீரிலும், சேத்தும மேகத்திற்குச் சருக்கரையிலும், வாதசுரத்திற்குக் குளிர்ந்த நீரிலும், பித்தசுரத்திற்குக் கள்ளிலும், சேத்தும சுரத்திற்குச் சீந்திலிலைச் சாற்றிலும், வாத பித்த கபகுன்மங்களுக்கு முறையே விளாம்பட்டைச்சாறு, தேங்காய்ப்பால், முலைப்பாலிலும், வாத-பித்த-கப மூலங்களுக்கு முறையே வெங்காயச்சாறு, கற்றாழைச்சாறு, கஞ்சாச்சாற்றிலும் கொடுக்க நிவாரணமாகும்.

## 17. தாளக பற்பம்

உண்மையுட னின்னமொரு வித்தைகேளு
உறுதியுள்ள தாளகத்தின் பற்பஞ் சொல்வேன்
நன்மையுடன் வெடியுப்பும் புளியு மொன்றாய்
நட்டமுடன் ருனிடித்து வட்டுப்போல
வெண்மையுடன் ஓட்டிலிட்டு வாசல் தன்னில்
விதமாக வடுப்பிட்டு அனலை மூட்டித்
தண்மையுட னோட்டையனல் மீதில் வைத்துத்
தானெடுத்து நின்றுமெள்ளப் பார்த்தாற் கேளே 222

பார்த்தாலே யனற்சூடு முறைக்கும் போது
பாங்கான வெடியுப்புப் பற்றிப் போகும்
காத்தாலே வில்லையது கருத்துக் காணும்
கனமாகப் பொடிசெய்து பீங்கானி விட்டு
வேத்தாலே குழி வெட்டி வைத்து மூடி
விதமாக மேல்மூடிக் காற்று டாமல்
பார்த்தாலே மூன்றுநாட் கழிவு கண்டு
பாலகனே யொருபக்கந் தண்ணீ ராமே. 223

தண்ணீரா மந்நீரைச் செந்நீரென் பார்
தண்மையுட னுடோறு மெடுத்துக் குப்பி
அந்நீரை யடைத்துவைத்துக் கொண்டு நீயும்
அப்பனே தாளகத்தை வைத்து வாட்டு
பொன்னீர்போற் கரியோட்டிற் கருக வாட்டு
புண்ணியனே நவக்கிரகஞ் சிவந்து காணும்
முன்னீரை விட்டுமே யரைத்துக் கொண்டு
மிஞ்சாமல் இலேசாக வில்லை கட்டே. 224

கட்டியே ரவிதனிலே காய வைத்துக்
கனமில்லா வகலிலே சிப்பிச் சுண்ணம்
இட்டுமே கீழ்மேலாய் வில்லை வைத்தங்
கென்மகனே மண்சீலை யேழுஞ் செய்து
பட்டுமே பத்தெருவிற் புடத்தைப் போடு
பாலகனே புடமாறி யெடுத்துப் பாரு
நட்டமே வாராது தவளம் போலாம்
நன்மையுட னன்னீரா லரைத்துப் போடே. 225

போடப்பா முன்போலச் சீலை செய்து
புனிதமுடன் பதினைந்தா மெருவிற் றுனும்
நாட்டப்பா புடம்போடப் பற்ப மாகும்
நன்மையதாய் வெளுக்காட்டால் முன்போ லாட்டிக்
கூட்டப்பா இருபதெரு தன்னிற் போட்டால்
குருவான தாளகமும் பற்ப மாகும்
பாட்டப்பா பற்பத்தைப் பணவெல் லத்தில்
பாங்காகப் பணவெடைகால் பருகக் கேளே. 226



பருகவே பித்தசுரம் பித்த வெட்டை
பாங்கான பித்தகயம் பித்த காசம்
தருகவே மாட்டாது மந்த காசம்
தன்மையுள்ள ஈளைவலி மேக ரோசம்
வருகவே மாட்டா தங்குப்பா காது
மண்டலங்கால் கொண்டுவிடு மார்க்க மாக
உருகவே வாதமென்று மலைத் திடாதே
உண்மையுடன் நோய் தீர்ந்தால் வாத மாமே. 227

வாதமென்ற ரசவாத மூலகத் தோர்க்கு
வாயாதே யாசையென்ற வஞ்ச கத்தால்
போதமென்ற சிவயோகம் பெற்ற பேர்க்குப்
பூதலத்தி லாசையில்லை வாதங் கிட்டும்
வேதமென்ற வேதவாக் கியமி தாகும்
விருதாவில் வாதமென்றால் விழலாய்ப் போகும்
பாதமென்ற பாதமதை யறிந்தால் முத்திப்
பாதைவழி மார்க்கமதைப் பகரக் கேளே: 228

ஏழாங் காய்ச்சல் வெடியுப்பும், கோதுகொட்டை நீக்கிய பழைய புளியும் சம அளவு எடுத்து, நன்றாக உறவாகும்படி கலந்து இடித்து அரைத்து, ஒரு பலகையின்மீது தட்டிச் சதுரத்துண்டுகளாக அறுத்து, வெய்யிலில் காயவைத்து, அடுப்பின்மீது ஒரு கனத்த ஓட்டை வைத்து, அதில் இட எரியும்; பிறகு சாம்பலாகும். இதை ஒரு பீங்கானில் இட்டு, மேல் மூடி, மண்ணில் 3 நாள் புதைத்துவைக்கச் செய்நீர் பிறக்கும். அதை வடித்துக்கொண்டு, தினம் புதைத்துவைக்கச் செய்நீர் பிறக்கும். அதைச் சேகரித்துக்கொள்ளவும். செய்நீர் வரும்வரை புதைத்து வைக்கவும்.

இச் செய்நீரைக்கொண்டு தாளக் கட்டிக்குச் சுருக்கு கொடுத்து, அச் செய்நீரினாலே நன்றாக அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து, ஒரு அகலிலே சிப்பிச்சுண்ணம் பாதி இருக்கும்படி கொட்டி, அதன்மீது வில்லையை வைத்து, மேலும் சிப்பிச்சுண்ணத்தால் மூடி, மற்றோர் அகலினால் மூடி,

7 சீலை செய்து காயவைத்து, 10 எருவில் புடம் போடவும். இவ்வாருகவே மேலும் இருமுறை புடமிடவும். இரண்டாம் முறை 15 எருவையும், மூன்ரும் முறை 21 எருவையும் பயன்படுத்த வேண்டும். தாளகம் வெண்மை நிறப் பற்பமாகும்.

பனை வெல்லத்தில் ¼ முதல் ½ குன்றியளவு கொடுக்கப் பித்தசுரம், பித்தவெட்டை, பித்தக்ஷயம், பித்தகாசம், மந்தாரகாசம், ஈளை, வலி, மேகரோகம் இவைகள் 10 நாள் கொள்ளத் தீரும். பத்தியம்: உப்பு ஆகாது.

## 18. பஞ்சலவண பற்பம்.

இந்துப்புப்பல மொன்றிடு கல்லுப்போவொன் றரையாகும்
பந்தூமத்தைக் கள்ளிப்பால் மேனியரக்கன் நாலாகும்
தந்தனைவிட்டரை வெவ்வேறு வில்லைசெய் தானேபுடமாக்க
தொந்தனைநீறிது பணவிடை கொள்குன்மம தோடிவிடும்
எந்தவகைக்குள வாயுகளோடிடு மிதுவே சத்தியமாம்
ஐந்தெனு முப்பதை யிப்படியேயரை பற்பம
தாய்விடுமே. 229

இந்துப்பு 1 பலம், கல்லுப்பு 1½ பலம், இவைகளைக் கல்வத்திலிட்டு ஊமத்தை இரசம், கள்ளிப்பால், குப்பைமேனிச்சாறு, எருக்கன்சாறு இவைகளில் முறையே தனித்தனியே அரைத்து வில்லைசெய்து காயவைத்து, ஓட்டிலிட்டுச் சீலைசெய்து புடமிடப் பற்பமாகும். இதனை 1 முதல் 2 குன்றியளவு தக்க அநுபானத்தில்கொள்ள குன்மம், வாய்வு தீரும். இவ்விதமாகவே ஐந்துப்பையும் புடமிடப் பற்பமாகும்.

## 19. பேரண்ட பற்பம்

தானென்ற பிரமையது கொண்ட பேர்க்குத்
தயவாக மருந்தொன்று சொல்லக் கேளு
கோனென்ற போகருட கடாட்சத் தாலே
குணமாகப் புலிப்பாணி விளக்கஞ் செய்தேன்



ஊனென்ற கபாலத்தை எடுத்து வந்து
உத்தமனே எலுமிச்சம் பழச்சாற் ருலே
நானென்ற சினமதைப் பொடித்துப் போட்டு
நலமான கல்வத்தி லரைத்தி டாயே, 230

அரைத்தெடுத்து வில்லைதட்டி யுலரப் போட்டு
அடவாகப் புடம்போட்டு எடுத்துக் கேளு
விரைத்தவுடன் பொடியாக்கிப் பதனம் பண்ணி
விதமாக விராகனெடை கொடுக்கக் கேளு
உரைத்தவுடன் கத்தபத்தின் பாலை யப்பா
உறவாகத் துட்டெடைதான் இரண்டே யாகும்
குரைத்தவுட னிஞ்சிச்சாற தனிற்பாதி
குணமாக விதுநேர்சர்க் கரையுங் கூட்டே. 231

கூட்டப்பா ஈராறு நாளே கொள்ள
குணமாக அந்திசந்தி யிந்தப் பாகம்
ஆட்டப்பா நசியமது தும்பைச் சாறு
அடைவாகத் தான்விட்டுச் சொல்லக் கேளு
சூட்டப்பா பேய்ப்பீர்க்குப் பேய்மி ரட்டி
சுகமான பேய்ப்புடலும் பேய்க்கு மட்டி
நாட்டப்பா பேயத்திப் பேயாந் தும்பை
நலமான எலுமிச்சப் பழமு மாமே, 232

ஆமேநீ யிச்சாற்றைத் தேய்த்துத் தேய்த்து
அடைவாக நூறுகுடஞ் சலத்தை வாரு
தாமேநீ யீருறு நாள்தான் வாரு
தயவாகப் பத்தியந்தான் சொல்லக் கேளு
வாமேநீ பச்சரிசி பருப்பி னேடு
வளமாகத் தான்கொடுப்பா யுப்பா காது
ஆமேநீ தேவரோடு பிரமை பித்தம்
அடைவான வஞ்சனையுந் தீருந் தானே. 233

மண்டையோடு சுத்தித்ததைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, படிகாரத்தூள் கலந்த எலுமிச்சம் பழச்சாற்ருல் அரைத்து, வில்லைதட்டிக் காயவைத்து, பின்பு ஓட்டிலிட்டுச்

சீலைசெய்து புடமிடப் பற்பமாகும். இரண்டு காலணா எடை கழுதைப்பாலும், ஒரு காலணா எடை இஞ்சிச்சாறும், 3 காலணா எடை சர்க்கரையும் சேர்ந்த கலவையில், 2 முதல் 4 குன்றுமணி அளவு மேற்படி பற்பத்தைக் காலை மாலை 12 நாட்கள் கொள்ளவும். இத்துடன் தும்பைச்சாறு நசியமும், பேய்ப்பீர்க்கஞ்சாறு, பேய்மிரட்டிச்சாறு, பேய்ப்புடலைச் சாறு, பேய்க்குமட்டிச்சாறு, பேயத்திச்சாறு, பேய்த்தும்பைச் சாறு, எலுமிச்சம்பழச்சாறு இவைகளைக் கலந்து 12 நாள் தலையில் தேய்த்து, ஒவ்வொரு நாளும் 100 குடம் தண்ணீரைத் தலையில் ஊற்றவும் பத்தியம்-பச்சை அரிசி, பச்சைப்பயிறு இரண்டும் சேர்ந்த உப்பு நீக்கிய கஞ்சி. பிரமை, பித்தம் இவைகள் தீரும்.

## 20. பேரண்ட பற்பம் (வேறு)

பாடினேன் நாய்மண்டை மாட்டு மண்டை
பாங்கான மனுஷருட மண்டை யோடு
நாடியே சரியெடையாய்க் கல்வத் திட்டு
நலமான கழுதைப்பால் தன்னா லாட்டி
ஆடியே மைபோலே வழித்தெ டுத்து
அடைவாக வில்லைதட்டி யுலரப் போட்டுத்
தேடியே குக்குடத்திற் புடத்தைப் போடு
தெளிவாகப் பற்பமது தவளமாச்சே. 234

ஆச் ப்பா கழுதைப்பால் துட்டெடைதா னிரண்டு
அடைவான இஞ்சிச்சாறு துட்டெடைதான் விட்டு
வாச்சப்பா சர்க்கரைதுட் டெடைதான் போட்டு
வளமான பற்பமது கழஞ்சு கூட்டி
யேச்சப்பா கொடுத்துவிடு ஈராறு வேளை
யெழுந்தபித்த பயித்தியமும் பிரமை யேவல்
போச்சப்பா தேவதைக ளுக்கோ வீடு
புதைபில்லி வைப்புமுதல் தீருந் தானே. 235

சுத்தித்த நாய் மண்டை, மாட்டு மண்டை, மனிதன் தலை ஓடு இம்மூன்றும் சரியெடையாகக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கழுதைப் பாலால் நன்றாக அரைத்து, வில்லை தட்டிக் காயவைத்து, ஓட்டிலிட்டுச் சீலை செய்து புடமிட வெண்மையான பற்பமாகும். கழுதைப்பால் காலணா எடை 2, இஞ்சிச்சாறு காலணா எடை 1, சர்க்கரை காலணா எடை 1, ஆகச் சேர்ந்த கலவையில், மேற்படிப் பற்பம் 2 முதல் 4 குன்றிமணியளவு கூட்டி 12 வேளை கொடுக்க, பித்தம். பயித்தியம், பிரமை, ஏவல், பில்லி, வைப்பு முதலியன தீரும்.



## 21. நாக பற்பம்

கூறவே நாகபற்பஞ் சொல்லக் கேளு
குலவியதோர் நாகமொரு கட்டி வாங்கி
ஆறவே அயக்கரண் டிக் குள்ளே யிட்டு
அடுப்பேற்றிக் கரிசாலைச் சாறு நாழி
வீறுடனே நாற்சாமம் சுருக்குப் போடு
விதமுடனே நாகமது நீறிப் போகும்
காறுடனே கரிசாலைச் சாறில் லாட்டால்
கனவீருள் ளிச்சாற்றால் நீறுந் தானே. 236

நீறுமடா இல்லாட்டால் சிறியா நங்கை
நிசழ்த்தருளிய குகைதனிலே கீழ்மே லும்வை
மாறுபடா நாகத்தை நடுவிலே வைத்து
வாய்மூடி யுலையினிலிட் டது ஊது
ஊறுடனே பொருமியது நீறிப் போகும்
உற்பனமா மனுபான மறிந்தே யூட்டக்
காறுமே யிளைப்பிரும லிளை காசம்
காணாது வைத்தியரே விரைந்து பாரே. 237

சுத்தித்த நாகத்தை ஒரு கட்டியாக எடுத்து இரும்புக் கரண்டியில் இட்டு உருக்கிக் கரிசாலைச்சாறு ஒரு படி கொண்டு சுருக்கிட நாகம் நீறும். இவ்விதமாகவே, வெள்ளைப் பூண்டின் சாற்றாலும் சுருக்கிட நீறும்.

### (வேறு)

சிறியாநங்கைக் கற்கத்தின் நடுவில் நாகக்கட்டியை வைத்துக் குகையில் இட்டு ஊத நீறும். தக்க அநுபானத்

தில் அளவுப்படி கொடுக்க, இளைப்பிருமல், ஈளை, காசம் முதலியன தீரும்.

குறிப்பு:- மேற்கண்டபடி நீறிய பற்பத்தைக் கற்றாழைச் சாற்றில் பசுமையடங்கிப் பற்பமாகிற வரையில் புடமிட்டெடுத்து உபயோகிப்பது உத்தமமென அனுபவத்தில் கண்டிருப்பதால், அவ்வாறு செய்வது நன்மையாகும்.

## 22. சங்கு பற்பம்

வெண்பணில பற்பமெவ ருண்பரவ ருக்குடல்
மென்பொனிற மிக்கு மதுசெய்
பண்பினெயு ரைக்கிலொரு கண்புகைபி ருட்டலறு
மிஞ்சிய பயித்திய மறுமெய்
விண்பதும பத்திரியரை சங்கின்மிசை யப்பதனை
விஞ்சுரவி வைத்தொரு பகல்
எஞ்சுபுட மிட்டெடதை யுண்கிருத முத்தினள
வின்பமிகு பத்தியம் லகுவே. 238

சொன்னவிப் பணில பற்பஞ்
சுராங்குச மெவ்வா றென்னில்
வன்னிபோற் றரிக்குங் காய்ச்சல்
வாங்கிடாப் பழைய தாகிச்
சந்நிதொந் தித்துச் சேனைத்
தலைவனைத் தேடும் போது
தின்னுமா லலங்கற் சாற்றிற்
சிங்கமா தங்க மாமே. 239

ஆகாயத் தாமரையிலையை அரைத்து, ஊது சங்கின் மீது அப்பி, ஒருநாள் வெய்யிலில் உலர்த்திப் புடமிட பற்பமாகும்.

அளவு—: இப் பற்பத்தில் முத்தின் அளவு நெய்யில் கொடுக்க உடல் பொன்னிற மடையும். கண் புகைச்சல் பயித்தியம் முதலியன தீரும். நெருப்புப்போல் காய்கின்ற



வெப்பில் சன்னி ஏற்பட்டுக் கபம் மிகுமாயின் துளசிச் சாற்றில் கொடுக்கச் சிங்கத்தின் முற்பட்ட யானையின் கதியைப் பிணியடையும்; அதாவது பிணி தீரும் என்க.

## 23. சிருங்கி பற்பம்

கலைக்கோடு பற்பம் கழறுங் காலை
முனிச்சா றதனில் மூழ்கச் செய்தே
அறுபது நாழிகை ஆகிய பிறகு
சுத்த நீரால் தூய்மை செய்யே. 240

இதுபோல் ஏழுநாள் ஏகச் செய்தபின்
நிட்குடி யதனில் நீர்விட் டரைத்தே
கவசம் செய்தபின் காயவிட் டெடுத்தே
நூறு முட்டை நுண்மையா யடுக்கி. 241

வீறும் அங்கியை விதிப்படி அமைத்தபின்
ஆறி எடுக்க அமைந்திடும் வெண்மையாய்
வெந்த நீறு வெம்மை வினைநோய்
அகலு மென்றே யறைந்தனர் பெரியோர். 242

மான் கொம்பை வேண்டிய அளவெடுத்துத் துண்டு துண்டாக வெட்டி இரண்டிரண்டாகப் பிளந்து அகத்திக் கீரைச் சாற்றில் 60 நாழிகை அதாவது 24 மணிநேரம் ஊற வைத்துக் கழுவவும். இதுபோல் 7 முறை செய்ய மான் கொம்பு தூய்மையடையும். தூய்மை செய்த கொம்புத் துண்டுகளுக்கு ஏலரிசியை நீர் விட்டரைத்துக் கவசம் செய்து, காயவைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பமாகும். இப் பற்பத்தால் வெம்மையினால் அதாவது பித்தத்தால் வந்த நோய் தீருமென்பதாம்.

இதனை மார்புநோய்க்கு நெய்யில் வழங்குவது மருத்துவ மரபு. இதனை அம்மை நோயிலும் வழங்கலாமென சில்லரைக் கோவையில் கூறப்பட்டுள்ளது.

குறிப்பு—: வறட்டி 100 என்று கூறியிருப்பதால் மான் கொம்பின் எடை பலம் 10 என்று கொள்ளவும்.

## 24. பவள பற்பம்

சந்தம்

சிவந்தபிர வளபற்ப மதின்பெருமை யாருரைப்பார்
சிவன்றனது மேனியொக்கு—மகிமீது
செகம்பரவு வாகடத்தி லெழுந்தபடி வானிலத்தர்
தினங்கொளினி தானவைத்து—வுடலாவி
கவிந்தகப வாதபித்த மிறங்கன்மிக வோடநச்சு
கலங்கவரு மாவிதைச்செய்—முறைகேளாய்
கரும்பினது சாறுவிட்டு நசுங்குபிர வாளமுற்ப
கருந்தொடி முஞிரட்டி—ரசமாக
உயர்ந்ததின மேழுமட்டு நெருங்கியரை யீரமுற்றி
யுலர்ந்தவிலை யாயுலர்த்தி யதன்மேலே
ஒடுங்குபுட மாக முட்டை யிரண்டுபதி னேழிலிட்ட
தொழிந்தகன லாறிவிட்ட—பிறகாமே
நிவந்தபுகழ் போவதைப்பின் னெறும்பளவு தேனிலப்பி
நிதங்கவொரு மாதமட்டு—மலியீளை
நிறைந்தகப ரோகம்விக்கல் சுரம்குடில சுவாசநிற்கும்
நினைந்துவிடு வாய்ப்புளிப்பை—வசமாமே. 243

சுத்தி செய்த (நற்பவளம்) ஒரு பலம் பவளத்திற்கு 12 பலம் கரும்பு இரசம்விட்டு நன்ருக 7 நாள் அரைத்து வில்லை செய்து உலர்த்தி, ஓட்டிலிட்டுச் சீலைசெய்து, 34 வறட்டியில் புடமிட்டு ஆறவிட்டு எடுக்கப் பற்பமாகும். இதனை எறும்பளவு தேனில் கொடுக்க, ஈளை, மிக்க கபம், விக்கல், சுரம், சுவாசம் இவை தீரும். புளி நீக்கிய பத்தியம்.

## 25. அப்பிரக பற்பமும், அதன் பிரமாணமும்

கொத்தவரைச் சாறு குவலையமாம் வல்லியமெய்
கொத்தவரைச் சாறு குறித்தமுக்காற்—கொத்தவரை
யப்படியே யோர்மை யளவுகூ ரஞ்சதுர்த்தி
யப்படியே யிப்படியே யாம். 244



| | சாறு | சாற்றினளவு | அரைப்புநாள் | வறட்டி |
|---|---|---|---|---|
| 1. | கொத்தவரைச் சமூலச்சாறு | 6 பலம் | 6 நாள் | 40 |
| 2. | நீலோற்பலச்சாறு | 5 பலம் | 5 நாள் | 36 |
| 3. | கட்டுக்கொடி யிலைச்சாறு | 4 பலம் | 4 நாள் | 32 |
| 4. | பசுமூங்கில் கிழங்கின்சாறு | 3 பலம் | 2 நாள் | 28 |

மேற்கூறியவாறு முறையே சாற்றினளவாகச் சாறுவிட்டும், அரைப்பு நாளளவாக வரைத்தும், வறட்டியினளவாகப் புடமிட்டு மெடுக்கப் பற்பமாகும்.

## 26. தங்க பற்பம்

சீவனத்தை யாடகியார் சித்திரமச் சங்கதலி
சீவனத்தை யாடகியார் தேரையெனச்—சீவனத்தை
யோதவரை யேகூ ரெழுமிதுன மாதிசிலை
யோதவரை யேகூ றுழை. 245

சுத்தித்த சொர்ண அரப்பொடி பலமொன்றுக்குத் துவரையிலைச்சாறு 4 பலம் விட்டு நன்ருகக் கைவிடாமல் அரைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும் 15 நாள் மேற்படி சாற்றினளவாகவே யரைத்து வில்லைசெய் துலர்த்தி, 34 வரட்டியில் புடமிட்டெடுக்க, ஐந்திலொருகூறு பற்பமாயிருக்கும்.

இவ்வாறே அடியிற் குறிக்கும் சாற்றினளவாகவும், நாளளவாகவும், வறட்டியளவாகவும், முறையே அரைத்து வில்லைசெய்து, ரவியிலுலர்த்திப் புடமிடப் பற்பமாம்.

| | சாறு | சாற்றினளவு | அரைப்புநாள் | வறட்டி |
|---|---|---|---|---|
| 1. | ஆத்தியிலைச்சாறு | 4 பலம் | 12 | 32 |
| 2. | ஆமணக்கிலைச்சாறு | 3 பலம் | 9 | 25 |
| 3. | அகத்தியிலைச்சாறு | 2 பலம் | 6 | 16 |
| 4. | வாழைக்கனி ரசம் | 1 பலம் | 3 | 9 |

## 27. பலகரை பற்பம்

கவடித் திருநீறு காணவழை வேலி
கவடித் திருநீரார் கண்டங்—கவடி
பலகறையா மொன்றே பலகரையா மெய்க்குப்
பலகறையா மேதுணிந்து பார். 246

சுத்திசெய்த பலகறைப்பொடி பலமொன்றுக்குச் சுர புன்னையிலைச்சாறு 4 பலம் விட்டு நன்ருக அரைக்கவேண்டும். இவ்வாறே மீண்டும் 4 நாள் மேற்படி சாற்றினளவாகவே யரைத்து வில்லை செய்து உலர்த்தி 36 வறட்டியில் புடமிட் மெடுக்க, ஆறிலொரு கூறு பற்பமாகும்.

மேற் கூறியவாறே அடியிற் குறிப்பிடும் சாற்றினளவா கவும், நாளளவாகவும், வறட்டியளவாகவும் முறையே அரைத்து, வில்லை செய்து, காயவைத்துப் புடமிட முழுக் கூறும் பற்பமாகும்.

| | சாறு | சாற்றினளவு | அரைப்புநாள் | வறட்டி |
|---|---|---|---|---|
| 1. | சித்திரமூல இலைச்சாறு | 4 பலம் | 5 | 30 |
| 2. | குருவியால் அல்லது கல்லால் சமூலச் சாறு | 4 பலம் | 5 | 24 |
| 3. | காட்டுமல்லிகை சமூலச்சாறு | 3 பலம் | 3 | 18 |
| 4. | நீலோற்பலசமூலச்சாறு | 2 பலம் | 2 | 12 |
| 5. | சந்தனக்குழம்புத் தெளிநீர் | 1 பலம் | 1 | 6 |

## 28. முத்து பற்பம்

பாண்டுமைய ருக்கியத்திப் பாலாரப் பாலாரப்
பாண்டுமைய ருக்கையது பற்பமே—பாண்டு
நடுக்குமர ணுலுமுறை நாலுமுற்றிற் பின்னர்
நடுக்குமர ணுலுநதி நாள். 247



துளையிடாத சுத்தி செய்த நன்முத்து பலமொன்றுக்கு. வெள்ளைச் சாறுவேளைச் சமூலச்சாறு ஐந்து பலம் விட்டு, நன்ருக அரைக்க வேண்டும். இவ்வாறு தினமொன்றுக்கு ஐந்து பலம் சாறுவிட்டு. மீண்டும் நான்கு நாள் அரைக்க வேண்டும். பிறகு வில்லைதட்டிக் காயவைத்து, ஒன்பது வரட்டியில் புடமிட்டெடுக்கக் காற்கூறு பற்பமாகும்.

இவ்வாறு காற்கூருன பற்பத்திற்கு, மேற்படி யளவா கவே வெள்ளெருக்கன் சமூலச்சாறு ஐந்து நாள் விட்ட ரைத்து, பிறகு வில்லை செய்துலர்த்தி, எட்டு வறட்டியில் புடமிட அரைக்கூறு பற்பமாகும்.

மேற்படியாக (அரைப்பு, நாளளவும், சாற்றினளவும்) அத்தியிலைச் சாற்றிலரைத்து ஏழு வறட்டியிலும், மருதயிலைச் சாற்றிலரைத்து ஆறு வறட்டியிலும் புடமிட முறையே முக்கால் கூறும், முழுக்கூறுமாகப் பற்பமாகும்.

## 29 முத்துச் சிப்பி பற்பம்

நேரிசை யாசிரியப்பா

கடத்திற் பூநீறு கற்சுண் ணும்பு
முடன்கலந் தொக்கநீ ரூற்றித் தெளிந்த
நன்னீ ரதனில் நாட்டும் பொருடான்
முந்நீ ரிற்சனி முத்துச் சிப்பியாம்
முன்ன ழிகைவரை மூழ்க வெரித்தெடு
அம்மா திரியே யைம்முறை யெரித்துக்
கைம்மாக் கோடுபோற் கழுவி யுலர்த்தி
ஆழ்குழிக் கலிலிட் டாடா தோடை
காழ்வெண் ணெச்சில் கரிய நிலப்பனை
இவற்றின் நீரா லிழைத்திடு தனித்தனி
உவந்து வில்லைசெய் துலர்த்திமண் சீலை
நிவக்கச் செய்து நீண்ட வராகப்

புடமிட் டெடுக்கப் புனிதநீ ருகு
மிடுவீர் தரளமு மித்தன் மைத்தாய்
இவ்விரு பொருட்கு மெழிற்குண மொன்றே
அவ்விய மில்லா வசுத்தியர்
செவ்வி தாகத் தேர்ந்துரைத் தனரே. 247

கற் சுண்ணமும் பூநீறுஞ் சேர்த்துத் தெளிவெடுத்த நீரில் முத்துச்சிப்பியை ஐந்து முதல் ஏழுதரம் எரித்து, சுத்த நீரில் கழுவியுலர்த்தி, ஆடாதோடைச்சாறு, நொச்சிச்சாறு, நிலப்பனைச்சாறு இவைகள் ஒவ்வொன்றிலும் தனித்தனியே யரைத்து, பன்றிப்புடமிட் டெடுத்துக்கொள்ளப் பற்பமாம்.

முத்துப் பற்பத்துக்குக் கூறிய அநுபானங்களிவிட முத்துப் பற்பத்தால் நீங்கும் நோய்கள் போம்.

## 30. நண்டுக்கல் பற்பம்

(கட்டளைக் கலித்துறை)

அலவன் சிலைத்துக ளாக்கு முபாய மறைகுவன்யான்
நிலப்பூ வொடுசுதை பாண்டத்தி லிட்டபின் நீரைவிடுத்
துலவக் கலக்கித் தெளியினக் கல்லினை யுள்ளிலிட்டு
நிலவிடத் தீயி லொருசாம மேயெரி நீர்சுண்டுமே. 248

சுண்டிய பின்னதைத் தண்ணீரிற் றூய்மையாய் சுத்திசெய்து
மண்டிட முள்ளங்கிச் சாற்று லரைத்து வழித்துலர்த்திப்
பண்டிடு பாடான பேதியிற் றுனும் பரிதியில்வை
யுண்டிடு நீர்க்கல் லடைப்புநீர்க் கட்டிவை யோடிடுமே. 249

நண்டுக்கல்லை மேற்படியாகவே சுத்தி செய்து, முள்ளங்கிச்சாற்றில் மைபோல அரைத்து உலர்த்தியும், அங்ஙனமே சிறுபீளைச்சாற்றில் அரைத்து உலர்த்தியும் வைத்துக்கொண்டு, நீரைத்தள்ளும் மூலிகைச் சாற்றிலேனும், குடிநீரிலேனும் அரைமுதல் இரண்டு குண்டுமணியளவு பிரயோகிக்க நீர்க்கட்டு, நீரடைப்பு, கல்லடைப்பு முதலிய நோய்கள் தீரும்.



## 31. ஆமை ஓடு பற்பம்

(கலி விருத்தம்)

ஆமை யோட்டி னடலையைச் சாற்றிட
ஏம மானபூ நீறு மெழிற்சுணம்
நேம மாக நிறுத்தெட்டு நீர்பெய்து
தோமி லோட்டினைத் தோயவிட் டேயெரி. 249

எரித்த வோட்டை யெடுத்துக் கழுவியே
சுரிபூ நாகஞ் சுனகிப்பால் விட்டுமே
அரைத்த தனைக் கவசம தாக்கிப்பின்
பொருத்தி யோட்டைப் புடமிட் டெடுத்திடே. 250

எடுத்த பற்பத்தை யிட்டுக் குழிக்கல்லில்
அடுத்துச் சிம்ம முகிரசத் தாலரை
கடுத்த வெயிலினிற் காய்ந்திட்ட வில்லையை
மடுத்தி டோட்டினில் மண்சீலை செய்திடே. 251

செய்து லர்த்தி செயப்புடம் போட்டெடு
நைந்திடுங் கண மாந்த நலியெலாங்
கொய்தி டுஞ்சிறு பாலகர்க் கொத்ததே
உய்தி யுண்டிதை யுற்றுநீ செய்திடே 252

ஆமை ஓட்டைச் சிறு சிறு துண்டாக நறுக்கி, பூநீறும் கற்சுண்ணமும் சமனெடை சேர்த்து, சேர்ந்த எடைக்கு எட்டுப் பங்கு நீர்விட்டுக் கலக்கித் தெளிவெடுத்த நீரிலிட்டு, எண்ணெய்க் கசிவு நீங்கும் வரை எரித்து, சுத்தநீரில் கழுவி உலர்த்தி, பூநாகத்தைக் கொம்புகள்ளிப்பால் விட்டரைத்துக் கவசித்துலர்த்தி, ஓட்டிலிட்டுச் சீலை செய்து, கன புடமிட்டெடுக்கப் பற்பமாம். இப்பற்பத்தை அப்படியே உபயோகிக்கலாம். அன்றியும், ஆடாதோடைச்சாறு விட்டரைத்து மறுபடி புடமிட்டும் உபயோகிக்கலாம்.

தக்க அநுபானத்துடன் அரைக் குன்றிமணி முதல் ஒரு குன்றி மணியளவு வரையில் உபயோகிக்க பாலர்கட்குண்டாகும் மாந்தம், கணம், மாந்தபேதி முதலியன நீங்கும்.

## 32. குங்கிலிய பற்பம்

(எண்சீர் விருத்தம்)

முதிராத சோசக்காய் மேற்புறணி போக்கி
முக்கண்ணி லோர்கண்ணை விழித்திடச்செய் ததனுள்
பதிந்திடவே குக்கில்துகள் புகுத்தியபின் பதனைப்
பாண்டத்தில் முக்காற்காய் மூழ்கிடவே பெய்நீர்
மிதமாக வெரிக்கையிலே யுருகிவரு மதனை
வேறொருபாண் டந்தனிலே யிளநீரை விட்டுப்
பதமான மருந்தையந்தத் தாழிதனி லூற்றிப்
பக்குவமா யாறியபின் பதனையெடுத் திடுமே. 253

எடுத்திட்ட மருந்ததனை யிடரின்றி முன்போ
லியற்றுநவ முறையதனைப் பொடித்துகுழிக் கல்லில்
மடுத்திடகுக் கிடவண்ட வெண்கருவா லேனும்
மடற்குமரி நீரதனு லேனுமறைத் துருட்டிக்
கடுவெயிலிற் காய்ந்தபின்பு மண்சீலை செய்து
காட்டெருவிற் கோழிபுடம் போட்டிடவே நீறும்
படியதனி னீரெரிச்ச னீர்க்கட்டு வெட்டை
பாறிடுதற் கிழுததனிற் பருகிடநன் றுமே. 254

மட்டை போக்காத இளநீரின் மேற்புரத்தைச் சீவித் துவாரமிட்டு, அதில் வெண் குங்கிலியத்தைப் பொடித்துச் செலுத்தி, ஒரு வாயகன்ற பாத்திரத்தில் சுத்தநீர் விட்டு, அதில் ஷை காய் முக்கால் திட்டம் மறையும்படி வைத்து எரிக்கவும். எரிக்கும்போது ஒரு குச்சிகொண்டு துவாரத்தில் செலுத்திப் பார்க்கக் குங்கிலியம் உருகியிருந்தால் அதை யெடுத்து, இளநீர் அடங்கிய வேறு ஒரு பாத்திரத்தில் கொட்டி, ஆறின பின்னர், அதையெடுத்து முன் போலவே மேலும் 9-முறை செய்து, நுண்ணிய துகளாகப் பொடித்து வைத்துக் கொள்ளவும். இதுவே முடிவு பெற்ற பற்பம். ஆயினும் இதைக் கோழிமுட்டை வெண் கருவிலேனும். சோற்றுக் கற்றாழைச் சாற்றிலேனும் அரைத்து, குக்கிடப் புடமிட்டும் உபயோகிக்கலாம்.



உபயோகிக்கும் அளவு :— ஒன்றுமுதல் நான்கு குன்றி மணியளவு, நோய்பலம், நோயாளி பலமறிந்து, சீதவீரிய மூலிகைகளில் ஒன்றில் அநுபானித்துக் கொடுக்க, நீர் எரிச்சல், நீர்க்கட்டு, பிரமேகம், வெட்டை முதலியன தீரும்.

## 33. படிக வெங்கார பற்பம்

படிகப் பொடியொரு பாண்டத் திட்டுக்
கடிதுநீர் பெய்ததைக் கலக்கி நன்றாய்ப்
படிகப் பாண்டம்வாய் படாம்விரித் ததனில்
வடித்து மெல்லிய வத்திர மூடி
வெய்யிற் புடமிட வெண்மையாய்க் கட்டும்
பையவே யதனைப் படிய குழிக்கலில்
அண்டவெண் கருவா லாட்டிரு சாமம்
பண்ணிடு வில்லை பகலவ னொளியிற்
காய்ந்தபின் கோழிக் கனல்புட மாற்றி
வாய்ந்த நீற்றினை வகையா யிவ்வணம்
ஐம்முறை செய்தபி னமிர்தம தாகு
மம்மருந் தொருமஞ் சாடியி னளவாய்ப்
பசுவின் வெண்ணெய்நெய் பாடாண பேதி
நீர்முள் ளியுஞ்சிறு நெரிஞ்சி யிவைகளின்
சாற்றிலே தேனுந் தந்திடிற் றசையடைப்
பாற்றொணு நீர்க்கட் டாகுநீ ரெரிவு
ஊரைவிட் டகலு முற்றவெங் கார
முறையுமிஃ தாமென மொழிந்தது மாமே. 255

படிகாரத்தை நீரில் கரைத்துக் கனத்த சீலையில் வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்திற் கொட்டி. தூசுபடாமற்படி சீலையால் மூடி, இரவிபுடத்தில் வைக்க, படிகாரம் மலினமற்றுக் கட்டியாய் நிற்கும். இதைக் கோழிமுட்டை வெண் கருவினால் அரைத்து, சுத்த வெண்மை யடையுமட்டும் குக்கிடப்புடமிட்டு, நீர்க்கட்டு, தசையடைப்பு, நீரெரிவு முதலியநோய்களுக்கு பசுவின் வெண்ணெய், நெய், முள்ளிச் சாறு, சிறுபீளைச் சாறு, சிறுநெருஞ்சிச் சாறு இவைகளின்

கொடுக்கக்குணமுண்டாம். ஒன்று முதல் நான்கு குன்றிமணி யளவுவரை பிரமாணமாகும்.

### 34. வெங்கார பற்பம்

இதனையும் ஷெியாகவே செய்யப் பற்பமாகும். தக்க அளவில், தக்க அநுபானத்திற் கொடுக்க வெப்பப் பிணிகள் தீரும்.

### 35. கந்தக பற்பம்

சுத்தி செய்த கந்தகம் ஐந்து பலத்தில், தினமொன்றுக்கு ஐந்து பலம் வெள்ளை வெங்காயச்சாறு விட்டரைக்க, மீண்டும் இவ்வாறு பதினைந்துநாள் அரைத்த பிறகு, இஞ்சிச்சாறு நாள் ஒன்றுக்கு ஐந்து பலமாக விட்டு 15-நாள் அரைக்க; தினமும் புதிது புதிதாகச் சாற்றை விடுக. பிறகு வில்லை செய்து நன்றாக உலர்த்தி, மருதம்பட்டைச் சாம்பல் அல்லது புளியம்புறணிச் சாம்பலை ஒரு சட்டியில் அரைப்படி கொட்டி, அதன்மீது வில்லையை வைத்து, மேலும் அரைப்படி சாம்பலைக் கொட்டி, 12-மணி நேரம் தீபாக்கனி, கமலாக்கினியாக எரித்தெடுக்கப் பற்பமாகும். இதனால் மேகம், குட்டம், சொறி, சிரங்கு, சர்மத்திமிர் முதலிய பிணிகள் நீங்கும்.

## 3. செந்தூரங்கள்

### 1. அப்பிரகச் செந்தூரம்

வரிசையாய்ச் சொல்லுகிறேன் அப்பிரகந் தன்னை
    மைந்தனே பொடிப்பொடியாய்ப் பொடித்துக் [கொண்டு
துரிசமதா யந்தெடைக்குப் பனைவெல் லந்தான்
    சுகமாக வெடியுப்பு மொன்றாய்க் கூட்டிப்
பரிசமுடன் சுத்தகங்கை தன்னு லாட்டிப்
    பாலகனே வில்லை தட்டி ஓட்டிலிட்டுப்
பிரியமுடன் மேல்மூடிச் சீலைசெய்து
    பிலமாக்கிக் கெசபுடத்திற் போட்டுப் பாரே. 256

போட்டுமே ஆறினபின் எடுத்துப் பாரே
    புண்ணியனே தளுக்கற்றுப் பற்பம் போலாம்
தாட்டிகமாய்க் கல்வத்தி லிட்டுக் கொண்டு
    தானரைப்பா யொருசாமம் எருக்கம் பாலால்
மாட்டியமாய்க் கல்லோடி ரவியிற் போட்டு
    மற்றையநாள் அப்பாலால் சாம மாட்டு
நாட்டுமே கல்லோடே வெயிலிற் போட்டு
    நலமாக அவ்விதம் நாற்பதுநாள் போடே. 257

நாள்கேளு நாற்பதிலே வில்லை தட்டி
    நன்மையுடன் காயவைத்து ஓட்டிலிட்டு
வேள்போன்ற மேலோடு பொருந்த மூடி
    மேன்மையுடன் எழுசீலை மண்ணுஞ் செய்து

தாளான தாளிறைஞ்சிக் கெஜபு டத்தில்
 தயவாக ஆறினபின் எடுத்துப் பாரு
வாள்போன்ற அம்பிரகஞ் சிவந்து காணும்
 மைந்தனே கல்வத்தில் அரைத்தி டாயே. 258

அரைத்திடுவாய் பொற்றலையின் கையான் சாற்றில்
 அப்பனே நாற்சாம மரைத்து வில்லை
திரத்துடனே தானுலர்த்திக் கெசபுடத்திற் போடு
 தீர்க்கமுட னிவ்விதமா யரைத்த ரைத்து
உரத்துடனே ஐந்துபத்து ஒன்றும் போட
 உத்தமனே அருணனைப்போல் சிவந்து காணும்
நிறைத்துமதைப் பொடிசெய்து குப்பி தன்னில்
 நீபதனம் பண்ணிவிடு அநுபா னங்கேள். 259

கேளடா ஆவாரைப் பஞ்சாங் கந்தான்
 கிருபையுடன் பலமெட்டு அசுவ கந்தி
நாளடா அவ்வீதஞ் சீர கந்தான்
 நன்மையுடன் பலமிரண்டு சூர ணித்துத்
தாளடா வெருகடியிற் குன்றி வீதம்
 தருவான பசுவெண் ணெய் தன்னி லுண்ண
வேளடா விருவேளை மண்ட லந்தான்
 விதமாகக் கொண்டுவிட வியாதி கேளே. 260

கேளேநீ மேகமென்று விருபத் தொன்றும்
 கெடியாகத் திருமடா பத்தியமோ வில்லை
கோளேநீ ரிழிவுமது மேகந் தீரும்
 கோடான கற்பமிதுக் கொவ்வா தப்பா
வாளேநீ சிந்தூரஞ் சகல ருக்கும்
 வாயாது யார்படுவா ரிந்தப் பாடு
வேளோனை வென்றசித்தர் செய்யு மார்க்கம்
 வெளியாகச் சொன்னதிந்தப் பூரணந்தான்
 பாரே. 261

வேண்டியவளவு கருப்பு அப்பிரகத்தை உரலிலிட்டுப் பொடித்து, அவ்வெடைக்குச் சமம் பனைவெல்லமும் வெடி



யுப்பும் ஒன்றாகச் சேர்த்து, நீர்விட்டு அரைத்து, வில்லைதட்டி ஓட்டிலிட்டுக் காயவைத்து, மேல்மூடிச் சீலை செய்து கசபுடமிடவும். அப்பிரகம் தளுக்கற்றுப் பற்பம் போல் வெளுத்திருக்கும். இதனைக் கல்வத்திலிட்டு எருக்கம்பாலால் ஒரு சாமம் அரைத்து வெய்யிலில் காயவிடவும். இவ்விதம் 40-நாள் செய்யவும். 41ம்-நாள் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து, ஓட்டிலிட்டு 7 சீலைசெய்து கஜபுடம் போட்டு ஆறினபின் எடுக்க அப்பிரகம் சிவந்து இருக்கும். இதனைக் கல்வத்திலிட்டு கையாந்தகரைச் சாற்றால் நான்கு சாமம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து புடமிடவும். இவ்விதம் 51 புடம் போட அப்பிரகம் அருணனைப்போல் சிவந்திருக்கும். இதனைப் பொடித்துக் குப்பியில் அடைக்கவும்.

ஆவாரைப் பஞ்சாங்கம் 8 பலம், அமுக்கிராக் கிழங்கு 8 பலம், சீரகம் 2 பலம் இவைகளைப் பொடித்துச் சூரணமாக்கி, இச் சூரணம் வெருகடியில் குன்றிமணியளவு அப்பிரகச் செந்தூரத்தைச் சேர்த்து, பசு வெண்ணெயில் இருவேளை ஒரு மண்டலம் கொள்ள, 21-மேகம், நீரிழிவு, மதுமேகம், இவைகள் தீரும். பத்தியமில்லை.

குறிப்பு:— அப்பிரகத்தினளவு கூறாமல் புடத்தினளவு கஜபுடமெனக் கூறினதால், அப்பிரகத்தை 10 பலமாகக் கொள்ளலாம். பத்தியமில்லை என்று பாட்டில் கூறியிருப்பினும், பத்தியமிருத்தலே நலம்.

## 2. அயச் செந்தூரம்

நீங்கிப்போ மின்னமொரு செந்தூ ரங்கேள்
 நிலையான அரப்பொடியைக் கல்வத் திட்டு
ஏங்கிப்பார் காடிதெளித் தொதியம் பட்டை
 இடித்துப்பிழிந் தச்சாற்றை ஊற்றி மைந்தா

பாங்குடனே மூன்றுநாள் வற்ற ரவியில்
பாலகனே வைத்தபின்பு நாலா நாளில்
சாங்கமாய் முன்சாற்றி லரைத்து வில்லை
தயவாகத் தான்செய்து காயப் போடே 262

போடப்பா ஓட்டிலிட்டு ஓடு மூடிப்
புகழாகச் சீலைமண் ஏழுஞ் செய்து
நாட்டப்பா கெஜபுடத்திற் போட் டெடுத்து
நலமாக முன்சாற்றி லரைத்து முன்போல்
தேட்டப்பா செஜபுடந்தா னெட்டும் போடு
திரமாகக் காடியது சேர்ந்த சாற்றில்
கூட்டப்பா தனிச்சாற்றில் மூன்றும் போடு
குணமாக அயமதுவுஞ் செந்தூர மாமே. 263

ஆமப்பா அனுபான மறிந்தே யுண்ண
அரும்பிணிகள் வாதபித்த ஐயத் தாலே
நேமப்பா அநேகமா ரேகா மெல்லாம்
நீங்கிதிரி நாடிகளு முறுக்கு மேறி
காமப்பால் பெருகிருக்கும் விந்துங் கட்டும்
கண்களில்செவ் வலரியரி வீரஞ் செய்யும்
தாமப்பா ஆலரசு பிஞ்சு வித்துச்
சமனிடைக்கு அதிமதுரம் பசுநெய் யாமே 264

நெய்பாகுந் தேனாகு மனுபா னந்தான்
நீங்காத வாய்வுகளும் நீங்கிப் போகும்
பொய்யாகும் கைபாகந் தவறிட் டாலும்
புலத்தியனே மருந்தொன்றும் பலித்தி டாது
வையாதே பூரணத்தில் கைபா கந்தான்
வண்மையுடன் வயித்தியபூ ரணமீ தாச்சு
ஐயமில்லா நானூறும் வெளியாய்த் தோணும்
ஆதிகுரு கொடுத்தமுன் மொழிதன் னாலே. 265

சுத்தித்த அயப்பொடியை வேண்டியளவு எடுத்துக் கல்வத்திலிட்டு, ஓதியம்பட்டைக்குக் காடிநீரைத் தெளித்து இடித்துப் பிழிந்தசாற்றை ஊற்றி, மூன்றுநாள் வெய்யிலில்



வைத்து, சாறு வற்றியபின் நான்காம் நாள் முதற்கொண்டு மேற்படி சாற்றால் நன்றாக அரைத்து வில்லைசெய்து காய வைத்து, ஓட்டிலிட்டு ஏழு சீலைசெய்து காயவைத்து, கஜ புடமிடவும். இவ்விதம் எண்முறை செய்யவும். பிறகு 3 புடம் காடிநீர் தெளித்துப் பிழியாத தனி ஓதியம்பட்டைச் சாற்றிலிடவும். அயம் செந்தூரமாம். தக்க அநுபானத்தில் கொடுக்க வாதப்பிணி, பித்தப்பிணி, ஐயப்பிணி இவைகள் நீங்கி, நாடிகளும் முறுக்கேறி, விந்து பெருகிக் கட்டும். கண்களில் இரத்தம் பெருகும்.

ஆலம்பிஞ்சு வித்து, அரசம்பிஞ்சு வித்து, சம அளவு இவ்விரண்டும் சேர்ந்த எடைக்கு அதிமதுரம், இவைகளைப் பொடித்து, இத்துடன் அயச்செந்தூரத்தைத் தேன் அல்லது நெய் அநுபானத்துடன் கொடுக்க, நாட்பட்ட வாயுக்கள் தீரும்.

## 3. அயக்காந்தச் செந்தூரம்

**பல்லவி**

அயகாந்தத் தருமைகேளு பிணியிற் பாயும்
அயகாந்தத் தருமை கேளு.

**அநுபல்லவி**

அயகாந்தத் தருமை பிணி
அயங்களை மிகத் துணி
வயமேந்து செய லணி
வயமா விஃதே கணி (அயகா)

அயமுங் கந்தகங் காந்தம்
அவையொவ் வொன்றேகா லந்தம்
உயர்லிங்கங் காரத் தொந்தம்
உவர்பூ சோற்றுப்பொ டிந்தும் (அயகா)

சாரங் கர்ப்பூர மெட்டும்
தனித்தனிக் கழஞ்சு மட்டும்

சோங்கி வைகள் முற்றும்
சப்பும் பழநீர் கொட்டும் (அயகா)
இருபக லரைசெய் பின்னே
இருபில்லே யென்று முன்னே
மறுபக லகல் மன்னே
மாட்டு மண்சீலே சொன்னேன் (அயகா)
அப்பாற்செய் பன்றி புடம்
அதுவே சிவக்குந் திடம்
தப்பாயின் மூன்று புடம்
தான்புரி யிலே மடம் (அயகா)
முடிபில்லே பொடி பண்ணும்
மூர்க்கபாண்டு நோ யண்ணும்
கலிதினிற் கட னண்ணும்
கைகண்ட திஃ தெண்ணும் (அயகா) —266

அயம் 1 பலம், கந்தகம் 1 பலம், காந்தம் ¼ பலம், இலிங்கம், வெங்காரம், படிகாரம், பூநீறு, சோற்றுப்பு, இந்துப்பு, நவாச்சாரம், கற்பூரம் இவ்வெட்டும் வகைக்கு ஒரு கழஞ்சு, இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பழச்சாறு விட்டு இரண்டுநாள் அரைத்து, வில்லேசெய்து உலர்த்தி, சில்லிட்டுச் சீலேசெய்து பன்றிப்புடமிடச் சிவக்கும். நன்ருக முடியாவிடின், மும்முறை செய்யவும். தக்க அநுபானத்தில் அளவுப்படி பாண்டு நோய்க்குக் கொடுக்கவும்.

## 4. அயவீர செந்தூரம்

ஆமாப்பா அயப்பொடியும் பலந்தா னென்று
அப்பனே அஃதெடைக்குச் சூதங் கூட்டி
வேமப்பா கல்வத்தி லாட்டு ஆட்டு
வீரமாம் நவாச்சாரம் பலந்தா னென்று
வாமப்பா மூன்றுநாள் கைவி டாமல்
மாட்டியரைப் பொடியாகச் செவந்து போகும்
மோமப்பா புதுச்சட்டி யடுப்பில் வைத்து
மோசங்கள் வாராமல் வறுத்தி டாயே. 267



வறுக்கையிலே பதம்பாரு முருக்கம் பூப்போல்
வர்ணமிட்ட பதத்தோடு கருகாமல் வாங்கு
நிறுக்கையிலே குன்றியெடை பனைவெல் லத்தில்
நேசமாய்க் கொண்டிடவே சூலே வாங்கும்
ஒருக்கையிலே யிதின்சுறுக் கெதுக்கு மில்லே
ஓகோகோ குஷ்டமெல்லா மொழிந்து போகும்
மறுக்கையிலே யிதின்சுறுக்கு எதுக்கு மில்லே
வாதநீர் விஷக்கடிகள் வாங்கிப் போமே. 268

அயப்பொடி 1 பலம், இரசம் 1 பலம், இவைகள் இரண்டையும் கல்வத்திலிட்டு நன்ருக அரைத்து, வீரம் 1 பலம் நவாச்சாரம் 1 பலம் சேர்த்து, 3 நாள் கைவிடாமல் அரைக்கச் சிவந்து பொடியாகும். இதனைப் புதுச்சட்டியிலிட்டு அடுப்பில் வைத்து வறுக்க முருக்கம்பூப்போல் சிவக்கும். கருக்கக்கூடாது. இதனைக் குன்றிமணியளவு பனைவெல்லத்தில் கொடுக்க, சூலே, குஷ்டம், வாதநீர், விஷக்கடி முதலியன தீரும்.

குறிப்பு:- வறுப்பதற்குத் தென்னே ஈர்க்குக் கற்றையை உபயோகிக்கவும். புகைக்கு எதிர்க்காமல் கவனமுடன் இருக்கவும்.

## 5. ஆறுமுகச் செந்தூரம்

சீர்பெருகு மாறுமுகச் செந்தூர மானதை
செப்புதற் கெளிதா குமோ
செகமகிழு ரசமைந்து பலமுடன் காந்தமேழ்
செவிகந்த மொன்ப துடனே
பார்பெருகு வெண்கார மோஎட்டு மதியுப்பு
பாங்கான நாலு பலமும்
பட்சமோ டரப்பொடிக ளூச்சிதமதாகவே
பன்னிரண் டாக வதனே
தார்பெருகு கற்ருழைப் பால்விட் டரைத்துப்பின்
தாளிதனில் வைத்து மூடி

சங்கையுடன் ஏழ்சீலை மண்செய் தெரித்துவிடு
சாமமோர் எட்டி னளவே
பேர்பெருகு செந்தூர மாதுளம் பூநிறம்
பெற்றது மெடுத்து வைத்து
பேசரிய திரிகடுகி லோர்பண வெடைகொண்டு
பிரியமாய்த் தேன்கு ழைத்தே 269

அருளவே கோடான கோடிவினை யோடிடும்
அரைவா தம் விதைவா தமும்
ஆறு வகை மூலமும் மீறுஎரி குன்மமும்
அகத்துறு வறட்சி யனலும்
மருளான வெடிசூலை மற்றுமுள மார்ச்சூலை
மங்கையர்கள் கர்ப்ப ரோகம்
மகாபாண்டு சோகையும் மாசுறு கிரந்தியும்
வாட்டுங் குடல்வா தமும்
மருள்வாத பித்தமுடன் கயரோக மரையாப்பு
மதமீது மதிசா ரமும்
மண்டையிடி தொண்டைவலி கண்டமா மாலையும்
வறட்சூலை சூலை யுடனே
அரிதான பெரியோர்க ளநுபோக மிதுவாகும்
அதனு லிதனை யோதினேன்
ஆழ்ந்திது நுட்பமறி சூழ்ந்தபிணி சங்காரி
ஆறுமுகச் செந்தூ ரமே. 270

இரசம் 5 பலம், காந்தம் 7 பலம், கந்தகம் 9 பலம், வெங்காரம் 8 பலம், இந்துப்பு 4 பலம், அயப்பொடி 12 பலம் இவைகளைக் கல்வத்திலிட்டுத் தனித்தனிப் பொடித்து, முறைப்படி கலந்து அரைத்து, கற்றாழைப்பால் சேர்த்து நன்றாக உறவாகும்படி 5 நாள் அரைத்து, வில்லைதட்டிக் காய வைத்து, அகன்ற சட்டியில் வைத்து, வாய்ப்பொருத்தமான மற்றொரு சட்டியால் மூடி, 7 சீலைமண் வன்மையாய்ச்செய்து, எட்டுச்சாமம் அடுப்பிலிட்டு எரித்து, ஆறினபின் எடுத்துப் பார்க்கச் செந்தூரம் மாதுளம்பூ நிறம் பெற்றிருக்கும். இதனைப் பொடித்துக் குப்பியிலடைக்கவும். பணவெடை



யளவு திரிகடுகு தூளுடன் சேர்த்துத் தேனில் குழைத்து அருந்த அரைவாதம், விதைவாதம், அறுவகை மூலம், எரிகுன்மம், வறட்சி, அனல், வெடிசூலை, மார்புச்சூலை, கர்ப்பரோகம், பாண்டு, சோகை, கிரந்தி, குடல்வாதம், வாதபித்தம், சயம், அரையாப்பு, மதம், அதிசாரம், மண்டையிடி, தொண்டைவலி, கண்டமாலை, வறட்சூலை, சூலை இவைகள் தீரும். நோய்க்குத் தக்கவாறு நாட்களை அளவு படுத்திக் கொள்ளவும். செந்தூரத்தின் அளவு பண வெடை என்று கூறியிருப்பினும், ¼ முதல் 1 குன்றிமணி யளவே கொள்ளல் வேண்டும்.

## 6. அன்னபேதிச் செந்தூரம்-1

வேண்டிய அளவு சுத்திசெய்த அன்னபேதியைக் காடி நீரிலரைத்து வில்லைசெய்து, இரண்டல்லது மூன்று புடமிடச் செந்தூரமாம். இதில் அரைமுதல் 1 குன்றிமணியளவு தக்க அநுபானத்தில் கொடுக்கச் சுரம், சீதபேதி, பாண்டு முதலியன தீரும்.

## 7. அன்னபேதிச் செந்தூரம்-2

சுத்தித்த அன்னபேதி 1 பங்கு, சுத்தித்த வெடியுப்பு ¼ பங்கு, இவ்விரண்டையும் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து இரண்டல்லது மூன்று புடமிடச் செந்தூரமாம். இதில் மேற்கண்ட அளவாக தக்க அநுபானத்திலீய சோகை, பாண்டு, காமாலை முதலியன நீங்கும்.

## 8. இலிங்க செந்தூரம்-1

சுத்திசெய்த இலிங்கம் ஒரு பலத்துக்கு 1 படி ஆற்றுத் தும்மட்டிச் சமூலச்சாறு சுருக்குக் கொடுத்து, சுத்த நீரால் கழுவி, பொடித்துக்கொண்டு, அரிசிப் பிரமாணம் தேனிலீய, குளிர்சுரம் முதல் எல்லாச் சுரங்களும், வாதகப தொடர்பான நோய்களும், மேக நோய்களும் போம்.

## 9. இலிங்க செந்தூரம்-2

ஒரு பலம் சுத்திசெய்த இலிங்கத்திற்கு, சாம்பிராணி பலம் ஒன்று, கற்பூரம் பலம் ஒன்று, இவ்விரண்டும் சேர்த்தரைத்து நிலத்துணியில் தடவிக் கவசித்துக் கொளுத்திவிடவும். இவ்வாறாக ஐந்து முதல் ஏழுமுறை செய்தபின், இதைச் சுத்தமாய்க் கழுவியுலர்த்தி, நுணுப்பட்டையை பஞ்சுபோலிடித்து ஒரு சிறு குடுவையில் பாதியிட்டு, அதன்மீது இலிங்கத்தை வைத்து, மற்றப் பாதிப் பாகத்தையும் நுணுப்பட்டைத் தூளால் அடைத்துச் சில்லிட்டுச் சீலைசெய்து, ஐந்து வறட்டியில் புடமிட்டெடுத்து அரைத்துப் புட்டியில் அடக்கஞ் செய்க. மேற்கண்ட ரோகங்களும், சுரம், சந்நிபாத நோய்களும் விலகும். அநுபானம் கணித்துக் கொள்க.

## 10. இரச செந்தூரம்

பாரப்பா வின்னமொரு செந்தூ ரங்கேள்
    பாடுகிறேன் புலத்தியனே பதிவாய்க் கேளு
நேரப்பா வாலைரசம் பலந்தா னொன்று
    நேர்த்தியென்ன கந்தியோர் பலமே கூட்டு
காரப்பா கரியோட்டில் தொந்தித் தேதான்
    கனமாகப் பொடிசெய்து குப்பிக் கேற்றி
மேரப்பா வாலுகையி லேற்றிக் கொண்டு
    மேன்மையுட னொருசாமம் தீபம் போலே. 271

தீபம்போல் மறுசாமங் கமலம் போலத்
    திறமாகத் தானெரித்து மூன்றுஞ் சாமம்
தாபம்போற் காடாக்கினி போலே மைந்தா
    தானெரிக்கில் சந்தகத்தின் வாசம் வீசும்
கோபம்போல் சிலாகையிட்டு மெள்ளக் கிண்டு
    குமரனுடன் குமரியுமே கூடு நேர்மை
கோபம்போ லிணக்கமதா யுருகிக் காணும்
    துரிதமுடன் இளகுபத மில்லா விட்டால். 272



இல்லாட்டால் மேலே யொரு ஓடுமூடி
    என்மகனே யொருநாழி கடுந்தீப் போடு
சல்லாப மாய்நீக்கிச் சிலாகை போடு
    சதுராக வுருகியது குழம்பாய்க் காணும்
பொல்லாத தாளகத்தைப் பொடித்த தூள்தான்
    புலத்தியனே காற்பலந்தான் குப்பியிலே போட்டு
நல்லாக நாற்புறமுங் கீழு மேலும்
    நன்றாச் சிலாகையினாற் கிண்டிப் போடே, 273

கிண்டியே முச்சாமங் கடந்து மேலே
    கிருபையுட னாற்சாமந் தன்னில் மைந்தா
அண்டினால் வடவையென்ற தணலைப் போடாய்
    அப்பனே மருந்தெல்லா மேலே யேறும்
தாண்டியே மிதப்பதனை மறந்தி டாதே
    துரிதமுட னாற்சாமம் எரித்து நீயும்
தண்டியே சிலாகையிட்டுப் பார்க்கும் போது
    தயவாகச் சிலாகைமுனை சிவந்து போமே, 274

சிவந்தாலும் வெளுத்தாலும் பதமிதப்பா
    சீக்கிரத்திற் குறட்டாலே யெடுத்துக் குப்பி
மயமாக நீர்தெளித்தே யாற்றிப் போடு
    மைந்தனே சிலாகை முனை கறுத்துத் தோன்றில்
குவிந்திருந்த குப்பிதனை அடுப்போ டேதான்
    குணமாக எரிப்பாற்றி வைத்துப் போடு
தவிந்திருந்த அடுப்பினது வேகத் தாலே
    தான்சிவக்கு மிருநாழி சென்றப் பாலே. 275

அப்பாலே குறட்டதினால் குப்பி வாங்கி
    அசராமல் தெளித்திடுவாய் சுத்த கங்கை
தப்பாத குப்பிதனை யுடைத்துப் பாரு
    தயவான செந்தூரங் கறுத்துக் காணும்

இப்பாலே யரைக்கையிலே முருக்கம் பூப்போல்
    இருக்குமடா பணவெடைதான் தேனி லீய
செப்பாத பத்துநாள் தன்னி லேதான்
    தீருகிற வியாதிதனைத் திறமாய்க் கேளே. 276

கேளப்பா மூலநோய் மேக ரோகம்
    கெடியான பவுத்திரமும் அநேக நோய்கள்
தாளப்பா புளிபுகையுந் தள்ளத் தீரும்
    தயவான வாலைரசச் செந்தூ ரத்தை
ஆளப்பா கற்பாதி செய்வா னப்பா
    அரகரா உலகத்தோர் ரசமென் பார்கள்
வாளப்பா வின்னமொரு செந்தூ ரந்தான்
    வகையாகச் சொல்லுகிறேன் வரிசை யாக. 277

இரசம் 4 பலம், கந்தகம் 1 பலம்; இவ்விரண்டையும் தோந்தித்துப் பொடித்துக் குப்பியில் அடைத்து, வாலுகா இயந்திரத்தில் ஒரு சாமம் தீபம்போல் எரித்து, மறுசாமம் கமலாக்கினியாக எரித்து, மூன்றாஞ் சாமம் காடாக்கினியாக எரிக்க,கந்தகத்தின் வாசம் எழும். அப்போது சிலாகையிட்டு மெள்ளக் கிண்டிப்பார்க்க, உருகி இளகு பதமாக இருக்கும். அப்படி உருகி இளகாவிட்டால், மேற்கொண்டு 1 நாழிகை (24 நிமிடம்) கடுந்தீப்போட உருகிக் குழம்பாகும். அச் சமயத்தில் ¼ பலம் தாளகத்தைப் பொடித்துக் குப்பியினுள் போட்டு நான்கு பக்கமும் கலக்குமாறு சிலாகையினால் கிண்டவும். பிறகு நான்கு சாமம் காடாக்கினியாக எரிக்க மருந்து மேலே ஏறும். சிலாகையிட்டுப் பார்க்க சிலாகை முனை கறுத்திருந்தால் மேற்கொண்டு இரண்டு சாமம் எரிக்கவும். பிறகு தீயை நீக்கி ஆறவிடவும். குப்பியை உடைத்து மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு அரைக்க, முருக்கம் பூப்போல சிவந்திருக்கும். ½ முதல் 1 குன்றிமணியளவு இருவேளை 10 நாள் கொடுக்க, மூலம், மேகநோய், பவுத்திரம் இன்னும் பிற நோய்கள் தீரும். புளி, புகையிலை நீக்க வேண்டும்.



## 11. உப்புச் செந்தூரம்-1

அறைகிறேன் லவணத்தின் செந்தூ ரங்கேள்
    அப்பனே கல்லுப்புப் பலந்தா னாலு
கறைகிறேன் சூதமது பலந்தா னொன்று
    கல்வத்தில் தானிட்டு வில்வச் சாற்றால்
மறையவே தானரைத் திரண்டு சாமம்
    மார்க்கமாய்க் குகையில்வைத்துச் சொல்லக் கேளு
விரைகிறேன் போகருட கடாட்சத் தாலே
    விபரமுடன் புலிப்பாணி விளம்பக் கேளே. 278

கேளேதான் உலையில்வைத்துப் பழுக்க வூதக்
    கிருபையுட னுருகியது மணிபோ லாகும்
கோளேதான் வாராமல் ஆற விட்டுக்
    கொற்றவனே கல்வமிட்டுப் பொடியாய்ச் செய்து
நாளேதான் அந்தரத்தா மரையின் சாற்றால்
    நாற்சாமந் தானரைத்து வில்லை தட்டிப்
பாலேதான் போகாமல் காய வைத்துப்
    பக்குவமாய்ச் சில்லிட்டுப் புடமுழமு மாமே. 276

ஆமேநீ முன்போலே ஐந்துபுடம் போட்டால்
    அப்பனே செந்தூர மாகும் பாரு
தாமேநீ யெடுத்ததனைச் சிமிளில் வைத்துத்
    தயவாகப் பண வெடைதான் தேனிற் கொள்ள
போமேநீ குன்மமென்ற தெட்டுந் தீரும்
    பொல்லாத நெஞ்செரிவு சூலை ரோகம்
வாமேநீ சூதகத்தின் வாயு தீரும்
    வல்லமையால் புலிப்பாணி வகுத்திட் டானே. 280

கல்லுப்பு 4 பலம், இரசம் 1 பலம், இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு, மடியும்படி வில்வச்சாற்றால் இரண்டு சாமம் அரைத்து உலர்த்திப் பொடித்துக் குகையிலிட்டு, கொல்லன் உலையில் வைத்து பழுக்க ஊத, உப்பு உருகி மணி மணியாக இருக்கும். ஆறவிட்டு எடுத்துக் கல்வத்திலிட்டுப்

பொடித்து, அந்தரத் தாமரைச் சாற்ருல் நான்கு சாமம் அரைத்து, வில்லை தட்டிக் காயவைத்துச் சில்லிட்டுச் சீலை செய்து முழபுட மிடவும். இவ்வாறு ஐந்து புடமிடச் செந்தூரமாகும். குன்றிமணியளவு தேனிற்கொள்ள 8 வகை குன்மமும், நெஞ்சு எரிவு, சூலை, சூதகவாய்வு முதலியனவும் தீரும்.

## 12. உப்புச் செந்தூரம்-2

சுத்திசெய்த சோற்றுப்பு 5 பலத்திற்கு, ½ படி ஆகாயத் தாமரைச்சாறு விட்டு அரைத்து, சிறு வில்லைகள் செய்து, இரவியிலுலர்த்திச் சீலை செய்து 10 வறட்டியில் புடமிடவும். இவ்வாறு மீண்டும் 6 புடமிட உயர்தரச் செந்தூரமாகும். ஒவ்வொரு புடத்துக்கும் வறட்டியின் அளவை ஏற்றிக் கொண்டே போய் 20 வறட்டியானவுடன் நிறுத்தி விட வேண்டும். 1 முதல் 2 அரிசி யெடை இச்செந்தூரத்தைத் தக்க அநுபானங்களில் கொடுக்கச் சகலவித அசீரணமும், குன்மமும், சூராவளிக்கு முன் எதிர்ப்பட்ட பட்சியைப் போலாகும்.

## 13. உலோக மண்டூரச் செந்தூரம்

இருப்பினுஞ் சிட்டை யிலவணைபெண் ணுண்கை
யிருப்பினுஞ் சிட்டை கணியின்பை—யிருப்பி
யரைத்துப் புடமிட்டி யேலுலோ கத்தைத
யரைத்துப்பு மண்டூர மாம். 281

இரும்பு கிட்டப்பொடி ½ பலம், கறியுப்பு, வெடியுப்பு, அட்டுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, ரசம், கந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு ½ விராகனெடை: இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடி செய்து, கையாந்தகரைச் சாற்ரு லரைத்து, இரண்டு புடமிடச் செந்தூரமாகும்.

தக்க அநுபானங்களில் கொடுக்க, மகோதரம், சோபை, பாண்டு, காமாலை இவைகள் தீரும்.



## 14. கந்தகச் செந்தூரம்

தேவி யுரத்தைச் சிவப்பாக்க வாமணக்கு
தேவி யுரத்தைத் திருக்குவளை—தேவி
யருக்க முறைப்படியே யாறுமையா ருக்கி
யருக்க முறைப்படியே யாம். 282

| சாறு | சாற்றினளவு | அரைப்புநாள் | வறட்டி |
|---|---|---|---|
| (1) ஆமணக்கிலைச்சாறு | 7 பலம் | 8 | 5 |
| (2) கற்பூரவள்ளி இலைச்சாறு | 7 பலம் | 7 | 10 |
| (3) உத்தாமணி இலைச்சாறு | 7 பலம் | 6 | 15 |
| (4) சீதேவி செங் கழுநீர்ச்சாறு | 7 பலம் | 5 | 20 |
| (5) தேவதாரு இலைச்சாறு | 7 பலம் | 4 | 26 |
| (6) எருக்கிலைச்சாறு | 7 பலம் | 3 | 30 |

ஒரு பலம் சுத்திசெய்த கந்தகத்துக்கு, மேற்சொன்ன வாறு சாற்றினளவாகச் சாறுகளை விட்டும், அரைப்பு நாள ளவாக அரைத்தும், வெயிலில் காயவைத்தும், வறட்டியன வாகப் புடமிட்டு மெடுக்கச் செந்தூரமாம்.

## 15. காந்தச் செந்தூரம்

பாரப்பா இன்னமொரு செந்தூ ரந்தான்
பாங்கான கந்திசமன் காந்தங் கூட
நேரேநீ கரிசாலைச் சாற்ரு லாட்டி
நினைவாக வில்லைதட்டிக் காயப் போட்டுச்
சாரப்பா ஓட்டிலிட்டு ஓடு மூடித்
தயவாகச் சீலைமண் ஏழுஞ் செய்து
பாரப்பா கெஜபுடத்திற் போட்டு வாங்கித்
தயவாக இவ்வெடைக்குக் கந்தி கூட்டே. 283

வாரப்பா கல்வத்தி லிட்டங் காட்டில்
வயணமென்ன வெங்காரத் தாலே மாளும்
நேரப்பா வரப்பொடிபோல் கருத்தி ருக்கும்
நேர்த்தியாய்ப் பொடியதனை கிழிபோற் கட்டே. 288

கிழிபோலக் கட்டியதவ் வண்ண மப்பா
கெட்டியாம் ரெட்டிலே கொட்டைப் பாக்காய்
வழிபோலக் கிழிகளெல்லாம் வெவ் வேருக
வரிசைபெறக் கட்டியொரு தாழி தன்னில்
ஒழிவான மணல்கொட்டி முக்கால் மட்டு
மொவ்வொன்று குழிமணலி லூன்றிப் பின்பு
தெளிவாக மணல்நிரம்ப விட்டு மப்பால்
சிறப்பாக வுலைமூடிக் கொண்டு மூட்டே. 289

மூட்டடா வரிசைபெறச் சாணளவு குழியு
முருகவே யெருவடுக்கி மேல்தாழி கவிழ்த்துப்
போட்டடா வெருவடுக்கி கசபுடத்தை நன்ருய்ப்
பொலிவாகக் கணேசனுக்குப் பூசைதனை நடத்தி
நாட்டடா வக்கினியை மூட்டுவொரு நாளும்
நயமாக மறுநாளு மாறியபின் னப்பா
சூட்டடா தேவிமுதல் வடுகனை நன்ருகத்
தொழுவதற்குப் பூசைவிதி தொடங்கு வாயே. 290

தொடங்குவாய் பலவகையும் நன்ருய்ச் செய்து
துதித்திந்தப் புடம்பிரித்துச் சூட்டி நீபார்
அடங்கினதோர் செந்தூரம் பூலாம்பழம்போல்
கப்பனே யிருக்குமதற் கைய மில்லை [கறுத்தங்
மடங்காதே மறுபடியும் புடம்போ டாதே
மகத்தான நோயெல்லாம் வாங்கும் வாங்கும்
புடங்காணப் போகாதே யனுபானந் தன்னைப்
பூட்டுவேன் வகையாகப் பூட்டுவேனே. 291



பூட்டடா திருகடுகு வெதுப்பித் தூளும்
புகட்டடா வெருகடியில் தேனுங் கூட்டி
பூட்டடா பணவெடை செந்தூர மத்தி
பிலத்ததற்கு மண்டலந்தான் பேணிப் பாரு
பூட்டடா சூலைபதி னெட்டு மல்லால்
பொல்லாத வாயுவிரு பத்தாறு நீங்கும்
பூட்டடா பதினறு குன்மமுளை மாந்தை
பொல்லாத சுரங்களெலிக் கடியும் போமே. 292

போமப்பா மந்தார காசமோ டீளை
பொருமியதோ ரிருமல் க்ஷயம் காயா சுவாசம்
போமப்பா சுரமாந்தை மூலமரை யாப்பு
பொருமாறு காமாலை யோனிச் சூலை
போமப்பா வாண்சூலை யண்டவாதம்
பொல்லாத துடைவாழை விப்புருதி பத்தும்
போமப்பா நாச்சூலை பக்கச்சூலை
பொறிசுற்றி வருங்கண்ட மாலை போமே. 293

போய்விடுமே கரப்பன்புண் கடிவிப் புருதி
புகைந்திருமு மீளைவிப் புருதி கூட
போய்விடுமே செந்தூரம் பணவெடை யினேடும்
புணிக்கமுறுஞ் சாதிக்காய் பத்திரி கிரும்பு
போய்விடுமே யதிவிடயம் வெதுப்பிய தூளப்பா
போக்குடனே வெருகடியிற் றேனுங் கூட்டே. 294

கூட்டியே வதிசாரம் பன்னிரண்டு வகையும்
கூறரிய கடுப்புமுதல் கூறு கூருய்
நீட்டியே செய்கின்ற கிராணிவகை யாறும்
நின்றுபோ மின்னமொரு பணவெடை செந்தூரம்
காட்டிலே வளர்கருணைக் கிழங்குலர்த்திப் பொடியும்
கடுஞ்சுருக்குத் திப்பிலியின் பொடியுங் கூட்டி
மூட்டியே வெருகடியிற் றேனுஞ்சேர்த் துண்ண
மூலவகை யொன்பதும் பவுத்திரமும் போமே. 295

போமப்பா பவுத்திரங்கள் நீரு யெல்லாம்
　　பூட்டுவேன் செந்தூரம் பணவெடையி லின்னம்
ஆமப்பா ஆவரையின் தைலத்தி லூட்டு
　　வப்பனே சதையடைப்பன் பதினெட்டு வகையும்
வேமப்பா நீரிழிவி லிருப தோடு
　　மேன்மேலு முள்ளுருக்கிப் பன்னிரண்டும் கூட
நாமப்பா வின்னங்கேள் மூத்திர வடைப்பு
　　நடுக்கெடுக்கு மூத்திரப் பிரமேயுந்தா னேறே. 296

ஆருக வருமேக மிருபத் தொன்று
　　மத்திசுர மெட்டுவகை யுஷ்ண மாறும்
நீருகுஞ் செந்தூரம் பணவெடையி னோடும்
　　நேர்த்திபெற வழிஞ்சிவிதைத் தைலத்தி லூட்டப்
பேரான வயிற்றுநோ யறுபதுடன் வாய்வு
　　புரண்டு திரண்டு ருத்திடுமுப் பத்திரண்டும்
கூரான விப்புருதி யெல்லாந் தீரும்
　　கூறுவே னின்னமனு பானங் கேளே. 297

கேளப்பா செந்தூரம் பணவெடையி லின்னம்
　　கெடியான வெருக்கிலையின் பழுப்பிலையை வாட்டி
நாளப்பா வொருசேரைத் தண்ணீரி லூட்ட
　　நலமான வயிறெடுக்கு மோருஞ்சோ றுண்ணு
கேளப்பா வொன்றுமில்லை யொன்றைவிட் டொருநாள்
　　கொண்டிடவே விஷபாகஞ் சோகை காமாலை
நீளப்பா சோபமொடு பயித்தியமும் பாண்டு
　　நீர்க்கோவை யகுவையொடு சுரமும்போய் விடுமே. 298

சுரம்போகு மிந்தச்செந் தூரத் தாலே
　　சொல்லரிதா மனுபானஞ் சூட்டக் கேளு
அரம்போலே நோயறுக்கு மப்பா சொன்னே
　　மாச்சரிய மாச்சரியம் பத்தியத்தைக் கேளு



பராபரைக்கும் மரனுரைத்த படிநான் சொன்னேன்
　　பத்தியந்தான் வெள்ளாட்டுப் பாலுங் கொள்ளு
திறப்படுத்தி விட்டப்பா சிற்றுப்பு கறிகள்
　　சீராட்டுக் கண்டமுதல் தேட லாமே. 299

சுத்தித்த இரசம் 1 பலம், கந்தகம் 1 பலம், பொரிகாரம் 1 பலம் இவைகளைக் கல்வத்திலிட்டு, முறைப்படி பொடித்து, பொடியை ரெட்டினுல் கொட்டைப் பாக்களவாய் கிழி கட்டி மணல் மறைவில் கிழிகளை மறையும்படி வரிசையாக வைத்து, 10 வறட்டி மணல் மேல் அடுக்கி எரித்து குளிர்ந்த பின் எடுத்து, ரெட்டுகளை நீக்கி மருந்தை எடுத்துப் பொடித்துக்கொள்ளவும், மருந்து பூலாம்பழம் போல் கறுப்பாக இருக்கும். திரிகடுகுத் தூள் வெருகடி, மருந்து 1 குன்றிமணியளவு தேனில் கொடுக்க மண்டல நாளில் சூலை 18, வாய்வு 26, குன்மம் 16, உளைமாந்தை, தீராச்சுரங்கள், எலிக்கடி, மந்தாரகாசம், ஈளை, இருமல், க்ஷயம் காச சுவாசம், சுர மாந்தை, மூலம், அரையாப்பு, காமாலை, யோனிச்சூலை, லிங்கச்சூலை. அண்டவாதம், தொடைவாழை, பத்துவகை விப்புருதி, பக்கசூலை, நாச்சூலை, கண்டமாலை, கரப்பான், புண் கடி, நீங்கும்.

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிவிடயம், இவைகளை வெதுப்பியதூள் வெருகடியுடன், ஒரு குன்றிமணியளவு தேன் சேர்த்துக் கொடுக்க அதிசாரம் 12, வயிற்றுக் கடுப்பு, அறுவகை கிராணி தீரும். காட்டுக்கருணை உலர்த்தி இடித்த பொடியும் கடுக்காய்ச் சூரணம், சுக்குப்பொடி, திப்பிலிப்பொடி இவைகள் கலந்த சூரணம் வெருகடியில், குன்றிமணியளவு செந்தூரம் சேர்த்துத் தேனில் கொடுக்க மூல வகைகளும் பவுத்திரமும் போம். ஆவாரைத் தைலத்தில் கொடுக்கச் சதையடைப்பு 18 வகையும், நீரிழிவு 20 ம், உள்ளுருக்கி 12 ம், மூத்திர அடைப்பு, அஸ்திசுரம், உஷ்ணம் தீரும். அழிஞ்சில்விதை குழித்தைலத்தில் கொடுக்க வயிற்று நோய், வாய்வுநோய் இவைகள் தீரும். எருக்கிலை பழுப்பை வாட்டிப் பிழிந்த சாற்றில் நாள்விட்டு நாள் உண்ண வயிறு,

எடுக்கும். மோர்ச்சோறு உண்ணவும். இந்தப் பரிகாரத்தால் விஷபாகம், சோகை, காமாலை, பயித்தியம், பாண்டு, நீர்க் கோவை, சுரம் போம். பத்தியம் வெள்ளாட்டு பாலும், சோறும். மறுபத்தியத்தில் சிறுஉப்பும் வெள்ளாட்டுக் கண்டமும் ஆகும்.

குறிப்பு:- கஜபுட மிட்டால் மருந்து புகைந்து விடும். இதில் கூறியபடி செய்ய மருந்து நல்லமுறையில் அமையும். இது எமது அனுபவம்.

## 17. சண்டமாருதம்

இருநெருப் பொருசுகனு மாமக
விருமலர்ச் செந்தூரமும்
அரையரைத் தொடியரைப் பொடிப்பட
வகலுமொட்டு ரோகங்களும்
திரிவித தொந்தமா மாகமுள்
வருசிறு பெரும்பல பிணிகள்போம்
பெரிதுபா ரனுபான பத்தியப்
பிழைகள்செய் திடிலே குமோ? 300

(க-ரை) இலிங்கம் இரண்டு, பூரம் ஒன்று, வீரம் கந்தி ரசசெந்தூரம் வகைக்கு அரைப் பாகமாகக் கூட்டி, முலைப் பால் விட்டு அரைக்கச் செந்தூரம் ஆகும். இதனால், ஒட்டு ரோகங்களும், மும்மலக் குற்றத்தாலுண்டாகும் சிறு பெரும் பிணிகளும் தீரும். அநுபானமும் பத்தியமும் அறிந்து கொடுக்கவும்.

## 18 சுயமாக்கினிச் செந்தூரம்

அயப்பொடியோ நான்கா மனல்காந்த மெட்டு
பயமில்லாச் சூதம் பதினு—றுயர்மிகுந்த
கந்தி யிதற்கிரட்டி கேள்குமரிச் சாறுவிட்டு
முந்தியிரு சாமமரை முன். 301



அரைத்தவில்லை தாலத்தி லப்பி வெயிலில்வை
நிரைத்தீபம் போலெறிந்து நிற்கும்—நரைக்குழலாய்
குன்ம மகோதரமுங் கூறுதிசை யாங்கவிசை
பன்னுமுளை மூலம்போம் பார். 302

மூல மகோதரமு மோசக்கி ராணியுட
ஞலமுறு மன்னபுளி யேப்பமறும்—ஞாலமதில்
அண்டவா தஞ்சன்னி யானவைக்கு மேபணந்தான்
உண்டுபா ரிஞ்சியிலோ டும். 303

அயப்பொடி 4 பங்கு, காந்தம் 8 பங்கு, இரசம் 16 பங்கு, கந்தகம் 32 பங்கு, இவைகளை முறைப்படி சுத்தித்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் குமரிச்சாற்றால் (கற்றாழைச் சாறு) இருசாமம் நன்றாக அரைத்து, தாம்பாளத்தில் வில்லை யாகத் தட்டி, வெயிலில் வைக்கக் காய்ந்து தீபம் போலெரிந்து அடங்கும். பொடித்துக் குப்பியிலடைக்கவும். இதனைக் குன்றிமணி யளவாக இஞ்சிச்சாற்றிலீய குன்மம், மகோதரம், கவிசை, முளைமூலம், கிராணி, புளித்தேப்பம், அண்டவாதம், சன்னி ஆகியவைகள் தீரும்.

## 19. தங்கச் செந்தூரம்

தங்கச்செந் தூரந் தகரை யரிதகிமா
தங்கச்செந் தூரந் தருமிரதந்—தங்க
வுமாபதிமெய் யாதியென வுள்ளபுட முந்த
வுமாபதிமெய் யாகமுடி யும் 304

| | சாறு | சாற்றினளவு | அரைப்புநாள் | வறட்டி |
|---|---|---|---|---|
| 1 | தகரைச் சமூலச்சாறு | 5 பலம் | 15 | 35 |
| 2 | கடுக்காயிலைச்சாறு | 4 பலம் | 10 | 32 |
| 3 | யானைக்காஞ் சொறிச்சாறு | 3 பலம் | 9 | 25 |
| 4 | பசறியிலைச்சாறு | 2 பலம் | 6 | 16 |

சுத்திசெய்த ஒரு பலம் தங்க அரப்பொடிக்கு, மேற் கூறிய சாற்றினளவாகவும், அரைப்பு நாளளவாகவும், காய வைத்தும், வறட்டியளவாகப் புடமிட்டு மெடுக்கச் செந்தூரமாம்.

(மற்ற விபரத்துக்குத் தேரையர் யமுகத்தைப் பார்க்க)

## 20. தாம்பிரச் செந்தூரம்

செய்தபின்பு குன்மமென்ற வகையெல் லாந்தான்
தீர்க்கவொரு மருந்து சொல்வேன் திறமாய்த் தேர்ந்து
தைவளையின் சாற்றாலே கந்தகத்தை யரைத்துச்
சாதகமாய் மூன்றுதின மரைத்த பின்பு
மைபோலே மெழுகாகுங் குகைபோல் பண்ணி
மண்ணென்ற குகைக்குள்ளே வைத்த பின்பு
கையென்ற செம்பதனைத் தகடாய்த் தட்டி
காஞ்சிரையின் பழச்சாற்றி லூறப் போடே. 305

போட்டு வைப்பாய் பட்சமொன்று சென்றுவாங்கி
புகழ்சீனக் காரத்தை மேலே பூசி
நாட்டமுடன் குகைதனிலே வைத்து மூடி
நலமான சீலைமண் தா னேழுஞ் செய்து
மூட்டுவாய் கஜபுடத்தி லொருபுடமாய்த் தானே
மூதண்ட மாகியது நீறிப் போகும்
பூட்டுவா யந்தெடைக்கு லிங்கங் கூட்டிப்
புகழாக வரைத்ததனை வில்லை தட்டே. 306

அரைப்பதுதா னெருக்கம்பா லதனு லாட்டி
யப்பனே யோட்டில்வைத்துக் கஜபுடமாய்ப் போடு
துரைக்குருவாஞ் செந்தூர முருக்கம் பூப்போல்
சொர்ணமென்ன விதற்கீடோ கன்ம மேது
அரைப்பணந்தான் திரிகடுகு தேனிற் கொள்ள
வஞ்சாத குன்மமெட்டும் வாழா தோடுங்
கரப்பனோடு பெருவயிறு நீராம் பல்கேள்
கதிகெட்ட மகோதரமுங் காணு தன்றே. 307



காணுமோ வுதரத்தி லுள்ள வாய்வு
கதித்தோடு மானந்த வாய்வி னோடு
வேணுமென்ற விஷபாகம் பிறநீர்க் கோவை
வீக்கமொடு கனத்திருந்த விஷநீ ரெல்லாங்
கோணுமே செந்தூரங் கண்ட போதே
கூட்டிலுள்ள நோய்களெல்லாங் குடிபோம் பாரு
ஆணுவத்தாற் சொன்னதடா விந்த நூல்தான்
ஆச்சரியஞ் சித்தருக்கா யறைந்தேன் பாரே. 308

தாம்பிரத் தகட்டை எட்டிப்பழச் சாற்றில் 15-நாள் ஊறப்போட்டு எடுக்கச் சுத்தியாம். நாளும் புதுச்சாற்றை உபயோகிக்கவும். கந்தகத்தை நல்வேளைச் சாற்றில் மூன்று தினம் மைபோலரைத்துக் குகைசெய்து, அதை மற்றொரு குகைக்குள் வைத்து, படிகாரத்தை தண்ணீரிலரைத்து, மேற்படி சுத்தித்த தாம்பிரத் தகட்டிற்குப்பூசிக் குகைக்குள் வைத்து, மேல்மூடி 7 சீலைமண் வன்மையாய்ச் செய்து, கஜ புடமிடத் தாம்பிரம் நீறிப்போம். நீறின தாம்பிர எடைக்கு இலிங்கம் சேர்த்து, எருக்கம்பாலால் அரைத்து வில்லைதட்டி ஓட்டிலிட்டுச் சீலைசெய்து கஜபுடமிட, முருக்கம் பூப்போல் சிவந்த செந்தூரமாகும். இதனை ½ முதல் 1 குன்றிமணியளவு திரிகடுகுத்தூள், தேன் சேர்த்து அநுபானிக்க, எண்வகைக் குன்மம், கரப்பான், பெருவயிறு, நீராம்பல், மகோதரம், உதரவாய்வு, ஆனந்தவாய்வு, விஷபாகம், புறநீர்க்கோவை, வீக்கம் தீரும்.

## 21. தாளகச் செந்தூரம்

பண்ணவே யரிதாரம் பொடியாய்ச் செய்து
பண்புடனே பூசினிக்காய்ச் சாறு தன்னில்
நிண்ணயமா யதையவித்துப் பின்னு மப்பா
நேரான கற்சுண்ணந் தண்ணீர் வார்த்தே

உண்ணவே சரிசமனாய் நல்லெண்ணெய் கூட்டி
யுடனவித்துப் பின்னுநல் லெண்ணெய் தன்னில்
கண்ணவே யவித்திடுவாய் முக்கா லப்பா
கசடறுமே யரிதாரஞ் சுத்தி யாச்சே. 309

ஆச்சப்பா மூக்கரைச் சாரணை தன்னை
அரைத்திரண் டடையாகத் தட்டி யப்பால்
வாய்ச்சந்த சட்டிக்கு ளடையை வைத்து
மாசற்ற வரிதார மேலே வைத்துத்
தாழ்ச்சியில்லா மறுவடையை மேலே வைத்துத்
தளப்பாமல் மேற்சட்டி கொண்டு மூடிப்
பாய்ச்சிடுவாய் சீலைமண் தா னேழு செய்து
பதரும லடுப்பேற்றி யனலை மூட்டே. 310

மூட்டியே யெரித்திடுவாய் சாம மெட்டு
முகிழ்விரியா மண்சீலை நன்றாய்ச் செய்து
நீட்டியதோர் செந்தூர மெடுத்துக் கொண்டு
நினைவாக வனுபானந் தன்னில் வைத்துத்
தாட்டிகமாய்த் தேனிலிடு மண்டைச் சூலை
தவறிவிடும் விஷங்களெலாந் தளர்ந்து போகும்
வாட்டிவிடுங் கண்ணோயு மிகுந்து கண்டால்
மாசற்ற பழச்சாற்றில் மருவித் தாக்கே. 311

தாளகத்தைப் பூசனிக்காய்ச் சாற்றில் தோலாந்திரமாக எரித்து எடுத்து, மேற்படியாகவே நல்லெண்ணெய்யும் கற்சுண்ண நீரும் சமமாகக் கலந்து, தோலாக்கிரமாக எரித்து எடுத்து, பிறகு நல்லெண்ணெயிலும் ஒருமுறை செய்யச் சுத்தியாம்.

மூக்கிரட்டைச் சமூலத்தை நன்றாக அரைத்து இரண்டு அடையாகத் தட்டி, ஒரு அடையை ஒரு சட்டியில் வைத்து, அதன்மீது சுத்தித்த தாளகத்தை வைத்து மற்றொரு அடையால் மூடி, சட்டிக்கு வாய்ப்பொருத்தமான மற்றொரு சட்டி



யால் மூடி, 7 மண்சீலை செய்து, 8 சாமம் அடுப்பில் இட்டு எரிக்கச் செந்தூரமாம். இச்செந்தூரத்தை $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி யளவு தேனில் ஈய, மண்டைச்சூலை, விஷங்கள் தீரும். கண்ணோய்க்குப் பழச்சாற்றில் கொடுக்கவும்.

வேறு

தாக்கும் வாத மதுதனக்குத் தாங்காப்
பனைவெட்டில் பணவெடை கொள்
ஆக்கும் பிரமேக மதுகண்டா
லதற்குப் பூசனிப் பழச்சாறு
போக்கில் லாத நீரடைப்பன்
பொருந்தும் வெள்ளரிக் காய்த்தண்ணீர்
மாய்க்குஞ் சூதக வாய்வுக்கு
வாரு மாவின் பால்குணமாம். 312

மலமுஞ் சலமுங் கட்டிவிட்டால்
வறுத்துக் கோழி முட்டையினோ
டெலியின் புழுக்கை கோழிக்கார
மியன்ற கோழிக் கருவுடனே
நலமா யிவையெல் லாம்பொடிசெய்
நன்றாய் வெள்ளரிக் காய்வெதுப்பு
அலமாந் தண்ணீர் தானிடவே
யான கல்லு மகன்றிடுமே. 313

மேற்படி செந்தூரத்தை வாதநோய்க்கு பனைவெட்டிலும், பிரமேகத்துக்குப் பூசனிப்பழச் சாற்றிலும், நீரடைப்புக்கு வெள்ளரிக்காய்த் தண்ணீரிலும், சூதக வாய்வுக்குப் பசுவின் பாலிலும், மலசலக்கட்டுக்கு வறுத்த கோழி முட்டை ஓடு, எலிப் புழுக்கை, கோழிக்காரம், இவைகளை கோழிமுட்டை வெண்கருவா லரைத்து வயிற்றுக்குப் பற்றிட்டு, உள்ளுக்கு தாளகச் செந்தூரத்தை வெள்ளரிக்காய் வெதுப்பியச் சாற்றிலும் கொடுக்கத் தீரும்.

## 22. நாகச் செந்தூரம்

சுத்திசெய்த நாகந் துலங்குபல நான்காக
நத்தியோர் சட்டியிட்டு நன்குருகு—மத்ததியில்
நாழி வெடியுப்பு நல்லோமஞ் சுக்குமஞ்சள்
வாழி பொடியிட்டு வறு. 314

இட்டு வறுத்ததூ ளேங்காதே நாயுருவி
பொட்டா யிடித்ததையும் போட்டுவறு—நட்டமற
மாதுளம்பூப் போலாக மானே பழச்சாற்றாற்
போதமுற வேபுடத்தைப் போடு 315

போட்டெடுத்த செந்தூரம் போற்றிப்
பணவெடையாய்ச்
சூட்டுந் திரிகடுகின் சூரணத்தில்—ஊட்டக்கேள்
குன்மம் பெருவயிறு கூறுதிசை யாங்கவிசை
பன்னுலகில் மூலமும்போம் பார். 316

மூலம்போ மேகவகை மூளுந்தொண் ணூற்றாறும்
காலுடனே கையெரிவுங் காணாது—வேல்விழியே
மேகத் தடிப்புகுட்டம் விந்துநட் டம்வெள்ளை
பாகத்திற் போய்ப்பதுங்கும் பார். 317

சுத்தித்த நாகத்தை 4 பலம் ஒரு சட்டியில் இட்டு, உருகும் போது, வெடியுப்பு, ஓமம், சுக்கு, மஞ்சள் இந்நான்கும் சேர்ந்த பொடி ஒருபடியைச் சிறிதுசிறிதாக நாகத்திலிட்டு வறுக்கத் தூளாகும். பிறகு நாயுருவியை இடித்துப் போட்டு மேலும் வறுக்கவும். பொடியைப் பழச்சாற்றாலரைத்து மாதுளம்பூ நிறம் வரும்வரை புடமிட்டெடுக்கவும்.

குன்றிமணியளவு திரிகடுகுச் சூரணத்தில் கொடுக்கவும். குன்மம், பெருவயிறு, கவிசை, மூலம், 96-வகை மேகம், காலெரிவு, கையெரிவு, மேகத்தடிப்பு, குட்டம், விந்து நட்டம், வெள்ளை தீரும்.



## 23. பூரணச் சந்திரோதயம்

ஆடக ரேக்கது வோபல மொன்று
கோடகச் சத்தி தூக்கிட ரெண்பலம்
புண்ணிய மெண்பலம் போட்டிடு கல்வத்தில்
நண்ணும் பருத்திப் பூச்சாற்றரை வாழையில்
இருநா ளரைத்தெடுத் துப்பிடி வில்லை
பூரா ரவியி லுலர்த்திப் பொடித்திட்டு
அரைவளை குப்பிக் கடைத்திட் டொருநா
ளெரியிடு திரிதீ யாறி யெடுத்ததைப்
பார்க்கமூன் றாம்பிறைப் பனிமதி போலச்
சேர்க்க விதனைச் செலுத்திப் பரணியில்
கற்பூ ராதிச் சூரணத் திற்கலந்
துற்பன வெள்ளிலை யுள்ளோர் பணவெடை
இட்டிட வெண்சய மீளை யெலிகடி
கட்டு மலஞ்சீக் கிராணி கடுப்புகா
மாலை குன்மஞ் சுரமேகம் வெட்டை
சூலை குடைச்சல் துன்மாங் கிசமுடன்
தீரும்வெண் பித்தஞ் சிலேத்தும சுரநோய்
பாரும் வியாதி பறந்தே யொழிந்திடும்
கற்பம தாகக் காணிதை யருந்தக்
கற்பாந்த மாகக் காய மழியாது
வீரிய விருத்தியா மெல்லிய ராசையுள்
பாரீர் சையோகம் பண்ண வெகுவிருத்தி
காயஞ் சிவக்குங் கண்கள் சிவப்பேறும்
ஆயுளும் பெருகு மருள்விந்து கட்டிடும்
ஆல மிதுசித் தடையுமூன் றாம்பிறை
போலச்சந் திரோதயம் புகன்றனன் முனியே. 318

தங்கரேக்கு 1 பலம், இரசம் 8 பலம், கந்தகம் 16 பலம் இவைகளைத் தூய்மைசெய்து, முறைப்படி கல்வத்திலிட்டுப் பொடித்து, செம்பருத்திப் பூச்சாற்றாலும், வாழைக் கிழங்கின் சாற்றாலும் முறையே இரண்டிரண்டு நாளரைத்து, வில்லை செய்துலர்த்திப் பொடித்துக் காசிக் குப்பியிலடைத்து,

மணல் மறைவில் ஒருநாளெரித்து (24-மணிநேரம்), ஆற விட்டெடுக்கச் சிவந்த செந்தூரமாம். பொடித்துப் பரணியில் அடைக்கவும்.

இதனை ½ முதல் 1 குன்றிமணியளவு கற்பூராதிச் சூரணத்தில் கலந்து வெற்றிலைச் சாற்றில் கொள்ள, சயம், ஈளை, எலிக்கடி, மலக்கட்டு, சீக்கிராணி, கடுப்புக்கிராணி, காமாலை, குன்மம், சுரம், மேகம், வெட்டை, சூலை, குடைச்சல், துன்மாங்கிசம், பித்த சிலேத்துமச் சுரப்பிணி இவைகள் தீரும்.

கற்பமாக இச்செந்தூரத்தைக் கொள்ளக் காயம் கற்பாந்தமாகும்; அழியாது. வீரியவளர்ச்சி, பெண்ணாசை, சையோகவளர்ச்சி, இவைகளுண்டாம். உடல் இரத்தப்பெருக்கால் செம்மை நிறமடையும், கண்கள் சிவக்கும், ஆயுள் பெருகும், விந்து கட்டும்.

## 24. மண்டூரச் செந்தூரம்

(எண்சீர் விருத்தம்)

கேளடா வாயிரந்தான் வருஷஞ் சென்ற
கெடியான சிட்டமது கொண்டு வந்து
தாளடா வாவினீர் தன்னி லேதான்
தளமாகக் காய்ச்சியே தோய்ச்சுத் தோய்ச்சு
வேளடா பத்துவிசை தோய்ச்செ டுத்து
விருதான கல்வத்திற் பொடியாய்ச் செய்து
நாளடா பத்திலொன்று கெந்தி சூதம்
நலமான லிங்கமுப்பு வெண்காரங் கூட்டே. 319

கூட்டியே பழச்சாற்றில் புடந்தான் பத்து
கூசாதே கரிசாலைப் புடந்தான் பத்து
ஆட்டியே செருப்படையில் புடந்தான் பத்து
அப்பனே செம்பைச்சாறு புடந்தான் பத்து



நீட்டியே யரசனிட பட்டைச் சாற்றில்
நேராகப் புடமஞ்சு போட் டெடுத்து
நாட்டியே செந்தூரம் பொடிதான் செய்து
நலமான பரணிதனி லடைத்துக் கொள்ளே. 320

கொள்ளவே திரிகடுகு தேனி லேதான்
கூசாதே பணமிரண்டு கூட்டிக் கொள்ள
விள்ளவே விஷபாண்டு காமாலை யாறும்
விருதான பாண்டுவகை குடிபோ மப்பா
தள்ளவே பித்தமெல்லாங் கீழே சாடும்
தளமான சேத்துமநோய் தொண்ணூற் றாறும்
கள்ளவே கடல்புக்குக் காணாதோடும்
கண்டாயோ வெண்பாண்டங் கரும்பாண்ட
மாமே. 321

ஆமப்பா வரோகங்க ளன்னத் துவேஷம்
அகலாத வாந்திவிக்கல் அகன்று போகும்
தாமப்பா வாயுவென்ற தெல்லாம் போகும்
தளமான நீர்த்தோட நாடா தோடும்
காமப்பா லூறுமடா தேக மின்னும்
கலகலெனத் தேகமுழு திறுகிப் போகும்
நாமப்பா கண்டபடி சொன்னோ மின்னம்
நலமான வப்பிரக வகைசொல் வேனே. 322

ஆயிரம் வருடம் சென்ற இரும்புக் கிட்டத்தை (மண்டூரத்தை) நெருப்பிட்டுக் காய்ச்சிப் பசுவின் நீரிலே 10-முறை தோய்க்கச் சுத்தியாகும். ஒவ்வொரு முறையும் புதிதான மூத்திரத்தை உபயோகிக்கவும். இவ்வாறு சுத்தி செய்த மண்டூரம் 1 பங்கு, கந்தகம் 1/10 பங்கு, இரசம் 1/10 பங்கு, இலிங்கம் 1/10 பங்கு, உப்பு 1/10 பங்கு, வெங்காரம் 1/10 பங்கு இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பழச்சாற்றால் 10 புடமும், கரிசாலைச் சாற்றால் 10 புடமும், செருப்படையில் 10 புடமும், செம்பைச்சாற்றில் 10 புடமும்,

அரசம்பட்டைச் சாற்றில் 5 புடமும் போட்டுப் பொடித்துக் கொள்ளவும். குன்றிமணியளவு திரிகடுகுத்தூள் தேனில் கொள்ள விஷபாண்டு, காமாலை, பாண்டு நோய்கள், பித்த நோய், சேத்துமநோய் 96, அரோசகம், அன்னத் துவேஷம், தீராவாந்தி, விக்கல், வாய்வு, நீர்த்தோஷம் இவைகள் தீரும். காமம் சுரக்கும், தேகம் மின்னும், உடல் இறுகும்.

## 25. க்ஷயகுலாந்தகச் செந்தூரம்

(எண்சீர் விருத்தம்)

இளைப்பான ரோகமது தீரவென்றால்
இயம்புவேன் க்ஷயகுலாந் தகச்செந் தூரம்
பிழைப்பாக வாயிரத்தைந் நூற்றிற் சொன்ன
பேச்சல்ல விந்தமுறை பேணிப் பாரு
உளைப்பான மால்தேவி பலமதொன்று
முற்றவெண் பூசினிக்காய் நீரிற் காய்ச்சித்
திளைப்பான தோளேந்திர மாகத் தூக்கிச்
செங்கிளுவைச் சாற்றினிலுஞ் சுத்தி செய்யே. 323

செய்திட்ட வரிதாரஞ் சமனுப் பூரஞ்
சிலைகூட்டி யெருக்கின்பா றன்று லாட்டிக்
கொய்திட்ட குகையிலிட்டுப் புடத்தைப் போடு
கொடுமையெல்லாந் தான்புகைந்து சாம்பராகும்
எய்திட்ட வவ்வெடைக்குப் பவழங் கன்று
ரிவைசேர்த்து முன்போலப் புடத்தைப் போடு
நைதிட்டு வெந்திடுமவ் வெடைக் கிலிங்கம்
நாலிலொன்று தங்கமரை சுந்தி காலே. 324

கால்கூட்டிக் காந்தமொரு பலமுஞ் சேர்த்துக்
கனமான குமரிநீர் முருக்கம் பூநீர்
சால்கூட்டிப் புடம்போடு செந்தூ ரிக்குந்
தளுக்கற்றுச் செந்தூரம் புடமைந் தானால்



வால்கூட்டிக் குழையிலே யடைத்துக் கொண்டு
வாகனே திரிகடுகு தேனி லுண்ணப்
பால்கூட்டிப் பத்தியங்கொள் கறுத்தாட்டின்பால்
பத்துநாள் மருந்துண்ணப் பலிக்கும் நன்றே. 325

தாளகம் பலம் ஒன்றை முற்றிய வெண்பூசனிக்காய் நீரில் தோளாந்திரமாக எரிக்கவும். இவ்விதமாகவே செங்கிளுவைச் சாற்றினாலும் செய்யவும். சுத்தியான தாளகத்தின் எடைக்கு சமன் இரசக்கர்ப்பூரம், மனோசிலை சேர்த்து எருக்கம்பாலால் அரைத்து, வில்லைதட்டிக் குகையிலிட்டு, இலகு புடமாகப்போட பற்பம் சாம்பல் நிறமாக இருக்கும். அந்த பற்பத்தின் எடைக்குப் பவளம், கல்நார் இவ்விரண்டையும் சேர்த்து, முன்போலவே எருக்கம் பாலால் ஆட்டிப் புடமிடவும். புடமிட்டு எடுத்த மருந்தெடைக்கு இலிங்கம் ¼-ம், தங்கம் ½-ம், சுந்தி ¼-ம் காந்தம் 1-ம் பலமாகக் கொண்டு குமரி நீராலும் முருக்கம்பூ நீராலும் அரைத்து 1 புடமும் இவ்வாறே மறுமுறை ஒரு புடமும் போட்டு எடுக்கச் செந்தூரமாகும். தக்க அளவில் திரிகடுகு தேன் அநுபானித்துக் கொடுக்க க்ஷயம், காசம், சுவாசம், கபநோய்கள் தீரும். பத்தியம் வெள்ளாட்டுப்பால் கூட்டவும்; மருந்துண்ணும் நாள் அளவு 10.

## 26. காடிக்காரச் செந்தூரம்

1. இலிங்கம் பலம் ஒன்று. 2. இரசச்செந்தூரம் பலம் ஒன்று. இவ்விரண்டையும் தனித்தனிப் பொடிக்கவும். 3. காடிகாரம் பலம் ஒன்று. இதையும் தனியாகப் பொடிக்கவும்.

ஒரு கல்கார்க்குப் புட்டியில், முதலில் இரசச் செந்தூரத் தூளில் பாதி பாகம் போட்டு, அதன்மீது இலிங்கத்தூளில் பாதிபோட்டு, அதன்மீது காடிக்காரத்தூள் முற்றுங்கொட்டி, பிறகு மிகுதியாயுள்ள இலிங்கத்தூளையும் அதன்மீது இரசச்

செந்தூரத்தையும் கொட்டி, காற்று நுழையாவண்ணம் மூடியிட்டு, தோல் பட்டையினுல் புட்டி தெரியாமல் சுற்றி வரைந்து கட்டி, வேகவைத்துக் கொட்டின நெற்குவியல் மத்தியில் புதைக்கவும். சூடாறியபின் கல்வத்திட்டு அரைத்தெடுக்கவும்.

அளவு:- ½ முதல் 1 அரிசி எடை, அனுபானம்—தேன், இஞ்சிச்சாறு, துளசிச்சாறு. தீரும் நோய்—பாரிசவாதம் முதலிய வாதரோகங்களும் ஊழிபோன்ற பேதிகளும் நீங்கும்.

## 27. படிகலிங்கச் செந்தூரம்

இலிங்கம் 1 பலம், படிகாரம் 8 பலம் இவைகளைத் தனித்தனி நன்ருக மைபோல் பொடித்துப் பிறகு இரண்டையுங் கலந்தரைக்கவும். கடுக்காய்ப்பூ 1 பலம், காட்டாத்திப்பூ 3 பலம், இவ்விரண்டையும் ½ படி நீரிலிட்டு 1/8 படியாகச் சுண்டக் காய்ச்சவும். இக்கியாழத்தால் மேல் கலந்தரைத்ததை யரைத்துப் பொடியாக்கிப் புட்டியிலடைக்கவும்.

3 முதல் 5 குன்றிமணி யளவுவரை நெய், வெண்ணெயில் கொடுக்க, சீதபேதி, ரத்தபேதி, பெரும்பாடு நிவாரணமாகும்.

## 28. சிருங்கிச் செந்தூரம்

மான் கொம்பை வேண்டிய அளவு துண்டு துண்டாக வெட்டி, அகத்திக்கீரைச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்துச் சுத்த நீர்விட்டுக் கழுவவும். இவ்வாறே மீண்டும் 3-நாள் செய்யச் சுத்தியாகும். பிறகு ஏலரிசியை நீர்விட்டு மைபோல் அரைத்து, இரண்டு நூல்கனம் கொம்புத் துண்டுகளின்மீது பூசி யுலர்த்திப் புடமிட வெளுத்துத் தூளாகும். இப்பொடியைக் கல்வத்திட்டுச் சதுரக்கள்ளிச் செயனீராலரைத்து, வில்லை செய்துலர்த்திப் புடமிடவும். இவ்வாறு 10 புடமிட உயர்தரச் செந்தூரமாகும். இதில் 1 முதல் 3 அரிசியளவு



நெய்யில் கொடுக்க, உட்சூடு மார்புவலி எலும்புருக்கி போன்ற நோய்கள் தீரும்.

## 29. துருசுச் செந்தூரம்

துருசு 1 பலம், வேப்பிலை இரண்டு பலம், இவற்றை நீர்விடாமல் கல்வத்திட்டரைத்து வில்லை செய்யவும். பிறகு பிரண்டையை அரைத்து, அதற்குள் இவ்வில்லையைப் பொதிந்து, முற்றும் காய்வதற்குள் 10 வறட்டியில் புடமிடவும். இவ்வாறே செந்தூரமாகு மட்டும் புடமிடவும். இதில் கால் முதல் அரை குன்றிமணியளவு தக்க அனுபானத்திலீய குன்மம், சூலை, மகோதரம், வாத-பித்த கபரோகங்கள் பலவும் தீரும்.

## 30. படிகாரச் செந்தூரம்

சுத்தி செய்த படிகாரத்தைப் பொரித்து ஒரு பலம் எடுத்து, அதற்கு நாலிலொரு பாகம் இலிங்கங்கூட்டி, எலுமிச்சம் பழச்சாற்ருலாட்டி வில்லை செய்துலர்த்தி 10-வறட்டியில் புடமிடவும். ஒவ்வொரு புடத்துக்குப்பின் தேறின எடைக்குக் கால் பாகம் இலிங்கம் சேர்த்து வரவும். இதில் ஒன்று முதல் இரண்டு குன்றிமணிப் பிரமாணம் வெண்ணெய் அல்லது நெய்யில் சேர்த்துக்கொடுக்க சீதபேதி, இரத்தபேதி பெரும்பாடு நீங்கும்.

## 31. வெள்ளிச் செந்தூரம்

ஐந்து பலம் கந்தகத்தைப் பொடித்து, ஒரு சட்டியிலிட்டு, ஒரு பலம் வெள்ளியைத் தகடு தட்டிச் சுருட்டி அதன் மத்தியில் முழுகும்படி அமர்த்தி, சட்டி கொண்டு மூடி சிரட்டைஓடு 100 கொண்டு எரித்தெடுக்கச் செந்தூரமாகும். இதை மிகக் கவனத்தோடு செய்யவும்.

அளவு:—ஒரு நெல்லரிசி முதல் நெல்மணி வரை அநுபானமறிந்து கொடுக்க, சுரம், சந்நிபாதம், பாண்டு, காமாலை, குன்மம, சூலை, க்ஷயம், பிடிப்பு, தேமல், மேகநீர் நீங்கும்.

# 4. சுண்ணம்

## 1. வெடியுப்புச் சுண்ணம்

அறுவகைச் செய்நீர் ஒருபலமெடுத்து, அதில் வெங்காரப் பொரி கால் பலமும், படிகாரப் பொரி கால் பலமுங் கூட்டி, ஒரு பீங்கானில் சேர்த்து, ஒரு சட்டியில் 3 அங்குலம் மணல் கொட்டி, அதன்மீது பீங்கானை வைத்து எரித்துச் சுண்ண மானபிறகு எடுத்துப் பதனம் பண்ணவும்; இதுவே வெடி யுப்புச் சுண்ணம். அரை முதல் ஒரு அரிசி எடை, இளநீர், முள்ளங்கி அல்லது சிறுபீளைச்சாறு இவைகளில் கொடுக்க வும். நீர்க்கட்டு, நீரடைப்பு, நீர் எரிச்சல் தீரும்.

# 5. கருப்பு

## 1. கத்தூரிக் கருப்பு

பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனம், இலிங் கம், பூரம், கந்தகம், தாளகம், மனோசிலை, இரசம், இரசச் செந்தூரம்—இவைகள் வகைக்கு 2½ வாரகனெடை; திப்பிலி, ஓமம் வகைக்கு 3¾ வராகனெடை, கஸ்தூரி ½ வராகனெடை இவைகளை முறைப்படி சுத்தித்துக் கல்வத்தில் முதலில் கந்தகத்தை நன்றாகப் பட்டுப்போல் பொடித்து, அதில் இரசத்தைச் சேர்த்துக் கருநிறமடையும் வரை நன்றாக அரைத்து, அதற்குப்பின் இலிங்கம், இரசச் செந்தூரம், தாளகம், மனோசிலை, பூரம் இவைகளை ஒன்றன்பின் ஒன்றாக மைபோல் அரைத்து, திப்பிலி, ஓமம் இவையிரண்டையும் புன்வறுவலாக வறுத்துப் பொடித்து வடிகட்டியதைக் கூட்டியரைத்து, அதில் கஸ்தூரி, கோரோசனம், குங்குமப் பூ, பச்சைக்கற்பூரம் இவைகளை மைபோலரைத்து, மேற்படி மருந்துகளுடன் சேர்த்தரைத்து, காற்றுப்புகாக் குப்பியில் அடைக்கவும்.

அளவு:— ½ முதல் 1 குன்றிமணி அளவு தேன், முலைப் பால், இஞ்சிநீர் இவைகளில் கொடுக்க, சளி, சுரம், இருமல், இரைப்பு முதலிய கபநோய்கள் தீரும். உடல் சில்லிட்டால் இதனைக் கொடுக்கச் சூட்டை உண்டாக்கும்,

## 2. தாளகக் கருப்பு

சுத்தித்த தாளகம் 1 பங்கு, நத்தைத் தசை 2 பங்கு, தாளகத்தைக் கல்வத்திலிட்டு நன்ருகப் பொடித்து நத்தைத் தசையைச் சிறிது சிறிதாகக் கூட்டி நன்ருக அரைத்து வில்லை தட்டி இலகு புடமிடக் கறுப்பு நிறத்தையடையும். பொடித்துக் குப்பியிலடைக்கவும்.

அளவு:—½ முதல், ஒரு குன்றிமணியளவு தேனில் கொடுக்கக் காசம், சுவாசம் இவைகள் தீரும்.

## 3. கோரோசனத் துகள்

கும்பமுனியுரைத்த கோரோசனை பற்பம்
அம்புவியோர்க் கூட்டு மடைவுகேள்—வம்புசெறி
காமன்பிறை லவணங் கார்த்துடியோர் சாதிகால்
நாமப் புனலியினற் கிழங்கொன்—றேமமதாய்ச்
சந்திரன் கால்பாலில் தளம்பெறவே தூள்படுத்தி
விந்தையொடு தந்தச் சிமிளில் வைத்—தந்தத்
தனியாக்குடி நீரில் மூன்றுவிரல் தானுண்
பனியாகும் பாண்டு விடபாகம்—கனியாப்
பெருவயிறு நீராம்பல் பேரா நீர்க்கோவை
சுரமுங் குளிருந் துகள். 326

திப்பிலி, வெந்தயம், சீரகம், ஏலம் வகைக்கு 1 பங்கு. கோரோசனை ½ பங்கு, வெள்ளைச் சத்திச் சாரணைவேர் 1பங்கு, வாளம் 3/8 பங்கு, இவைகளைத் தனித்தனியே பொடித்துச் சூரணித்து ஒன்று கூட்டி, வெருகடியளவு தனியாக் குடிநீரில் கொடுக்க வாந்தியாகும்.

தீரும் நோய்:—பாண்டு, விஷபாகம், பெருவயிறு, நீராம்பல், நீர்க்கோவை, சுரம் முதலியன.

குறிப்பு:—குழந்தைகட்கு மார்ச்சளி கட்டிக்கொண்டு வெளிப்படாமல் மூச்சைத் திணரச் செய்யும் சமயத்தில்



இதனைச் சிறப்பாகக் கொடுக்கச் சிறந்த பலனை அளிக்கும். உத்தாமணிச்சாறு அல்லது இலைக்கள்ளியை வாட்டிப் பிழிந்தச் சாற்றிலேனும் கொடுக்க வாந்தியாகிக் கோழை வெளிப்பட்டு, நலத்தைக் கொடுக்கும். வெருகடி என அளவு கூறியிருப்பினும் ¼, ½, ¾, 1 குன்றிமணி யளவுக்கு மேல் கொடுக்கக் கூடாது.

## 4. சிவனர் அமிர்தம்

இரவியோ டிரதம் நாபி இசைந்த கந்தகமே சுக்கு
மருவியசிலை வெங்காரம் மாகதி வகைக்கோ ரொன்று
தருகிய மிளகோரெட்டு சார்ந்தநற் கல்வத் தீந்து
பருவமாய் நாள்க ளேழு பதமுட னரைத்தி டாயே. 327

அரைத்திடப் பொடி கறுப்பா மனுபான விசேடத் தீய
வருத்து மெண்பதுவாம் வாதம் வன்பித்தம் நாற்பதோடு
இருத்திய திருபதையும் இயம்பிய சுவாசம் ஐந்தும்
பெருத்ததோர் குட்டங் குன்மம் பெருகிய ஜன்னி
தானே. 328

ஜன்னியு மூலரோகம் க்ஷயமுடன் மகோதரங்கள்
வன்னிய வரணை தேள்கள் வல்விடம் குமர கண்டன்
பன்னிய நசியஞ்செய்து பணவெடை கொள்வீராகில்
எண்ணிய சிவனு ரமிர்தம் ஈசனு ருரைத்தவாறே. 329

இருவி, இரசம், கருநாபி, நெல்லிக்காய்கந்தகம், சுக்கு, மனேசிலை, வெங்காரம், அரிசித் திப்பிலி, ஆகிய இவைகள் வகைக்கு 1 பலம், மிளகு 8 பலம், இவைகளை முறைப்படி சுத்திசெய்து, தனித்தனியே சூரணமாக்கி, மேற் கூறிய அளவாக நிறுத்துக்கொண்டு கல்வத்திலிட்டு, 7 நாட்கள் விடாமல் அரைத்திடவும். இது கறுப்பு நிறத்தை அடையும், துணை மருந்தின் சிறப்பால் 80 வகை வாதம், 40 வகை பித்தம், 20 வகை கபம், 5 வகை சுவாசம், குட்டம், குன்மம், சன்னி, மூலநோய், க்ஷயம், பெருவயிறு இவைகள் தீரும்.

அரணை, தேள் முதலிய கடிவிடங்கள், குமரகண்டவலி இவைகட்கு மேற்படி மருந்தை ஆக்கிராணமிடத் தீரும்,

குறிப்பு:—சிலர் இருவியைச் சேர்த்தும் சேர்க்காமலும் செய்கின்றனர். இருவியைச் சேர்ப்பின் பத்தியம் கடுமையாகக் காக்கவேண்டும் என்பர்.

## 5. பட்டுக் கருப்பு

இலிங்கரச கந்திசசி காந்தவெள்ளை வகளுரும்
எழிளுவி கிராம்பொன் பதில்
இரண்டொன் ருறரையி லெய்து கடைகாலாக
வியற்ருெடியி னிறைசெய்தவை
வலிந்தா மணக்குநெய் யொருதொடி யிளுலரைசெய்
மன்னியோ ருண்டைசெய்பின்
வன்னியின் வேர்ப்பட்டை யெண்டொடி யரைத்ததை
மாட்டிவிடு போர்வையாக
மலிந்திடா வரக்குநிற பட்டினைச் சுற்றியே
மணலினிடை வைபுடமதாய்
வல்லெருவ தோவதற் கைம்பதா மதன்பினர்
வாங்கியோர் தண்டுலமதே
பொலிந்திடி னிரண்டதே பூட்டிவிடு தேனினிற்
போக்கொளு மலினவெம்மை
போயுரு வயிற்றுவலி யதன்சந்நி நீங்குமெனப்
போற்று பட்டுக்கறுப் பனே. 330

இலிங்கம் இரதம் வகைக்கு ஒன்று; கெந்தி-பூரம்-வீரம்-வெள்ளை-காந்தம் நாபி இவ்வாறும் வகைக்கு அரை; கிராம்பு கால் எடையாகும்.

சரக்குகளைத் தனித்தனியே கல்வத்திலிட்டுப் பொடித்து, முறைப்படி சேர்த்த ஆமணக்கெண்ணெய் 1 பலம் விட்டு அரைத்து. உருண்டையாக வுருட்டி, சித்திரமூல வேர்ப் பட்டை 8 பலத்தை அரைத்து, அதன் மத்தியில் மேற்படி



யுருண்டையை வைத்து மூடி, சித்திரமூலக் கவசத்தின் மீது அரக்குப்பட்டினுல் சுற்றிச் சீலைமண் செய்து காய வைத்து, மணல் மறைவில் ஐம்பது எருவில் புடமிடவும். சீலையை நீக்கி மருந்தைப் பொடித்துக் குப்பியிலடைக்கவும். 1 முதல் 2 அரிசியளவு தேனில் கொடுக்கச் சூதகசூலை, சூதகச்சன்னி, சூதகவெட்டை ஆகிய இவைகள் தீரும்.

குறிப்பு:—மணல் மறைவில் புடமிட்ட பிறகு, புடம் எரியும் சமயத்தில் கந்தகமணம் வீசும். அப்போது புடத்தைக் கலைத்து மருந்தை அப்புறப்படுத்தவும். இல்லையேல் மருந்தெல்லாம் புகைந்து போய்விடும்.

விளக்கெண்ணெய் விட்டு அரைப்பதால் உருண்டை செய்ய வராது. ஆகையால் மருந்தைக் கல்வத்தில் விளக்கெண்ணெய் விட்டு அரைக்கும் பொழுது, வேண்டுமளவு மூக்கிரட்டை இலைகளைச் சேர்த்து அரைக்கவும்.

# 6. பதங்கம்

## 1. இலிங்கப் பதங்கம்

சுத்தித்த லிங்கத்தை வெடியுப்புத் திராவகம் விட்டரைத்து, வில்லை செய்துலர்த்தி ஒரு சட்டியில் வைத்து, மேற்சட்டி கொண்டு மூடி, அடுப்பின்மீது வைத்தெரிக்க மேற்சட்டியில் பதங்கம் ஏறி இருக்கும். அதை வழித்தெடுத்து மறுபடியும் இவ்வாறே 3 அல்லது 5 தரம் செய்யப் பதங்கம் அடிச்சட்டியில் தங்கும். இதுவும் அடியிற்கண்ட திரிமூர்த்திப் பதங்கமும், இரச பற்பத்தால் தீரும் நோய்களை நீக்கும்.

## 2. திருமூர்த்திப் பதங்கம்

வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் இவைகளைச் சமனெடை எடுத்துத் தூள்செய்து, சட்டியிலிட்டு, மேற்சட்டி கொண்டு மூடி, அடுப்பிட்டு எரிக்கப் பதங்கம் மேற்சட்டியிற் பதங்கியிருக்கும். இதை வழித்தெடுத்து அடிச்சட்டியிலிட்டு மறுபடியும் எரிக்க. இவ்வாறு 5 தடவை செய்ய, பதங்கம் அடியில் தங்கும்.

## 3. பறங்கிப்பட்டைப் பதங்கம்

பாரே தான் பறங்கிதனின் பட்டையப்பா
பாங்காகப் பலமைந்து நிறுத்துக் கொண்டு
சேரேதான் பொடிப் பொடியாய்க் கண்டமாக்கிச்
சிறப்பாக வேசரியின் லத்திச் சாற்றில்



வீறேதான் பிசறியதை யுலர்த்தி வைத்து
விதமாக மேனிச்சாறு பொடுதலைச் சாறு
கூறேதான் கையான்சாறு குப்பிச் சாறும்
குணமான பசுவின்பா லின்னங் கேளே. 331

கேளே நீ வெவ்வேறே யுலர்த்திக் கொண்டு
கெணிதமுடன் கெந்தகமும் பலந்தா னொன்று
வாளே நீ ரசமைந்து லிங்க மைந்து
வகையாகப் பொடிபண்ணி மூன்றும் போடு
வீளே நீ மறுசட்டி தமர்கள் போட்டு
விதமாகச் சட்டிவாய் தன்னில் மூடி
சூளே நீ பட்டையைத்தான் மேலே வைத்துச்
சுகமாக மறுசட்டி கொண்டு மூடே. 332

மூடியே மண்சீலை வலுக்கச் செய்து
முசியாமல் தானெரிப்பாய் சாம மொன்று
ஆடியே யாறவிட் டெடுத்து எர்த்தி
அப்பனே சூரணமாய்ச் செய்து கொண்டு
நாடியே கழஞ்சொன்று கொண்டா யானல்
நலமாக மேகவகை யிருபத் தொன்றும்
ஓடியே போகுமடா சூலை யெல்லாம்
உத்தமனே கருங்கிரந்தி தீருந் தானே. 333

தீருமே கைக்கறுப்பு வெள்ளை தானும்
திறமான பிடிப்புவகை ரணங்கள் யாவும்
ஆறுமே ரணங்கள்வகை சிரங்கு குஷ்டம்
அப்பனே செந்தாழைத் தடிட்புந் தீரும்
கூறுமே வாய்நாற்றம் தந்தச் சூலை
குணமாக மண்டலந்தான் தின்றால் தீரும்
பாருமே பத்தியந்தா னிதற்கோ வில்லை
பண்பாக போகருரைக் கடாட்சந் தானே. 334

5 பலம் பறங்கிப்பட்டையை பொடிப் பொடியாய்க் கண்டமாக்கி, கழுதைலத்திச் சாற்றில் பிசறி உலர்த்தவும். இவ்வாறே குப்பைமேனிச் சாறு, பொடுதலைச்சாறு, கை

யாநந்தகரைச்சாறு, சங்கங்குப்பிச்சாறு, பசுவின்பால் இவைகளிலும் பாவனை செய்யவும். கந்தகம் 1 பலம், இரசம் 5 பலம், இலிங்கம் 5 பலம் இம்மூன்றையும் பொடி செய்து ஒரு சட்டியிலிட்டு, சட்டி வாய்க்குப் பொருத்தமான துளைகளிட்ட மடக்கால் பொருத்தி, அதன்மீது பாவனை செய்த பறங்கிப்பட்டையை வைத்து, மேற்சட்டி மூடி, பொருத்து வாய்க்கு மண்சீலை வன்மையாகச் செய்து, அடுப்பின் மீது வைத்து, ஒரு சாமம் எரித்து ஆறவிட்டெடுத்து பட்டையைப் பொடித்துக் கொள்ளவும்.

கழஞ்சளவு பொருத்தமான அநுபானத்தில் கொடுக்க. 21 வகை மேகம், குலை, கருகிரந்தி, கைக்கருப்பு, கை வெள்ளை, பிடிப்பு, இரணங்கள், சிரங்கு, குட்டம், செந்தாழைத் தடிப்பு, வாய்நாற்றம், தந்தசூலை இவைகள் தீரும். கொள்ளவேண்டிய நாள் அளவு 1 மண்டலம்; பத்தியமில்லை.

குறிப்பு;— கழஞ்சென்று அளவு கூறியிருப்பினும் 1 முதல் 3 குன்றிமணியளவு கொடுத்தாலே நல்லது. பத்தியமில்லையென்று கூறியிருப்பினும் பத்தியமிருத்தலே நல்லது.

## 4. சாம்பிராணிப் (பூ) பதங்கம்.

சாம்பி ராணிப் பூவனைய
சாம்பி ராணிப் பூவிஃதே
சாம்பி ராணி முப்பகுதி
சாபத் திரமுக் கடுகுபலை
சாதிக்காய் வால்மிளகு
துடிசாரைப் பருப்பு கிராம்புபுச்சி
சாயவே ரதிங்க மரமஞ்சள்
சாலி யனைத்து மிருபஃதே

சால நொறுக்கி மதித்தறலிற்
சாலிற் கலக்கி மேல்மூடி
சார மென்முடிப் புழை வழியே
சாமந்திப் பூ கொடிவேலி



சாம்பு சிவனார் வென்றிரசம்
சாதுற்ப்பாதி யடைவிறுத்துச்
சார வதன்மேல் வகைகவர்
சாமர்த் தியத்தாற் புரிந்ததன்மேற்

சாகப் புழுக்கை யஃதெனினுஞ்
சாகப் புழுக்கை யெருவிருந்தை
சாதியடிவேர் கோத்திரத் தோல்
சாலியதளிப் படி நிறைத்து
சாக்ஷி தெய்வத் தினையிருத்திக்
சாடத் திறக்கிற் புகையெழுப்பி
சானித் தியமுத் தினமொழித்துச்
சாரப் புடத்தைத் திறந்தெடுக்க

சாயுச்சியரூபப் பொருளாகுஞ்
சாம்பிராணிப் பூவென்னும்
சார்த்தூ லத்தைப் பிணிக்குழுவாஞ்
சாரங்கத்தின் மேலிடல்போல்
சாற்றவிருந்தை ரசத்திலுணிற்
சாலேசுரம்போ மஜீரணம் போம்

சாணிப்பாலி லுணிற்குன்மஞ்
சாபவாத சுரமகலும்
சாராமதுவி லுணிற்பல்லை
சாட்டியவினைக ளறுமிக்குச்
சாற்றிலுணப்போ மதுமேகஞ்
சான்னிகவே தனைகலி ளிவை
சாவற்றுவசர் குறுமுனிக்குச்
சாலவுபதே சித்ததிதே. 335

சாம்பிராணி 3 பங்கு, சாதிபத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், வால்மிளகு, ஏலரிசி, சாரைப்பருப்பு, கிராம்பு, புனுகு, இம்

பூறல்வேர், அதிமதுரம், மரமஞ்சள், புனுகுச் சட்டம் இவைகள் வகைக்கு 1 பங்கு, ஆகக்கூடி 20 பங்காகும். இவைகளில், புனுகை நீக்கி மற்றவைகளை நன்றாக இடித்துக் கலந்து, புனுகைச் சேர்த்து ஒரு பெரிய மண்பாண்டத்திலிட்டு, அதற்கு வாய் பொருந்தும்படியான மற்றோர் சட்டிக்குச் சாமந்தி இலை, கொடிவேலி இலை, தும்பை இலை இவைகளின் சாற்றின் கூட்டுத்தொகை பத்துப் பங்கைக் கொண்டு, மேற்சட்டியில் உட்புறம் பூசிப்பூசி உலர்த்தியபின், பெரிய சட்டிக்குப் பொருத்தி, பொருத்துவாய்க்கு வன்மையாய்ச் சீலைமண் செய்து அடுப்பிலிட்டு, அடுப்பினுள் உலர்ந்த ஆட்டுப்புழுக்கை, காட்டெரு, உமி, வேர்ப் பட்டைகள், இவைகளுள் ஏதேனும் ஒன்றைப் போட்டு, தீயிட்டுத் தானாகவே பற்றி எரிந்து அடங்கி ஒரு நாள் ஆனபின், சட்டி அசையாமற்படி சீலையை நீக்கி, மேற்சட்டியைச் சரிவாகச் சாய்த்து எடுத்துப் பார்க்க, அதனில் சாம்பிராணிப்பூ படிந்து இருக்கும். அதனை நோய்க்குத் தக்கவாறு அளவிட்டுத் துளசிச்சாற்றில் கொடுக்க சாலேசுரமும், அசீரணமும் போகும். சாணிப்பாலில் கொடுக்கக் குன்மமும், வாதசுரமும் தீரும். தேனிலீய வலியும், கொடும்பிணிகளும் தீரும், கரும்புச்சாற்றில் கொடுக்க நீரிழிவும் தீரும். சன்னிக்கு, கள்ளியிலைச் சாற்றில் கொடுக்கப் போகும்.

குறுப்பு— சாம்பிராணிப்பூ வென்பதின் பொருள் சன்னி நோயில் உண்டாகும் சாவிலிருந்து நீக்கி வாழச்செய்தலாம். சாமர்த்தியத்தால் புரி என்றதில், இதனை செய்வதற்கு அறிவைக் கொண்டு செய்தால் மட்டுமே மருந்தைப் பெற முடியுமென வறிக.

# 7. மெழுகும் குழம்பும்

—✶—

## 1. அகத்தியர் குழம்பு

பருவந் தன்னில் வாழும்
பரமனா ரருளி னாலே
பொருமையா யுலகில் வாழும்
புண்ணிய சனங்க ளுக்கு
உறுபல வியாதி வந்தாற்
றீருமென் றுண்மை யாகப்
பிரபல மிகவே நன்றாய்ப்
பேசினார் முனிவர் தாமே. 336

பேசிய மருந்து கேளாய்
பெருங்காயங் கடுகிந் துப்பு
வீசிய ரசம்வெங் காரம்
விடமனோ சிலையு மோமம்
ஆசிலா வரிதா ரத்தோ
டருங்கருஞ் சீர கந்தான்
மாசிலா மருந்து பத்தும்
வகைவகை கழஞ்சு வாங்கே. 337

வாங்கிய கழஞ்சுக் கொப்ப
வாளமும் வறுத்துப் பாதி
தாங்கிய பச்சை பாதி
சமன்முளை போக்கி நீயும்
தீங்கிலா மருந்து பத்துஞ்
சேர்த்துமே யரைக்கக் காந்தும்
ஓங்கிய மோருஞ் சோறு
முண்டுபி னரைத்துக் கூட்டே. 338

கூட்டிய மருந்தின் பேரு
மகத்தியர் குழம்ப தாகும்
ஈட்டிய சுரமே சுக்கா
மிருமலே கடுக்காய்ச் சாறு
வாட்டிய குளிர்ச்சு ரங்கள்
வகைசுக்கு மிளகு மாகும்
பாட்டியல் ரத்த மூலம்
பசுநெய்யின் மேதிப் பாலே, 339

பாலெனு மொழியே கேளாய்
பாண்டொடு வெப்புப் பாவை
மேலுநீ ராம்பல் சோகை
மிளகுதூள் வெள்வெங் காயம்
சாலவே சந்நிக் கெல்லாந்
தேனிஞ்சிச் சாற தாகும்
ஏலமாஞ் சந்நி வாதம்
விஷங்கட்குங் கண்ணிற் றீட்டே 340

இடுகண்ணிற் கடுகிற் பாதி
வீங்குகற் றுழஞ் சோறு
வடிதயிர் சந்த னங்கள்
வைத்துநீ கட்ட மாறும்
படுபரும் பிளவை வாழை
பகரரை யாப்புப் புண்கள்
உடலுறு சிலந்திக் கெல்லா
முமிழ்நீரிற் பூச நன்றே. 341



பூசிடு மூலைக்குத் துக்கும்
புண்ணுக்கு மிதுவே யாகும்
கூசிடு குன்மந் தோன்றிற்
கொம்மட்டிக் காயின் சாற்றிற்
பாசமாம் வாய்வு மாம்பல்
பலவித குணத்திற் கெல்லாம்
நேசமாம் நொச்சி சுக்கில்
நிச்சயஞ் செய்து பாரே. 342

பாராய் கபால வலிமுதலாப்
பசாசு பறக்குந் திரிபுகையால்
நேரா யெடுக்கு நீர்ச்செறிப்பு
நீர்க்கல் லடைப்புத் தாழைவிழல்
தீராக் கிரந்தி பறங்கி முதல்
தீருங் குப்பிச் சாறதனில்
சீராய்க் கடித்த பலவிஷங்கள்
தீருந் தீருந் திரிபிடியே. 343

பிடிக்குஞ் சீலை யம்மிதனிற்
பிரட்டி யுருட்டித் திரியதனை
இடிக்கும் வலிக்குந் தலைவாத
மிடரிப் போகும் புகைகாட்டின்
குடிக்குங் கியாழங் கொடிவேலி
கொடியகழற்சி முசுக்கை நொச்சி
அடக்குஞ் சந்நி பதின்மூன்று
மனுபா னஞ்செய் நூல்விதியே. 344

விதியா மருந்து விதுவல்லால்
வேறே தேட வேண்டாங்காண்
பதியாய் நாலா யிரத்து நானூறு
பகரும் வியாதி களுக்கெல்லாம்

மதியால் வியாதிக் குறிப்பறிந்து
வகையா யனுபா னந்தன்னில்
துதியா மருந்து பணவெடைதான்
சொன்னோம் பத்திய நீகாரே. 345

காரே யாவின் நெய்சொன்னேன்
கறிதான் முருங்கை வாழைப்பிஞ்சு
பாரின் முளைத்த நார்த் தங்காய்
படர்ந்து காய்க்கும் தூதுவளை
சேருங் கறிக ளிவையெல்லாஞ்
செய்து பிழைகள் பண்ணுமல்
வாரம் பெருத்த பொதிகைமலை
வளரு முனிவர் சொன்னாரே. 346

சொன்னார் மடவார் தங்கட்குச்
சுகமாய்க் கர்ப்பம் வரும்படிகேள்
மின்னே யரசின் கொழுந்ததனை
மிகவா வின்பால் விட்டரைத்து
முன்னோர் குழம்பு பணவெடைதான்
மூட்டு மூன்று நாள்கொள்ள
பொன்னே புதல்வ ருண்டாவார்
புவியோர்க் குறுதி கண்டீரே. 347

கண்டீர் நாவற் பட்டைதனைக்
கருத்த வாட்டின் பாலதனில்
கொண்டே சீரகப் பொடிகூட்டிக்
குழைத்துப் பணவெடை தான்கொண்டால்
பண்டோர் சூதக வாய்வுடனே
பருத்த கர்ப்ப வாதமும்போம்
வண்டார் குழல்சேர் மடமானே
மலைசேர் முனிவர் வகுத்ததுவே. 348



வகுத்த பிரம னுரையாலே
வருகுஞ் சூசிக வாய்வுடனே
மிகுந்த திரட்சி வலிதீரும்
மிளகுஞ் சுக்கும் பாகமதில்
தொகுத்த குழம்பு பணவெடைதான்
துணிவாய்க் கொள்வீர் சுகமாகும்
திகைத்த பிரமி சோகமது
தீருங் கற்கண் டினிற் கொள்ளே. 349

பெருங்காயம், கடுகு, இந்துப்பு, இரசம், வெங்காரம், நாபி, மனோசிலை, ஓமம், அரிதாரம் கருஞ்சீரகம், வகைக்கு 1 கழஞ்சு; வாளம் 10 கழஞ்சு; இவைகளை முறைப்படி சுத்தித்து, வாளம் நீங்கலாக மற்றவைகளைத் தனித்தனியே பொடித்து, ஒன்று கூட்டி அரைத்துக் கல்வத்தில் ஒரு பக்கமாகச் சேர்த்து வைத்து, வாளத்தில் பாதியைப் பச்சையாகவும் (சுத்தித்து), பாதியை ஆவணக்கு நெய்யில் வறுத்தும் கல்வத்தில் மைபோல் அரைத்தும், தூள்களைச் சிறிது சிறிதாகச் சேர்த்து நன்றாக அரைத்து மைபோல் செய்து கொள்ளவும். (இம்மருந்தை அரைப்பவன் மோருஞ் சோறும் உண்டு, உடல் முழுமையும் தேங்காய் எண்ணெய்யைப் பூசிக்கொண்டே அரைக்க வேண்டும்.)

குன்றிமணியளவாகச் சுரத்திற்குச் சுக்குச் சுக்குக்கற்கத்திலும் இருமலுக்குக் கடுக்காய் குடிநீரிலும், குளிர் சுரத்திற்கு, சுக்கும் மிளகும் சேர்ந்த பொடியிலும், இரத்த மூலத்திற்குப் பசு நெய்யிலும், எருமைப்பாலிலும், பாண்டு, வெப்புப் பாவை, நீராம்பல், சோகை இவைகட்கு மிளகுத்தூள், வெள்ளை வெங்காயச் சாற்றிலும், சன்னிவாதத்திற்கு தேன் இஞ்சிச் சாற்றிலும். சன்னிவாதம், விஷங்கட்கு கண்மையாக ½ கடுகளவிட கண்வீங்கும்; கற்றாழஞ்சோறு தயிர்த்தெளிவு சந்தனம் இவைகளைச் சேர்த்து அரைத்து வைத்துக் கட்ட வீக்கம் வாங்கும், சன்னி தீரும்;

பிளவை, தொடைவாழை, அரையாப்பு சிலந்தி, மூலைச் சிலந்தி இவைகட்கு உமிழ்நீரில் கலந்து பூசத் தீரும். குன்மத் திற்குக் கும்மட்டிச் சாற்றிலும், வாய்வுக்குச் சுக்குத்தூள் நொச்சிச் சாற்றிலும், கபாலவலி பைசாசம் இவைகட்கு அகத்தியர் குழம்பை துணித்துண்டில் தடவித் திரியாகத் திரித்துக் கொளுத்தி எழும்பும் புகையைப்பிடிக்கத் தீரும். நீர்ச்செறிப்பு, கல்லடைப்பு, கிரந்தி, பறங்கிப்புண் இவை கட்குச் சங்கங்குப்பிச் சாற்றிலும், விஷக்கடிகட்கு புகை பிடிக்கவும் தீரும். 13 வகை சன்னிகட்கு கொடிவேலி வேர்ப் பட்டை, கழற்கொடி வேர்ப்பட்டை, முசுமுசுக்கை நொச்சி இவைகள் சேர்ந்த குடிநீரிலும் கொடுக்கத் தீரும்.

பத்தியம்-ஆவின்நெய், முருங்கைபிஞ்சு, வாழைப்பிஞ்சு நார்த்தங்காய், தூதுவளை இவைகள் ஆகும். மலட்டிற்கு அரசங்கொழுந்தைப் பசும்பால்விட்டு அரைத்த கற்கத்தில், அகஸ்தியர் குழம்பை மூன்று நாள் காலையில் கொடுக்க மலடு தீரும். சூதகவாய்வு, கர்ப்ப வாதம் இவைகட்கு நாவற் பட்டையை வெள்ளாட்டுப்பால் விட்டு இடித்துப் பிழிந்த சாற்றில், சீரகப்பொடி சேர்த்து, அகத்தியர் குழம்புக்கு அநுபானித்து கொடுக்கத் தீரும். சூதகவாய்வு, திரட்சிவலி இவைகட்கு மிளகும் சுக்கும் சேர்ந்த பொடியிலும், பிரமியம், சோகம் இவைகட்குக் கற்கண்டிலும் கொடுக்கத் தீரும்.

குறிப்பு: — கண்ணிலிடலாமென்று நூலில் கூறியிருப் பின், கவனமாகவே பயன்படுத்த வேண்டும். இம்மருந்து மிக்க பேதியை உண்டாக்குமாகையினுல் இக்கால மக்கள் உடல்வன்மைக்குத் தக்கவாறு அளவைக்குறைத்துக் கொடுத் தலே நலம்.

அதிகப் பேதியானுல் சீரகம், புளி அல்லது எலுமிச்சம் பழம் இவைகளின் குடிநீர், மோர், சாதம், வசம்பு சுட்டகரி, இவைகளைப் பயன்படுத்தப் பேதி நின்று விடும்.



## 2. இரச மெழுகு.

வாட்டமா மின்னமோ ரநுபா னங்கேள்
மைந்தனே வாலைரசம் வராகனி ரண்டே
விராகனெடை யிரண்டப்பா பறங்கிப் பட்டை
வீரான திப்பிலி யிலவங்கம் ரண்டும்
விராகனெடை நாலப்பா கரும்பு வெல்லம்
விசையடங்கத் தானரைத்தே யுண்டைகேளு
விராகனெடை முக்காலா யுருட்டி மைந்தா
வீறுகெட்ட மானிடர்க்கு மேழு நாள்தான்
விராகனெடை முக்கால யந்திசந்தி
விவரமுடன் முன்கொடுத்து மேலுங் கேளே. 350

கேளப்பா பத்தியந்தான் உப்பா காது
கிருபையுடன் பசுவின்பால் கூட்டிக்கொள்ளு
நாளப்பா பதினைந்தா நாளிலே தான்
நன்மையுடன் தலைமுழுக்கு முழுக வாரு
கேளப்பா வொன்று மில்லைக் கோழிச்சாறு
கூட்டியே பத்தியத்தை முறிந்துப்போடு
வேளப்பா வாயெல்லாம் வெந்து காணும்
விதமாகத் தான்முனே யாறுந் தானே. 351

தாந்தானே யாறுகையிற் றீரு நோய்கேள்
தண்மையில்லா மேகவெள்ளை தடிப்புப் புண்கள்
சேர்ந்ததொரு அழிகிரந்தி குழிகி ரந்தி
தீராத அரையாப்பு மேக சூலை
போந்தானே கால்முடக்குக் கைம்மு டக்குப்
பொல்லாத நோய்களெல்லாம் போகுஞ்சொன்
நாந்தானே வாலையிட கருணை யாலே [னேன்
நன்மையில்லா வியாதியெல்லா நலம தாமே. 352

குறிப்பு:-வாயெல்லாம் வெந்துகாணும் என்று பாட்டில் கூறியிருந்தபோதிலும், மருந்து பழகி இருந்தாலும், தக்க அளவிலும், நாள் குறைவாகவும் சாப்பிட வாய் பிடிப்பதில்லை.

வாலை இரசம் 2 வராகனெடை, பரங்கிப்பட்டைச் சூரணம் 2 வராகனெடை, திப்பிலிச்சூரணம் 4 வராகனெடை, இலவங்கச் சூரணம் 4 வராகனெடை, கரும்புவெல்லம் போதுமான அளவு, இவைகளைக் கல்வத்திட்டு இரசம் மடியும்படி நன்றாகக் கலந்தரைத்துப் பத்திரப்படுத்தவும். ஒரு மாதம் பழகின பிறகு பயன்படுத்துதல் வேண்டும். மேக வெள்ளை, தடிப்பு, புண்கள், அழிகிரந்தி, குழிகிரந்தி, அரையாப்பு, மேகசூலை, கைகால் முடக்கு இவைகள் தீரும்.

அளவு:—மிளகளவு பனைவெல்லத்தில் காலை மாலை இரு வேளையாக ஏழுநாட்கள். மறுபத்தியம். ஏழு நாட்கள்.

பத்தியம்:—உப்பில்லாப் பத்தியம், பால்சாதம். பதினைந்தாம் நாள் தலை முழுகவும். தலை முழுக்கன்றைக்கு கோழிச் சாறு சேர்த்துக்கொள்ளவும்.

## 3. இரசகந்தி மெழுகு

பாரேநீ ரசகந்தி ரசகர்ப் பூரம்
பண்பான அரிதார மூசிக் காந்தம்
சீரேநீ துருசுதுத்த மிருதார் சிங்கி
சிறப்பான சுக்குடனே ஓம மஞ்சள்
வாரேநீ திப்பிலியு மரத்தை கோஷ்டம்
வளமான வாலுழுவை சோம்பு ஏலம்
கூறேநீ சாதிக்காய் மிளகு சீரங்
குணமான கார்போக மாசிக் காயே. 353

காயான தெசாவரம் வாய்வி ளங்கம்
கனிவசம்பு லவங்கமுடன் பறங்கிப் பட்டை
வாயான சேங்கொட்டை கடுக்காய்த் தோலும்
வானகருஞ் சீரகமுங் காட்டுச் சீரம்
பாயான சிறுதேக்குந் தாளிசப் பத்திரி
பண்பாக முந்திரிகை பிரம்பின் மூலம்
வாயான எட்டிவிதை தேற்றான் வித்து
வளமான நீர்ப்பூண்டு எள்ளு மாமே. 354



ஆமேநற் கொள்ளுடனே தேங்காய் கூட
அடைவான சின்னிவேர் சங்கம் வேரும்
தாமேநீ அமுக்கரு கொல்லன் கோவை
தயவான கொடுவேலி மூலத்தோடு
வாமேநீ வகைவகைக்கு வராக னென்று
வளமான கோழிமுட்டை யிரண்டு வாரு
போமேநீ இவையெல்லாம் பொடியாய்ச் செய்து
பொங்கமுடன் கல்லுரலில் போட்டுக் குத்தே. 355

குத்தப்பா இதுநேரே பனைவெல் லந்தான்
குணமாக நாறசாம மிடித்துத் திரு
குத்தப்பா வழித்தெடுத்துச் சிமிழில் வைத்துப்
பேதமில்லை சுண்டக்காய் வீதங் கொள்ள
முத்தப்பா மோருஞ்சோ றுண்டுமுன்னே
முசியாமல் மருந்துண்ண மண்டலந்தான்
சித்தப்பா முழுகுநாள் மருந்துண் ணுதே
சிறப்பாகப் பத்தியந்தா னில்லை தானே. 356

தானென்ற வெடிசூலை யேக சூலை
தயவான இடிசூலை புடைக்குஞ் சூலை
வானென்ற துடிசூலை வாத சூலை
வளமான கால்குடைச்சல் கரணை தீரும்
மானென்ற விப்புருதி கண்ட மாலை
மதியாத குட்டமொடு விடநீர் தீரும்
கோனென்ற குறைநோயுஞ் சிரங்குந் தீரும்
குணமான புழுவெட்டு தடிப்பும் போமே. 357

போமேநீ யோனிதன்னி லிங்கந் தன்னில்
பொலிவான ஆமையடி சிலந்தி மேகம்
தாமேநீ செங்கிரந்தி கருங்கி ரந்தி
தயவான அரிகிரந்தி பொரிகி ரந்தி
வாமேநீ பருகிரந்தி யிடிகி ரந்தி
வளமான யிடிவிழுந்து புரைமேற் புண்ணு
ஆமேநீ அரைக்கடியுந் தண்டிற் புண்ணும்
அடைவான குள்ளிமா தேவி யாமே. 358

ஆமேநீ துடைவாழை முட்டு வாழை
அடைவான குழிவாழை முதுகு வாழை
சேமேநீ புழுவாழை விலாவில் வாழை
செயலான தமர்காயாச் சிலந்தி யோடு
ஓமேநீ குறிப்புற்று யோனிப் புற்றும்
ஒளிவான இடிப்புற்று கன்னப் புற்று
தாமேநீ பலசிலந்தி கன்னத் தோசி
சதைவளருங் கண்ணோசி போகும் பாரே. 359

பாரடா பிளவையொடு பிளவைப் பூச்சி
பண்பான ராசனென்ற பிளவை யோடு
கூறடா நேத்திரமேற் பிளவை யோடு
கொடிது தடிச் சிலந்திபுடைச் சிலந்தி யோடு
நேரடா பவுத்திரங்கள் முளைமூலங்கள்
நெடியபத மெட்டுச்சக் கிரத்தி னோடு
வீரடா இவைகளெல்லாந் தீரும் தீரும்
விதமாக போகருட கடாட்சந் தானே. 360

இரசம், கந்தகம், இரசக்கற்பூரம், அரிதாரம், ஊசிக்காந்தம், துருசு, துத்தம், மிருதார்சிங்கி, சுக்கு, ஓமம், மஞ்சள், திப்பிலி, அரத்தை, கோஷ்டம், வாலுழுவை, சோம்பு, ஏலம், சாதிக்காய், மிளகு, சீரகம், கார்போகி, மாசிக்காய், திப்பிலிக்கட்டை, வாய்விடங்கம், வசம்பு, இலவங்கம், பறங்கிப்பட்டை, சேங்கொட்டை, கடுக்காய்த்தோல், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், சிறுதேக்கு, தாளிசப்பத்திரி, திராட்சை, பிரப்பன்கிழங்கு, எட்டிவிதை, தேத்தான்விதை, நீர்முள்ளி, எள்ளு, கொள்ளு, கொப்பரைத்தேங்காய், சின்னிவேர், சங்கன் வேர், அமுக்கராவேர், ஆகாயக்கருடன் கிழங்கு, சித்திரமூலம், இவைகள் வகைக்கு 1 வராகனெடை, கோழி முட்டை 2.

கோழிமுட்டை நீங்கலாக மற்றவைகளைக் கல்லுரலில் போட்டு நன்றாகப் பூணில்லா உலக்கையாலிடித்துப் பொடித்துக் கோழிமுட்டையை யுடைத்து அதிலூற்றி, 46 வராகனெடை பனைவெல்லம் சேர்த்து, 4 சாமம் நன்றாகக் கலந்து,



மெழுகுபோல் திரளும்படி இடித்து, சிமிழில் பதனம் செய்யவும். மோருஞ் சோறுண்டு, அதன்மீது மெழுகைச் சுண்டைக்காய்ப் பிரமாணம் உட்கொள்ளவும். உட்கொள்ளும் நாள் 1 மண்டலம். தலைமுழுகும் நாளில் மருந்தில்லை; பத்தியமில்லை.

தீரும் நோய்:—வெடிசூலை, ஏகசூலை, இடிசூலை, புடைசூலை, துடிசூலை, வாதசூலை, கால் குடைச்சல், கரணை, விப்புருதி, கண்டமாலை, குட்டம். விஷநீர், குறைநோய், சிரங்கு, புழுவெட்டு, தடிப்பு, யோனிச்சிலந்தி, லிங்கச்சிலந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, பொரிகிரந்தி, பருகிரந்தி, இடிகிரந்தி, புரையோடும் புண், அரைக்கடி, தண்டிற்புண், தொடைவாழை, விலாவாழை, மார்புச்சிலந்தி, யோனிப்புற்று, இலிங்கப்புற்று, இடிப்புற்று, கன்னப்புற்று, சிலந்தி, பிளவை: நேத்திரப்பிளவை, தடிச்சிலந்தி, புடைச்சிலந்தி, பௌத்திரம், முளைமூலம், பாதச் சக்கரம் முதலியவை தீரும்.

## 4. இடிவல்லாதி

ஒன்றான வல்லாதி சொல்லக் கேளு
உத்தமனே சேங்கோட்டை பலந்தான் பத்து
நன்றாக மூக்குவெட்டிச் சாணிப் பாலில்
நலமாக மூன்றுநாள் ஊறவைத்து
அன்றான கல்லுரலிற் றானே போட்டு
அப்பனே யெள்ளதனை யிடித்துப் போட்டு
கன்றான கொப்பரைத்தேங் காயி ரண்டு
கனிவாகத் தானிடித்து நினைவாய்ப் போடே. 361

போடேநீ பறங்கியுட பட்டை யப்பா
பொங்கமுட னமுக்கரா சித்திர மூலம்
கூடேநீ கத்தூரி மஞ்ச ளோடு
குணமான கருஞ்சீரம்வா லுழுவை யோடு
தேடேநீ குரோசானி யோ மத் தோடு
தெளிவான வெற்றிலையின் காம்பு தானும்
நாடேநீ கடுக்காயுந் திப்பிலி தானும்
நலமான கோட்டமும் வகைக்குக் கேளே. 362

கேளேதான் வகைவகைக்கோர் பலமாய்த் தூக்கி
கெணிதமுடன் சூரணமாய்ச் செய்து கொண்டு
வாளேதான் கல்லுரலில் மயனம் போல
வகையாக யிடித்ததனைச் சொல்லக் கேளு
ஆளேதான் ரசகர்ப் பூர மப்பா
அடைவாக வராகனைந்து பொடித்துப் போட்டு
சாடேதான் பனைவெல்லம் பலந்தா னைந்து
சார்வாகப் போட்டிடிப்பாய் தயவாய்த் தானே. 363

தானென்ன வல்லாதி அந்தி சந்தி
தயவாக வெருகடிமண் டலமே கொள்ள
வானென்ற குஷ்டமொடு கிரந்தி சூலை
வகையாக அரையாப்பு மேக மெல்லாம்
கோனென்ற குன்மமெட்டுஞ் சுக்கில வாய்வு
குணமில்லா ரணமேகங் கிரந்தி தீரும்
ஏனென்ற பத்தியந்தா னிச்சா பத்தியம்
இதமான உப்புமுதல் வறுத்துக் கூட்டே. 364

கூட்டப்பா தயிர்மோரு நெய்யு மாகும்
குணமான துவரையுட பருப்பு மாகும்
நாட்டப்பா பாசியென்ற பயறு மாகும்
நலமான நல்லாரை பொன்னாங் காணி
ஆட்டப்பா மச்சமென்ற பதார்த்தந் தள்ளு
அடைவாக மற்றெல்லா மாகும் பாரு
ஆட்டப்பா விளக்கெண்ணெய் தேய்த்து மூழ்கு
அடைவாகச் சந்திரன் போல் தேகந் தானே. 365

10 பலம் சேங்கொட்டை மூக்கைவெட்டிச் சாணிப்பாலில் 3 நாள் ஊறவைத்துக் கழுவி எடுக்கச் சுத்தியாகும். இதனைக் கல்லுரலில் போட்டு, அத்துடன் 10 பலம் எள்ளை இடித்துச் சேர்த்துக் கொப்பரைத் தேங்காய் 2 சேர்த்துப் பூணில்லா வுலக்கையால் நன்றாக இடித்து, பிறகு பறங்கிப் பட்டை, அமுக்கரா, சித்திரமூல வேர்ப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், வாலுளுவை, குரோசானி ஓமம்,



வெற்றிலைக்காம்பு, கடுக்காய்த்தோல், திப்பிலி, கோஷ்டம் வகைக்கு ஒரு பலம் எடுத்து, நன்றாக இடித்து, வடிகட்டி, மேற்படி சேங்கொட்டையுடன் சேர்த்து, மெழுகுபோல் ஆகும்வரை நன்றாக இடித்து, ½ பலம் இரச கற்பூரத்தைக் குங்குமம்போல் பொடித்து, அதில் சேர்த்து, பிறகு பனை வெல்லம் ஐந்து பலம் சேர்த்து, உறவாகும்படி இடித்துக் குப்பியில் அடைக்கவும். சுண்டையளவு காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் கொள்ள குஷ்டம், கிரந்தி, சூலை, அரையாப்பு, மேகம், எண்வகைக் குன்மம், சுக்கிலவாய்வு, இரண மேகம் இவைகள் தீரும். பத்தியம்-இச்சாபத்தியம்; வறுத்த உப்பு, தயிர், மோர், நெய், துவரை, பாசிப்பயறு, ஆரைக்கீரை, பொன்னாங்காணிக்கீரை இவைகள் ஆகும். மீன் ஆகாது. விளக்கெண்ணெய் தேய்த்துத் தலைமுழுகவும்.

(குறிப்பு) சேங்கொட்டையை மூக்கை வெட்டிச் சாணிப்பாலில் தோலாயந்திரமாக மும்முறை வேகவைத்துக் கழுவி எடுத்துப் பிறகு புளியிலை இரசம், செவ்விளநீர் இவைகளிலும், மேற்படியாகச் செய்யச் சுத்தியாகும். சேங்கொட்டையை யிடித்து, ஆறுமாதம் மக்கவைத்துப் பிறகு அதை மருந்தாகச்செய்து பயன்படுத்தலே நலம். இன்றேல் அதன் துர்க்குணத்தைக் காட்டும் இம்மருந்துக்குப் பனை வெல்லத்தை அனுபானித்தல் நலம். இச்சாபத்திய மென்று கூறியிருப்பினும், உப்பில்லாப் பத்தியம் வைத்தலே நல்லது. ஐந்துநாட் கொருமுறை மருந்தை நிறுத்தி, மறுபத்தியம் வைத்து, விளக்கெண்ணையில் மூழ்கிய பிறகே, மறுமுறை மருந்தை ஆரம்பிக்க வேண்டும்.

## 5. தேங்காய்க் குழம்பு

இந்துநாற் கழஞ்சு காந்தமு நாற்கழஞ்சாம்
இஞ்சிச்சா றரைப்படிவெள் ளுள்ளியொரு பலமாங்
கந்திக்குந் திரிகடுகு பெருங்காய மோமங்
கருதரிய சவுக்காரம் வகைக்குநாற் கழஞ்சாம்

சிந்திக்கு நேர்வாளம் நாற்கழஞ்சு கூட்டித்
தேங்காய்ப்பா லில்குழம்பு செய்துவரு நேரம்
வந்திக்கும் நெய்விட்டுக் கொண்டிறக்கி யுண்ண
வயிற்றுநோய் தீருந்தேங் காய்க்குழம்பின் வகையே.

இந்துப்பு 5 வராகனெடை, காந்தம் 5 வராகனெடை, இஞ்சிச்சாறு அரைப்படி, வெள்ளுள்ளி 1 பலம், திரிகடுகு, பெருங்காயம், ஓமம், பூநீறு, நேர்வாளம் வகைக்கு 5 வராக னெடை, தேங்காய்ப்பால் ½ படி-தேங்காய்ப்பால் இஞ்சிச் சாறு இவ்விரண்டையும் ஒரு பாத்திரத்தில் சேர்த்து, அதில் நேர்வாளம், வெள்ளைப்பூண்டு இவ்விரண்டையும் நன்றாக அரைத்தும், பெருங்காயத்தைப் பொரித்தும், மற்றவைகளை இடித்துத் தூளாக்கியும் மேற்படியில் சேர்த்து, சிறு தீயில் எரித்து,குழம்புப் பக்குவத்தில் நெய் 2½ பலம் சேர்த்து இறக்க வும். அளவுப்படி உண்ண,வயிற்றுநோய் தீரும்; பேதியாகும்.

## 6. கும்மட்டிக் குழம்பு

சேரவே குன்மங்க ளைந்தும் போகச்
செப்புகிறேன் கும்மட்டிக் குழம்பு தன்னை
ஆரவே குமட்டிக்காய்ச் சாறு நாழி
அப்பனே சம்பீரச் சாறு நாழி
வாரமுறும் வெள்ளுள்ளி நொச்சி யிஞ்சி
நீர்ச்சாறு படிவாங்கி நிகழ்த்தக் கேளு
பார்புகழ ஐந்நாழி ஒன்றாக் காய்ச்சி
பகருகின்ற சூதமொடு லிங்கந் தானே. 366

இலிங்கமொடு பெருங்காயம் இந்து செம்மை
நேரான வெங்காரம் கடுகு மஞ்சள்
இலிங்கமுறும் வெந்தயமும் மிளகு காந்தம்
நேர்வாளம் ஒவ்வொன்றும் கழஞ்சு ஒன்று



இலிங்கமுற வாட்டியே பாகிற் சேர்த்து
நெருங்காமல் மீறுமல் கிண்டிக் கிண்டி
இலிங்கமுறும் பழம்புளிபோ லிறக்கி மைந்தா
நிறையறிந்து உடலறிந்து உண்ணச் சொல்லே. 367

உண்ணுவது பனைவெல்லம் தனிற் பொதிந்து
ஊட்டுவாய் தூதுவளங் காய்ப்பிர மாணம்
உண்மையிலே குன்மம்போம் பெருவயிறு போம்
உதரத்தில் நீராமை மகோத ரம்போம்
உண்ணயிலே மூலிகையும் வெப்புப் பாவை
உறுபாண்டு கவுசியொடு விஷபா கம்போம்
உண்மையிலே வாயுவென்ற சென்மமும் போம்
உரைக்கிறேன் கும்மட்டிக் குழம்பு தானே. 368

குமட்டிக்காய்ச்சாறு, பழச்சாறு, வெள்ளுள்ளிச்சாறு, நொச்சிச்சாறு, இஞ்சிச்சாறு இவை வகைக்கு ஒருபடி: இவைகளை ஒரு பாத்திரத்தில் சேர்த்துச் சிறுதீயில் எரித்துக் குழம்பு பக்குவத்தில், இரசம், இலிங்கம், பெருங்காயம். இந்துப்பு, வெங்காரம், கடுகு, மஞ்சள், வெந்தயம், மிளகு, காந்தம், நேர்வாளம், வகைக்கு 1¼ வராகனெடை- பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும், அரைக்க வேண்டியவைகளை அரைத்தும், மேற்படிக் குழம்பில் சேர்த்து அரைத்து, சிறுதீயில் கிண்டிக் கிண்டி பழம்புளிப் பாகத்தில் இறக்கித் தூதுளங்காய்ப் பிரமாணம் பனைவெல் லத்தில் பொதிந்து கொடுக்கக் குன்மம், பெருவயிறு, நீராமை, மகோதரம், வெப்புப்பாவை, பாண்டு, கவிசை விஷபாகம், வாய்வு இவைகள் தீரும். உடல் வன்மைக்குத் தக்கவாறு, நாள் அளவையும் மருந்தளவையும் அளவுபடுத் திக்கொள்ளவும். இதனை ஒருவேளை காலையில் மாத்திரம் கொடுக்கவும்.

(வேறு)

முதிரரான் முடியதனிற் பொடிசசி
முதிசாரங் கரிபொடி வளையாம்
முதகஞ்சாரை சளரைதொடி யாகும்
முனிகஞ் சாரொடு பிசறியிடு
வதன்பின் கசகப்பொடி தொடியாகும்
விசகங் கந்தம் பானிரையாம்
விசங் கந்தியைப் பொடியாக்கிடு
பின்மேற் சிலைகள் தசமொடுவரிவாய்
பதியெருவிற் புடமிடு மேற்றடை
கரிபாகப் படுமள வதுவாகும்
பங்கம தாகாதெடு வம்மியிலிடு
பழரச மிட்டரை யரைசாமம்
மதியொடு பனையின் கொட்டையிலிட்டடை
வழலங்காய்ப் பிரமாணம
துண் வாதகுலங்கள் வாதத்தேகும்
வன்பத்தியமில்லை மாதொன்றே. 369

ஒரு முதிர்ந்த தேங்காயின் பெருங்கண்ணைத் திறந்து நீரை ஊற்றிவிட்டு, அதில் பொட்டிலுப்பு, இந்துப்பு, சோற்றுப்பு, நவாச்சாரம், கரியுப்பு, பாறையுப்பு, வளையலுப்பு, எவாச்சாரம், பூநீறு இவைகளை வகைக்கு ½ பலமாகக் கொண்டு கல்வத்திட்டு நன்றாகப் பொடித்து, பேய்க்கும்மட்டிப் பழத்தை ஏரகு வைக்கோலால் சுட்டுப்பிழிந்த சாற்றால் அரைத்து, பிறகு வாளம் 1 பலம், பூரம், வாலைரசம் இவ்விரண்டும் ¼ பலம், சந்தசம் 1/8 பலம் ஆகக் கூட்டி அரைத்து, மேற்படி மருந்துகளுடன் சேர்த்துப் பிசைந்து தேங்காய்க்குள்ளடைத்து, தமர்மூடி சீலைமண் செய்துலர்த்தி 10 வறட்டியில் புடமிடவும். இதனை எடுக்கும் பக்குவம் தேங்காயோடு கருகும் சமயமாம். அப்போது குச்சியினால் தீயினின்று தேங்காயைக் கலைத்தெடுத்து, அதன்மேற் சட்டியைமூடிக் குளிர்ந்தபின்பு எடுத்து, சீலை ஓடு இவைகளை நீக்கி தேங்காயையும் மருந்தையும் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றால் மைபோலரைத்து வழித்துப் பனங் குடுக்கையிலடைக்கவும்.



வழலங்காயளவு பனைவெல்லத்தில் காலையில் மாத்திரம் கொடுக்க நன்றாக வயிறு கழியும், வாதநோய்க் கூட்டங்கள் ஒழியும். நோய் வன்மைக்கும், உடல் வன்மைக்கும் தக்கவாறு 3 அல்லது 5 நாள் கொடுக்கலாம். பத்தியம் பெண் சேர்க்கை நீக்கவும்.

குறிப்பு:—மேற்கூறிய பதத்தில் தேங்காயைத் தீயினின்று நீக்காவிடில், மருந்தைப்போல் தேங்காய் வெடிக்கும்.

## 7. சாதி சம்பீரக் குழம்பு

பாசனத்தி லேயிரண்டு பாத வாலு கம்மதைத்
தேச னம்மு னீரதாக்கு தெள்ளு தரத மாம்மிரம்
வாச நன்மெய்ச் சமபமாது வண்ண நீர்பெய் பஷுமாய்ப்
பேச நீர்சேர் பதமதாக்கு பெரிய சாதிக் குழம்பிதே. 370

வேந்தர் வானர் முதலினர்க்கு விள்ளு மிக்கு மும்புசெய்
மாந்த பேதி வெப்புமூர்ச்சை வமன பித்த தாகமும்
சாந்த விந்து தேகவெண்மை சற்று மங்கியின்மையும்
பாந்தள் வாயின் தேரையென்னப் பாறுமிளகு
கொண்முனே. 371

ஒரு அகன்ற மண் அகலுக்குத் துளசிச் சாற்றைப்பூசிக் காயவைக்கவும். இவ்வாறே 3 அல்லது 5 முறை செய்யவும். இவ் வகலை ஒரு அடுப்பின் மிசை வைத்துச் சிறுதீயால் எரிக்குஞ் சமயத்தில், கற்பூரம் ½ பலம் பொடித்துப் போட்டு உருகும் போது, இலிங்கம் பலம் 1-ஐ நன்றாகப் பட்டு போல் பொடித்து எலுமிச்சம் பழச்சாறு பலம் 15-ல் கலக்கித் தயாரித்ததை ஷெ அகலில் சிறிதுசிறிதாக விட்டுத் துழாவி

குழம்பு பக்குவமடையும் சமயம் வழித்தெடுத்துப் பத்திரப் படுத்தவும்.

வாந்தி, விக்கல், தாகம், பாண்டு, குழந்தைகட்கு உண்டாகும் மாந்தபேதி, வெப்பு, மூர்ச்சை இவைகள் தீரும்.

$\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, 1 குன்றிமணி யளவு நோய் வன்மைக்குத் தக்கவாறு ஒரு நாளைக்கு 3 அல்லது 4 வேளை தரலாம்.

## 8. சிற்றண்ட மெழுகு

ஆடியே சிற்றண்ட மெழுகி தப்பா
அப்பனே சொல்லுகிறேன் வில்வ வேரு
தேடியே வீசைபத்து கொண்டு வந்து
சேர்த்ததனை நறுக்கியபின் நிழலு லர்த்தி
வாடியே போகாமல் பாண்டத் திட்டு
வாய்மூடிச் சீலைசெய்து குழித்தயிலம் வாங்கி
நீடியே தலைஅண்டம் பீங்கானி லிட்டு
நிலவரமாய்த் தைலமதை நிறைய வாரே. 372

வார்த்தபின்பு நாற்பதுநா ளிரவியில் வைத்து
வற்றவற்றத் தைலமதை வார்த்து வந்தால்
பார்த்திருந்த பண்டிதர்கள் மாய மாகப்
பசுமையுள்ள மெழுகாகும் பகரக் கேளு
தூர்த்து வந்த வாதமெல்லாந் தொலைந்து போகுஞ்
சுண்டைக்கா யளவெடுத்துத் தேனி லீந்தால்
ஆர்த்திருந்த சூலையெல்லா மயர்ந்து போகு
மளவாகப் புலிப்பாணி அறைந்திட் டேனே. 373

வில்வவேர் 10 வீசை, நிழலுலர்த்தலாக வாடியபின் குழித்தயில மிறக்கவும். ஒரு பீங்கானில் ஒரு தலைக்கோழி முட்டையை வைத்து, நிரம்ப மேற்படி குழித் தயிலத்தை ஊற்றி, 40 நாள் இரவியில் வைத்துத் தையிலம் வற்ற வற்ற



ஊற்றிக்கொண்டே வர, முட்டையும் தயிலமும் சேர்ந்து மெழுகாகும்.

இதனைச் சுண்டைக்காயளவு தேனிலீய வாதநோய்க் கூட்டங்கள் தீரும்; சூலைநோய்களும் தீரும்.

## 9. நந்திமை

சீரான தென்பொதிகைச் சித்தரகத் தீசர்சொல்
பேரான நந்திமை பேசவே—காரான
நந்திவித்து நாற்பதுதா னன்றாய் முகிழ்போக்கி
யந்தச் சாணிப்பா லதனிலவி—சொந்தமதாய்
ஒன்றிரண்டாய் வெட்டி யுழக்காவி னெய்யிலிட்

டன்றெட்டி வித்தைந்து காசெடைதான்—நன்றாக
நாவலின் சாற்றிட்டோர் நாழிகைநீ வேகவைத்துத்
தாவியதை நாற்றுண்டாய் தான்வெட்டிப்—பாவகமுன்
நெய்யிலிட்டு வேகவைத் திரண்டுவித்து மேல்மிதந்தா
லய்யா பதமென் றறிந்தெடுத்து—மெய்யாக

நெய்வே றிறுத்துவைத்து நேர்செவியன் வித்துகளை
ஒய்யார மையா வுறலரைத்துச்—செய்மருந்து
பொன்னிமிளை யீர்நிட்கம் போற்றுகரி யுப்புவெடி
பன்னர்க்கம் பாலரைத்துப் பாய்ச்சுமேல்—வன்னிதனில்
ஏழுமுறை வாட்டி யியல்முருங்கைப் பட்டைதனை

வாழுமுற் பாலரைத்து வாய்ப்பித்துத்—தாழும்
அவிப்புடம் போடுபொடி யானபின் கல்நார்
புவியிலான் பால்முன்னுள் பூட்டி—இவணுறின்
நன்றாகக் காய்ச்சியே நல்லாப்பா லிற்றோய்த்து
வன்னமே னிக்கவச மாட்டுவித்துப் - பின்னர்புடம்

போட்டபற்ப மீர்நிட்கம் போழ்கல் மதநண்டு
வாட்டகொப்ப ரைக்காய்ப்பால் வார்த்தரைத்து—
நாட்டமாய்ப்
பண்ணினதூ ளொவ்வொன்றும் பார்வராகனே யிரண்டு
திண்பச்சைக் கற்பூரஞ் செம்மலரோ—டுண்மையாம்
கோரோ சனமூன்றும் கொள்வகைக்கோ வீர்நிட்கம்

நாரியின் பால்விட்டு நன்கரைத்து—நீருக்கி
நல்லசீ னம்பலநால் நல்வால செந்தூரம்
சொல்லும் பலமரைதான் சூட்டக்கேள்—வல்லாய்
திரிகடுகோ டேலவினை தேக்குதா ளீசம்
குரோசானி வாய்விளங்கங் கூறும்—அதிவிடயம்

சாதிக்காய் பத்திரியும் சார்சீ ரகமிரண்டும்
ஆதிமலர் சவ்ய மரேணுகமும்—நீதியாம்
சித்திரமூ லத்தோல் சிறுநறுக்கு மூலமுடன்
சுத்த கசகசா சோம்புடனே—நற்றயவாய்
நேர்வாளஞ் சிற்றரத்தை நின்ற சடாமாஞ்சில்

சார்வக்க ராவஸ்வந் தாஞெவ் வொன்—றோர்வாய்
களஞ்சுநிறை யாய்வாங்கிக் கட்டா யிடித்து
வளம்பெறவே சூரணத்தை வைத்துக்—குழப்பாமல்
கண்டர்துத்தம் குருராசன் பூரம் வன்னிகர்ப்பம்
மண்டுசிலை நாறும்பூ மாறுரம்—கொண்ட

குதிரைப்பல் வெள்ளையுடன் கூறுசிவன் பெண்டிர்
அதிரச செந்தூரமண் ணைவி—பதிதா
வகைக்கு வராகனெடை மாநீலிச் சாற்றில்
தகைந்தரைத்த சரக்கைச் சாமத்—தொகையிரண்டு
வில்லைசெய்து காய்ந்தால் வியனீலி தானரைத்து

நல்வில்லை யைப்பொதிந்து சாத்திக் கருகுபுடம்
சாணிகொண்டு தான்பொதிந்து சாத்திக் கருகுபுடம்
ஊணியிட்டுத் தானெடுத் துற்பனமாய்—மானேகேள்
முந்திநற் றாளோடே மூட்டி யரைத்தெடுத்துச்
சிந்தைமகிழ்ந் தின்னவகை செப்பக்கேள்—விந்தை



பழகுசிறு சட்டியில் பண்முன்னெய் விட்டுப்
பழயவெல்ல நாலுபலம் பாய்ச்சிக்—குழையின்
பொடியிட்டுக் கிண்டிப் புதுத்தே னரைக்கால்
வடியிட்டுக் கிண்டியே வைத்துத்—துடிபெற்ற
பீங்கானில் வைத்துப் பிரமவிண்டு ருத்திரர்

தாங்கு மகேசன் சதாசிவன்—ஓங்குகின்ற
வாலை புவனை மகமாயி திரிபுரைக்கும்
ஆலமா யானை யறுமுகற்கும்—ஞாலமதில்
ஆதி வயிரவர்க்கு மவ்வவர்க்கும் பூசை
நீதி முறைப்படியே நீசெய்து—சோதி

அமிர்தநந்தி லேகியத்தை யந்திசந்தி வேளை
திமிர்தமிகு தேற்றான் விதைபோல்—சமரிதமாய்
நல்லமிர்த யோகநாள் நட்சத் திரம்பார்த்து
வல்லவர்க டின்ன வகைகேளாய்-நல்லமிர்தே!
தாலவெல்லம் பாக்களவில் சாதித்துக் கொண்டுவர

கோலமுட னுடன்னைக் கூறுவேன்-ஞாலமதில்
காலரை முக்கால் சனத்ததோர் மண்டலத்தில்
சால வியாதிகளைத் தாமறிந்து-மூல
அவபத் தியந்தவிர்த் தானகறி கூட்டிச்
சவலைப் படாயலே சாப்பிட்டவனியினில்

வண்டுகடி செய்யான் வனத்தவளை பச்சோந்தி
பண்டுவந்த சூலை பதினெட்டும்-மிண்டு செயும்
குட்டம் பதினெட்டும் குன்மவகை யெட்டுடனே
முட்டுக் கரப்பான்வகை மூவாறும்-நட்டமிடும்
அண்டத்தின் புற்று மரையாப்பு விப்புருதி

கண்டத்தின் மாலையொடு கபாலகுஷ்டம்-மண்டு
கிரந்தி பதினெட்டும் கிரிச்சரமூ வாறுங்
கருத்த மதகரிகை வெள்ளை-சிறந்ததொரு
மேக மிருபதுவு மேல்கால் பிடிப்புடனே
சோகைமிகு சுக்கிலநோய் சோணிதநோய்-போகுமே

வாதப் பிடிப்புகை மங்குசொறி செஞ்சொறியும்
பூதம்போல் வீங்குவதும் போயொளிக்கும்-சேத
எலிகடியு மீளை யிளைப்பறுங் காய்ச்சல்
தலைவலிகள் சந்நியெலாஞ் சாவும்-புலிபோலே
சேவு மிளைப்பு கிளர்காச தோடவகை

யாவு முடறன்னிற் சாராவே-பூவுலகில்
பாண்டுவகை சோகை பலகரப்பான் வீக்கமெலாம்
தாண்டிவிடுஞ் சக்கரம்போற் றுனறுக்கும்-வேண்டும்
மகோதரம் பேர்வயிறு மகத்தாறு விடபாகம்
வகைகண்ட நீர்மூல வாமை செகமறிய

வாதவகை யெண்பதுவு மானவைதொண் ணூற்றுறும்
சேதமுள மாந்தையெட்டுந் தீருமே சாதகமாய்க்
கீற்றுக்கை கால்குறைநோய் தீயிலிடும் பஞ்சுபோல்
தோற்றுநோ யெல்லாந் தொலையுமே ஏற்றமாய்
காயுஞ் சுரவகைநோய் காணுதே தேய்வெனவே

மாயு மிதன்பெருமை மாநிலத்தில்-ஓயாப்
பவுத்திரநோ யெட்டும் பல்லரணை பல்சூலை
தவழ்ந்து சிலவிஷங்க ளெல்லாம்—நழுவும்
சிலந்தி பிளவை தொடை வாழை தீரும்
கலந்துவருங் கால்சுரப்பான் காணு-துலர்ந்துவிடும்

புண்புரைகள் போவதன்றிப் புண்ணெல்லா மாறிப்போ
கண்விழுந்த காற்புற்று கான்றேடும்-மண்புகுந்தும் [ம்
கால்கையி லேவிரிவும் கண்டவிரு வைசேர்க்கும்
தூலமதிற் சந்திரவட்டம் சூரியவட்டம்—பாலகனே
ஆண்சிலந்தி பெண்சிலந்தி யாமழுகல் நாற்றவெடி

ஊனுக்குள் பீலிகையு மோடுமே—வீணலவே
கன்னத்தின் புற்றும் கனத்ததந்த சூலைகளும்
பின்னப் படுத்துந் திரட்சிகளும் வன்னமிடு
யோனிலிங்கப் புற்றினையு மோட்டுநரம் புச்சிலந்தி
தானே யெலும்புதின் சண்டிப்புண்-மானேகேள்



ஆன சொறிகழலை ஆர்ந்தந் தொழுதனையும்
கானமார் பாணி கழல்வாதம்-பானைபோல்
அண்டத்து வாத மடர்படர் தாமரையும்
பிண்டத்தைக் கொல்லும் பெருநோய்போம்-மண்டலத்
முட்டல் முடக்கல் முறுக்க லிறுக்குதல் [தில்

கட்டல் கழற்பிளவை காணுதே சட்ட
வலித்தல் மரத்தல் மடக்கல் முடக்கல்
சலிப்பாந் தடிப்பை யெல்லாஞ் சாடும்-பலத்த
பொறிகள் சிதறிப் புழுத்தல் குருனை
விழிசிறுகல் விண்சொருகல் மீளும்-அரணைகடி

கொப்புளமி குத்தே யெரியுஞ் சிலகுருதி
அப்பியநோ யத்தனையு மாறுமே-செப்பமுடன்
எந்தெந்த நோய்க்கு மிடியேறு சக்கரமாம்
சந்தயமோ? சூலைமழு தாணுகும்-முந்துவேள்
மாராம பாணமிது ராட்சசசங் காரமிது

சோமரச பாகமிது சுத்தமிஃ-தேமரச
சஞ்சீவி யிந்தவிழ்தம் சாப்பிட்டால் நோய்களெலாம்
பஞ்சிலிடுந் தீயதுபோல் பற்றுமே-வஞ்சமிலை
பத்தியமோ வில்லை பகரவோம் குளிர்சலத்தில்
சுத்தமாய் மூழ்கலாஞ் சொல்லக்கேள்-சற்றுக்

குமரிசந்த ஞதி குளிருமிரு வாமலக
மமரிசண்ப காதிமுத லாகும் குமரனும்
நாலுநா ளைக்கொருநாள் நன்றாய்த் தவருமல்
சீலமுடன் முழுகச் சித்தியாம்-ஞாலமதில்
நந்திவித்துச் சஞ்சீவி நல்லமிர்த லேகியத்தைச் 374
சொந்தமாய்ச் சொன்னார் சுகம்.

சேங்கொட்டை நாற்பது எடுத்து மூக்கைவெட்டிச் சாணிப்பாலில் தோலாயந்திரமாக மும்முறை வேகவைத்துக் கழுவி எடுக்கச் சுத்தியாம். இதனை இரண்டிரண்டாக வெட்டி, பசுநெய் காற்படியில் போட்டுக் காய்ச்சி கொட்டை

மிதந்த பிறகு, நெய்யை வடித்து வைக்கவும்; கொட்டையையும் பொடித்து வைக்கவும். எட்டிவித்து காசெடை ஐந்தை நாவற்பட்டைக் குடிநீரில் ஒரு நாழிகை வேகவைத்துத் தோல் நீக்கித் துண்டுதுண்டாக வெட்டி முந்நெய்யிலிட்டு வேகவைத்து, கொட்டை மிதந்த பிறகு, கொட்டையைப் பொடித்தும் நெய்யை வடித்தும் வைக்கவும். பொன்னிமிளை வராகன் எடை இரண்டு, கரியுப்பையும் வெடியுப்பையும் எருக்கம்பால் விட்டரைத்து நிமிளைக்குக் கவசம் செய்து, ஏழுமுறை நெருப்பிலிட்டு வாட்டி எடுத்துப் பிறகு முருங்கைப்பட்டையை எருக்கம்பாலால் அரைத்து ஷை நிமிளைக்குக் கவசம்செய்து, அவிப்புடம் போட நிமிளைப் பொடியாகும், கல்நாரைப் பசும்பாலில் மூன்று நாள் ஊற வைத்துப்பிறகு நெருப்பிலிட்டுக்காய்ச்சி பசும்பாலில் துவைக்கவும். பிறகு குப்பை மேனியை அரைத்துக் கல்நாருக்கு கவசமிட்டுப் புடம்போட்ட பற்பம் வராகனிடை 2. கல்மதம், நண்டுக்கல் இவைகளைத் தனித்தனியே கொப்பரைத் தேங்காய்ப்பால் வார்த்து அரைத்து உலர்த்தினபொடி, வகைக்கு வராகனெடை 2. பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனம் இவை வகைக்கு வராகனெடை 2, எடுத்து முலைப்பாலிட்டு நன்றாக அரைத்துப் பொடிக்கவும். சீனம் பலம் 4, தயாரித்த இரசச்செந்தூரம் பலம் ½, திரிகடுகு, ஏலம், சிறுதேக்கு, தாளிசம், குரோசானி ஓமம், வாய்விடங்கம், அதிவிடயம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சீரகம், கருஞ்சீரகம், கிராம்பு, சவ்வியம், காட்டுமிளகு, சித்திரமூலவேர்பட்டை, திப்பிலிக்கட்டை, கசகசா, சோம்பு, நேர்வாளம், சிற்றரத்தை, சடாமாஞ்சில், அக்ராகாரம், அமுக்கரா, இவை வகைக்கு வராகனெடை ஒன்றேகால்; இவைகளை உலர்த்தி இடித்து வடிகட்டிக் கொள்ளவும். துருசு, பால் துத்தம், இரசம், பூரம், இலிங்கம், மனோசிலை, கந்தகம், தாளகம், குதிரைப் பல் பாடாணம், வெள்ளைப் பாடாணம், கௌரிப்பாடாணம், இரசச்செந்தூரம், பூநீறு இவை வகைக்கு வராகனெடை 1, நீலிச்சாற்றால் சேர்த்து, இரண்டு சாம மரைத்து, வில்லைகள் செய்து காயவைத்து, நீலிக்கற்கத்துக்குள்



பொதிந்து, சாணத்தால் கவசம்செய்து உலர்த்தி சாணிக் கருகும் பக்குவத்தில் எடுத்துக் கவசத்தை நீக்கிக் கல்வத்தில் பொடித்து, மற்றைய பற்பங்களுடன் சேர்த்து அரைத்து வைக்கவும். முன்னே தயாரித்த நெய்யை ஒரு பழகிய சட்டியில் ஊற்றி, அடுப்பிலிட்டுப் பழைய வெல்லம் நான்கு பலம் அதில்போட்டு, மற்றப் பொடிகளெல்லாம் சிறிது சிறிதாகச் சேர்த்து, சிறுதீயில் எரித்துக் கிண்டி, புதிய தேன் படி ⅛, சேர்த்து கிண்டி வழித்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— தேற்றான் விதை அளவு. அனுபானம்:-பனை வெல்லம் பாக்களவு, நாள் அளவு:—¼, ½, ¾, ஒரு மண்டலம் அவபத்திய பதார்த்தங்களை நீக்கி, பத்திய பதார்த்தங்களைக் கறி கூட்டவும்,

தீரும் நோய்:—வண்டுகடி, செய்யான்கடி, காட்டுத் தவளைக்கடி, பச்சோந்திக்கடி, நாட்பட்ட சூலை 18, குட்டம் 18, குன்மம் 8, கரப்பான் 18, அண்டப்புற்று, அரையாப்பு, விட்புருதி, கண்டமாலை, கபாலக் குட்டம், கிரந்தி 18, கிரீச்சரம் 18, யானைத்தோற் குட்டம், வெண்குட்டம், மேகம் 20, கால்பிடிப்பு, சோகை, சுக்கிலநோய், சுரோணித நோய், வாதப்பிடிப்பு, மங்குசொறி, செஞ்சொறி, தேகப்பெருவீக்கம், எலிக்கடி, ஈளை, இளைப்பு, காய்ச்சல், தலைவலி, சன்னி, கேவுகின்ற இளைப்பு, காசதோடம், பாண்டு, சோகை, மகோதரம், விடபாகம், நீர்மூலம், ஆமைக்கட்டி, வாதம் 80, கபம் 96, உளமாந்தை 8, கைவெடிப்பு, குறைநோய், சுரம், பவுத்திரம் 8, பல்லரணை, பல்சூலை, சில்விடம், சிலந்திப் பிளவை, தொடைவாழை, புரையோடும் புண்கள், கால் புற்று, சந்திரவட்டம், சூரியவட்டம், ஆண்சிலந்தி, பெண் சிலந்தி, ஊண் அழுகல், பீலிகை, கன்னப்புற்று, தந்தசூலை, திரட்சி, யோனிப்புற்று, இலிங்கப்புற்று, நரம்புச்சிலந்தி, எலும்புச் சிலைப்புண், கழல்வாதம், மார்பாணி, அண்டவாதம், படர்தாமரை, கருப்பழிவு நோய், முட்டல், முடக்கல், இறுக்குதல், கட்டல் ஆகிய குணங்களையுடைய

பிளவைகள், வலித்தல், மரத்தல், மடக்கல், முடக்கல் ஆகிய குணங்களையுடைய தடிப்பு, பொறி சிதறல், விழிசிறுத்தல், அரணைக்கடி, எரிச்சலோடு இரத்தத்தைச் சொரிகின்ற கொப்புளம் முதலிய இவைகள் தீரும். இம்மருந்தை உண்ட பிறகு குமரித்தயிலம், சந்தனாதித் தயிலம், ஆமலகத் தயிலம், சண்பகத்தயிலம் ஆகிய தயிலங்களில் நான்கு நாட்கொருமுறை மூழ்கலாம்.

## 10. நவவுப்பு மெழுகு

பாரப்பா பஞ்சநவ லோக வுப்பின்
    பரிவான மெழுகொன்று பகரக் கேளு
காரப்பா கறியுப்பு மிந்துப் போடு
    கனமான வளையலுப்பு பொட்டி லுப்பு
வாரப்பா வமுரியுப்பு மூங்கி லுப்பு
    வகையான கல்லுப்பு பாறை யுப்பு
மாரப்பா பூநீறு மெல்லா மொன்றாய்
    வகைக்குகாற் பலமிவைதா னிறுத்து வாங்கே. 375

வாங்கியதோ ருப்பிவற்றைப் பாண்டத் திட்டு
    வகையார்தும் மட்டிச்சா றுவின் பாலும்
தாங்கியே துத்திவேராற் றுன்சு மூற்றித்
    தயவாக மணல்போக்கி வடித்துக் காய்ச்சி
யோங்கியே சுண்டியபின் றவள மாகு
    முத்தமனே கல்வத்தி லிட்டுக் கேளு
தீங்கில்லா வீரமது பலந்தா னென்று
    சேரப்பா கர்ப்பூரமரைப் பலந்தா னுமே. 376

ஆமப்பா திரிகடுகு வராகன் மூன்
    றப்பனே வாளமது பலமுங் கால்தான்
ஓமப்பா திரிபலையின் கியாழத் தாலே
    யுத்தமனே யொருசாம மாட்டி வாங்கிக்



காமப்பால் விட்டரைப்பாய் சாம மொன்று
    கடிதான மெழுகதனை யெடுத்து மைபோல்
தாமப்பா மிளகளவு பிரமா ணந்தான்
    தயங்காமற் கருப்பட்டி தன்னி லீயே. 377

ஈந்திடவே சூலைமகோ தரங்க ளுக்கு
    மியல்பான வலிகுன்மங் கிரந்தி மேக
மாய்ந்திடநீர்க் கோவை யுதர வாயு
    வரிதான விஷவாத மண்ட வாதம்
தோய்ந்திடவே வலிவாத முடக்கு வாதஞ்
    சொற்பெரிய தமர்வாதந் தந்தி வாத
மாய்ந்திடவே சூதகவாயு குன்ம மெட்டும்
    மகத்தான பாரிச வாயு போமே. 378

போமப்பா மெழுகுக்குப் பத்தி யந்தான்
    புகழான வெந்நீருஞ் சாத முண்ண
ஆமப்பா வுப்பதனை வறுத்துக் கூட்டு
    ஆவினுட பாலாகு நீர்மோர் கூட்டு
காமப்பா சிறுகீரை முருங்கைப் பிஞ்சு
    கனமான கத்திரியு மவரை யோடு
பாமப்பா பசும்பயறுந் துவரை கூட்டு
    பாரமாம் கோழியொடு காடை கூட்டே. 379

கூட்டவே மண்டலங்கால் கொண்டா யானால்
    கூறுகெட்ட வாதமெல்லாங் குடிகெட் டோடும்
நீட்டுவாய் சூலைக்குத் தேனி லப்பா
    நினைவாகச் சந்நிக்கு இஞ்சி நீரில்
மாட்டுவாய் சுரங்களுக்குப் பஞ்ச மூலம்
    வளமான வநுபான மறிந்து போடு
நாட்டிலே வியாதியெல்லாந் தீரு மென்றே
    நலமான போகரிஷி புகன்றிட்டாரே. 380

கறியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, பொட்டிலுப்பு, அமுரியுப்பு, மூங்கிலுப்பு, கல்லுப்பு, பாறையுப்பு பூநீறு இவைகளை வகைக்கு ¼ பலமெடுத்து, ஒரு பாண்டத்திலிட்டு, தும்மட்டிச் சாறும் ஆவின் பாலும் கலந்து ஒருபடி ஊற்றி, துத்திவேர்க் கற்றையால் நன்றாகச் சுழற்றிக் கலக்கி, மணல் போக்கி, தெளிவு இறுத்து, வடித்து காய்ச்சினால் குழம்பாகச் சுண்டி வெண்மையாக இருக்கும். அதனைக் கல்வத்தில் ஊற்றி, அதில் வீரம் 1 பலம், கற்பூரம் ½ பலம், திரிகடுகு வராகனெடை 3, வாளம் ¼ பலம் இவைகளைத் தனித்தனியாகப் பொடிக்துச் சேர்த்து, திரிபலைக் குடிநீரால் ஒரு சாமம் அரைத்துப் பிறகு, தாய்ப்பாலால் ஒரு சாமம் அரைத்து, மெழுகுபதம் வந்தவுடன், கொம்புச் சிமிழில் பத்திரப்படுத்தவும். மிளகளவு கருப்பட்டியில் காலையில் மாத்திரம் ஒன்று முதல் மூன்று நாள் உடல் வன்மைக்குத்தக்கவாறு கொடுக்க, மலம் கழிவதன்றி, சூலை, மகோதரம், வலிகுன்மம், கிரந்தி மேகம், நீர்க்கோவை, உதரவாய்வு விஷவாதம், அண்ட வாதம், வலிவாதம், முடக்குவாதம், தமர் வாதம், தந்தி வாதம்,சூதகவாய்வு, எட்டுக்குன்மம், பாரிசவாய்வு இவைகள் தீரும். வெந்நீரும் சோறும் பத்தியம். மறுபத்தியத்தில் வறுத்த உப்பு, பசும்பால், நீர்மோர், சிறுகீரை, பிஞ்சு முருங்கை, கத்திரி, அவரை, பாசிப்பயறு, துவரை, பிஞ்சுக் கோழி, காடை முதலியவைகள் ஆகும். இம்மருந்தை கால் மண்டலம் உட்கொண்டால்,வாதநோய்க் கூட்டங்கள் தீரும். சூலைக்குத் தேனிலும், சன்னிக்கு இஞ்சி நீரிலும், கரப்பான்கட்டுக்குப் பஞ்சமூலக் குடிநீரிலும் கொடுக்கத் தீரும்.

## 11. நவரசத் துவையல்

சூரத் தமிர்தை யமிர்தைவடு
துருட மயூர மோ தநெல்லி
காரக் கதையிந் தசைமடைவார்
கரத்துப் பலையுப் பமிர்தையுப்பும்



ஆரக் கஃசொன் றரைகொளுஞ்சி
யவந்தி யிருமா தளம்புதியன்
நாரத் தொடிஞ்சி பழமாரை
நற்சாற் றரைவாந் திகளறுமே. 381

சூரத்துக் கடுக்காய், அமிர்தக் கடுக்காய், பிஞ்சுக் கடுக்காய், ஏலம், இலவங்கம், வால்மிளகு, மயில் இறகு சுட்ட சாம்பல், நெல்லிவற்றல், திப்பிலி, இந்துப்பு, சீரகம், வளையலுப்பு, கடலுப்பு, சீந்திலுப்பு, இவை வகைக்கு ¼ பலம். இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டுக் கொளுஞ்சி, நார்த்தம்பழ இரசம், காடி, புளிப்பு மாதுளம் பழச்சாறு, இனிப்பு மாதுளம் பழச்சாறு, புதினாச்சாறு, நார்த்தம் பழச்சாறு, இஞ்சிச்சாறு, பழச்சாறு, புளியாரைக்கீரைச் சாறு முதலியவைகளில் நன்றாக ஊரவைத்து, மைபோலரைத்து அளவுப்படி உட்கொள்ள, வாந்திகள் தீரும்.

## 12. நவாச்சாரக் குழம்பு

தானென்ற இன்னமொரு பேதி சொல்வேன்
தயவான சாரம்பல மொன்று வாங்கி
நானென்ற கொடிக்கள்ளிப் பாலில் நாட்டி
நன்றாகக் கல்வத்தில் மைபோ லாட்டி
தானென்ற சிமிழதனிற் பதனம் பண்ணித்
தப்பாமற் குன்றியெடை தயவாய்க் கொண்டால்
ஊனென்ற மலக்கட்டு சலக்கட் டெல்லாம்
ஓடுமடா அதன்பிறகு பொறுக்கா தன்றே. 382

பொறுக்காதே மயக்கினதால் மைந்தா மைந்தா
பொக்கெனவே நிற்பதற்குப் புதுமை கேளு
மறக்காதே எலுமிச்சம் பழத்தைத் தின்றால்
மறிக்குமடா பேதியது வளமாம் பாரு
தருக்காத பெருவயிறு வாய்வு கட்டித்
தப்பாத மகோதரம்நீ ராம்ப லோடு
உருக்காதே யுருகிமல சலக்கட் டோடே
உள்வினைகள் தீருமடா வுண்மை தானே. 383

நாட்டு நவாச்சாரம் பலம் ஒன்றை எடுத்து, அதில், கொடிக்கள்ளிப்பால் ஊற்றி ஊறவைத்துக் கல்வத்திலிட்டு மைபோலரைத்து வழித்தெடுத்துச் சிமிழில் பதனம் பண்ணவும். ஒரு குன்றிமணியளவு காலையில் கொடுக்க, மலக்கட்டு, சலக்கட்டுத் தீரும். அதிகம் பேதியானால் எலுமிச்சம் பழச் சாறு கொடுக்க நிற்கும். பெருவயிறு, வாய்வுகட்டி, மகோதரம், நீராம்பல் இவைகள் தீரும்.

## 13. நாயுருவி உப்பாதிக் குழம்பு

பார்த்திட்ட லேகியந் தானென்று கேளாய்
பண்பாய்நா யுருவியுப்பு வாழையுப்பு
நீர்த்திட்ட தாழையுப்பு தெங்கி னுப்பு
நேரான பேதியொடு சத்திச் சார
மார்த்திட்டு நின்றதொரு வீரம் பூரம்
மகத்தான நவாச்சாரம் பூநீ றோடு
கார்த்திட்ட விந்துப்பு வளைய லுப்பு
கருவான வெண்ணாபி சங்கு நீறே. 384

நீறுடனே வகைக்குமொரு பலமாய் வாங்கு
நிறையான கந்தகமோ பலமோ வொன்று
பேறுடனே திரிகடுகு பலந்தா னென்று
பேறான சாராயம் விட்ட ரைத்து
மாறுடனே யெருக்கம்பால் கள்ளிப் பாலு
மக்களே வகைக்குழக்காய் வார்த்த ரைத்துக்
கூறுடனே நெய்யுழக்குந் தேனு ழக்குங்
கூட்டியே கொதிக்கவைக்க மெழுகு மாமே. 385

மெழுகெடுத்துப் பரணிதனி லடைத்துக் கொண்டு
விசைக்குமொரு பணவெடைதாம் பிரசெந்தூரம்
ஒழுகெடுத்த லேகியந்தா னரைக்க ழஞ்சும்
உத்தமனே யிரண்டுமொன்றாய் ரேசித் தேதான்



அழுக்கெடுத்த சர்க்கரையிற் கொள்வா ராகில்
அட்டகுன்மம் வாயுவெல்லா மகன்று போகும்
தொழுதெடுத்து மண்டலந்தா னரையிற் றீருஞ்
சுருக்கடா லேகியந்தாம் பிரமும் பாரே. 386

நாயுருவியுப்பு, வாழையுப்பு தாழையுப்பு, தெங்கினுப்பு, அன்னபேதி, சத்திச்சாரம், வீரம், பூரம், நவாச்சாரம், பூநீறு, இந்துப்பு, வளையலுப்பு, வெண்நாபி, சங்குபற்பம், கந்தகம், திரிகடுகு, வகைக்கு 1 - பலம். இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, சாராயம், எருக்கம்பால், கள்ளிப்பால். இவை வகைக்குப் ¼ படி முறையே விட்டரைத்து, ஒரு மட் பாத்திரத்தில் சேர்த்து, நெய் ¼ படி. தேன் கால்படி சேர்த்து, மெழுகு பதம் வரும் வரையில் கொதிக்கவைத்து ஆறவிட்டுப் பரணியில் அடைக்கவும். ½ கழஞ்சு லேகியத்துடன் தாம்பிரச் செந்தூரம் ஒரு பணவெடை சேர்த்து, வெள்ளைச் சர்க்கரையில் கொடுக்க, எண்வகை குன்மம், வாய்வு முதலிய வைகள் தீரும். கொள்ளவேண்டிய நாள் ½ மண்டலம்.

குறிப்பு:—பாட்டில் மெழுகு ½ கழஞ்சு என்றும், தாம்பிரச் செந்தூரம் 1 பணவெடை என்றும கூறியிருப்பினும், தற்கால மக்கள் உடல்நிலைக்குத் தக்கவாறு 1 குன்றிமணியளவு மெழுகும், ஒரு நெல்லெடை தாம்பிரச் செந்தூரமும் கொடுத்தாலே போதும்.

## 14. பஞ்சசூத மெழுகு

ஆதியாம் வேதாந்தப் பொருளாய் நின்ற
அன்பான மகேஸ்வரியைத் தொழுது போற்றி
சோதியாய் விளங்குகின்ற ஆயி பாதந்
துணையாகக் கருத்தில் வைத்துத் துன்ப நீங்க
நீதியாய் நடக்குமந்தப் பெரியோர் பாத
நினைவதனில் மறவாமற் சுருக்க மாக
வாதியென்று பேரெடுத்து வந்தோர்க் கெல்லாம்
வசமாமோ ரௌஷதத்தை வசனித் தேனே. 387

வசமான இங்குலிசம் வராக னிரண்டு
வகையுடனே பூரமது வராக னிரண்டு
இசையுமோர் வீரமது வராக னிரண்டு
இதமான செந்தூரம் வராக னிரண்டு
நிசமான சூதமது வராகனிரண்டு
நினைவாக நிறுத்தொன்றாய்க் கரண்டி தன்னில்
நசையுடனே ரசமானச் செப்புநெருஞ் சிரசமு
நன்றான முருங்கைப்பூ ரசமுஞ் சேரே. 388

சேர்த்துநல் முலைப்பாலுங் கூடக் கூட்டித்
திறமாக வொருசாமஞ் சுறுக்குத் தாக்கு
மார்க்கமாய்ச் சுண்டியபின் மெழுகு போலாம்
மைந்தனே வழித்தெடுத்துக் கல்வத்திட்டுத்
தீர்க்கமா யொருசாம மரைத்தா யானால்
செவ்வையாய் மெழுகுபோ லாகு மிதனை
வார்த்திகமாக் கொம்பினது சிமிழி னன்கு
மைந்தனே வழித்துவைத்துப் பதனம் பண்ணே. 389

பண்ணவே கணபதிக்கும் மகேஸ்வ ரிக்கும்
பாங்காகப் பூசைசெய் தெடுத்துக் கொண்டு
என்னவோ வென்றுசொல்லி மயங்க வேண்டாம்
இதமான பஞ்சசூத மெழுகு தன்னை
உன்னதமாய்ச் சித்தரெல்லா மொளித்தா ருண்மை
யொருவாத விதன்பெருமை யென்ன சொல்வேன்
சந்நியென்ற பதின்மூன்று மிதன்பேர் சொல்லத்
தலைகாட்டா தோடுமடா வறிந்து பாரே. 390

அறிந்துபா ரனுபானஞ் சொல்லக் கேளு
மங்கையர்தம் முலைப்பாலில் கொடுத்தா யானால்
நெருங்கிவரும் சந்நிபதின் மூன்றுந் தீரும்
நிச்சயமாய்த் தோடமது வேழுந் தீரும்



சரியுங்கா லிசிவுமுதல் சாந்த மாகுஞ்
சகலசுரம் விட்டோடுந் தப்பா தஞ்சம்
குறைபுகன்று சீஷனாய் வந்த பேர்க்குக்
கூறுவாய் மூடருக்குக் கூற லாமோ. 391

ஆகுநல்ல வச்சிரவல்லிக் கியாழந் தன்னி
லருந்திடவே குன்மமெட்டுந் தீர்ந்து போகும்
வேகமுள்ள சித்திரமூலக் கியாழந் தன்னில்
விதமாக பணவெடைதான் கொடுத்தா யானால்
சாகுமே சூலைமுதல் முடக்கு வாயு
..........................................
..........................................
மெய்ச்சித்து மிளகுபொடி தன்னிற் கொள்ளே. 392

மெய்ச்சத்தித் தௌஷதத்தை யுண்ட பேர்க்கு
வேதனைக ளில்லைநில வுலகிற் றானே
கச்சிதமா யொருபுறத் தினிற்கும் வாயு
கனமான கால்கைகள் சச்சு வாயு
உச்சிதமாய் மார்நோயும் குண்டல வாயு
வொருபக்கஞ் சூலைமுத லொன்ப துந்தான்
அச்சமொடு பயந்தோடு முலகிற் றானே
யருளினார் வேதமுனி யன்பாய்க் கேளே. 393

கேளகலா வலியைந்துந் தீர்ந்து போகுங்
கெடியான நாசிகா பீட வாயு
வேளையென்று வெள்ளுள்ளித் தயிலந் தன்னில்
விதமாகப் பணவெடைதான் கொடுத்தா யானால்
கோளதுற பதர்சந்நி தொண்ணூற் றாறுங்
கொடியசந்நி புறவலிப்பு தோடந் தீரும்
நாளையிலே யனுபான மறிந்து செய்தால்
நாடாது வலிபிணிகள் நயந்து பாரே. 394

இலிங்கம், பூரம், வீரம், இரசச்செந்தூரம், இரசம் இவை வகைக்கு 2 வராகனெடை—சுத்தமாகத் துலக்கிய இருப்புக் கரண்டியில் இவைகளைச் சேர்த்து, செப்புநெருஞ்சிச் சாறு, முருங்கைப்பூச்சாறு, தாய்ப்பால் மூன்றும் சரியளவு சேர்த்து, ஒரு சாமம் மேற்படிக் கரண்டியிலுள்ள சரக்குகளைச் சுறுக்குக் கொடுத்து, மெழுகுபோல் ஆனபிறகு வழித்தெடுத்துக் கல்வத்திற் சேர்த்து, ஒரு சாமம் அரைக்க மெழுகுபோல் திரளும். இதனைக் கொம்புச்சிமிழில் பதனம் செய்யவும். அளவுப்படி தாய்ப்பாலில் கொடுக்க சன்னி 13, தோடம் 7, கைகால் இசிவு, பல்வகைச் சுரம் தீரும். பிரண்டைக் குடிநீரில் கொடுக்க எட்டுவகைக் குன்மமும், கொடிவேலி வேர்ப்பட்டைக் குடிநீரில் கொடுக்க சூலையும், முடக்கு வாயுவும், மிளகுப்பொடியில் கொடுக்க பக்கவாயுவும், சச்சுவாயுவும், மார்புநோயும், குண்டலவாயும், பக்கச் சூலைகளும், வெள்ளுள்ளித் தயிலத்தில் கொடுக்க ஐவகை வலி, நாசிகாபீடமும், புறவலிப்பு இவைகளுந் தீரும்.

## 15. வான் மெழுகு

விந்துவிந்துச் செந்தூர நாதமொடு
வீரமான சிவ காமியும்
வெள்ளைச்சிங்கி நட்சத்திரம்
பகருவீறு மாண்குறியோடபின்
தொந்தமான முருகன்புராண
மொடுதூப தீபமரிசமனெடை
சுத்தியாகவிவை பாருபாரு
பரிசுத்தமான கலுவத்திலே. 395

சிந்தை கொண்டுபதி ஞுலுமொன்றுபடச்
சேர்த்தரைத்திடு தூளதாய்
சீக்கிரத்திலிடு நாதமாமதனைச்
சேருநாத கருத்தயிலமாய்



முந்தியிட்டு மொருஜாம நாலுமரை
முற்றுமா மெழுகுளுந்த தாய்
மோசமில்லை பணிவெல்ல மதனிலிடு
வோங்கு பத்திய மில்லையே. 396

இல்லை இல்லைகப வாதசந்நி சுரமெட்டு
காசமொடு குட்டமும்
ஏறு கின்ற விரை வாதசூலை ரணம்
ஈளை தோஷ அட்ட குன்மமும்
சொல்லுகின்ற வயிறுவலி கடுப்பு
நெடுஞ் சூதகத் தொடு மகோதரம்
சோகை மஞ்சள் காமாலை சத்திவயிறு
தொல்லை போக்கொடு பவுத்திரம். 397

கல்ல டைப்பு சூலைவலி கிரந்தி
புரைகண்ட மாலைசல தாரையில்
கண்டநீரி ழிவுகுத் தலான முகிற்
காசரோக முத லானதும்
எல்லை விட்டு ஏழு கடல் கடந்து
இனியென்ன பாடுபடுமோ வறிகிலேன்
இந்தவான் மெழு குண்ட பேர்க்கு
இனிப்பிணி வராது இது உண்மையே. 398

இரசம், இரசச்செந்தூரம், கந்தகம், வீரம், கௌரி, வெள்ளைப் பாடாணம், மிருதார்சிங்கி, பூரம், இலிங்கம், அபின், காந்தம், சாம்பிராணி, கற்பூரம், தாளகம் இவை சமஅளவு கீழே கூறப்பட்டபடி பிரித்துத் தனித்தனியாகப் பொடித்து, வரிசைப்படி ஒவ்வொன்றாகக் கூட்டி யரைத்து, கோழிமுட்டையின் மஞ்சட்கரு தயிலத்தில் உடனே கூட்டி, நான்கு சாமம் அரைத்தெடுத்துக் கொம்புச் சிமிழில் அடைக்கவும்.

சரக்குகளின் ஐம்பூதப் பிரிவு:—

1. மண்கூறுப் பொருள்:—மிருதார்சிங்கி, காந்தம்.
2. நீர்க்கூறுப் பொருள்:—வெள்ளை, கௌரி.
3. தீக்கூறுப் பொருள்:—நாளகம், பூரம், வீரம், கந்தகம்.
4. காற்றுக் கூறுப் பொருள்:— இலிங்கம், இரசச் செந்தூரம்.
5. வெளிக்கூறுப் பொருள்:—சாய்பிராணி, சுற்பூரம், அபின், இரசம்.

குறிப்பு:— இதனுள் முதலில் தீக்கூறுகிய கந்தகத்தையும் வெளிக்கூறுகிய இரசத்தையும் ஒன்றாகக்கூட்டிக் கருநிறம் அடையுமட்டும் அரைத்துத் தனிப்படுத்தி,மற்றவைகளை மிருதார்சிங்கி முதலாக அபின் ஈறாகக் கூட்டி நன்றாகக் கலந்து அரைத்தபின், கந்தகத்தையும் இரசத்தையும் அரைத்ததையும் கூட்டிக் கலந்தவுடனே, முட்டைக்கரு தயிலத்தைக் கூட்டி, அரைத்தல் வேண்டும்.

சிலர் இம் முறையில் பதினறு சரக்குகள் சேரவேண்டுமென்றும், அரைப்புக்கு மயில் முட்டைத் தயிலத்தையும், கந்தகத் தயிலத்தையும் பயன்படுத்த வேண்டுமென்றும் கூறுவர். ஆயினும், ஈண்டுக் கூறப்பட்ட முறையே நாங்கள் நீண்ட ஆண்டுகளாக வழங்கி நற்பயனைக் கண்டுள்ளோமாதலால் இங்கு எழுதப்பட்டது.

சிலர் பாட்டைக் கொண்டு "சுத்தியாவதில்லை" எனப் பொருள் படுத்தி, சரக்குகளைச் சுத்தி செய்யாமல் சேர்க்கின்றனர். அவ்வாறு செய்தல் கூடாது. சரக்குகளைத் தூய்மைப் படுத்தியே சேர்த்தல் வேண்டும். "ஓங்கு பத்தியமில்லையே" என்றதால், இச்சாபத்தியம் உண்டு என்பதையும் கொள்ளல் வேண்டும்.

அளவு:— உழுந்தளவு, பனைவெல்லத்தில் இருவேளை முறை ஒன்றுக்கு 8 அல்லது 5 நாள் கொடுக்கலாம் இவ்வாறு விட்டுவிட்டு நோய்க்குத் தக்கவாறு வழங்கவேண்டும்.



தீரும் நோய்கள்:— கபவாத சன்னி, எண்வகைசுரம், காசம், குட்டம், குடலண்டவாதம், சூலை, இரணம், ஈளை, தோடம், எண்வகைக் குன்மம், வயிற்றுவலி, கடுப்பு நாட்பட்ட சூதகக்கட்டு, மகோதரம், சோகை, மஞ்சட்காமாலை, சத்தி, வயிற்றுப்போக்கு, பவுத்திரம், கல்லடைப்பு, வலிப்பு, கிரந்தி, புரை, கண்டமாலை, நீரிழிவு, மந்தார காசம் இவைகள் தீரும்.

## 16. விஷக் குழம்பு

தீராத விடங்களெல்லாந் தீர்ப்ப தற்குத்
தெளிவாகக் கருங்குழம்பு செப்பக் கேளு
நேரான கருநாபி வெண்கார மிந்து
நிர்விஷமுங் கருஞ்சீ ரகமுங் கூட்டிச்
சீரான கந்திரச மனேசிலையும் வாளந்
திறமாகச் சுத்திசெய்து சாரமரை யாகப்
பேரான குழிக்கல்வி லாட்டித் தூளாய்ப்
பின்னுமோர் வேலியிலைச் சாற்ற லாட்டே, 399

ஆட்டுவாய் சாம மூன்று
மதற்கப்பால் தேங்காய்ப் பாலுங்
கூட்டுவாய் கருப்புக் கட்டி
கொட்டாங் கச்சியின் கரியும்
வாட்டமாய்த் தேங்காய்ப் பாலு
மகிழவிட் டரைத்து நன்றாய்
மூட்டுவாய் விஷங்க ளெல்லாம்
முசிவறக் குன்றி போலே. 400

கருநாபி, வெண்காரம், இந்துப்பு, நிர்விஷம், கருஞ்சீரகம், கந்தகம், இரசம், மனேசிலை, வாளம், நவாச்சாரம், இவைவகைக்கு ½ பலம்; இச் சரக்குகளைத் தனித்தனியாகப் பொடித்துக் கல்வத்திற் சேர்த்து வேலிப்பருத்திச் சாற்றால் நன்றாக 3 சாமம் அரைத்து, பிறகு, தேங்காய்ப் பாலால்

மூன்று சாமம் அரைத்து, கருப்புக் கட்டியும், சிரட்டைக் கரியும் வேண்டிய அளவு சேர்த்து, மேலும் தேங்காய்ப்பால் விட்டு நன்றாகக் குழம்பு பக்குவத்தில் அரைத்து, கொம்புச் சிமிழில் அடைக்கவும். விஷங்கட்குக் குன்றிமணி யளவு கொடுக்க வாந்தியும் பேதியுமாகும். விஷம் நீங்கும்.

## 17. மலக்குடார மெழுகு

1. சூரத்து நிலாவரை 3 பலம், 2. குல்கந்து 4 பலம், 3. கொட்டைத் திராட்சை 2½ பலம், 4. பாதம் பருப்பு 1½ பலம், 5. அதிமதுரம் ½ பலம், 6. கடுக்காய்ப் பிஞ்சு 1½ பலம்.

1, 5, 6, சரக்குகளை நன்றாகத் தனித்தனிச் சுத்தித்துப் பொடி செய்யவும். பிறகு குல்கந்தை நன்றாக அம்மியிலிட்டு மைபோ லரைக்கவும். பிறகு கொட்டைத் திராட்சையை அரைக்கவும். பிறகு பாதம் பருப்பை அரைக்கவும். மறுபடியுஞ் சூரணங்களைக் கலந்து சிறிது சிறிதாகப் போட்டு எல்லாவற்றையும் ஒன்றுபடக் கலக்கவரைத்து வைத்துக் கொண்டு, படுக்கைக்குப் போகுமுன் ஒரு கழற்சிக்காயளவு உண்டு, பால் சாப்பிடக் காலையில் தாராளமாக மலங்கழியும்.

## 18. மகா வீர மெழுகு

வீரம் பலம் 1-க்கு 1-படி முருங்கைப் பட்டைச் சாற்றைச் சுருக்குக் கொடுத்து, பூரம் 1 பலம், இலிங்கம் 1 பலம் சுத்தி செய்து சேர்த்து, திரிகடுகு வகைக்கு 1பலம், சித்திர மூல வேர்ப்பட்டை 6 பலம்.

ஆக மொத்தம் 12 பலத்தை வேண்டிய அளவு தேனும் முலைப்பாலும் விட்டரைத்து, கடைசியில், குங்குமப்பூ, கோரோசனம், பச்சைக் கற்பூரம் வகைக்கு ஒரு வராகனெடைச் சேர்த்து மெழுகாகச் செய்து கொள்ளவும்.

அளவு:—1 முதல் 2 பயறளவு—வாதரோகம், மேகரோகங்கள் தீரும். பத்தியம்—பாலும் சோறும்.



## 19. கந்தி மெழுகு

சுத்தித்த கந்தகத்தை வெள்ளை வெங்காயச் சாறு விட்டு 5-நாளரைத்து, பிறகு இஞ்சிச்சாறு விட்டு 5-நாள் அரைத்து, மெழுகு பதமானவுடன் குப்பியில் அடைக்கவும், வேண்டும்போது 2 முதல் 3 குன்றிமணியளவு உருட்டிக் கொடுக்க, வெகு மூத்திரம் போன்ற மேகநீர் ரோகங்களும், சொறி, சிரங்கு, குட்டம், மூலமும் நீங்கும்.

## 20. குன்ம குடோரி

1. இந்துப்பு, 2. கல்லுப்பு, 3. சோற்றுப்பு, 4. உழமண், 5. வளையலுப்பு, 6. வெங்காரம், 7. நவாச்சாரம், 8. வெடியுப்பு, 9. சுக்கு, 10. திப்பிலி, 11. மிளகு, 12. ஓமம், 13. கிராம்பு, 14. மோடி, 15. கோஷ்டம், 16. பெருங்காயம்—இவைகள் வகைக்கு 1 பலம், 17. உரித்த பூண்டு 5 பலம், 18. பனை வெல்லம் 5 பலம், 9. தேன் 5 பலம்.

இவைகளைக் கல்வத்திலிட்டு இளகிய பதம் வருமட்டும் அரைத்து, தினம் இருவேளை சிறு சுண்டைக்காயளவு உட்கொள்ள, ருதுகாலத்தி லுண்டாகும் சூதக வாயுவின் வலி, குன்மம், பித்தவாயு, மந்தம், அசீரணம் தீரும்.

## 21. கௌசிகர் குழம்பு

அருமறை மொழியால் யாவரும் பிழைக்க
குருமுறை யான குழம்பின் குணத்தை
திருவரு ளென்று செய்திடும் பேர்க்கு
இருள்குறை யகற்றி எல்லா நல்குமே. 401

கற்பிதக் கடுக்காய் கடுகிந் துப்பு
நற்பெருங் காய நல்லவெங் காரம்
மெய்ப்புள சூத மேவு மனோசிலை
திப்பிலி தாரஞ் சீரகத் துடனே
5 ஒப்புடன் கடுகு ரோகணி நாபி

இப்படிச் சரக்கு இவைபன் னிரண்டும்
மெய்ப்புள வாள மிதுசம னெடையாய்
நஞ்சுமுளை போக்கி நல்லிள வறுப்பாய்
பஞ்சமன் சூரணம் பொடியது செய்து
வஞ்சிதன் வேலிப் பருத்திச் சாற்றேர்நாள்

கொஞ்சிய தென்னங் குடுக்கைக் கரிதான்
அஞ்சு வராக னவ்வெடை வெல்லம்
துஞ்சிய தேங்காய்ப் பாலி லரைத்து
இஞ்சிய பதத்தில் எடுத்தடை சிமிழில்
வைத்துநீ கேளு வரும்பிணி தனக்கு

உற்ற வனுபான முரைத்ததி லாகும்
வெள்ளை யக்கர மிகுவெழு தோடம்
சில்லரை தோடஞ் சினப்புக ளேழும்
கறுத்த வக்கரங் கண்டதோ ரேழும்
மூவேழு தோட முறிந்தே யோடிட

நாவிற் பணவெடை நன்றாய்த் தேய்த்துக்
கூறிய வெந்நீர் குடித்திடத் தீரும்
சந்நி தோடஞ் சர்வ சுரங்களும்
வெந்நீ ரிற்கொள விட்டகன் றேடும்
கடுக்காய் நீரிற் காசெடை கொள்ள

ஈளை யிருமல் இருபதுந் தீரும்
நடுக்கும் குளிர்சுர மூதேவி தீரும்
விடுக்குஞ் சுக்கு வெந்நீ ரிற்கொள
சீதேவி சீரகந் தண்ணீர் குடித்திட
மூதேவி யுட்சுர முறிந்தோடு மன்றே

எட்டுச் சுரமு மேல மிளகுடன்
அட்டியில் லாமல் அகன்றுபோ மத்தியும்
கொன்றைக் கொழுந்துங் கொன்கடுக் காய்ப்பொடி
எண்ணெயிற் கொள்ள ஏங்கலுப் பிசம்போம்
சந்நி யிருமல் சத்தியுள மாந்தை



சொன்னநல் மோருடன் சுகவுசிற் பட்டை
கடற்கரை யிருமல் கண்டிப்பு தீரும்
இடரது போக்கு மெண்ணெய் முலைப்பால்
குடல்வலி சூலைநோய் குவளைவிப் புருதி
ஆடா தோடை யரத்தை யாமது

சூடாக வெண்ணெயிற் சுகம்பெறக் குடிப்பீர்
ஈளை யிரும லேங்க லுப்பிசம்
கோழையு மீளையுங் கூடுவிப் புருதி
ஆனை யறிந்தங் காவின் மோர்தனில்
நாளும் பணவெடை நயந்து கொடுக்க

பிள்ளைவிப் புருதி பதின்மூன் றுக்குங்
கொள்ளுவீர் தூது பத்திரிச் சாற்றில்
மெல்லிய உசிலம் பட்டையின் பாலும்
கொள்ளுவீர் சுவாசங் குலைகுலைந் தோடச்
சத்தி குன்மம் தகரைச் சாற்றில்

அத்தி குன்ம மாமணக் கெண்ணெயில்
வாயு குன்மம் வல்லாரைச் சாற்றில்
பித்த குன்மம் புளியாரைச் சாற்றில்
எரிகுன் மத்துக் கிளநீர் சீரகம்
பயித்திய குன்மம் பழம்பாசி மோரில்

கருதிய குழம்பு காசெடை யாகும்
நயந்து கொள்ள நலமே செய்யும்
அண்ட வளிவெள் ளாட்டுப்பால் நெய்யில்
பண்டிய பொருமல் பக்கச் சூலை
உண்டிடப் பசுநெய் உரிபால் சர்க்கரை

குண்டிகை நோவு குலைவலி யெரிச்சல்
நின்று வின்பால் நெய்சர்க் கரையில்
அண்டிய குட்ட மதிநல மாகும்
கண்டு சர்க்கரை காய்ச்சிய நெய்யில்
உண்டிட உட்ண வாயுக ளொதுங்கும்

சூதக வாய்வு சுக்குநீர் சீரகம்
பாலுடன் பறங்கிப் பட்டைத்தூள் நெய்யில்
சூலையீ ரொன்பதுஞ் சுகமுடன் தீர
ஈருள்ளி சுக்கு மிளகு சீரகத்தில்
தேறிய குழம்பு காசெடை கொண்டிட

பாரிய சூசிகா வாய்வு பறந்திடும்
மூல முளைக்கு முலைப்பா லெண்ணெயில்
காலங் கண்டு கழஞ்சிடத் தீரும்
மூல வாய்வு மூவிரண் டோடப்
பால்நெய் மோரில் பரிகரித் திடலாம்

இரத்த மூல நறுநெய் யதனில்
உத்தமப் பசும்பால் ஓர்கழஞ் சிடலாம்
மூலங் கிராணி முக்குவக் கிக்குப்
பால்நெய் மோரிப் பரிகரித் திடலாம்
சீழ்மூ லங்கள் சீறிக் கழிந்தால்

செம்மறி யாட்டுக் கொழுப்புநெய் யதனில்
குழம்பது கழஞ்சு கொடுத்திடத் தீரும்
மூலக் கடுப்பு முளைகள் வீழ்தலும்
ஒக்கவே கோழி யூத்தைகள் போலும்
தாமரைக் காய்போல் தான்முளை வீழ்தலும்

ஆமை யடிபோ லம்முளை கரையக்
கண்டுசீ லைப்புகை காட்டத் தீரும்
தண்டு தனிலே தாமரைச் சிலந்தி
பண்டு சிலந்தி பவுத்திர ரோகம்
கண்ட மாலை கழுத்திற் கழலை

தொண்டைப் பிளவை தொப்புட் சிலந்தி
அண்டி மார்பி லாணிச் சிலந்தி
பெண்டுகள் மார்பில் பிறக்கும் புத்து
முதுகிற் பிளவை மூலப் பிளவை
பக்கப் பிளவை பளுவாழ் சிலந்தி



கன்னவிப் புருதி கக்கச் சிலந்தி
மூக்குப் பருக்கள் முளையரை யாப்பு
நாக்குப் பிளவை நரம்புச் சிலந்தி
ஓடுவிப் புருதி யோனிப் புற்று
இலிங்கப் புற்று நேத்திரப் பிளவை

குவளைவிப் புருதி குழிவாழைப் புண்கள்
துடைவா ழைக்கடி துள்ளுமரை யாப்பு
கிரந்தி ரணங்கள் கிளர்பல புண்கள்
பச்சைப்புண் கொடியப் பாதசக் கரமும்
ஏறுஞ் சிலந்திக ளெண்பத்து நான்கும்

மதுபுகை பிடிக்க வாங்கு மன்றே
மூக்குநீர்ப் பாய்ச்சல் முகவாத சந்நி
நாக்கச் சரங்கள் நல்பல் லரணை
பல்லு சந்நிகள் பற்குத்து ரோகம்
மண்டைச் சுரப்பு மாதவ னுன்கும்

அண்டிய பீனிச மதுவிரு நான்கும்
கபால சூலை கன்னக் கிரந்தி
இப்படிக் கொத்த யெழுவகை ரோகமும்
செப்பிய ரோகம் சிரந்தனில் யாவும்
தீரவே சீலையி லெருக்கம்பா லுட்டியே

சீலை யுலர்த்திக் குழம்பைத் தீட்டியே
திரியாய்த் திரித்து நிம்பநெய் தோய்த்து
நெருப்பினிற் கொளுத்தி நின்றிடு புகையை
நாசியி லேற்ற நவின்ற பிணிகள்
தீருமே நல்ல கவுசிகன் குழம்பால்

விசை வாய்வு போல வெகுவலி கண்டு
மலசல மடைத்து வாதை மிகுந்தால்
நீலம்பெற வேலிப் பருத்திச் சாற்றில்
கொண்டரைக் காற்படிக் குழம்பிற் றுனே
குன்றிய ணி யெடை கொடுக்கத் தீரும்

விரைந்து கொள்ள விசைவாயு தீரும்
கூறிய குட்டம் குறைநோய் தீர
கருநொச்சிச் சாற்றில் கலந்தே யுண்டு
பீறிய மருந்தை மேலெங்கும் பூச
பாரிய குட்டம் பதினெட் டுப்போம்

தில்லைப்பூ வெல்லஞ் சேர்த்தரைத் துண்ணலாம்
மலமுஞ் சலமு மறித்துநிற் பதற்கு
தலைமயிர் சுட்ட சாம்பல் வெங்காரப்
பொரியுடன் கூட்டிப் புசித்திடத் தீரும்
காமாலை சோகை கனத்த மகோதரம்

ஆமணக் கெண்ணெயும் ஆட்டுக்கோ மயமும்
பண்பு செய்யுந் திரிபலைத் தூளும்
நீண்ட குழம்பு நிறுத்துக் கழஞ்சிட
பூண்ட பாண்டு ரோகம் போமே
வலிப்பு சந்நி மரணவா தங்கள்

சலித்தே யோடத் தழுதாழைச் சாற்றிலுண்
சருவ வாதஞ் சந்துசூ லைக்கட்டு
சிறுகழு தையுட சிறுநீரி லூட்ட
எண்பது வாதமு மிதமுடன் தீரும்
அன்புற்ற கழுதை யதனிடப் பாலில்

தென்புட னுண்ணத் தீருமே வாய்வெலாம்
சந்நி நோய்கள் சார்பதின் மூன்றும்
இஞ்சிச் சாறு மிதமுள சுக்குநீர்
இன்னும் வலிப்பி லிருநான் குள்ளதும்
முன்னகன் றோட முறுக்கிலைச் சாற்றில்

நன்றாய் மூன்று நாளது கொள்ளு
எருக்கிலைச் சாற்றி லினிதுடன் கொள்ள
வெறிநரி நாய்க்கடி மிக்க வெலிக்கடி
அரணை செய்யான் அரிவண்டு பூரான்
பொரிவண்டு நீர்வண்டு பொன்வண்டு பூவண்டு



சிறுவண்டு கடியோடு சில்விட முள்ளதும்
தேள்கடி வாயிற் சிறுகப் பூசிட
வான்கடி போல வருநட்டுக் காலி
நாவிற் பணவெடை நன்றாய்த் தேய்த்து
கூவிய வெந்நீர் குடித்திடத் தீரும்

ஐயா விடங்க ளறுபத்து நான்கும்
பொய்யா வெருக்கம் பழுப்புச்சா றாட்டே
மைபோல் கறுத்த வழலை மயக்கம்
கொம்பேறி மூக்கன் கொடிய விரியனும்
வம்புறு நாகம் மண்டலி புடையன்

தீண்டிய போது சிறுபய றளவு
கண்ணிடு கலிக்கம் கடுக வுள்ளுக்கு
எருக்கிலைச் சாற்றில் இதமுடன் கொடுக்கப்
பறந்துமே விடங்கள் தானது ஓடும்
விரிதலை நாகம் விடமது தீண்டில்

பரிவுடன் வேலிப் பருத்திச் சாற்றில்
கண்ணிற் கலிக்கங் காலுழுந் தளவு
உண்ணக் குழம்பு மொரு குன்றியளவு
தின்ன விடங்கள் சீர்குலைந் தோடும்
கலிக்க மதனால் கண்வேதனைப் படின்

சலித்திடாய் கற்றாழஞ் சோறுநீ யொற்றிடே
குழம்பால் வயிறு கடுப்புத்தான் காணின்
நன்றாய் வயிறு நலிந்துபே தித்தால்
திட்டமாய் மோருஞ் சிறுகிராம் பாவாரைப்
பட்டையால் தீரும் பயப்பட வேண்டாம்

நாற்கால் சீவன் நயமுள்ள மாடு
சோளப் பயிர்தின்று சொக்கிய மாட்டுக்கு
வேலியின் சாற்றில் வராக னெடையாய்ச்
சேர்த்துக் கொடுக்கத் தீர்ந்திடு முடனே
பார்தனில் மக்கட் பயன்பெற வேண்டி

சீர்பெரு கவுசிகக் குழம்பின் குணத்தை
மொழிந்தனர் கவுசிக முனிவன் ருனே. 402

கடுக்காய், கடுகு, இந்துப்பு, பெருங்காயம், வெங்காரம், இரசம், மனேசிலே, திப்பிலி, அரிதாரம், சீரகம், கடுகுரோகணி, நாபி இவைகள் சம அளவு; இவை சேர்ந்த தொகையளவு நேர்வாளம்; வாளந் தவிர மற்றவைகளைத் தனித்தனிப் பொடித்துக் கல்வத்திலிட்டுச் சேர்த்தரைத்து, நேர்வாளத்தைச் சுத்தி செய்து இளவறுப்பாய் வறுத்து மெழுகுபோல் நன்ருக அரைத்துப் பிறகு அப்பொடியைச் சேர்த்துக் கலந்தரைத்து, பிறகு வேலிப்பருத்திச் சாற்ருல் ஒருநாள் அரைத்து, அதில் தென்னங் குடுக்கைக் கரி, வெல்லம் இவையிரண்டும் வகைக்கு வராகன் எடை 5 சேர்த்துத் தேங்காய்ப் பாலால் அரைத்துச் சிமிழில் அடைக்கவும்.

வெள்ளை, அக்கரம், தோடம், சினப்புகள், இவைகட்கு குன்றிமணி யளவு நாக்கில் தேய்த்து, வெந்நீர் குடித்திடத் தீரும். சன்னிதோடம்,எல்லாவகைச் சுரங்கட்கு வெந்நீரிலும், கடுக்காய்க் குடிநீரில் உட்கொள்ள ஈளை, இருமலும், நடுக்கல், சுரம், குளிர்சுரம் இவைகட்குச் சுக்குக் குடிநீரிலும்; சீதேவி செங்கழுநீர், சீரகம் இவை சேர்ந்த குடிநீரில் கொடுக்க உட்சுரமும்; எண்வகைச் சுரங்கட்கு ஏலம், மிளகு சேர்ந்த பொடியுடனும்.

அத்தி சுரத்திற்குக் கொன்றைக் கொழுந்திலும்; கடுக்காய்ப்பொடி, எண்ணெய் இவை சேர்ந்த கலவையில் கொடுக்க ஏங்கல் உப்பிசமும்; சன்னி, இருமல், சத்தி, உளமாந்தை இவைகட்கு மோரும், உசிர்ப்பட்டையும் சேர்ந்த கலவையிலும்;

குடல்வலி, சூலைநோய், குவளை விப்புருதி இவைகட்கு ஆடாதோடை, அரத்தை இவை சேர்ந்த பொடியுடன் வெண்ணெயிலும்;

ஈளை, இருமல், ஏங்கல், உப்பிசம், சோழையும், ஈளையும் கூடிய விப்புருதிக்கு ஆவின் மோரிலும்; பிள்ளை விப்புருதி



பதின் மூன்றுக்கும் தூதுவேளைச் சாற்றிலும்; உசிலம் பட்டையின் பாலில் சுவாசமும்; சத்தி குன்மத்திற்குத் தகரைச் சாற்றிலும்; அத்தி குன்மத்திற்கு ஆமணக்கு நெய்யிலும்; வாய்வு குன்மத்திற்கு வல்லாரைச் சாற்றிலும்; பித்த குன்மத்திற்குப் புளியாரைச் சாற்றிலும்; எரிகுன்மத்திற்கு இளநீரிலும் சீரகத்திலும், பைத்திய குன்மத்திற்குப் பழம் பாசியிலும் மோரிலும்;

அண்ட வாய்வுக்கு வெள்ளாட்டுப் பாலிலும்; வெள்ளாட்டு நெய்யில் கொள்ளப் பொருமலும், பக்கசூலையும்; பசுநெய், பசும்பால், சர்க்கரை இவைகளில் உட்கொள்ளக் குலைவலி எரிச்சலும்; ஆவின்பாலும் சர்க்கரையும் சேர்ந்ததில் குட்டமும்; கற்கண்டு, சர்க்கரை, நெய் இவைகளில் கொள்ள உட்டிண வாய்வுகளும்;

சூதக வாய்வுக்கு சுக்கு நீர்ச் சீரகமும்; பரங்கிப் பட்டைத் தூள், பால், நெய் இவைகளில் 18 வகை சூலையும்; ஈருள்ளி, சுக்கு, மிளகு, சீரகம் இவைகள் சேர்ந்ததில் நாட்பட்ட சூசிகா வாய்வும்; மூல முளைக்கு முலைப்பால் எண்ணெயிலும்; அறுவகைமூல வாய்வுக்கு பால், நெய், மோர் இவைகளிலும்; இரத்த மூலத்திற்கு நெய், பசும் பாலிலும்; மூலம், கிராணி இவைகட்கு முறையே பாலிலும், நெய்யிலும்; மூலமுக்கலுக்கு மோரிலும்; சீழ்மூலத்திற்கு செம்மறியாட்டுக் கொழுப்பு நெய்யிலும்;

மூலக்கடுப்பு, முளைகள் வீழ, தாமரைக்காய் போன்ற முளை வீழ, அம்முளைகள் கரைய இம் மெழுகைத் துணியில் தடவித் திரியாகத் திரித்துக் கொளுத்தி, அதினின்று எழும்பும் புகையைக் காட்டத் தீரும்.

ஆண்குறியில் உண்டாகும் தாமரைச்சிலந்தி, பவுத்திரம், கண்டமாலை, கழுத்துக்கழலை, தொண்டைப்பிளவை, தொப்புள்சிலந்தி, மார்பாணி, மார்புச் சிலந்தி, பெண்களுக்கு உண்டாகும் மார்பின் புற்று, முதுகுப்பிளவை, மூலப்பிளவை, பக்கப்பிளவை, பழு எலும்புகளில் வரும் சிலந்தி, கன்னவிப்புருதி, கழுக்கட்டிச் சிலந்தி, மூக்குப்பருவு, முளை அரை

யாப்பு, நாக்குப் பிளவை, நரம்புச் சிலந்தி, ஓடுவிப்புருதி, யோனிப்புற்று, இலிங்கப்புற்று, நேத்திரப்பிளவை, குழிப் புண்கள், தொடைவாழை, கிரந்தி, இரணங்கள், பல்வகைப் புண்கள், பச்சைப் புண், பாதச்சக்கரம், ஏறும் சிலந்திகள் 84 இவை புகைபிடிக்க வாங்கும். மூக்கு நீர்ப்பாய்ச்சல், முகவாத சன்னி, நாக்கு அச்சரங்கள், பல்லரணை, பற்சன்னி, பற் குத்து, மண்டைச் சுரப்பு, பீனசம் 8, கபாலச்சூலை, கன்னக் கிரந்தி இவைகள் தீர எருக்கம்பால் ஊட்டிக் காயவைத்த சீலைத்துண்டில் குழம்பைத் தீட்டியே திரியாய் திரித்து வேப் பெண்ணெய்யில் துவைத்துக் கொளுத்தி உண்டாகும் புகையை நாசியில் ஏற்றத் தீரும். விசை வாய்வு, வலி, மல சலக்கட்டு இவைகட்கு வேலிப்பருத்திச் சாற்றிலும்;

குட்டம், குறைநோய் இவைகட்கு கருநொச்சிச் சாற் றிலும், தரலாம். இம்மெழுகை கருநொச்சிச் சாற்றில் மேல் பூச்சாகப் பூசக் குட்டம் 18-ம் தீரும். தில்லைப் பூவை வெல்லம் சேர்த்தரைத்து அதில் மெழுகை உண்ணக் குட்ட மும்; மலசலக் கட்டுக்குத் தலைமயிர் சுட்ட சாம்பலும், வெங்காரப் பொரியும் சேர்ந்த கலவையிலும்; காமாலை, சோகை, மகோதரம் இவைகட்கு ஆமணக்கெண்ணெய்; ஆட்டுக் கோமயம் சேர்ந்ததிலும்;

பாண்டுக்குத் திரிபலைத் தூளிலும்; வலிப்புச்சன்னி, மரண வாதம், இவைகளுக்குத் தழுதாழைச் சாற்றிலும்; சர்வாங்க வாதம் சந்துசூலைக்கு சிறுகழுதைச் சிறுநீரிலும்; கழுதைப் பாலில் 80 வாதத்துக்கும்; சன்னி 13-க்கு இஞ்சிச்சாற்றிலும்; எண்வகை வலிப்புக்கு முருக்கிலைச் சாற்றிலும்;

எருக்கிலைச் சாற்றில் வெறி நரி, வெறிநாய், எலி, அரணை, செய்யான், அரிவண்டு, பூரான். பொரிவண்டு, நீர்வண்டு, பொன்வண்டு, பூவண்டு, சிறுவண்டு முதலிய கடிகளுக்கும், சிலவிடங்களுக்கும்; தேள் கடிக்குக் கொட்டுவாயில் மேற் பூச்சாகவும்; நட்டுவாக்காலிக் கடிக்கு மெழுகை நாக்கில் தேய்த்து வெந்நீரைக் குடிப்பித்தலாலும்; 64 விடங்களுக்கு



எருக்கன் பழுப்புச் சாற்றிலும்; கருத்தவழலைக் கடி மயக்கம், கொம்பேறிமுக்கன்கடி, விரியன் பாம்புக்கடி, நாகப்பாம்புக் கடி, மண்டலிக்கடி, புடையன்கடி முதலானவைகட்குப் பயறளவு கண்ணில் கலிக்கமிட்டு உள்ளுக்கு எருக்கிலைச் சாற்றில் கொடுக்கவும், விடங்கள் தீரும்.

விரிதலை நாகக்கடிக்கு வேலிப் பருத்தியிலைச் சாற்றில் உள்ளுக்குக் கொடுத்துக் கண்ணிலும் கலிக்கமிடத் தீரும்; கலிக்கத்தினுல் கண்ணில் வருத்தம் உண்டானல், கண்ணின் மீது கற்றாழஞ் சோற்றால் ஒற்றடமிட்டுக் கட்டத் தீரும். குழம்பை உள்ளுக்குக் கொள்வதால் வயிற்றுக் கடுப்பும் மிகுபேதியும் உண்டானல், மோர், கிராம்பு ஆவாரம்பட்டை இவைகளைச் சேர்த்துக் கொடுக்கத் தீரும்.

சோளப்பயிர் தின்று மயங்கிய மாட்டுக்கு, ஒரு வராக னெடை கௌசிகர் குழம்பை, வேலிப்பருத்திச் சாற்றில் கொடுக்கத் தீரும்.

# 8. சூரணங்கள்

## 1. சீரகச் சூரணம்

(எண்சீர் விருத்தம்)

கொள்ளவே யின்னமொன்று சொல்லக் கேளாய்
குணமான சீரகமோ பலந்தா னைந்து
தெள்ளவே வாங்கிவந்து பீங்கான் தன்னில்
தெளிவாகத் தான்போட்டுப் பழநீர் வாரு
அள்ளவே மிதக்கவிட்டு ஊற வைத்தே
அடைவாக நிழல்தனிலே யுலரப் போட்டு
விள்ளவே தானெடுத்து இந்தப் பாகம்
விதமாகத் தான்போட்டு விவரம் பாரே.

பாரேநீ கருப்பஞ்சாறு முசுமு சுக்கை
பாங்காக நெல்லிக்காய்ச் சாறுங் கூடச்
சேரேநீ தூதுவளைச் சாற்றி னோடே
செயமான வேம்பின்பட்டைச் சாறு மாகும்
தீரேநீ தும்பையிலைச் சாறு விட்டுத்
திறமாக வெவ்வேறு யுலரப் போட்டுச்
சீரேநீ தூளிடித்து வடிதான் கட்டிச்
சீனியது கால்பங்கு கலந்து கொள்ளே.



கொள்ளப்பா அந்திசந்தி நாற்பதுநாள் கொள்ள
குணமாக வெருகடிதான் வீதம் பாரு
தெள்ளப்பா பித்தமெல்லாம் அகன்று போகும்
தெளிவில்லாக் கிறுகிறுப்பு வாந்தி தீரும்
உள்ளப்பா வக்கினியா மந்தந் தீரும்
உஷ்ணமாங் காங்கையெல்லா மகலும் பாரு
விள்ளப்பா போகரிட கடாட்சத் தாலே
விதமாகப் புலிப்பாணி பாடி னேனே. 405

சுத்தம் செய்த (கல், மண் முதலிய நீக்கப்பட்ட) சீரகம் 5 பலத்தை ஒரு பீங்கானில் போட்டு, முழுகும்படி பழச் சாறு விட்டு ஊறவைத்து, நிழலில் உலர்த்தவும். இவ்விதமாக முறையே கருப்பஞ்சாறு, முசுமுசுக்கைச்சாறு, நெல்லிக் காய்ச்சாறு, தூதுவளைச்சாறு, வேம்பின் பட்டைச் சாறு, தும்பைஇலைச்சாறு இவைகளில் தனித்தனியே ஊறவிட்டுக் காயவைத்து, நன்றாக இடித்துத் தூளாக்கி, வந்த எடைக்கு கால்பங்கு சக்கரை சேர்த்துக் கலந்து கொள்ளவும். வெருகடி, காலை மாலை 40 நாள் கொள்ள, பித்தத்தின் வகைகள், கிறு கிறுப்பு, வாந்தி, அக்கினி மந்தம், உஷ்ணம், காங்கை முதலியவைகள் தீரும்.

## 2. தீபாக்னி சூரணம்

(பதினான்குசீர்க் கழிநெடிலடி விருத்தம்)

பஞ்சலவ ணத்துட னெவாச்சாரம் வெங்காரம்
பகர்சவர்க் காரமுடனே
பாங்கான சுக்குடன் சிறுதேக்கு செவ்வியம்
பாவுதிப் பிலிமூலமும்
செஞ்சொலா னைத்திப்பிலி வட்டத்தி ருப்பியும்
திகழோம மிளகினுடனே
சீராக வகைதன்னி லொருபலங் கூட்டியே
சேரநன் றாகவைத்துச்

செஞ்சித்ர மூல முன் மருந்தினிற் பாதியும்
சேரவே தானெடுத்துத்
திகழவே யிவைகளை வறுத்துடன் பொடிபண்ணித்
தேனதி லருந்தவே தான்
அஞ்சாம னின்றிடுஞ் சயகாச குன்மமும்
அடைவாங் கிராணிமூலம்
அகன்றிடு மென்னவே தீபாக்னி சூரணம்
ஆய்ந்துரைக் கின்றவாறே. 406

ஐந்துப்பு, எவாச்சாரம், வெங்காரம், சவர்க்காரம், சுக்கு, கண்டுபாரங்கி, செவ்வியம், திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி, வட்டத்திருப்பி, ஓமம், மிளகு வகைக்கு 1 பலம்: எல்லாம் சேர்ந்த எடைக்குப் பாதி செஞ்சித்ர மூலவேர்ப் பட்டை; இவைகளை முறைப்படி சுத்தித்து, வறுக்க வேண்டியவைகளை வறுத்துப் பொடிசெய்து, ஒன்றுபடக் கலந்து, அளவுப்படி தேனில் கொடுக்க க்ஷயம், காசம், குன்மம், கிராணி, மூலம் இவைகள் தீரும்.

## 3. அமுக்கராச் சூரணம்

கிராம்புசிறு நாகப்பூ வோடேல மிளகு
கெடியான திப்பிலியும் வேர்க்கொம்பி னோடு
திராமசுவ கந்தமுட னென்றி ரண்டு
செய்நாலு மிருநாலு நான்குநா லுலெண்
எட்டெட்டு மேயுலர்த்தி யிளவறுப் பாய்ப்பொடி
ஈரெண் சீனியிட் டிடவி தற்கு
அஷ்டகுன் மம்பிலீ கங்குத்து வாயு
ஆமேக வெட்டைபிரமியம் விக்கல் பாண்டு
இரைப்புமிளைப் போடுசய ரோகம்மன வெரிவு
இடைகரங் கால்சிரம் வறட்சியொடு வீயு
மெய்பெருக வெழுத்தல் பிடுங்கிட்டோ டுஞ்சிலேத்மம்
வீட்டோடு மேயசுவ கந்தாதி யினிலே. 407



கிராம்பு 1 பங்கு, சிறுநாகப்பூ 2 பங்கு, ஏலம் 4 பங்கு, மிளகு 8 பங்கு, திப்பிலி 16 பங்கு, சுக்கு 32 பங்கு, அமுக்கரா 64 பங்கு, சர்க்கரை 128 பங்கு: சர்க்கரை நீங்கலாக மற்றவைகளை முறைப்படி சுத்தித்து, தனித்தனி பொடித்து, எல்லாவற்றையும் ஒன்றுபடக் கலந்து, பிறகு சர்க்கரையையும் சேர்த்துக் கலந்து, இதனை அளவுப்படி கொடுக்க, எண்வகைக் குன்மம், இடைப்பாட்டு ஈரல் நோய், குத்துவாய்வு, வெட்டை, பிரமியம், விக்கல், பாண்டு, இரைப்பு, இளைப்புச் சயம், வறட்சி, கைகால் எரிவு தீரும். உடல் பெருக்கும். இதனை அஸ்வகந்திச் சூரணம் எனவும் செல்வர்.

## 4. இஞ்சிச் சூரணம்-1

(கட்டளைக் கலித்துறை)

திரிமுற் பவத்துரி போக்கித் தறிதொடி தீத்தொகைத்துப்
பெரிபொரி பஞ்சாக்கினியிலொன் றுங்கபத் தெண்விஜயம்
சரியெரிந் திட்டிடி யுண்பொடி மூவிரற் சத்திமுதல்
எரிவனன் மந்தமும் பித்தப் பிணியு மிடரறுமே. 408

தோல் நீக்கிய இஞ்சி பலம் 40-ஐத் துண்டு துண்டாய் அறுத்து, உலர்த்தி, நெய்யிற் பொரித்துப் பொடியாக்கி, பொருக்கிய சீரகம் 20 பலத்தை பொன்வருவலாக வறுத்து இடித்துப் பொடியாக்கி, இவ்விரண்டும் சேர்ந்த எடை அதாவது 60 பலம் சீனி சேர்த்து, எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து, மூவிரல் அளவு கொள்ள வாந்தி, உடலெரிவு, அனல், மந்தம், பித்தப்பிணிகள் தீரும்.

## 5. இஞ்சிச் சூரணம்-2

இஞ்சியு முப்பலந்தான் இயல்பெறக் கண்ட மாக்கி
மிஞ்சநெய் தனில்வ றுத்து மிளகுதிப் பிலிமூன் றுக
விஞ்சிய மூல மொன்று வீறுள வேலஞ் சுக்கு
தஞ்சசா திக்கா யோடு தான்சடா மாஞ்சி கூட்டே.

கூட்டுசீ ரகமிரண்டும் கோட்டமுஞ் சிறுநா கப்பூ
வாட்டிய லவங்கப் பத்ரி வளர்வெட்டி வேர்கி ராம்பு
தீட்டிய சாதிபத்திரி திகழுந்தா ளிசமொன் ருக
நாட்டுச்சர்க் கரைபத்தாக நறியகண் டாத்ரி யாமே. 410

மிக்க வரோசக மிகுமன்னத் வேடம்
பக்க வாயு பருகுலை யெரிவுடன்
தக்க வாயுவும் சத்தியுங் கோழையும்
திக்கஞ் சூசிகா வாயுவுந் தீருமே. 411

இஞ்சி 3 பலம்; திப்பிலி 3 பலம்; மிளகு 3 பலம்; திப்பிலி மூலம், ஏலம், சுக்கு, சாதிக்காய், சடாமாஞ்சில், சீரகம், சோம்பு, கோட்டம், சிறுநாகப்பூ, இலவங்கப்பத்திரி வெட்டி வேர், கிராம்பு, சாதிப்பத்திரி, தாளிசம், வகைக்கு 1 பலம்; நாட்டுச் சர்க்கரை 10 பலம்: சர்க்கரை நீங்கலாக மற்றவைகளைச் சுத்தித்து, தனித்தனிப் பொடித்து, எல்லாவற்றையும் சர்க்கரையுடன் கலந்து, மூன்று விரல் அளவு கொடுக்க, சுவையின்மை, ஊண் வெறுப்பு, பக்கவாய்வு, குலை எரிவு, வாய்வு, வாந்தி, கோழை, சூதகவாய்வு இவைகள் தீரும்.

குறிப்பு:—இஞ்சியைத் தனியாகத் தோல் நீக்கித் துண்டு துண்டாக நறுக்கி நெய்யில் வறுத்துப் பொடிக்கவும்.

## 6. ஏலாதிச் சூரணம்

(எண்சீர் விருத்தம்)

கொள்ளவே யேலாதிச் சூர ணங்கேள்
குணமான லவங்கமொன்று மிளகி ரண்டு
விள்ளவே நாகம்நாலு தாளிச மெட்டு
விதமான குகைநீறு பதினு ருகும்



நள்ளவே சுக்கதுதான் முப்பத் திரண்டு
நலமான வேலமது வறுபத்து நாலு
கள்ளவே சர்க்கரைதான் சமனுய்க் கூட்டிக்
கலந்துபுதுக் கலசமதில் பதனம் பண்ணே. 412

பண்ணவே வெருகடித்தூ ளிருநே ரங்கொள்
பறக்குமடா பித்தமொடு வாதம் வாய்வு
தண்ணவே கிரந்திரண மரிகி ரந்தி
தளமான மேலூறல் சொரிசி ரங்கு
நண்ணவே சில்விடங்க ளுடா தோடும்
நலமான குட்டமொடு குறைநோய் தீரும்
பெண்ணவே பெரும்பாடு வெலும்பு ருக்கி
பின்பாரா தோடுமின்ன மொன்று கேளே. 413

கிராம்பு 1 பங்கு, மிளகு 2 பங்கு, நாகப்பூ 4 பங்கு, தாளிசம் 8 பங்கு, கூகைநீறு 16 பங்கு, சுக்கு 32 பங்கு, ஏலக்காய் 64 பங்கு, எல்லாம் சேர்ந்த அளவு சர்க்கரை- அதாவது 127 பங்கு. சர்க்கரை நீங்கலாக மற்றவைகளைச் சுத்தித்துப் பொடித்து, எல்லாவற்றையும் சர்க்கரையுடன் சேர்த்து ஒன்றுபடக் கலந்து, புதுக் கலசத்தில் பத்திரப்படுத்தவும், வெருகடித் தூள் இருநேரம் கொள்ள, பித்தவாயு, வாயு, கிரந்தி, விரணம், அரிகிரந்தி, சில்விஷம், குட்டம், குறை நோய், பெரும்பாடு, எலும்புருக்கி இவைகள் தீரும்.

## 7. கும்மட்டிச் சூரணம்

ஆற்றுக் கும்மட்டிக்காய் (விதை, ஓடு போக்கினது) 20 சட்டியிலிட்டு, வளையலுப்பு பலம் ஐந்து, உப்பு படி 1, பசுவின் பால் படி ஒன்று கூட்டி, அடுப்பிலேற்றி வேகவைத்துக் கடைந்து, சட்டியிலிட்டு மூடி,சீலைமண் செய்து, 40-நாள் புதைத்து எடுத்து, அரைத்து வைத்துக்கொண்டு, ஒரு விராகனெடையாக காலை மாத்திரம் கொடுத்துவர, குன்மம், மந்தம் போம்.

## 8. சிவதைச் சூரணம்

(வெண்பா)

உண்ணும் மிலவங்க மோதுபலே முக்கடுகு
திண்ணேல நாகப்பூ சேர்முத்தம்—பண்ணுபொடி
பாலுடனே நற்சிவதை பாகமாய்ச் சுத்தித்து
நாலுடனே முன்பொடிசேர் நன்று. 414

நன்றுபொடி முக்கழஞ்சு நல்லதேன் சர்க்கரையிற்
றின்றுவிடும் போதே சிதறிவிடும்—ஒன்றுந்தான்
மீளா மலக்கட்டு மிக்கவெப்பு வாயுவுடன்
கீளாக நோக்குங்காண் கேள். 415

இலவங்கம், திரிபலே, திரிகடுகு, ஏலம், சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு வகைக்கு 1 பங்கு; சிவதை 4 பங்கு. சிவதையைப் பாலில் வேகவைத்து சுத்திக்கவும். எல்லாவற்றையும் தனித்தனிப் பொடித்துக் கலந்து கொள்ளவும். மூக்கழஞ்சு, தேன் அல்லது சர்க்கரையில் கலந்து கொடுக்க மலக்கட்டு, வெப்பு, வாய்வு தீரும்.

## 9. சிவனூர் வேம்புச் சூரணம்

(எண்சீர் விருத்தம்)

காணாத சிவன்வேம்புச் சூர ணங்கேள்
கருதியே சிவன்வேம்பு சமூலங் கொண்டு
கோணாத நிழலுலர்த்திப் பலந்தான் பத்து
குறிப்பாகச் சங்கம்வேர் பலந்தா னிரண்டு
கோணாத வெள்ளேச்சா ரணையின் வேரும்
தூதுவளே மிளகரணே யமுக்க ராவேர்
கோணாது வகைவகைக்குப் பலந்தா னிரண்டு
கொடிவேலி நொச்சிகருஞ் சூரை வேம்பே. 416



வேம்புடனே திரிகடுகு திரிப லாதி
விதமான கார்போகி சீர கந்தான்
சோம்பதுவுங் கடனுரையும் வசம்பிந் துப்பு
செப்பரிய கருங்காலிப் பட்டை யோடு
கோம்பான மூலமொடு பறங்கிப் பட்டை
கோப்பிரண்டை கருவாகை யூறற் பட்டை
சோம்பாக வகைக்கிரண்டு பலமாய்ச் சொன்னேம்
சொற்பெரிய சிவனூர்தன் வேம்பு கேளே. 417

கேளேநீ யிவையெல்லா மொன்ருய்ச் சேர்த்து
கிரமமுட நிழலுலர்த்திச் சூர ணித்து
தேளேநற் பாண்டத்தி லிட்டு மைந்தா
திருகுகள்ளிச் சாறும்வெள் ளாட்டுநீரும்
வேளேநீ பேய்க்குமட்டிச் சாற்றினேடும்
விதமான தேசிச்சார் வகை வகைக்குக்
கேளேதான் வகைக்குஒரு படிதான் வார்த்துக்
குமுறவே விரவிநன்ருய் மூடிப் போடே. 418

மூடியே நாள்மூன்று புதைத்து வைத்து
மூசியாம லெடுத்துரவி யுலர்த்தி நன்ருய்
நாடியே சட்டிதனி லிட்டு மூடி
நணுகியந்தி சந்திவெரு கடிதூ ளப்பா
மூடியே தூளதனே யெடுத்து நீயும்
முன்சொன்ன சிவன்வேம்புத் தயிலந் தன்னேப்
பாடியே காசெடைதான் சேர்த்துக் கொள்ளப்
பதினெட்டுச் சூலேகுட்டங் குறைநோய் போமே. 419

சிவனூர் வேம்பு சமூலத்தை நிழலில் உலர்த்தினது 10 பலம்; சங்கம்வேர் 2 பலம்; வெள்ளேச்சாரணே வேர், தூதுவளேவேர், மிளகரணே வேர், அமுக்கராவேர், கொடிவேலி வேர்ப்பட்டை, நொச்சிவேர், கருஞ்சூரைவேர், வேம்பு, திரிகடுகு, திரிபலே, கார்போகி, சீரகம், சோம்பு, கடல்நுரை,

வசம்பு, இந்துப்பு, கருங்காலிப்பட்டை, பறங்கிப்பட்டை, கோப்பிரண்டை, கருவாகை, கிளியூறல் பட்டை இவை வகைக்கு 2 பலம்: இவைகளை ஒன்றாகச் சேர்த்து, நிழலில் உலர்த்தி, சூரணித்துப் பாண்டத்தில் இட்டு, திருகு கள்ளிச் சாறு, வெள்ளாட்டு நீர், பேய்க்குமட்டிச்சாறு, பழச்சாறு வகைக்கு ஒவ்வொரு படி ஊற்றி நன்றாகக் கலந்து, பாண்டத்துக்கு வாய்ப்பொருத்தமான ஓட்டினால் மூடிச் சீலைசெய்து, 3 நாள் பூமியில் புதைத்து எடுத்து, வெய்யிலில் உலர்த்திப் பதனம் பண்ணவும். காலை மாலை வெருகடித்தூள் சிவன் வேம்புத் தயிலம் காசு எடை சேர்த்துக் கொடுக்கச் சூலை 18, குட்டம், குறைநோய் தீரும்.

குறிப்பு:—பத்தியம்—உப்பில்லாப் பத்தியம்.

## 10. சீந்திற் சூரணம்

(எண்சீர் விருத்தம்)

ஆகாது இன்னமொரு சூர ணங்கேள்
அப்பனே சீந்திலிட சூர ணத்தை
வாகான சுத்தகங்கை தன்னிற் சுத்தி
மைந்தனே, மூவேழு தரமே செய்து
பாகாக உலர்த்தியதைப் பாலிற் பிசரிப்
பாலகனே காயவைத்துப் பலம்பத் தப்பா
நேராகக் கரிசாலைச் சூரணங் கூட்டி
நினைவாகப் பூநாகப் பூச்சி தன்னை 420

தன்னையே பாலிலிடமண் ணெல்லாங் கக்கும்
தருவாகப் பின்புலர்த்திச் சூர ணித்து
ஒண்ணுமே ஆப்பால்மூன் றெடையுங் கூட்டி
உத்தமனே மூன்றுவிசை வடித்துக் கட்டி



நிண்ணயமாய் வெருகடிதான் நெய்யிற் கொள்ள
நிலையாத மேகமொடு கவிசை யீளை
சொன்னமே காசமெட்டு இளைப்புசய ரோகம்
தொலையாத கிரிச்சரமும் அண்ட வாய்வே. 421

வாயுவென்ற வாதமெட்டு வறட்சி பித்தம்
வகையாகத் தீருமடா தேனிற் கொள்ளத்
தோயுவென்ற கன்மநோய் நாசிப் புண்கள்
தொலையாத பீநசமுந் தொலைந்து போகும்
பாயுமென்ற சர்க்கரையிற் கொண்டால் மைந்தா
பாங்கான மயிர்வெட்டுப் புழுவெட் டோடும்
காயுவென்ற கால்பலம்கண் தெளிவு முண்டாம்
கருவாகப் புளிபுகையுந் தவிர்க்கச் சொல்லே. 422

21 முறை தண்ணீரில் இட்டுச் சுத்திசெய்த சீந்தில் தண்டை உலர்த்திப் பாலில்பிசரிக் காயவைத்தது 10 பலம்; கரிசாலைச் சூரணம் 10 பலம்; (பூநாகத்தை பாலில் போட்டு வைக்க மண்ணைக் கக்கிவிடும்) அப்படி சுத்தம் செய்து காய வைத்து இடித்துப் பொடியாக்கி மும்முறை பாலில் கரைத்து வடிகட்டி உலர்த்தி எடுத்தபொடி 10 பலம்; இம்மூன்றையும் கலந்து, வெருகடி நெய்யில் கொள்ள, மேகம், கவிசை, ஈளை, காசம், இளைப்பு, கயம், கிரிச்சரம், அண்டவாய்வு, வாதம், வறட்சி, பித்தம் இவைகள் தீரும். தேனில் கொள்ளக் கன்மநோய், நாசிப்புண்கள், தீராப் பீநசம் தீரும். சர்க்கரையில் கொள்ள மயிர்வெட்டு, புழுவெட்டுத் தீரும். கண்ணிற்கு ஒளி உண்டாம், புளி புகை ஆகாது.

## 11. சுண்டைவற்றல் சூரணம்

(பதினான்கு சீர்க்கழிநெடில் முடுகு விருத்தம்)

சுண்டை வற்றல்கரி நிம்ப பத்திரி
சுவைக்கு மாங்கனி விதைச்சுளை
சொல்லு மோதகமு நெல்லி தாதுகனித்
தோலும் வெந்தயமோ டேழுமே

விண்டு ரைத்தபடி யொன்று பட்டிட
வெதுப்பி யேயிள வறுப்ப தாய்
மிருது வாகவிடி வடிகொ ளீது பொடி
வெருகடி எருமைத் தயிரிலே

கொண்டி டப்பொருமல் மந்தமிக் கிரைவு
குமுறி நின்றிடு கழிச்சலும்
கோல மூலமதி சார மோடெமு
கிராணி மூலமு மடாதுகை

கண்ட தித்தனையும் வென்றி புத்தியுள
பண்டி தத்தொழிலிர் நம்புவீர்
கருணை யானமுனி அருள தாகமொழி
கைம்ம ருந்தெனவே செய்யுமே. 423

சுண்டை வற்றல், கறிவேப்பிலை, மாம்பருப்பு, ஓமம், நெல்லி வற்றல், மாதுளம்பழத் தோல், வெந்தயம், சமஅளவு எடுத்துக் காயவைத்து, பிறகு இளவறுப்பாய் வறுத்து, நன்றாக இடித்துப் பொடித்து வடிகட்டி, வெருகடி அளவு எருமைத் தயிரில் கொள்ள, பொருமல், மந்தம், இரைச்சல், கழிச்சல், மூலம், அதிசாரம், கிரகணி தீரும்.

## 12. தயிர்ச்சுண்டிச் சூரணம்

(நேரிசை வெண்பா)

அஞ்சுப்பு மஞ்சுபல மவ்வளவு மாச்சுக்கு
மிஞ்சுபுளித் தத்தயிரோர் வீசையிலே—துஞ்சலுற
எல்லுலர்த்தித் தூளாக் கினிதருந்து மூன்றுவிரல்
இல்லையசீ ரணம்பேதி யே. 424

சுத்தித்த இந்துப்பு, வளையலுப்பு, பூநீறு, சோற்றுப்பு, கல்லுப்பு வகைக்குப் பலம் ஒன்று; தோல் நீக்கிய சுக்கு 5 பலம்; புளிப்புத்தயிர் 40 பலம்; இவைகளை ஒரு பாண்டத்



திற் சேர்த்து, நன்றாக உலரும் மட்டும் நாள்தோறும் வெய்யிலில் வைத்து, பொடித்து வடி கட்டி, மூன்று விரல் அளவு வெந்நீரில் கொள்ள, அசீரணபேதி தீரும்.

## 13. பஞ்ச தீபாக்கினிச் சூரணம்

(எண்சீர் விருத்தம்)

தள்ளவே பஞ்ச தீபாக் கினிய தென்னுந்
தளமான சூரணத்தைச் சொல்லக் கேளு
விள்ளவே திரிகடுகோ டேலஞ் சீரகம்
விதமாக வகையொன்று பலமொன்றாக
நள்ளவே யிளவறுப்பாய்ச் சூர ணித்து
நலமாக வடிகொண்டு சர்க்கரைதான் சேர்த்துத்
தெள்ளவே தேனெய்யில் வெருகடிதான் கொள்ளத்
திறமாகத் தீரும்நோய் செப்பக் கேளே. 425

செப்புகிறே னுட்டிணநோய் சூலை வாய்வு
சேர்ந்தபித்த வாயுவொடு சிலேத்தும ரோகம்
தப்புகிறேன் பொருமலொடு செரியா மந்தம்
தளமான மயக்கமொடு கிறுகிறுப்பு
வெப்புகிறே னத்திசுர மத்தி வெட்டை
வேறான மூலத்தின் வாய்வு தீரும்
நம்புகிறேன் புளிகசப்பு புகையுந் தள்ளு
நலமான காந்தம்வைத்து நலமாய்க் கொள்ளே. 426

திரிகடுகு, ஏலம், சீரகம் வகைக்கு 1 பலம் இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து வடித்து, சர்க்கரை சமன் சேர்த்து, மூன்றுவிரல் அளவு தேன் அல்லது நெய்யில் கொள்ள உஷ்ணநோய், சூலை, பித்தவாய்வு, சிலேத்மநோய், பொருமல், செரியாமை, மயக்கம், அஸ்திசுரம், வெட்டை, மூலவாய்வு முதலியவைகள் தீரும்.

குறிப்பு:—புளி, புகை, கசப்புச் சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும். இதனைக் காந்தச் செந்தூரத்திற்கு அனுபானமாகக் கொள்ளலாம்.

## 14. நிலவாகைச் சூரணம்

(எண்சீர் விருத்தம்)

நலமாகச் சூரணமொன்று சொல்லக் கேளு
நன்றான நிலவாகை சுக்குங் கூட்டிப்
பிலமாக மிளகுவாய் விளங்க மோமம்
பேராக வகைக்கொரு பலமே தூக்கிச்
சிலமாக ரவிமுகத்தி லுலரப் போட்டுச்
சிதரும விடித்துச்சூ ரணந்தான் செய்து
தலமாகச் சர்க்கரைதான் சமனுய்க் கூட்டித்
தவரும விருநேரங் கொண்டாற் கேளே. 427

கேளப்பா வாயுவென்ற தெல்லாம் போகும்
கெடியான பித்தமெல்லாங் கீழ்நோக் கிப்போம்.
வாளப்பா உட்டிணநோ யெல்லாந் தீரும்
வளமான பொருமலொடு விம்மல் தீரும்
நாளப்பா சேத்துமநோ யெல்லாம் தீரும்
நலமான விக்கலொடு வாந்தி தீரும்
தாளப்பா வுடம்பெரிவு சுவாச காசந்
தவறுண்டு போகுமடா சாற்றக் கேளே. 428

நிலவாகை, சுக்கு, மிளகு, வாய்விளங்கம், ஓமம், வகைக்கு 1 பலம் எடுத்து, வெய்யிலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து, சமன் சர்க்கரை கலந்து, வெறுகடி அளவு கொள்ள, வாய்வு, பித்தம், உஷ்ணநோய், பொருமல், விம்மல், சேத்துமநோய், விக்கல், வாந்தி, உடம்பெரிவு, சுவாசகாசந் தீரும்.



## 15. பருத்திச் (விதை) சூரணம்

(வெண்பா)

பண்ணும் பருத்திவிளா பாரிலுள நெற்பொரியு
மெண்ணுசிறு திப்பிலியு மேலமுட—னண்ணுபொடி
சர்க்கரையுந் தேனுந் தளரக் குழைத்துண்ண
விக்குள் சத்தி போகும் விரும்பு. 429

பருத்திவிதை, விளா அரிசி, நெற்பொரி, திப்பிலி, ஏலம் சம அளவு எடுத்துப் பொடித்துக் கலந்து சர்க்கரை, தேன் கூட்டி அளவுப்படி உண்ண விக்கல், வாந்தி போம்.

## 16. பறங்கிப் பட்டைச் சூரணம்

(தரு திரிபுடை)

பறங்கிச் சக்கையொன் றஃதலாதிலே
பகருநிறை கருந் துளசிநீர் கலந்
திறங்க வுலர்த்திநற் பொடிசெய்
ததனைமு—னிசை வதாயுண்
மேகக் குட்டத்தின் கருமை வெண்மையை
விலக்கு மேனியைத் துலக்கும் பசியெழ
ரோக மறுமுறை செப்பு
நாடொறு—நோயை யடுமே
இச்சைப் பத்திய முளகொன் றேபொடி
யியற்றிப் புளித்தயி லயிலவாயுவைப்
பிச்சை நளியைமு னடிக்கு
மடிக்குமெய்—பிணியுமிகவே. 430

பறங்கிச் சக்கையை எடுத்து, அதற்குச் சமன் கருந்துளசி நீர் கலந்து, நன்றாக வெய்யிலில் வைத்து உலர்த்திப் பொடித்து, அளவுப் பிரகாரம் உண்ண மேகம், கருங்குட்டம், வெண்குட்டம் விலகும். மேனிதுலங்கும். பசி எழும். பத்தியம்:— இச்சாபத்தியம். இதனை தயிரனுபானத்திலுண்ண, வாதபித்த பிணிகளை நீக்கும்.

## 17. பிரண்டைச் சூரணம்

ஆதியான வியாதி யினதுமறு
மறைந்த பத்திய முன்னதா கக்கொ
ளோது சூரண முறைமை மேற்படி—யுரைக்கிறேனே
பிரண்டை துணிக்கிணை தக்கிரத்தினிற்
பிரண்டை நிழலிடை யுலர்த்தி யதற்கிணை
யரத்த மோம முக்கடு கராட்ட—மையவிலங்கம்
உருளிந் திவைகளு முலர்த்தி யிடித்ததை
யுண்ணநெலியள வுண்ணவநுதின
மருள் செய் கபசநி பித்தவாத மெய்—வலியுன்மத்தம்
............................................ 431

மோரில் பாவனை செய்து உலர்த்தி இடித்த பிரண்டைச் சூரணம் 9 பங்கு; அரத்தை, ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், இந்துப்பு, கொத்துமல்லி விதை. குங்குமப்பூ. இவைகளின் சூரணம் வகைக்கு ஒரு பங்கு; இவைகளை ஒன்ருகக் கலந்து, நெல்லிக்காய் அளவு உண்ண கபசன்னி, பித்தவாதம், உடம்புவலி, உன்மத்தம் தீரும்.

## 18. புன்கம்பூச் சூரணம்

(எண்சீர் விருத்தம்)

பாரப்பா மேகமிரு பதுவுந் தீரப்
பாடுகிறேன் புன்கம்பூ வென்ற மூலி
நேரப்பா ஒருபடிப்பூ வாரி வந்து
நேயமா யாய்ந்தெடுத்துப் பாண்டத் திட்டுச்
சேரப்பா வடுப்பேற்றி யெரித்துக் கிண்டிச்
சிறப்பாக வாவின்நெய் படிதா னென்று
ஊரப்பா வறுக்குமப்போ கொஞ்சங் கொஞ்சம்
உண்ணவுண்ண வார்த்துமே புரட்டிவாங்கே 432



வாங்கியே யொருநேரம் வெருக டித்தூள்
மண்டலந்தான் கொண்டிடவே யந்நோ யெல்லாம்
ஏங்கியே மேகவகை யெல்லா மோடும்
இலவுபட்ட தீப்போல வெரிந்து போகும்
பாங்கியே பத்தியந்தான் பகரக் கேளு
பரிவான புளிபுகையுந் தள்ள வேண்டும்
ஈங்கியதோர் வாயுவென்ற பதார்த்தந் தள்ளி
இச்சாபத் தியமாக வுண்டு கேளே. 433

சுத்திசெய்த புன்கம்பூ ஒரு படியைப் பாண்டத்திலிட்டு, அடுப்பின் மீது வைத்து, ஒரு படி பசு நெய் சிறுகச் சிறுக ஊற்றி வறுத்து, பொடியானதில் வெருகடியை நாள் ஒன்றுக்கு ஒருவேளையாக ஒரு மண்டலம் கொடுக்க மேகவகை யெல்லாம் தீரும். பத்தியம்: புளி, புகை, வாய்வுப் பண்டம் நீக்கவும்.

## 19. மயிலிறகாதிச் சூரணம்

(கலி விருத்தம்)

எட்டுத் திப்பிலி யீரைந்து சீரகம்
கட்டுத் தேனில் கலந்துண்ண விக்கலும்
விட்டுப் போகும் விடாவிடிற் பொத்தகஞ்
சுட்டுப் போடுநான் தேரனு மல்லனே. 434

திப்பிலி 8 பங்கு, சீரகம் 10 பங்கு, மயிலிறகு சுட்ட சாம்பல் 4½ பங்கு: திப்பிலியையும் சீரகத்தையும் பொடித்து மயிலிறகுச் சாம்பலுடன் கலந்து அளவுப்படி தேனில் கொள்ள விக்கல் தீரும்.

## 20. மூக்கிரட்டைச் சூரணம்

(தரு திரிபுடை)

மூக்கிரட்டை வெண்குன்றி தாதகி
மூன்றுவேர் நிறையான்ற வரிதகி பத்தியம்
யாக்கிய தைப்பொடி செய்து
கொண்டிடி—லகட்டுவலிநோய்

மலக்கட் டறுந்திமிர் வாதம்பெரும்பிணி
வல்லைகுட் டங்களகலும்
பெலத்த தல்லலகு
பத்தியமாவது—பேசுவேனே. 435

மூக்கிரட்டைவேர், வெண்குன்றிவேர், கொன்றைவேர் வகைக்கு 1 பங்கு, கடுக்காய்த்தோல் 3 பங்கு, இவைகளைப் பொடித்து அளவுப்படி கொடுக்க, வயிற்றுவலி, மலக்கட்டு, திமிர்வாதம், குட்டம், வல்லை இவைகள் தீரும்.

## 21. திராட்சாதிச் சூரணம்

திபதை கலப்பு பஃறொடை

முந்திரி கைக்கனி பேரீச் சங்கனி
முத்தக் காசொட ரேணு கமும்
சந்தன நெற்பொரி காட்டெரு மைப்பால்
தனியே லமுநற் சீர கமும்

முந்திய வெட்டிவேர் திரிகடு பலைவேர்
முட்டிவேர் கோஷ்டமு மதுர முடன்
சிற்று முட்டிவேர் சீந்தில் சர்க்கரை
சேருநி லக்குமிழ் வேரு டனே

மல்லி நெருஞ்சி வேர்விலா மிச்சம்மர
மஞ்சளு நெய்த லின்வே ருடனே
நல்ல கிராம்பொடு கஸ்தூரி மஞ்சளு
நற்குங் குமநன் மலருடனே

காணு மடவிக் கச்சோ லத்துடன்
கஞ்சத் தின்வளை யம்முடனே
பூணு மிவைசரி கூட்டிப் பொடிநேர்
போடிதில் நற்சர்க் கரையு டனே



தாணிக் காயள வுண்டைய ருட்டியுட்
டாக்கி டுந்தனி மதுவி டவே
பூணு மிளைப்பு முழலையு மிருமல்
பொருமல் காசச் சுவாச முடன்

குன்மமுந் தாது சயம்பிர மேகம்
கொடிய வயிற்றி லுண்ணோய் வலியும்
சோரு மரோசக வாந்தி பயித்திய
பாண்டு சுரத்தொ டுசூழ் சயமும்

நாடிடு சந்நி தியக்க மயக்கமும்
நாற்பது பித்தமு நளிரெ ரிவும்
ஓடிடும் நோய்கள் திராட்சா திப்பொடி
யுண்டிட வென்ற னன்மா முனியே. 436

திராட்சை, பேரிச்சங்காய், கோரைக்கிழங்கு, காட்டு மிளகு, சந்தனத்தூள், நெற்பொரி, கூகைநீறு (காட்டெருமைப்பால்), ஏலம், நற்சீரகம், வெட்டிவேர், திரிகடுகு, திரிபலை, பேருமுட்டி, கோட்டம், அதிமதுரம், சிற்றுமுட்டி, சீந்தில் சர்க்கரை, நிலக்குமிழ்வேர், சிற்றுமல்லி, நெருஞ்சிவேர், விலாமிச்சம் வேர், மரமஞ்சள், நெய்தல் கிழங்கு, கிராம்பு, கத்தூரி மஞ்சள், குங்குமப்பூ, கச்சோலம், தாமரை வளையம் இவைகள் சம அளவு இடித்துப் பொடித்து வடித்து, சம அளவு சர்க்கரை கூட்டி, தான்றிக்காயளவு தேனில் கொள்ள, இளைப்பு, உழலை, இருமல், பொருமல், காசசுவாசம், குன்மம், தாது சயம், பிரமேகம், கொடிய வயிற்று நோய், அரோசகம், வாந்தி, பயித்திய பாண்டு, சுரத்துடன் கூடிய சயம, சந்நி, தியக்கம், மயக்கம், நாற்பதுவகைப் பித்தம், நளிர், எரிவு இவைகள் தீரும்.

## 22. தாளிசாதிச் சூரணம்

தாளிச மென்றொரு பத்திரி யாமது
தன்னுடைச் சூர ணத்தைக் கேளுஞ்
குழும் வியாதிக்குச் சஞ்சீவி யாமிது
சொல்லுகிறேன் கேளு சரக்குவகை

சொல்லுகிறேன் தாளிசம் லவங்கப்பட் டையேலஞ்
சுக்கு மதுரம் பெருங்காயம்
நெல்லி முள்ளி கோஷ்டந் திப்பிலிசீரக
நேர்ந்த தொருசத குப்பி யுடன் 437

குப்பியுட ஞேம நற்சீரகமுங்
கூறுந் தெசாவரங் கிராம்பு பத்திரி
செப்புவேன் கர்க்கடகச் சிங்கியுமிதிற்
சேர் சாதிக்காய் தான்றி கடுக்காயங்
காயுஞ் சடாமாஞ் சிருன்மிள குஞ்சிறு
நாகப்பூ சண்பக மொக்குடனே
வாய்விளங் கத்துடன் லவுங்க பத்திரி
வகைக்கு மெட்டு விராகனெடை 438

எட்டுவி ராகனெடை சேர்த்துவதில்
தொட்டிடுங் கொத்த மலிகேளு
இட்டிடு நாற்பத்தெட்டு விராகனெடை
யிடித்துரல் தன்னிற் றூளாக்கி
தூளாக்கி யதைச்சீலை வடிகொண்டு
சீனியாந் தொண்ணூற் றறுவராகன்
கேளுந் கலந்திரு நேரமுங் கொள்ளக்
தீரும்வி யாதியைக் கேட்டருளும் 439

கேட்டருளும் வாதமெண்பதும் போமுடன்
நீட்டிய பித்தங்க ளுற்பதுவுங்
மூட்டுஞ் சிலேற்றுமந் தொண்ணூற்றுறோடு
முடல்சொரி சிரங்குக டான்றீரும்
சொரி சிரங்குக டான்றீரும் வயிறெரியுங்
குன்மமும் பித்தகுன்மம்
மூரியும் வாய்வு வயிற்றுவலி கெட்ட
மூத்திரக் கிரிச்சிரங் காமாலை 440



காமாலை யுஞ்சுரம் வாயூரல் வெள்ளையுள்
வறட்சி தாகம் பொருமலுடன்
ஏமாந்தே யோடிடுங் காதி னிரைச்சலு
மிருமல் கைகால் குடைச்சலுமே
குடைச்சலு முஷ்ணமுந் தொண்டைகட்டுமிகக்
கூறுநீர்க் கட்டும் வயிற்றிற் கெண்டை
மடைத்தனஞ் செய்யு மயக்கமுளுருக்கி
மருந்திடு மீரல் வறட்சியும் போம் 441

வறட்சியுந் தீரும் க்ஷயமும்போ நெஞ்சில்
வருத்தமுள்ள நீர்க் கடுப்புடனே
எரிப்பு நெஞ்சினிற் கைகால் கறுப்பு
மியல் சிரவாயுவஸ்தி சுரம்போமே
இயல்பா மஸ்தியின் சுரம்போமே
மிக வோங்குங் கபால வாய்வுடனே
அடைவாய்த் தின்றுமே பத்தியங் காத்தால்
அன்புடன் தீரு மெனவுரைத் தார். 442

தாளிசம், இலவங்கப்பட்டை, ஏலம், சுக்கு, மதுரம், பெருங்காயம், நெல்லிமுள்ளி, கோட்டம், திப்பிலி, சீரகம் சதகுப்பி, ஓமம், நற்சீரகம், திப்பிலிக்கட்டை, கிராம்பு, சாதிபத்திரி, கர்க்கடகசிங்கி, சாதிக்காய், தான்றிக்காய், கடுக்காய், சடாமாஞ்சில், மிளகு, சிறுநாகப்பூ, சண்பகமொக்கு, வாய்விளங்கம், லவங்கப்பத்திரி, வகைக்கு 8 வராகனெடை; கொத்துமல்லி விதை 18 வராகனெடை, இவைகளைச் சுத்தித்து, நன்றாக வெயிலில் உலர்த்த வேண்டியவைகளை யுலர்த்தி, புன்வறுவலாக வறுக்க வேண்டியவைகளை வறுத்து, பொரிக்க வேண்டியதைப் பொரித்து, பொடித்து வடிகட்டி, சீனி 96 வராகனெடை சேர்த்துக்கலந்து, அளவுப் படி இருநேரங் கொள்ள வாதம் 80, பித்தம் 40, சிலேத்துமம் 96, உடல்சொறி, சிரங்கு, வயிற்றெரிவு. குன்மம், பித்த குன்மம், வயிற்றுவலி, மூத்திர கிரீச்சரம், காமாலை, சுரம்,

வாயில் நீர் சுரத்தல், வெள்ளை, உள்வறட்சி, தாகம், பொருமல், காதிரைச்சல், இருமல், கைகால் குடைச்சல், உஷ்ணம், தொண்டைக்கட்டு, நீர்க்கட்டு, வயிற்றின் கெண்டை, மயக்கம், உள்ளுருக்கி, மருந்தீடு, ஈரல் வறட்சி, க்ஷயம் நீர்க்கடுப்பு, நெஞ்செரிப்பு, கைகால் கடுப்பு, சிரவாயு, அத்திசுரம் இவைகள் தீரும். பத்தியம் காக்க வேண்டும்.

## 23. பஞ்ச மூலச் சூரணம்

செவ்வியம் பேரரத்தை சித்திரமூ லஞ்சுக்கோ
டொவ்வுகண்டு பாரங்கி யோரைந்தும்
—வெவ்வினையைச்
சண்ணுபஞ்ச மூலமெனத் தாரணியெ லாமறிய
வண்ண மயிலே வழுத்து. 443

இப்பாட்டில் கூறிய ஐந்து சரக்குகளையும் சூரணித்து தக்க அளவில் நோய்கட்குக் கொடுக்கக் குணந்தரும்.

# 9. வடகங்கள்

## 1. பிரண்டை வடகம்

வச்சிர வல்லியை வகிர் வகிராக்கி
மச்சிகை தனிலூற வைத்தததுநைய
விடித்ததிற் கறியுரு ளிலவணஞ் சீரகம்
மாடமெள் குலுத்த மிவ்வகை யுறப்பி சைந்ததை
யுலர்ந்த பின்னெய் வறுத் துண்டிடக் குன்மமும்
வல்லை நோய்களு மாய்ந்திடும் தீபன
மெல்லென வெழுந்து மேனிபொன் னுகும். 444

பிரண்டையைத் துண்டு துண்டாக நறுக்கி, வகிர் வகிராய்ப் பிளந்து, மோரில் ஊறவைத்து, நன்ருக நையயிடித்து, அதில் மிளகு, கொத்துமல்லி விதை, லவணம், சீரகம், உளுந்து, எள்ளு, கொள்ளு இவற்றை அளவாகச் சேர்த்து அரைத்து, சிறிய வடகங்களாகச் செய்து, காய வைத்து, நன்ருகக் காய்ந்தபின், நெய்யில் வறுத்துப் புசிக்கக் குன்மம், வல்லைக்கட்டி முதலிய உதரநோய்கள் நீங்கும்; பசி, தீபனம் முதலியவை உண்டாகும்.

## 2. வாழை வடகம்

மொந்தன் வாழைப்பூவின் மேல்பட்டைகளை நீக்கி, உள்குருத்தை இரண்டாய்ப் பிளந்து, அதற்குள் கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, கஞ்சா, கறிவேப்பிலை வகைக்கு 2½

வராகனெடையும்; கற்கடக சிங்கி ஒரு வராகனெடையும் எடுத்து; இளவறுப்பாய் வறுத்து சூரணஞ் செய்து வைத்து, நூல் கயிற்றால் சுற்றி, ஒரு பானையில் எருமை மோர் விட்டு, அதற்குள் இதைத் தோலாயந்திரமாகக் கட்டி, மோரில் மூழ்கும்படி விட்டு வேகவைத்து, வெந்தபின் அரைத்துக் கழற்சிக்காயளவாக உருண்டை செய்து உலர்த்திக் கொள்க. காலை மாலை ஒவ்வொரு உருண்டை கொடுத்துவரப் பெரும்பாடு நீங்கும்.

## 3. இம்பூறல் வடகம்

இம்பூறல் சமூலம் ஒரு பங்கு, மிளகு ஒரு பங்கு, கற்கண்டு இரண்டு பங்கு, ஒன்று சேர்த்து இடித்துப் பிறகு மைபோலரைத்துச் சுண்டைக்காயளவு வடகம் செய்க.

வேளைக்கு ஒரு வடகமாக இரண்டு மூன்று நாள் கொடுக்க, இரத்த பித்தரோகம், இருமல் தீரும்.

## 4. இஞ்சி வடகம்

(திரிபுடை)

பல்லை நோய்களு மறுமிச்சாப் பத்தியம்
பகரு மிஞ்சிமுன் படிமுக் கடுகுப்பு
மல்லி யிலவங்கமோ மரிதகி—மாத்திர நிகரே
வதக்கி நெய்யினிற் றயிர்விட் டரைத்துமுன்
வரிசை யாகச்செய்து வரிசையாய்க்
கொள வகைக்கு முப்பிணி மந்தமுட்னலி—
[வல்லை யறுமே 445

இஞ்சி 8 பலம், திரிகடுகு 1 பலம், உப்பு 1 பலம், கொத்துமல்லி விதை 1 பலம், இலவங்கம் 1 பலம், ஓமம் 1 பலம், கடுக்காய் 1 பலம், இவைகளை நெய் விட்டு வறுத்து, தயிர் விட்டரைத்துச் சுண்டைக்காயளவு உருட்டி உலர்த்தவும். வல்லை நோய், முப்பிணி, மந்தம், உடல்நலிவு தீரும்.



## 5. கடகரோகணி வடகம்

பத்தியமேற்படி கடக ரோகிணி
பல்லை மூன்றுமெ யில்லம் வேலிப்
பருத்தி மரமஞ்ச ளுப்பு வசம்பிவை
யொத்த நிறையே
சித்திரத் தயிலத்தில் வதக்கியச் சத்தின்
சலமிட் டிடித்தரைத் துலர்த்தி மேற்படி
யச்சமற வனிசூலை வளிகப—மண்டவாதம்
ஆதியான வியாதி யினமறும்........... 446

கடகரோகணி, திரிபலை, தேற்றான்வித்து, வேலிப் பருத்திவேர், மரமஞ்சள், உப்பு, வசம்பு இவை சம அளவு! இவைகளை ஆமணக்கு நெய்யில் வதக்கி, அகத்திக்கீரைச் சாறு விட்டரைத்து, சுண்டைக்காயளவு உருட்டி உலர்த்தவும். பித்தசூலை வாதகபம் அண்டவாதம் முதலியவை தீரும்.

## 6. பிரண்டை வடகம் (வேறு வகை)

பிரண்டையின் கணுக்களையும் பக்கத்திலுள்ள நரம்புகளையும் நீக்கி,நெய்விட்டு வதக்கி,அதற்கு நேர் மிளகு, சுத்தி செய்த பச்சை வசம்பு, உப்பு,ஓமம், கடுக்காய் சேர்த்திடித்து, மோர்விட்டுப் பிசைந்து, கால் பலமுள்ள உருண்டைகளாக உருட்டி உலர்த்திக் கொள்ளவும். வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் உபயோகித்து வர, பசி தீபனமுண்டாகும். உணவு சீரணமாகும். மலக்கிருமிகள் சாகும். சயித்திய வாயு, குன்மங்கள் நீங்கும். இச்சாபத்தியம் காக்கவும்.

## 7. கறிவேப்பிலை வடகம்

வாயிலைப்புடன் பசியிலாம னித்தியமுங் கழிய
சீரணத் தெழுந்தபிணி போவதற்கு நிம்பவிலை
மலியுப்பு கறிகிச்சிலிகள் பத்திரி மதியொக்க
விஷயத்தை நளிபற்று வடகத்தை யாக்கது
மருவவினிப் போடு துய்த்தல் வாசியே. 447

கருவேப்பிலை, கொத்துமல்லி, உப்பு, மிளகு, கிச்சிலிக் கிழங்கு, சாதிப்பத்திரி இவைகளைச் சம அளவு நீர் விட்டரைத்து, இலந்தைவிதைப் பிரமாணம் உருட்டி உலர்த்தவும். வாயிலைப்பு, பசியின்மை, சுழிச்சல், சீரணப் பிணிகள் இவைகள் தீரும்.

## 8. கந்தக வடகம்

கந்தகம், இரசம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நாபி இவை சமனெடை; வெண்செம்பையிலைச் சாற்றிலும், ஆரையிலைச் சாற்றிலும் தனித்தனி 15-மணி நேரம் அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரை செய்க.

அளவு—மாத்திரை. உபயோகம்—பாண்டு, க்ஷயம், மூலக்கிரகணி தீரும்.

## 9. தாளிசாதி வடகம்

தாளிசபத்திரி பலம் 1, மிளகு பலம் 1, செவ்வியம் பலம் 1, திப்பிலி பலம் 2, திப்பிலிமூலம் பலம் 2, சுக்கு பலம் 3, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், குருவேர், சிற்றரத்தை இவை வகைக்குப் பலம்½; கரும்பு வெல்லம் பலம் 16; பசும்பால் வேண்டிய அளவு.

ஒரு சட்டியில் பசும்பாலை ஊற்றி வேடுகட்டி அடுப்பேற்றி, எல்லாச் சூரணங்களையும் வெல்லத்தையும் ஒன்றாய்க் கலந்து அதன்மீது வைத்து, மேற்சட்டி கொண்டு மூடி, பிட்டுப்பதம் வரும்வரையில் வைத்து எரித்தெடுத்து, உரலிலிட்டு இடித்து, சிறு கொட்டைப் பரக்களவு உருட்டி உலர்த்தி உபயோகிக்க கபம், வாதம், கிரகணி, அலசம், வமனம், அதிசாரம், பக்கநோய் முதலியவைகள் தீரும்.

# 10. கற்பங்கள்

## 1. அயஜம்பீரக் கற்பம்

ஆட்டுத் துகள்கறி திரிபப் பத்தரை
 மையெண் ணெண் ணருணக்
காட்டுக் கனியுள்ள வையம் பூதத்
 தொருகல முள்ளிடு திலநெய்
கூட்டுத் தொகைமுற் கூறிரு சில்லிடு
 குழை யிடு மண்டலமே
ஒட்டுப் பிளவொன் றிருபோ
 துணுபாண் டொடுசோபையு மறுமே. 448

அயப்பொடி 10 பலம், மிளகு 10 பலம், பூண்டு 5 பலம் இவைகளைத் தனித்தனியாகப் பொடித்து பிறகு சேர்த்து அரைத்து, முற்றிப் பழுத்த எலுமிச்சம் பழம் 40 வாங்கி, ஒவ்வொன்றையும் நன்னான்காகப் பிளந்து, ஒவ்வொன்றினுள்ளும் அரைத்த மருந்தை அடைத்து, ஒரு மட்பானையில் வரிசையாக அடுக்கி, அதில் எள் நெய் ஐம்பது பலம் ஊற்றி, பானை வாய்க்குப் பொருத்தமான ஓட்டால் மூடி சீலைசெய்து, பூமியில் 1 மண்டலம் புதைத்துவைத் தெடுத்து, வேளை ஒன்றுக்கு 1 பிளவாக இருவேளை, நோய்க்குத் தக்க வாறு நாள் அளவுபடுத்திக் கொடுக்க, பாண்டும் சோபையும் தீரும்

## 2. அயபிருங்கராஜ கற்பம்

கரும்பொ னயோமல மறைசாத் திரவெண்
கழறுந் தொடி பொடிசெய்
கரிசா லைச்சுர தம்படி பெய்து
கலக்கெலி லுலரவிடு
விரும்பு சதாபல சுரசத் தவ்வண
மிட்டுமுன் விதிபுரிமுன்
விடுசுர சம்பா லந்தஞ் சேரும்
விண்டு தழைக்குழியுள்
கரும்பினில் வந்திடு வட்டென விடு அரி
காணப் பொடி பணமே
கமழ்மது துப்பு முருரு ததிக்குள்
கையா டிருபொழுதும்
அரும்புதி வாவொரு பதுபது
பதுபது ஆமிலம் விட்டுதிரத்
தழிவுமு மலநரை அசதிய தாமிவை
அழலிடு துலவமரோ. 448

அயத்தூள் 4 பலம், மண்டூரம் 6 பலம், இவைகளை நன்ருகப் பொடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு, ஒரு படி கரிசாலைச் சாறு ஊற்றி, வெய்யிலில் வைத்துக் கலக்கி கலக்கி நன்ருக உலரும்படி செய்யவும். பிறகு மேற்படியாகவே பழ இரசம் படி ஒன்று ஊற்றி வெய்யிலில் வைத்துக் கலக்கிக்கலக்கி உலரவிடவும். பிறகு கரிசாலைச் சாறு ½ படி ஊற்றி வெய்யிலில் வைத்துச் சுண்டிக் குழம்பு பக்குவம் வந்தவுடன், ஆலயிலையால் தொன்னைகள் செய்து, அதில் ஊற்றி, வெய்யிலில் உலர்த்திப் பிறகு பொடி செய்து கொள்ளவும். பணவெடை 3½ குன்றிமணி வீதம் தேன், நெய், பழச்சாறு, தயிர் இவ்வனுபானங்களில் இருவேளை 40 நாட்கள் கொள்ள, இரத்தக் குறைவு, நரை, அசதி இவைகள் தீரும். பத்தியம்: புளியையும், புளிப்புச் சுவையுள்ள பொருள்களையும் நீக்கவும்.



## 3. பாகக் கடுக்காய்

கடுசதங் கழுவு பிற்புனற் குளிடு
கரிமதப் பகல் கழித்தறற்
கக்கவைத் திவண முத்தரஞ் செயிரு
கண்ட மாக்குவிட நீக்குபின்
விடுதகும் படிக டைந்த மோரை யதில்
வேலை யுப்பிடுமு னேதுகாய்
விறுநாலி லொரு கூறடுப் பினில்வை
மெல்ல வேயெரி வறண்டபின்
படையடுஞ் சசிய மோத முமரைப்
பலமுதற் செவியம் வனிகலை
பாலெலாம் பொடிசெய் தூவுதூவுசெம்
பழரசம் பெய்பெய் குலுக்கறல்
எடுபின் வந்தநா ளிஞ்சிநீர் பெய்யதை
வெயிலிலுலர்த் தசன முன்பினுண்
இருமல் மந்தமு தரத்து நோய்வமன
மில்லை பத்தியமு மில்லையே. 450

கூறுபா கக்கடுக்காய் கொள்ளில் மண்டலத்திற் சூலை
ஏறுகால் குன்மம் மூலம் இரைப்பு அரோ சகம்பிலீகம்
நாறுபீ நசம்விடுசி நாத்திவே டம்பற் பாண்டு
சீறுமா மலக பித்தம் செம்புனற் பித்தம் போமே. 451

பச்சைக் கடுக்காய் நூறு கொண்டு, அரிசி கழுவிய நீரில் (முதல் கழுவினதை நீக்கி இரண்டாவது மூன்ருவது கழுவிய நீர்) போட்டு, மூன்று நாள் ஊறவைத்து, நீரை நீக்கவும். இவ்விதம் மும்முறை செய்யவும். பிறகு ஒவ்வொரு காயையும் இரண்டிரண்டாக வெட்டிக் கொட்டையை நீக்கவும், பிறகு இதை ஒரு பானையில் சேர்த்து, கடைந்த மோரை வேண்டிய அளவு ஊற்றி, அதில் கடலுப்பு, காய்க்கு நான்கில் ஒரு பங்கு சேர்த்து, அடுப்பினில் வைத்து மெல்ல எரித்து

வறண்டபின், சுக்கு, அட்டுப்பு, இந்துப்பு, ஓமம் வகைக்கு ½ பலம்; செவ்வியம், சித்திர மூல வேர்ப்பட்டை, திப்பிலி வகைக்கு ½ பலம்; எல்லாவற்றையும் பொடித்து அதில் தூவி, பழச்சாறு ஊற்றிக் குலுக்கி வெய்யிலில் வைத்து உலர்த்தி, பின் இஞ்சி நீர் ஊற்றி வெய்யிலில் வைத்து உலர்த்தி எடுக்கவும். ஒரு துண்டு உணவுக்கு முன்னும் பின்னும் உண்ண இருமல், மந்தம், வயிற்று நோய், வாந்தி இவைகள் தீரும். பத்தியமில்லை.

இதை ஒரு மண்டலம் உட்கொண்டால் சூலை, வாய்வு, குன்மம், மூலம், இரைப்பு, அரோசகம், பிலீகம், துர்நாற்றம் வீசுகின்ற பீநசம், வாந்திபேதி, நாவில் சுவையின்மை, பாண்டு, பித்தநோய், இரத்த பித்தம் இவைகள் தீரும்.

# 11. இரசாயனங்கள்

## 1. கந்தக இரசாயனம்

1. கந்தகம் 10 பலம்; 2. அமுக்கரு 5 பலம்; 3. பறங்கிச்சக்கை 2 பலம்; 4. கடுக்காய், நெல்லிக்காய் தான்றிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், ஏலம், இலவங்கம், சந்தனம், கடலைப்பருப்பு, சேங்கொட்டை, சித்திரமூல வேர்ப்பட்டை வகைக்கு 1 பலம்; இவைகளைத் தனித்தனி சூரணஞ் செய்து, பிறகு எல்லாவற்றையும் ஒன்று படக் கலந்து, சர்க்கரை, தேன், நெய் கலக்கவும். 10 முதல் 15 குன்றிமணி யளவு சாப்பிடவும்.

தீரும் நோய்:—மேக வியாதிகள், மூத்திரக் கிரிச்சரம், மூத்திரச் சிலந்தி, குட்டம், கிராணி, மூலம், குன்மம், வாதம், வீக்கம் முதலியன தீரும்.

## 2. திப்பிலி இரசாயனம்

* * *

தயவாக வின்னமொரு ரசாய னங்கேள்
காட்டுகிறேன் திப்பிலியும் பலம்பத் தப்பா
கருவான மிளகுசுக்கு பலந்தா னைந்தே
பலமொன்று இருசீர மிரண்டு ஓமம்
பாங்கான அரத்தையிரண்டு திரிப லாதி
நலமான லவங்கமுடன் லவங்கப் பத்திரி

ஆமப்பா வுஷ்ணங்கள் பித்த வாயு
அப்பனே சரீரத்தி லுளைவு குத்து
போமப்பா வலிகடுப்பு வெரிச்சல் பேதி
பொருமலுடன் வாயுவென்ற கிராணி தீரும்
வேமப்பா வத்திசுர மத்தி வெட்டை
விருதான வாந்தியெல்லாம் விழலாய்ப் போகும்.

திரிகடுகு, ஏலம், சீரகம் இவை வகைக்கு ஒரு பலம். இவைகளை முறைப்படி சுத்தித்து, இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து, இரண்டு படி பசுவின் பாலில் 8 பலம் பனை வெல்லம் சேர்த்துக் கரைத்து வடிகட்டி, அடுப்பிலிட்டுக் கொதிக்கவைத்து, பாகு பதம் வந்தபின், சிறிது சிறிதாக சூரணத்தைத் தூவிக் கிண்டிக்கொண்டே, நெய் உழக்கு (¼ படி) சேர்த்துக் கிண்டி இறக்கி, சற்று சூடு ஆறியபின் 1 உரி (½ படி) தேன் சேர்த்துக் கிண்டி, மெழுகு பதமாகச் செய்து கொள்ளவும். பாக்களவு இருவேளை 1 மண்டலங்கொள்ள, வாய்வு, வாதம், உஷ்ணம், பித்தவாயு, உடல் உளைவு, உடற்குத்து, வலி, கடுப்பு, எரிச்சல், பேதி, பொருமல், வாதக்கிராணி, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, வாந்தி முதலியவைகள் தீரும்.

## 2. கரிசாலை இலேகியம்

காணப்பா பாண்டுவகை யாவும் போகக்
கரிசாலை லேகியந்தான் சொல்லக் கேளாய்
நாணப்பா பொற்கையான் சாறுபடி யிரண்டு
நலமான நெருஞ்சிரசம் படியி ரண்டு
வாணப்பா சிறுகீரைச் சாறுபடி யொன்று
வளமான பொடுதலைநீர் படிதா னொன்று
தாணப்பா கீழ்க்காயின் நெல்லிச் சாறு
தருவான செருப்படிநீர்ப் படிதா னென்றே. 456

ஒன்றப்பா கியாழவகை சொல்லக் கேளாய்
உறவான நாவல்கருங் காலி யத்தி
ஒன்றப்பா தென்னம்பூ வகையொன் றுக்கும்
ஓர்பலந்தான் பய்யநன்று யிடித்துப் போட்டுக்



கண்டப்பா தூணிநீ ரெட்டொன் றுக்கிக்
கருவான சாற்றினுள்ளே கருத்தாய் வைத்துக்
கிண்டப்பா சமமாக்கி யிறக்கிக் கொண்டு
கெணிதமுடன் கருவான சாற்றிற் சேரே. 457

சேர்க்கவின்னங் கியாழமொன்று சொல்லக் கேளாய்
செப்புகிறேன் மிளகொடு மிளகரணை மூல
மார்க்கமாம் அவுரியொடு சிற்று முட்டி
வளமான பேருமுட்டி விலாமிச் சோடு
தீர்க்கமாய்ப் பலமூன்று நிறுத்துக் கொண்டு
திறமாக விடித்ததனைத் தூணி நீரில்
சேர்க்கவே சோடசத்தோ டொன்றுய்க் காய்ச்சிச்
சிதறுதே முன்கியாழந் தன்னிற் கூட்டே. 458

கூட்டுவாய் பனைவெல்லம் பலந்தா னெட்டு
கூரான கன்னல்வெல்லம் பலந்தா னெட்டு
மாட்டுவா யாவின்பால் படிதா னாறு
வளமாகக் கரைத்துவிட்டுச் சொல்லக் கேளாய்
காட்டுவா யடுப்பேற்றிப் பாகு சேரிற்
கருவான சீரகமே லங்கி ராம்பு
நீட்டுவாய் சாதிக்காய் சாதி பத்திரி
நினைவாக வோமங் குரோசானி யாமே. 459

ஆமப்பா நாகப்பூ கர்க்கடக சிங்கி
அப்பனே கோஷ்டமோ டக்கிரா காரம்
தாமப்பா மதுரமொடு தாளிச பத்திரி
தப்பாமற் றிரிகடுகு திரிப லாதி
நாமப்பா வகையொன்றில் பலந்தா னொன்று
நலமாகச் சூரணித்து முன்பாகிற் றூவி
வேமப்பா கிண்டையிலே யாவின் நெய்தான்
விரைவிலரைப் படிவீதம் விட்டுக் கிண்டே. 460

கிண்டப்பா தேனதிலே படிதான் விட்டுக்
கிருபையோடு திரிலோகச் செந்தூ ரந்தான்
தண்டப்பா பலமொன்று கூடப் போட்டுத்
தப்பாமல் மண்டூரம் பலமொன் றப்பா
மண்டப்பா கிண்டியதை மெழுகாய் வாங்கி
மகத்தான புன்னைக்கா யளவே வீதங்
கொண்டப்பா மண்டலந்தான் சென்ற தானாற்
கூறுகெட்ட வெண்பாண்டஞ் சிவக்க லாச்சே. 461

ஆச்சப்பா பாண்டுவகை யாவும் போகும்
அப்பனே பித்தவெட்டை கைகா லோய்ச்சல்
காய்ச்சப்பா காந்தலுட னெரிவு போகுங்
கனமான வாந்தியொடு மயக்கந் தூக்கம்
ஓச்சப்பா விக்கமொடு நீர்ச்சு ரப்பு
முத்தமனே கிராணியெலா மொழிந்து போகும்
நீச்சப்பா வரோசகங்க ளெல்லாம் போகும்
நிசமான அசுவகெந்திர் தைல மூழ்கே. 462

பொற்கையான் சாறு 2 படி, நெருஞ்சிச்சாறு 2 படி, சிறுகீரைச்சாறு 1 படி, பொடுதலைச் சாறு 1 படி, கீழ்க்காய் நெல்லிச்சாறு 1 படி, செருப்படைச்சாறு 1 படி, நாவல் பட்டை, கருங்காலிப்பட்டை, அத்திப்பட்டை, தென்னம்பூ இவை வகைக்கு ஒரு பலம், இவைகளை நன்றாக இடித்துத் தூணிநீர்விட்டு எட்டொன்றாகக் காய்ச்சிய குடிநீரை, மேற்படி சாற்றுடன் கலந்து, பிறகு மிளகு, மிளகரணை வேர், அவுரி வேர், சிற்றாமுட்டி வேர், பேராமுட்டி வேர், விலாமிச்சம் வேர், இவை வகைக்கு 3 பலம் இடித்துத் தூணி நீரில் சேர்த்து 1/16 ஆகக் குறுக்கிய குடிநீரையும் மேற்படியில் கலந்து, அதில் பனைவெல்லம் 8 பலம், பசுவின் பால் 4 படி, எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கரைத்து வடிகட்டி அடுப்பிலிட்டுப் பாகுபதம் வந்தவுடன், சீரகம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, ஓமம்,



குரோசானி ஓமம், சிறுநாகப்பூ, கற்கடகசிங்கி, கோஷ்டம், அக்கிரகாரம், அதிமதுரம், தாளிசபத்திரி, திரிகடு திரிபலை, இவை வகைக்கு 1 பலம் சூரணித்து, மேற்படி பாகில் சிறிது சிறிதாகத் தூவிக்கிண்டி, கிண்டும் சமயத்தில் ஆவின்நெய் ½ படி விட்டுக் கிண்டி யிறக்கி, 1 படி தேன் அதில் விட்டு, திரிலோகச் செந்தூரம் 1 பலம் போட்டுக் கிண்டி, பிறகு மண்டூரச் செந்தூரம் 1 பலம் போட்டுக் கிண்டி, மெழுகு போல் ஆனபிறகு, புன்னைக் காயளவு ஒரு மண்டலம் உட்கொண்டால், வெண் பாண்டு, பித்தவெட்டை, கைகால் ஓய்ச்சல், காந்தல், எரிவு, வாந்தி, மயக்கத்துடன் கூடிய தூக்கம், ர்ச் சுரப்புடன் கூடிய விக்கம், கிராணி, அரோசகம் இவையெல்லாம் தீரும். இவ்விலேகியத்தை உண்பவர்கள் அசுவகந்தி தயிலத்தில் தலை முழுகுதல் நல்லது.

## 3. கருணை இலேகியம்

கேளப்பா கருணையென்ற கிழங்கு வாங்கி
கெடியாய வமுரியினா லவித்து மைந்தா
நாளப்பா திரிபலையைப் பொடியாய்ச் செய்து
நலமான கிழங்குடனே பிசைந்து கொண்டு
வேளப்பா முப்பூவுங் கூடச் சேர்த்து
விசையாக அடுப்பேற்றிக் கிண்டும் போதில்
ஆளப்பா நல்லெண்ணெய் அளவாய் விட்டு
அரகரா மெழுகுபத மாக வாங்கே. 463

வாங்கியதோர் லேகியத்தை அந்தி சந்தி
வரிசையாய் நெல்லிக்கா யளவு கொள்ள
ஏங்கியே பறந்தோடு மூல மெல்லாம்
என்னசொல்வே னீரைந்து நாளில் மைந்தா
பாங்குடனே வுள்மூலம் வெளிமூ லந்தான்
பற்றிநின்ற சீமூலம் இரத்த மூலம்
தாங்கிநின்ற குதமூலம் வாய்வு மூலம்
தப்பாமல் மூலமொன் பதுவும் போமே. 464

காராக்கருணை 1 பங்கு, திரிபலைச் சூரணம் ½ பங்கு, சுத்தித்த பூநீறு ¼ பங்கு. கருணைக் கிழங்கை சிறு நீரில் வேக வைத்து எடுத்து, அத்துடன் திரிபலைச் சூரணத்தையும், பூநீற்றையும் சேர்த்துப் பிசைந்து அடுப்பேற்றி, தக்கஅளவு நல்லெண்ணெய் விட்டு, மெழுகுபதம் வரும்வரை கிண்டி யிறக்கவும். நெல்லிக் காயளவு காலை மாலை இருவேளை உட்கொள்ளப் பத்து நாளில் மூலவகை யெல்லாம் நீங்கும். உதாரணமாக உள்மூலம், வெளிமூலம், சீமூலம், இரத்த மூலம், குதமூலம், வாய்வுமூலம், இவையெல்லாம் தீரும்.

## 4. சரபங்க வில்வாதி இலேகியம்

கொள்ளவே யின்னமொன்று சொல்லக் கேளு
குணமான சரபங்க வில்வாதி லேகியம்
விள்ளவே வில்வவேர் முட்கா வேளை
விருதான சங்கவேர் வகைக்குத் தூக்கு
தெள்ளவே சிற்றுமல்லி சிற்று முட்டி
திறமான பேர்மல்லி கூந்தல் முள்ளி
நள்ளவே சாரணைவேர் கண்டங் காலி
நலமான விலாமிச்சை சீந்தில் தானே. 465

தானென்ற கொடிவேலி பொன்மு சுட்டை
தளமான நன்னாரி சிறுதேக் கப்பா
வானென்ற மூலிகை பதினாறுந் தான்
வளமான பலமைந்து இடித்து நைய
வேனென்ற வாற்றுநீர் தூணி விட்டு
விளங்கவே யெட்டொன்று யிறுத்துக் கொண்டு
கானென்ற கன்னல்வெல்லஞ் சேர்தா னுங்கு
கருவாவின் பாலிரண்டு படிதான் சேரே. 466

சேர்த்தப்பா கரைத்ததிலே பாகு செய்து
திறமான திரிகடுகு திரிப லாதி
வார்த்ததிலே கிராம்பேல மிருசீ ரகந்தான்
வளமான கோட்டந்தா ளீசப் பத்திரி



கார்த்ததிலே யோமமிரண் டரத்தை யிரண்டு
தளமான கொத்துமல்லி லவங்கப் பட்டை
ஆர்த்ததிலே யக்கரா வரத்தை திப்பிலி
அப்பனே வால்மிளகு குலக்கா யாமே. 467

ஆமப்பா வகையொன்று பலமொன் றாக
அப்பனே யிளவறுப்பாய்ச் சூர ணித்துச்
சேமப்பா பாகிலே தூவிக் கிண்டித்
திறமான தேன்படிநெய் யரைதான் விட்டு
நாமப்பா குழம்புபோல் வாங்கி வைத்து
நலமாகக் கழஞ்சிநிறை யிருநே ரங்கொள்
தாமப்பா பித்தவெட்டை பாண்டு ஆறுந்
தவிருண்டு போகுஞ்சய மெட்டுந் தானே. 468

தானென்ற குன்மமெட்டுங் கிறுணி யாறுந்
தடமான வாய்க்கசப்பு வெள்ளோக் காளந்
தேனென்ற வாயூற லக்கினி மாந்தந்
திறமான சூலையொடு கைகால் காந்தல்
பானென்ற பித்தமது நாற்ப துந்தான்
பறக்குமடா மண்டலத்தில் யறிந்து கொள்ளு
வேனென்ற பத்தியந்தான் புளி சப்பு
விளங்கியதோர் புகையொடு பெண்ணுந் தள்ளே.

தள்ளப்பா திரிலோகம் வைத்துக் கொள்ளு
தளமான வாலரசச் செந்தூ ரந்தான்
கொள்ளப்பா லோகசெந் தூரந் தானும்
குறையாமற் பணவெடைதான் வைத்துக் கொள்ளு.
தள்ளப்பா பித்தமென்ற தெல்லாம் போகுந்
தருவான சேத்துமங்கள் தொண்ணூற் றாறும்
விள்ளப்பா கடல்புக்குங் கண்டு கொள்ளு
விதமாக வின்னமொரு சேதி கேளே. 470

வில்வவேர்க் கட்டை, முட்காவேளைவேர், சங்கம் வேர் சிற்றுமல்லி, சிற்றுமுட்டி, பேருமல்லி, ஔவையார் கூந்தல்,

முள்ளி, சாரணைவேர், கண்டங்கத்திரி, விலாமிச்சை, சீந்தில், கொடிவேலி வேர்ப்பட்டை, பொன் முசுட்டை, நன்னாரி வேர், சிறுதேக்கு, இப்பதினாறும் வகைக்கு 5 பலம்: இவைகளை நைய இடித்து ஒரு பாண்டத்தில் சேர்த்து, ஆற்றுநீர் தூணிவிட்டு 1/8 ஆகக் காய்ச்சி வடித்து, அதில் கரும்பு வெல்லம் 4 சேர், கருப்புப் பசும்பால் 2 படி சேர்த்துக் கரைத்து வடித்து, அடுப்பின் மீது வைத்து பாகுபதம் வந்தவுடன், திரிகடுகு, திரிபலை, கிராம்பு, ஏலம், சீரகம், கருஞ்சீரகம், கோஷ்டம், தாளிசபத்திரி, ஓமம், குரோசானி ஓமம், சிற்றரத்தை, பேரரத்தை, கொத்துமல்லி, இலவங்கப்பட்டை, அக்ராகாரம், திப்பிலிக்கட்டை, வால்மிளகு, சாதிக்காய், இவை வகைக்கு 1 பலம் இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து, பாகிலே சிறிதுசிறிதாகத் தூவி, கிண்டும்சமயத்தில் ¼ படி நெய் விட்டுக் கிண்டி இறக்கி, தேன் 1 படி சேர்த்து, குழம்புப் பக்குவத்தில் செய்து கொள்ளவும். 1¼ வராகனெடை அளவாக 1 நாளைக்கு இருவேளை உட்கொள்ள பித்த வெட்டை, அறுவகை பித்தப் பாண்டு, எண்வகை க்ஷயம், எண்வகைக் குன்மம், அறுவகைக் கிராணி, வாய்க்கசப்பு, வெள்ளோக்காளம், வாய்நீர் ஊறல், அக்கினி மந்தம், சூலை, கை கால் காந்தல், பித்தம் 40 இவைகள் 1 மண்டலத்தில் தீரும். பத்தியம்: புளி, கைப்பு, புகை, பெண் நீக்கவேண்டும்.

இந்த இலேகியத்தை திரிலோகச் செந்தூரம், வாலை இரசச்செந்தூரம், அயச்செந்தூரம் இவைகளுக்கு அநுபானமாகக் கொள்ள, பித்தம் 40, சேத்துமம் 96 இவைகள் எல்லாம் தீரும்.

## 5. தேற்றாங்கொட்டை இலேகியம்

சாந்தமா மின்னமொரு லேகி யங்கேள்
சமர்த்தான பலமைந்து தேற்றாங் கொட்டை
சேர்ந்ததொரு திரிகடுகு திரி பலாதி
சிற்றரத்தை சீரகம் வகைக்கரைப் பலந்தான்



பாங்காகப் பொடிசெய்து வைத்துக் கொண்டு
பஞ்சதாரை பலம்நான்கு படியாப் பாலில்
தோய்ந்திடவே கலக்கியதைப் பாகு சேர்த்துத்
துரிதமுடன் தூள்கொட்டிக் கிளரு வாயே. 471

கிளருகையிலே பசுவின்நெய் படிகால் வாரு
கீழிறக்கித் தேன்பாதி விட்டுக் கிண்டித்
தளரயிலே பாக்களவு லேகி யத்தில்
தருவான நாகபற்பங் கூட்டித் தின்னு
அளரயிலே யிருவேளை யிருபது நாள் கொள்ளு
அப்பனே மூலநோ யகலுஞ் சொன்னோம்
இளரவே கயமுடனே அத்திசுரம் வாதம்
இதமான அக்கினியா மந்தம் போமே. 472

தேற்றான் கொட்டை 5 பலம்; திரிகடுகு, திரிபலை, சிற்றரத்தை, சீரகம் வகைக்கு ¼ பலம்; இவைகளைப் பொடித்துக் கொண்டு, சர்க்கரை 4 பலம் 1 படி ஆவின் பாலில் கரைத்து வடிகட்டி, அடுப்பின்மீது வைத்துப் பாகுபதம் வரும்போது ஷ்டி பொடியைச் சிறிது சிறிதாகக் கொட்டிக் கிளரி, கிளரும் சமயத்தில் பசு நெய் ¼ படி ஊற்றிக்கிண்டியிறக்கி, தேன் 1/8 படி விட்டுத் தளரக் கிண்டவும். பாக்களவு லேகியத்துடன் ¼ குன்றிமணியளவு நாகபற்பம் கூட்டி, இருவேளை 20 நாள் உட்கொள்ள மூல நோய் தீரும். அன்றியும் க்ஷயம், அத்திசுரம், வாதம், அக்கினி மந்தம் இவைகளும் போம்.

## 6. நாரத்தை இலேகியம்

ஒழிவதற்கு நார்த்தங்காய் லேகி யத்தை
யறைகிறேன் நாரத்தம் பழச்சா றிஞ்சி
ஒழிவதற்கு வமுக்கிரா சாரணைவேர்ச் சாறு
ஒவ்வொன்று படிநான்கு நல்ல வெல்லம்

ஒழிவதற்குப் பத்தைந்து பலங்கரைத்தே
ஒருநான்கு படிகூட்டி யொன்றாய்க் காய்ச்சி
ஒழிவதற்குப் பாகாகக் குறுக்கி யப்பா
உண்மையுடன் சற்கவகை யுரைக்கி றேனே. 473

உரைக்கிறேன் திரிகடுகு மேலமதி மதுர
முயர்தேசா வரங்கோட்டஞ் சிற்ற ரத்தை
உரைக்கிறேன் கொத்துமல்லி தாளீச பத்திரி
ஒகோகோ முந்திரிகைப் பழமோர் பலமாய்
உரைக்கிறே னதிவிடைய மமுக்கிரா காரம்
உண்மைபெறும் வால்மிளகு சிறுநா கப்பூ
உரைக்கிறேன் சாதிக்காய் பத்திரி கிராம்பு
மோகுதிரி பலைகுரோ சானி யோமம். 474

ஓமந்தான் கந்தபொடி கரிய சீரகம்
ஒவ்வொன்றுக் கரைப்பலமாய் வெயிலு லர்த்தி
நேமமா யிடித்துவடி கட்டிச் சூரணம்
நேர்த்தியாய்ப் பாகிலே தூவிக் கிண்டிச்
சாமமரை பதமாக்கிக் கிண்டிச் சீனி
தனையுமே பதினைந்து பலந்தான் தூவி
ஏமமாய் தேனிரண்டு படியும் விட்டே
இளகியபின் படினறுநெய் விட்டுக் கிண்டே. 477

கிண்டியதோர் லேகியத்தைப் புதுக்கலசத் திட்டு
கிருபையுடன் வண்டுகட்டி நாலுதின மாற்றி
மண்டலந்தா னந்திசந்தி யருந்தி னக்கால்
வளர்பித்த குன்மநெஞ் செரிப்பு மரோசி
உண்டுவரத் தாபசுரம் வாந்தி பித்தம்
உட்சூடு கிறுகிறுப்பு வாயுதலை நோவும்
கண்டவுடன் பறந்தோடு மக்கினி மந்தம்
சுழன்றுமல நீர்க்கட்டு காந்தல் போமே. 476

நாரத்தம்பழச் சாறு, இஞ்சிச் சாறு, அமுக்கார வேர்ச் சாறு, சாரணைவேர்ச் சாறு வகைக்கு 1 படி, கரும்பு வெல்லம்



50 பலம் சேர்த்துக் கரைத்து வடிகட்டி அடுப்பிலிட்டுக் கொதிக்க வைத்து பாகுபதம் வரும் சமயத்தில், திரிகடுகு, ஏலம், அதிமதுரம், திப்பிலி மூலம், கோஷ்டம், சிற்றரத்தை, கொத்துமல்லி, தாளிசபத்திரி, திராட்சை வகைக்கு 1 பலம்; அதிவிடயம், அமுக்கரா, அக்கிராகாரம், வால்மிளகு, சிறு நாகப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி கிராம்பு, திரிபலை, குரோ சானிஓமம், தேவதாரம், கருஞ்சீரகம் வகைக்கு ½ பலம்; இக்கடைச் சரக்குகளை வெய்யிலில் உலர்த்தி, நன்றாய் இடித்துப் பொடித்து வடிகட்டிய சூரணத்தை மேற்படி பாகில் சிறிது சிறிதாகத் தூவிக் கிண்டி, அதில் 15 பலம் சீனி சேர்த்துக் கிண்டி, தேன் 2 படி, நெய் 1 படி விட்டுக் கிண்டி, புதுக் கலசத்தில் சேர்த்து நான்கு நாள் பழகியபின் அளவுடன் காலை மாலை ஒரு மண்டலம் கொள்ள, பித்தகுன்மம், நெஞ் செரிப்பு, அரோசகம், தாபசுரம், வாந்தி, பித்தம், உட்சூடு, கிறுகிறுப்பு, வாய்வு, தலைநோய், அக்கினி, மந்தம், மலநீர்க் கட்டு, காந்தல் முதலிய இவைகள் தீரும்.

## 7. வெண்பூசனி இலேகியம்

கொள்ளவே கூழ்ப்பாண்டவி லேகி யந்தான்
குணமான கூழ்ப்பாண்டச் சாறுபடி நான்கு
விள்ளவே தாழையிட விழுதின் சாறு
விறுதான படியொன்று தென்னம் பூவொன்று
தள்ளவே பழச்சாறு படிதா னென்று
தளமான வாவின்பால் படிதானிரண்டு
பள்ளவே சர்க்கரைதான் பலமோர் பத்து
பதருமற் கரைத்ததனைப் பாகு சேரே. 477

சேருமே சீரகமு மல்லி கோட்டம்
வளமான மிளகுமா சிக்கா யேலம்
காருமே சாதிக்காய் சாதி பத்திரி
கருவான மதுரமொடு தாளீ சந்தான்

வாருமே ஒருவகைக்குப் பலமொன் றாக
வகையாகச் சூரணித்துப் பாகிற் றூவி
நேருமே தேனெய்படி யரைதான் விட்டு
நினைவாகக் கூழுபோல் கிண்டி வாங்கே. 478

வாங்கியே புன்னைக்கா யளவு வீதம்
வளமான விலேகியத்தைக் கொண்டாயானால்
நீக்குமே காமாலை சோகை யெல்லாம்
நீங்காத வத்திசுர மத்தி வெட்டை
தாங்கியதோர் பிரமியங்கள் வெள்ளை வீழ்தல்
தளமாகும் தேகபுஷ்டி விந்து ஊறும்
பாங்கியே யுஷ்ணநோய் நீர்ச்சுருக்கு
பறக்குமே புளிபுகைநீ தள்ளிக் கொள்ளே. 479

வெண் பூசனிக்காய்ச் சாறு 4 படி, தாழை விழுதுச் சாறு, தென்னம்பூச் சாறு, பழச்சாறு இவை வகைக்கு 1 படி, பசுவின்பால் 2 படி, சர்க்கரை 10 பலம், இவற்றை ஒன்றாய்ச் சேர்த்து கரைத்துக் வடிகட்டி, அடுப்பிலிட்டுக் காய்ச்சி பாகுபதம் வரும்பொழுது, சீரகம், கொத்துமல்லி, கோஷ்டம், மிளகு, மாசிக்காய், ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், தாளீசம் இவை வகைக்கு 1 பலம் இடித்துப் பொடித்துச் சூரணித்து மேற்படிபாகில் தூவிக் கிண்டி ½ படி நெய்யும், தேன் ¼ படியும் சேர்த்துக் கிண்டவும். புன்னைக்காயளவு உட்கொள்ள காமாலை, சோகை, அத்திசுரம், அத்திவெட்டை, பிரமியம் வெள்ளை இந்நோய்கள் தீரும், உடல் வலுக்கும். விந்து ஊறும். சூட்டினால் உண்டாகும் நோய், நீர்ச்சுருக்கும் தீரும். பத்தியம்: புளி, புகை நீக்கவும்.

## 8. இஞ்சி இலேகியம்

இஞ்சிரசம், கண்டங்கத்திரிச்சாறு, நெருஞ்சிச் சாறு, முள்ளங்கிச்சாறு, பழச்சாறு இவை வகைக்கு படி ஒன்று, ஆவின் பால் படி 2; பனைவெல்லம் பலம் 8; சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம், வாய்விடங்கம், கிராம்பு, தாளீசம் இவை வகைக்கு ஒரு பலம்; பசுவின் நெய் ½ படி; தேன் ¼ படி; சாறுகளை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து, பனைவெல்லத்தை அதில் கரைத்து அடுப்பேற்றி, கடைச் சரக்குகளைச் சூரணித்து அதில் கலந்து எரித்து, இலேகிய பதத்திலிறக்கி, நெய், தேன் இவை விட்டுக் கிளரி, பாக்களவு இருவேளை உபயோகிக்க,

திரும்நோய்கள்:—வாயு, பித்தம், வாந்தி, சூலை, வலி, சகம், அன்னத்துவேஷம், எட்டுகுன்மம், பொருமல் முதலி அரோயன தீரும்.



## 9. இம்பூரல் இலேகியம்

இம்பூரல் வேர்ப்பட்டையைத் தட்டியெடுத்துப் பாலிலரைத்துப் பாலில் கரைத்து வடிகட்டி அதில் பனங்கற்கண்டு அதனளவிற்குச் சேர்த்துக் கரைத்து வடிகட்டி அடுப்பிலேற்றிப் பாகுபதம் வரும் சமயத்தில், சிறிதளவு சாதிபத்திரி, சாதிக்காய், வால்மிளகுச் சூரணஞ் சேர்த்துச் கிண்டி, பிறகு பசுவின் நெய் விடவும், தேன் சேர்த்தல் கூடாது.

அளவு—சுண்டைக்காயளவு. உபயோகம்—இரத்தகாசம், இரத்தவாந்தி, இரத்தபேதி இவைகளுக்குக் கொடுக்கத் தீரும்.

## 10. கேசரி இலேகியம்

எலுமிச்சம் பழம் 200, நாட்டுச் சர்க்கரை 200 பலம், மிளகு 6 பலம், சீரகம் 6 பலம், கோஷ்டம், சுக்கு, தாளீசம், திப்பிலி, சாதிக்காய், சாதிபத்திரி இவை வகைக்கு 8 வராகனெடை, நெய் 8 பலம் எடுத்துக்கொள்க பிறகு எலுமிச்சம் பழத்தை வதக்கிச் சாறுபிழிந்து, சர்க்கரையை அதிற் கலந்து கரைத்து வடிகட்டி, அடுப்பேற்றி, பாகுபதம் வந்தவுடன் இறக்கி, சூரணித்தக் கடைச்சரக்குகளைச் சிறிது சிறிதாகப் போட்டுக் கிளரி, பிறகு நெய் சேர்த்துக் கிண்டுக.

அளவு—1 முதல் 2 வராகனெடை. தீரும் வியாதி—பித்தம், பித்தாசீரணம், அன்னவெறுப்பு, அசீரணபேதி, பித்தவாயு, வயிற்றுவலி முதலியன.

# 13. நெய்கள்

## 1. ஆடாதோடை நெய்

கேட்டிடவே நாட்பட்ட சுரத்துக் கெல்லாம்
கிருதமாடா தோடைவேர் கீழ்வாய் நெல்லி
வேட்டிடவுங் காட்டுமல்லி வேளை குப்பை
வேலிப் பருத்தியொடு குப்பை மேனி
நாட்டில் வளர் வழுதலைவேர் நத்தைச் சூரி
நலமான மருட்கிழங்கு அப்பை மூலம்
ஊட்டுவாய் வசம்புள்ளி கத்தூரி மஞ்சள்
உற்பனஞ்சேர் நல்ல பாம்பு கண்டந்தானே, 480

கண்டமொடு வராகனங்கே மூன்று தூக்கிக்
கல்லிலாட்டி நாழிநெய்யிற் கலந்து கொண்டு
கண்டமெனு நல்லெண்ணெ யேரண் டெண்ணெய்
கலந்திடுவாய் வகையிரண்டு படிதா னென்று
கண்டிதமா யிவையெல்லாங் காயும் போது
கருங்குங்கி லியமிரண்டு காசு தூக்கிக்
கண்டிதமாய் நிம்பபழச்சா றூற்றக் கேளு
கனிந்தபழ மைந்தங்கே பிழிந்து வூட்டே 481



ஊட்டியே வடித்தப்பா வைத்துக் கொண்டு
உள்ளுக்குக் காசெடைதான் உண்ணச்சொல்லு
நாட்டியே மேலுக்குந் துவாலை போடு
நாட்பட்ட சுரந்தணியு மின்ன மொன்று 482

* * * *

ஆடாதொடை வேர், கீழ்வாய்நெல்லி வேர், காட்டு மல்லி வேர், வேளை வேர், குப்பைமேனி வேர், வேலிப் பருத்தி வேர், வழுதலை வேர், நத்தைச்சூரி வேர், மருட் கிழங்கு, கோவை மூலம், வசம்பு, பூண்டு, கத்தூரி மஞ்சள், நல்ல பாம்பு கண்டம் இவை வகைக்கு 3 வராகனெடை: இவைகளை அம்மியில் வைத்து நன்றாக அரைத்து, ஒரு பாத்திரத்தில் நெய் படி ஒன்று ஊற்றி, அதில் அரைத்ததைக் கலந்து, அதில் எள் நெய் 1 படி, ஆமணக்கு நெய் 1 படி சேர்த்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி, காயும்பொழுது கருங்குங் கிலியம் காசெடை இரண்டும், 5 எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்துப் பக்குவத்தில் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

உள்ளுக்குக் காசெடை கொண்டு, மேலுக்கு துவாலை போட நாட்பட்ட சுரம் தீரும்.

## 2. தூதுவளை நெய்

அற்றுப்போம் தூதுவளைக் கிருதங் கேளும்
அப்பனே தூதுவளை யெடைதா னென்று
கற்றுப்போ நன்முள்ளி கண்டங் கத்திரி
கருவான காஞ்சோறி யாடா தோடை
சற்றுப்போம் மிளகு திப்பிலி கடுக்காய்
சதிரான துராலபையும் வகையொன் றுக்கு
நற்றுப்போம் பலநாலு கொண் டிடித்து
நலமாக விருதாணி நீரி லூட்டே. 483

ஊட்டியே சோடசத் தொன்றாக் காய்ச்சி
உத்தமனே வடித்துவொரு பாண்டத் தூற்றி
நாட்டியே யாவின்நெய் படிதா னிரண்டு
நலமான வாவின்பால் படிதா னிரண்டு
காட்டியே திரிகடுகு திரிப லாதி
கருவான தாளிசங் கோஷ்ட மக்கிரா
வாட்டியே வாய்விளங்கஞ் சீரசமு மோமம்
வால்மிளகோ டரத்தை[யி]ரண்டு மேலந்
தானே. 484

ஏலமொடு கிராம்பு சாதிக்காய் பத்திரி
எடுத்திடுவாய் வகையொன்று கழஞ்சு மூன்று
ஆலமொடு மாவின்பால் விட்டே யாட்டி
அப்பனே நெய்தனிலே கரைத்து விட்டு
ஞாலமொடு மெழுகுபத மாகு நேரம்
நலமாக வடிகொண்டு கரண்டி வீதம்
காலமே மண்டலந்தான் கொண்டா யானல்
கருவான சயமெட்டுங் காணா தன்றே. 485

காணாத விளையோ டிருமல் காசம்
கலங்காதே சேத்துமநோய் தொண்ணூற் றாறும்
தானுமே மேகமெல்லா நாடா தோடும்
நலமான வுட்டணநோ யெல்லாந் தீரும்
ஆணுமே யிளையிரைப் பற்றுப் போகும்
அப்பனே வாயுவென்ற தெல்லாந் தீரும்
தோணுமே குண்டலமாம் வாய்வு தீரும்
குறிப்பாக வின்னமொரு சேதி கேளே. 486

தூதுவளை (1 எடை 25 பலம்), முள்ளி, கண்டங்கத்திரி, காஞ்சொறி, ஆடாதோடை, மிளகு, திப்பிலி, கடுக்காய், சிறுகாஞ்சொறி, இவை வகைக்கு 4 பலம்: இவைகளை இடித்து ஒரு பாண்டத்தில் சேர்த்து நீர் 2 தூணி விட்டு 1/16 ஆகக் குறுக்கி வடித்து ஒரு பாண்டத்தில் சேர்த்து, அதில் ஆவின் நெய் 2 படி, ஆவின் பால் 2 படி, திரிகடுகு, திரிபலை,



தாளிசம், கோஷ்டம், அக்ராகாரம், வாய்விளங்கம், சீரகம், ஓமம், வால்மிளகு, சித்தரத்தை, பேரரத்தை, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி இவை வகைக்கு 3¾ வராகனெடை: இவைகளை யெல்லாம் ஆவின்பால் இட்டு கற்கமாக அரைத்து மேற்படியில் கரைத்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து, பொட்டுக் கரண்டிவீதம் காலையில் மாத்திரம் ஒரு மண்டலம் கொண்டால் சயம் 8, ஈளை, இருமல், காசம் சேத்தும நோய் 96, மேகம், உட்டண நோய் இரைப்பு, வாய்வு, குண்டலவாய்வு இவைகள் தீரும்.

## 3. புளியாரை நெய்

கேளடா புளியாரைச் சாறுபடி யொன்று
கிருபையுள்ள வன்னிச்சாறு படிதா னென்று
நாளடா காணிச்சாறு படிதா னிரண்டு
நலமான செவ்விளநீர் படிதா னிரண்டு
தாளடா வாவின்நெய் சேர்தா னைந்து
தளமான கருவாவின் பால்சே ரைந்து
ஆளடா சீரகமு மாசிக் காயும்
அப்பனே மதுரமொடு கழஞ்சு நாலே. 487

நாலப்பா வாவின்பால் விட்டே யாட்டி
நலமாக நெய்சாற்றிற் கரைத்து விட்டு
வேலப்பா வடுப்பேற்றி மெழுக தானல்
விருதாக வடித்துமே பொடிதான் கேளு
காலப்பா பத்திரியு மேலமி ரண்டு
கருவாகக் கழஞ்சிரண்டு பொடித்துத் தூவி
ஆலப்பா கற்கண்டு பலந்தா னென்று
அப்பனே பொடித்திட்டு கரண்டி நிறையாமே. 488

ஆமப்பா விருநேர மண்ட லங்கொள்
அப்பனே பித்தவெட்டை பித்த வாயு
தாமப்பா வெரிச்சலொடு நீர்ச் சுருக்குத்
தளமான மயக்கமெல்லாந் தவறிப் போகும்

நாமப்பா வாயூற லரோச கங்கள்
நாடாது பித்தமெல்லா நடுங்கி யோடும்
போமப்பா வாந்திமுதல் சரீர முறும்
புதிதாக வின்னமொரு கிருதங் கேளே. 489

புளியாரைச்சாறு 1 படி, வன்னிச்சாறு 1 படி, பொன்னுங்காணிச்சாறு 2 படி, செவ்விளநீர் 2 படி, ஆவின் நெய் 5 சேர், காரம் பசும்பால் 5 சேர், சீரகம், மாசிக்காய், அதிமதுரம் வகைக்கு 5 வராகனெடை; இம்மூன்று சரக்குகளையும் பசும்பால் விட்டரைத்து, பாலில் கரைத்து, சாறுகள், நெய், பால் எல்லாம் ஒன்றாகக் கலந்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பேற்றி, சிறு தீயாக எரித்து மெழுகு பதத்தில் வடித்து, அதில் சாதிபத்திரி, ஏலம் வகைக்கு 2½ வராகனெடை, கற்கண்டு 1 பலம் இவைகளைப் பொடித்து அதில் தூவிக் கலந்து விடவும். அளவு:—பொட்டுக் கரண்டியளவு இரு வேளை ஒரு மண்டலம் உட்கொள்ள பித்தவெட்டை, பித்தவாய்வு, எரிச்சல், நீர்ச்சுருக்கு, மயக்கம், வாய்நீர் ஊறல், சுவையின்மை, பித்த நோய்கள், வாந்தி இவைகள் தீரும்.

### 4. வல்லாரை நெய்

தானந் தனித்தவ னுண்டி—நல்ல
தயவாகத் தனயர்க்குப் பிணிதீர நாடி
ஆனந்தக் களிப்பையே பாடி—பெற்ற
அன்னை பிதாவுக் கறைகிறேன் கோடி

சித்திர மான புதுமை—நல்ல
சீரான வல்லாரை நெய்யிஃ தருமை
நத்தின பேருக் குரிமை—அந்த
நாதாக்க ளறிவார்க ளிதனது பெருமை

பத்திரமாம் பச்சை மூலி—நல்ல
பாங்கான வல்லாரை பலநூறு சாலில்
வைத்திடு நீரெட்டுப் படியாய்—இதை
வகையாக விட்டெரி எட்டொன்ற தாகச்



சுத்தாவின் நெய்யொன்று விட்டு—இதில்
சூட்டவே கடைச் சரக் கவைகளை மூட்டு
வித்தான சுக்கது தீட்டு—நல்ல
விதமான ஏலம் கலைக்கொம்பு மாட்டு

சத்தான சாதிக்காய் நீட்டு—நல்ல
சாதக மானதோர் தாளிசம் கூட்டு
எத்தான பத்திரி போட்டு—நல்ல
இதமான கோட்டம் விலாம்வெட்டி நாட்டு

சிங்கார மான நற்சீரம்—நல்ல
சீரான தான்றிதக் கோலம்பொன் னுரம்
வெங்காரம் வில்வை யக்காரம்—நல்ல
நலமான மல்லியும் ரோகணி சேரும்

இத்தனை யான சரக்கும்—இதில்
ஏற்றக்கு றைச்ச லில்லாம லெவர்க்கும்
கத்தனைப் போற்றி நினைக்கும்—வகைக்
கண்டு வராக னெடையது தூக்கும்

அத்தனை யும்படி ஆவின்—பாலி
லாட்டியே அம்மியி லரைத்திடு வீரே
வற்றின வல்லாரை நீர்க்குள்—வகை
யாகவே சேர்த்த சரக்கைக் கரைத்துக்

கண்டித்துப் பாண்டத்தி லூற்றிச்—சொன்ன
கருதாவி னெய்யதை ஒருபடி யூற்றி
விண்டித்து நீயன லேற்றி—நல்ல
விதமாக மொண்டதை திரள்பதந் தூற்றிக்

கிண்டித் தான்பதம் பார்த்து—நல்ல
கெடியான பீங்கானில் துடியாக வடித்துச்
சண்டித்த நோய்களுக் கேற்றி—இந்தச்
சதுரான வல்லாரை நெய்தினங் குடித்து

இட்டிடும் வல்லாரை நெய்க்கு—விட்டே
ஏகும் வியாதியை இதமுடன் சொல்வேன்
மட்டுப் படாத்தொந்த மாந்தம்—இன்னம்
மாறுட்ட மாய்வந்த வல்லப்போர் மாந்தம்

கட்டுக் கடங்காத மேகம்—பொல்லாக்
காச ரோகமென்ற வருவிட நோயும்
முற்றின ஈளை யிரைப்பு—காந்தும்
மூல கணங்களும் உட்சுர மேலும்

கத்திடுஞ் சர்த்தி இருமல்—கொடுங்
காசம் போலே கக்குஞ் சுவாச சுரமும்
பற்றிடும் நோயென்ற தெல்லாம்—நல்ல
பாங்காக வேயிரண்டு நேர மருந்தே. 490

100 பலம் வல்லாரையிலையை ஒரு மட்சாலில் போட்டு, 8 படி நீர் ஊற்றி அடுப்பிலிட்டு எரித்து, எட்டில் ஒன்றாகக் குறுக்கி வடித்து, அதில் ஆவின் நெய் படி ஒன்று ஊற்றி, அதில் சுக்கு, ஏலம், கலைக்கொம்பு, சாதிக்காய் தாளிசம், சாதிபத்திரி, கோட்டம், விலாமிச்சம் வேர், வெட்டிவேர், சீரகம், தான்றிக்காய், தக்கோலம், சந்தனம், வெங்காரம் வில்வம், அக்ராகாரம், கொத்துமல்லிவிதை, கடுகுரோகணி வகைக்கு 1 வராகனெடை, இவைகளைப் பொடித்துப் படிப் பசும்பால் விட்டு அரைத்து, மேற்படி வல்லாரைக் குடிநீர் நெய் சேர்ந்ததில் கலந்து, ஒரு பாத்திரத்தில் இட்டு அடுப்பேற்றி, சிறுதீயில் எரித்து வடித்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

தீரும் நோய்கள்:—தொந்த மாந்தம், போர் மாந்தம், மேகம், காசம், நாட்பட்ட ஈளை, இரைப்பு, மூலகணம், உட்சுரம், வாந்தி, இருமல், சுவாச சுரம் இவைகள் தீரும்.

அளவு:—பொட்டுக்கரண்டியளவு இருவேளை.

குறிப்பு:—கலைக்கொம்பைவிடப் பற்பத்தை சேர்ப்பதே சிறப்புடையது.



## 5. வெண் பூசனிக் கிருதம்

ஆறுமே கூழ்பாண்ட கிருதங் கேளாய்
அறைகுவேன் பூசனிக்காய்ச் சாறி ரண்டு
நாறுமே தாழையிட விழுதின் சாறு
நன்றாகப் படியொன்று தென்னம் பூநீர்
காருமே படியொன்று கூட விட்டுக்
கலங்காதே குமரி நீர் படிதா னென்று
வாறுமே செவ்விளநீர் படிதா னென்று
வளமான வாவின்நெய் படிதா னிரண்டே, 491

ரண்டான கற்கவகை சொல்லக் கேளாய்
நிலையான சாதிக்காய் சாதிப் பத்திரி
பண்டான மாசிக்காய் திரிப லாதி
பாங்கான சீரகமு மேலம்வால் மிளகு
குன்றான காட்டாத்தி கர்க்கடக சிங்கி
கூறான மல்லிகு ரோசானி யோமம்
நன்றாகக் கழஞ்சி நிறை மூன்றதாக
நலமான வாவின்பால் விட்டிட் டாட்டே. 492

வெண்பூசணிக்காய்ச்சாறு 2 படி, தாழை விழுதுச்சாறு 1 படி, தென்னம்பூச்சாறு 1 படி, கற்றாழைச்சாறு 1 படி, செவ்விளநீர் 1 படி, ஆவின் நெய் 2 படி: இவைகளைப் பாத்திரத்தில் சேர்த்து, அதில் சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், திரிபலை, சீரகம், ஏலம், வால்மிளகு, காட்டாத்தி பூ, கற்கடகசிங்கி, கொத்துமல்லி விதை, குரோசானிஓமம் இவை வகைக்கு 3½ வராகனெடை; இவைகளைப் பொடித்துப் பசும்பாலால் நன்றாக அரைத்து 2 படி பாலில் கலந்து மேற்படியில் ஊற்றி அடுப்பிலிட்டுப் பக்குவத்தில் எரித்துவடித்து, அதில் சீனிக் கற்கண்டு 2 பலம் பொடித்துப் போட்டுக்கலந்து விடவும். பொட்டுக் கரண்டி விதம் இருவேளை உட்கொள்ள வெள்ளை, சூடு, எரிச்சல், காந்தல், நீர்க்குத்து, ஆண், பெண்

குறி எரிவு, எலும்பு விரணம், வெட்டை, பித்தம் இவைகள் தீரும். இந் நெய்யுடன் அப்பிரக பற்பம் சேர்த்துச் சாப்பிட மேகநீர் நீங்கும்.

### 6. பிரமி நெய்

பிரமிவழுக்கைச்சாறு 4 படி, பசுவின் நெய் 2 படி, பச்சை வசம்புச்சாறு 1 படி, சிற்றரத்தைச்சாறு 1 படி, பசுவின் பால் 4 படி, இவைகளை ஒன்று கலந்தபின், சிவதை வேர், சுக்கு, திப்பிலி, நெல்லிவற்றல், விளாவித்து, இந்துப்பு, சீனக்கற்கண்டு, கஸ்தூரி மஞ்சள் இவைகளை வகைக்கு 4 விராகனெடை எடுத்துச் சூரணித்து பசுவின் பால் விட்டரைத்து, ஒன்று கலந்து, திரவத்தில் கலக்கி எரித்துப் பக்குவ பாகத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்க. காலைதோறும் ½ முதல் ½ பலம் வீதம் உட்கொள்ள பித்தாதிக்கம், சூதகசந்நி போன்ற நோய்கள் தீரும்.

### 7. சேங்கொட்டை நெய்

சுத்தித்த சேங்கொட்டை ஐந்து பலத்தை சிறு துண்டுகளாக வெட்டி உட்பருப்பை நீக்கி, ஒரு படி பசுவின் பாலை மூன்று பங்காக்கி ஒரு பங்கில், கொட்டையிட்டுக் காய்ச்சியெடுத்து,மற்ற இரு பங்கிலும் தனித்தனி இவ்விதங் காய்ச்சி காய்ச்சி எடுத்த பாலுக்குச் சமவெடை பசுவின் நெய் சேர்த்து, நெய் பதம் வரும்வரை காய்ச்சி, காசெடை வீதம் காலைமாலை இருவேளை கொடுத்துவர,சர்ம சம்பந்தமான பற்பல நோய்களும், காசம், சுவாசம், க்ஷயம் இவைகளும் நீங்கி உடல் பலமுண்டாம். உண்டுவருங்கால் புளி நீக்குக.

## 14. வெண்ணெய்

### 1. குங்கிலிய வெண்ணெய்

அருந்தும் வெள்ளை கண்டவர்க்கு மருந்துகேளு
ஆனவெள்ளைக் குங்கிலியம் பலந்தா னைந்து
திருந்தவே பொடியாக்கி வைத்துக் கொண்டு
திறமான வெண்ணெய் சட்டி யடுப்பிலேற்றி
பொருந்துநல் லெண்ணெய்யுழக் கதிலே விட்டு
புகையாமற் கொதித்துவரிற் பொடியைத் தூவி
அருந்தியே கிண்டவே பாகு சேரில்
மறுசட்டிக் குள்நாழி தண்ணீர் வையே, 493

வையவே தண்ணிதனிற் பாகை யூற்றி
மைந்தனே பிசைந்திடுவாய் மைபோல் நன்றாய்
பையவே திரட்டியதை யெடுத்துக் கொண்டு
பதமான இளநீரிற் போட்டா யானால்
துய்யவே கையினாற் பிசையும் போது
தூய்மையுள்ள வெண்ணெயாய்த் துலங்கு நன்றாய்
மெய்யாக வெண்ணெய்தனை யெடுத்து வைத்து
விதமான ஏலரிசி பொடித்துப் போடே. 494

போட்டுநீ யொன்றாக யோசித் தப்பா
பொருந்தவே புன்னைக்கா யளவு கொண்டால்
வாட்டமில்லா மேகவெள்ளை நீர்க் கடுப்பு
மகத்தான வுட்காங்கை வயிற் றெ ரிச்சல்
மூட்டியதோர் முகவெரிவு கைகால் காந்தல்
முறிந்தோடு மிந்த முறை முயற்சி செய்தால். 495

வெள்ளைக்குங்கிலியம் 5 பலம் நன்றாகப் பொடித்து, ஒரு எண்ணெய்ச் சட்டியை அடுப்பிலேற்றி, அதில் எண்ணெய் உழக்கு ஊற்றி, சிறு தீயில் இலேசாக எரித்துப் புகையாமற் கொதித்து வரும்பொழுது மேற்படி பொடியைத் தூவி நன்றாகக் கிண்டிப் பாகாக வரும்பொழுது, ஒரு சட்டியில் படி தண்ணீர் ஊற்றி அதில் குங்கிலியப்பாகை ஊற்றி கையினால் நன்றாகப் பிசைய வெண்ணெய் போலாகும். இதைத் திரட்டி எடுத்து, வேறொரு பாத்திரத்தில் இளநீர் வைத்திருந்து அதில் போட்டுக் கையினால் பிசைய தூய்மையுள்ள வெண்ணை போலாகும் இதனை வழித்து ஏலரிசியைப் பொடித்துப் போட்டுப் புன்னைக்காயளவு இரண்டு வேளை கொடுக்க மேகவெள்ளை, நீர்க்கடுப்பு, உட்காங்கை, வயிற்றெரிச்சல், முகஎரிவு, கை கால் காந்தல் இவைகள் தீரும்.

குறிப்பு:—வெண்ணெயைத் தண்ணீர் உள்ள ஒரு பாத்திரத்தில் சேகரித்து வைப்பதுடன், நாள்தோறும் நீரை மாற்றிக் கொண்டு இருக்க வேண்டும். மருந்தை பிணியாளிக்கு பயன்படுத்தும்போதுதான் ஏலரிசிப் பொடியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

குங்கிலியத்தையும் எண்ணெயையும் ஒன்றாகச் சேர்த்து அடுப்பின்மீது வைத்தலே நலம். எண்ணெயில் சூடேறி கொதித்து வரும்போது குங்கிலியத்தைப் போட்டால் திடீரென்று பற்றி எரியவும் கூடும்.

# 15. மணப்பாகுகள்

## 1. ஆடாதோடை மணப்பாகு

சுத்தமான ஆடாதோடாயிலை 20 பலமெடுத்துச் சிறுக அரிந்து, 4 படி நீர்விட்டு 1 படியாகச் சுண்டக் காய்ச்சியபின் வடிகட்டி, 23 பலம் சீனிகூட்டிக் காய்ச்சிப் பதத்தில் எடுத்துக்கொள்க. இதில் கால் முதல் அரைப் பலமெடுத்து, காய்ந்தாறிய நீர் இரண்டு பங்கு சேர்த்துக் கலக்கி யுட்கொண்டுவர, கபாதிக்கம், வாததோஷம், இருமல், பற்பல சுரம், வயிற்றுநோய் ஆகிய இவைகளை நீக்கும்.

## 2. நன்னாரி மணப்பாகு

12½ பலம் நன்னாரிவேர்ப்பட்டையை யிடித்து, 1½ படி வெந்நீரில் 6 மணி நேரம் ஊறவைத்தபின், காய்ச்சி ¾ படியாய் வற்றவைத்து வடிகட்டி, அதில் 12½ பலம் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சி மணப்பாகு பக்குவத்தில் எடுத்துப் புட்டியில் அடக்கஞ் செய்யவும். அரை பலம் மணப்பாகுடன் ஒரு பலம் தண்ணீர் கலந்து சாப்பிட்டுவர, நீர்ச்சுருக்கு-கட்டு-கடுப்பு-காந்தல், கண்ணெரிவு, நாவறட்சி, தாகம், மேக காங்கை, பிரமேகம் போன்றவை நீங்கும்.

### 3. துருஞ்சி மணப்பாகு

துருஞ்சி நாரத்தம்பழ ரசத்தெடைக்கு இரட்டிப்பு சர்க்கரை கலந்து காய்ச்சிப் பதத்தில் எடுத்துக்கொள்க. இதில் கால் முதல் அரைபல மெடையெடுத்து தண்ணீர் இரண்டு பங்கு கூட்டி யுட்கொண்டுவர பித்தத்தையும், பித்தத்தை முன்னிட்டுண்டாகும் நோய்களையும் தணிக்கும்.

### 4. மாதுளை மணப்பாகு

கற்கண்டும் பன்னீர் கனிமா துளைரசமும்
நற்றேனுங் கூட்டியே நாட்டுவாய்—சொற்பமல்ல
பாண்டு வெளுத்தலொடு பாதங் கரமெரிதல்
மாண்டுபோ மென்றார் மகிழ். 496

கற்கண்டு, பன்னீர், மாதுளை இரசம், தேன் இவைகளை ஒன்றாகக் கூட்டிக் கற்கண்டு கரைந்த பின் வடிகட்டி அடுப்பிலிட்டுக் கொதிக்க வைத்துப் பாகுபதம் வந்தவுடன் இறக்கி புட்டியில் அடைக்கவும். அளவுப்படி கொடுக்க பாண்டு, வெளுக்கும் நோய், கைகால் எரிவு, வாந்தி இவைகள் தீரும்.

## 16. தயிலங்கள்

### 1. அரக்குத் தயிலம்

துரும வியாதி யெண் குடும்பஞ்
சுரராற் றறலெண் ணான்கு கடன்
சுருக்கப் பலையிந் தனக் கனலாந்
தொகைக்கெட் டொன்றாய் வடிகுடிநீ
ரருமை நறும்பா லெட் டயில
மன்னீர்க் கருத்த மவந்தி மஸ்து
மாற்றப் பளவைப் படிப் பலமா
மாரநி சிபுட்க ரஞ்சிகரச் 497

சரும மடைபச் சிலைமதுரஞ்
சடைகிச் சிலிரோ கணியேலை
சதபுட் பியும்வா லரியுரிபூஞ்
சாந்தோடு பய வசைமுதலி
உரும முறுசெவ் வல்லிகண
மொவ்வொன் றினுக்கோ ராம்பிரமா
யூற்றும் பயசா விழையெல்லா
மூற்றிக் கரைத்துத் தானமிடே. 498

மகிமை

உத்தான மிட்டுமுதற் பொருளை வாழ்த்தி
யொல்கவெரித் தைந்தாநா ளுதயமுந்தி
யோதுபரு வத்துவடித் ததற்குச் சுத்தி
யொருமதிநெற் புடந்தீர்வ தொளிரிலாட்சைச்
சத்தான தைலத்தின் பெயரைச் சொல்லிற்
சப்ததா துச்சுரமுஞ் சடக்கடுப்புந்
சந்திரா வர்த்தமொடு சூரியா வர்த்தஞ்
தலைச்சூலை வியர்வுறுகற் றுழைவாச 499

முத்தான வெயிற்றினடிச் சுரப்பு மாற்ற
மொழிய வொட்டாச் சுரக்கினமு மூர்த்தமாக
மூச்செழுப் புஞ்சுவாச காசச் செருக்கு
முதிருழலை யுதிரத்தின் முறிவும் பாண்டுக்
கொத்தான நோய்களு முள்ளீர லுக்குட்
குளிர்ந்தெழுந்தங் கவயவியைக் குலிக்கியாட்டுங்
குளிர்ச்சுரமு நாட்பட்ட சுரமுந் தீவாய்க்
குயவரியை நேருமயக் குழாத்த தாமே. 500

கொம்பரக்கு 32 பலம், ஆற்றுநீர் 32 மரக்கால். கொம்பரக்கை தோலாயந்திரமாகக் கட்டி நீரில்படியும்படி சிற்றூட்டி விறகால் எரித்து 4 மரக்காலாகக் காய்ச்சிய குடிநீரில், பசும்பால் 2 மரக்கால், எண்ணெய்2 மரக்கால், காடி, தயிர்த் தெளிவு வகைக்கு 32 பலம், சந்தனம், கஸ்தூரிமஞ்சள், கோஷ்டம் இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, பச்சிலை, மதுரம், சடாமாஞ்சல், கிச்சிலிக்கிழங்கு, கடகரோகணி, ஏலம், சதபுஷ்பி, கிளியூரல்பட்டை, பூஞ்சாந்திப்பட்டை, சீரகம், கருஞ்சீரகம், மெருகன்கிழங்கு, செவ்வல்லி வகைக்கு 1 பலம், இவற்றைப் பசும் பாலால் நன்றாக கற்க பாகமாக வரும் வரை அரைத்து மேற்படி குடிநீரில் கரைத்து அடுப்பின் மீது வைத்து சிறுதீயாக எரித்துப் பக்குவத்தில் காய்த்து வடித்து ஒரு பானையில் வூற்றி பானைவாய் பொருத்தமான ஓட்டினால் மூடிச் சீலை செய்து ஒரு மாதம் நெற்புடம் வைத்து வைக்க, தயிலம் சுத்தியாகும். தயிலத்தைத் தேய்த்து முழுக 7 உடற்கட்டுகளைப் பொருந்திய வெப்பு, உடற்கடுப்பு, எழுஞாயிறு, படுஞாயிறு, தலைச்சூலை, கற்றுழை நாற்றம் வீசும் வியர்வை, ஈறுவீக்கம், தொண்டைக் கம்மல், சுவாசகாசம், நாட்பட்ட உழலை, இரத்தத்தின் முறிவு, பாண்டு, குளிர்ச்சுரம், நாட்பட்ட சுரம் இவைகள் தீரும்.



## 2. அர்க்கக்ஷீராதித் தயிலம்

எருக்குகுடம் பாற்களன்றி யிவையி ரண்டை
சீதமெரு கிருங் கிழங்கு
ணிருக்குமற லோடேழு முட்டிவகைக்
கைந்தெணெய்பத் தெரிமுகிக்காழ்
பெருக்குசய பாளமிவை யைந்தார்த்தஞ்
சேர்த்தொன்றாய்ப் பேணித்தீயாற்
சருக்குவடி தைலமிவ ளுமமர்க்க
க்ஷீராதி துதித்தி டாயே. 501

மகிமை

துதிக்கவிந்தத் தைலத்தைச் சிறுகவப்பிப்
பிடிவாதத் தொகைபோஞ் சத்திற்
கதிக்கவிட்டுப் புரட்டுண்மகோ தரஞ்சோபை
பாண்டு குன்மக் கட்டியும் போம்
வதிக்கவொட்டாச் செவிக்குத்தற் கொருதுளிகுத்
தடங்கும் விழிவழியாம் பன் ஞய்
பதிக்ககலத் தாண்டவென்றற் கலிக்கமுந்திட்
டிதற்கிச்சா பத்தியங் காணே, 502

எருக்கம்பால், எருக்கஞ்சாறு, சதுரக் கள்ளிப்பால், சதுரக் கள்ளிச்சாறு, பிரண்டை இரசம், பற்படாகக் குடிநீர், மெருகன் கிழங்குச் சாறு இவை வகைக்கு 5 பலம்; எண்

ணெய் 10 பலம்; சேராங்கொட்டை 5 பலம், நேர்வாளப் பருப்பு ½ பலம் சேர்த்து, சிறு தீயில் எரித்து பக்குவத்தில் வடித்துக் கொள்ளவும்.

இத் தயிலத்தைப் பிடித்தயிலமாக உபயோகிக்க மகாவாதநோய்க் கூட்டங்கள் போகும். கருங்குருவை அரிசி மாவில் சேர்த்துக் கழற்சிக்காய்ப் பிரமாணம் உண்ண மகோதரம். சோபை, பாண்டு, குன்மக்கட்டி விலகும். காது சூலைக்கு வெதுப்பி காதில் ஒரு துளிவிடக் குத்தல் தீரும். கண்ணில் கலிக்கமிட கண்நோய்கள் தீரும்.

குறிப்பு—கண்ணலிடலாமென்று பாட்டில் கூறி இருப்பினும், இதைக் கவனமாகவே பயன்படுத்த வேண்டும்.

## 3. இரசத் தயிலம்

சூலினி பற்ப ணம்பிம்பி மூப்பன்னந் தொடிகளைந்தைந்
தாலினிக் கந்தங் கஃசிட் டிடிமுத் தவிப்படிசேர்
கோலி னிருமித்த மூழிய ளாவிக் குடிகஃசுண்
மேலினி ரைத்த நுணுக்காய்க் கிரந்தி விரணங்களே. 503

விரண மடர் படர் தாமரை பாமை வெடிப்புணினஞ்
சரண முறுப்பங்கை யாங்கரும் புள்ளி சதுமணிநோய்
கரணமி லாஞ்சன மேகக் கசிவுகண் டத்தலங்கற்
கிரண முறுமிர தத்தெண்ணெய் யீதுப்பிற்
கெஞ்சினுமே. 504

வெற்றிலை, பாவட்டையிலை, கோவையிலை இவைகள் வகைக்கு 5 பலம் தனித்தனிக் கற்கமாக அரைத்துக்கொண்டு, அடிகனத்த சட்டியிலே சுத்தித்த இரசம் ¼ பலம் விட்டு, கற்கங்களைச் சிறிது சிறிதாகச் சேர்த்து, இரசம் மடியும்படி மரமத்திட்டுக் கடைந்து, பிறகு சிற்றாமணக்கு நெய் படி சேர்த்து நன்றாகக் கலந்து, சட்டி வாய்க்குத் துணி கட்டி சூரிய ஒளியில் 3 நாள் வைக்கவும்.



கால் பலம் வீதம் காலையில் மாத்திரம் அகப்பையினால் முகந்து 3 நாள் கொடுத்து, உப்பில்லாப் பத்தியம் வைக்க நுணுக்காய் கிரந்தி, இரணம், நெருங்கிய படர்தாமரை, சிரங்கு, வெடிப்புண், கால், உடல், கை இவைகளில் உண்டாகிற கரும்புள்ளி நோய், சதுமணி நோய், லாஞ்சனநோய், மேகக்கசிவு, கண்டமாலை இவைகள் தீரும்.

## 4. உழுந்துத் தயிலம்

வெற்பாமணி மாடம்படி யேகம்புன ஞன்காம்
விளையுங்குடி நீரொன்றிறு வெண்மைச்சுதை யிஃதே
நற்பாலக நேயஞ்சரி காலிப்பறழ் மிசிமா
நறவந்திரி கடுசீவனி மதுரஞ்சசி வசைகோ
முற்பாலிழை யேகம்பட வேயொவ்வொரு நிட்க
மொழியிங்கிவை யாவும்விர வித்தீயெரி வடிநெய்
நெற்பானையு ளோரைந்திரு நாளும்புட மிடுமே
னிகழ்கின்றபின் ஞளிற்புரி நெறியும்புக லுதுமே. 505

### மகிமை

புகலுமாடத்தி னெய்யைப் புகலவை யவத்தும்பூசி
யிகலுறப் பிடிக்கின் மூர்த்தத் தெழுங்கம்பங் கரத்தின்கம்ப
மகலுமீ துண்மை யப்பியங் கஞ்செய்யிற் செவிடுண்ணுக்கு
மகலுமிச் சாப்பத்யதோ டாடொரு வருடநாளே. 506

ஒரு படி உழுந்தில் நான்குபடி நீர்விட்டு ஒரு படியாகக் குறுக்கி, அத்துடன் எண்ணெய் 1 படி, வெள்ளாட்டுப் பால் 1 படி சேர்த்து, பூனைக்காலிப் பருப்பு, சதகுப்பி, பெரிய அரத்தை, திரிகடுகு, வெட்பாலைப்பட்டை, அதிமதுரம், இந்துப்பு, வசம்பு இவை வகைக்கு 1 வராகனெடை மேற்படி வெள்ளாட்டுப் பாலால் கற்கம் திரளும்படி அரைத்துக் குடிநீரில் கலந்து, எரித்துப் பக்குவத்தில் வடித்து, பத்து நாள் நெற்புடம் வைத்து எடுக்கவும்.

இத்தைலத்தைப் பிடித்தைலமாகப் பயன்படுத்த தலை நடுக்கலும், கைகளின் நடுக்கல்களும் நீங்கும். இத்தைலத்தில் ஓராண்டு தலை முழுகிவர செவிடு, உண்ணாக்கு நோய் இவைகள் தீரும்.

## 5. கட்டுவாங்கத் தயிலம்

பெருமரத் துவக் கிரைந்தாம்
    பிரகுஞ்சத் தறற்றறு ரோணம்
பெய்திரு படியாகக் காய்ச்சிப்
    பின்பேணெய் புளியா ரைச்சா
றொருபடி வகைக்கூற் றெட்டோ
    டுறைத்தி நான்க ளாவி
யோமமிச் சிங்கம் பாதி
    குடசத்தோற் கழற் பருப்பு
மாநிசி சிகரஞ்சுக்கு மாதிரி
    கோட்டஞ் சாய்வில்
வக்கனி காட்டாத் திப்பூ
    மார்ச்சாலஞ் சடிலை வீரை
யொருபதோ டேழுந் தூளா
    யொவ்வொன் றரைக் காற்பலஞ்சேர்த்
துறவட்டுண் கிரகணித்துன்
    பொழிகட்டு வாங்கமீதே. 507

பெருமரத்துப் பட்டை 10 பலம், நீர் 8 படி சேர்த்து நாலில் ஒன்றாகக் காய்ச்சி வடித்து, அதில் எண்ணெய், புளியாரைச்சாறு வகைக்கு 1 படி, ஏட்டுத்தயிர் 4 படி சேர்த்துக் கலந்து, ஓமம், விலாமிச்சம், பெருங்காயம், திப்பிலி மூலம், வெட்பாலைப் பட்டை, கழற்சிப் பருப்பு, மரமஞ்சள், இலவங்கம், சுக்கு, அதிவிடயம், கோட்டம், கோரைக் கிழங்கு, வில்வப்பழத்தசை, காட்டாத்திப்பூ, பூனைக்காஞ் சொறிவேர், சடாமாஞ்சில், வட்டத்திருப்பி இவை வகைக்கு



¼ பலம் இடித்துப் பொடித்து வடிகட்டிக் குடிநீரில் சேர்த்துப் பாகமாகக் காய்ச்சி, அளவுப்படி கற்கத்துடன் உண்ணக் கிரகணி நோய்கள் தீரும்.

## 6. கணத் தயிலம்

சிறியமுத் தந்தருநெய் யமிழ்திளங்
    குமரிபொற் றேகரா சம்பிம்பிநற்
றேவரூ ராம்மிலை பலகண்டுகற் பூரவலி
    செப்புநவ முதலுபயமு
மறியளவொவ் வொருபடிபி னேழிரத
    மும்பிழிந் தரையரைப் படியூற்றதி
லக்கிரா காரமில வங்கவுரி யவ்விலை
    கதாகுவய மேதிசிங்கி
நறியசோம் பசையமிர்தை மாசைசா
    திப்பன்ன நற்குலக் காய்முளுன்கி
னவிலந்த மொருகழஞ் சாமற்றை
    யுபமுபந யத்துகளி டெரிதுவிதியை
வெறியிரத் தந்துவி வகைக்கொரு
    கழஞ்செடை விளாவியடு கடநடுவிடா
மேன்முடி யைம்பகற் சுத்தித் தெடுத்திடுற
    மிகுகணத் தைலமிஃதே. 508

### மகிமை

கணத்தைலங் கஃசமிழ்திற்
    கலந்ததிகா லையிலருத்த
வணத்தடர்வெண் மையுங்கணவெட்
    டையுமதிலுண் டாஞ்சுரமுந்
தணத்தருமெய் யுணத்தலும்பாற்
    சர்த்திமந்தங் கிரந்திகளு
மணத்தமுலைப் பாலருந்து
    மைந்தருழி வாராவே. 509

சிற்றாமணக்கு எண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி, கற்றாழை, பொற்றலைக்கையான், கோவை, பொன்னாங் காணி, புளியாரை, வெங்காயம், கற்பூரவள்ளி இவைகளின் சாறு வகைக்கு ½ படி ஒரு பாத்திரத்தில் சேர்த்து, அதில் அக்கிராகாரம், இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி, கோஷ்டம், வெந்தயம், கற்கடகசிங்கி, சோம்பு, சீரகம், பூண்டு, மாசிக்காய், சாதிபத்திரி இவை வகைக்கு 2 கழஞ்சு, சாதிக்காய் 1 கழஞ்சு இவை இடித்துப் பொடித்து, மேற்படி எண்ணெயில் சேர்த்துக்காய்ச்சி வடிகடத்தில் கோரோசனை, குங்குமப்பூ இவைகளைப் பொடித்துச் சேர்த்து, தைலத்தை வடித்து 5 நாள் நெற்புடத்தில் வைக்கவும்.

¼ பலம் தைலத்தை வெதுப்பி முலைப்பால் கலந்து காலை நேரத்தில் போதுமான நாள்வரை கொடுக்கக் குழந்தைகளுக்கு உண்டாகும் அண்ணத்தின் வெளுப்பு, கணவெட்டை, வெட்டைச் சுரம், உடல் உலர்தல், பால்வாந்தி, மாந்தம் கிரந்தி இவைகள் தீரும்.

## 7. கந்தகச் சுடர்த் தயிலம்

தயிலங்கேள் கந்தகமும் வெடியுப்புஞ் சிலையும்
தருவாகப் பலமொன்று பொடிக்கும் போது
அயிலமென்ற நவாச்சாரம் வீரந் தானும்
அப்பனே யரைக்கழஞ்சு கூடப் போட்டு
ஒயிலாகப் பலநாலு பசுவின் வெண்ணெய்
உத்தமனே கல்வத்தில் விட்டு ஆட்டித்
தயிலமப்பா முன்போல சுடர்த்தயிலம் வாங்கித்
தருவாகப் பீங்கானிற் பதனம் பண்ணே. 510

பண்ணியே பணவெடைதா னந்தி சந்தி
பத்துநாள் சர்க்கரையிற் கொள்ளும் போது
உண்ணவே பத்தியமோ இல்லை கண்டாய்
உத்தமனே தீருகிற வியாதி கேளு



நண்ணவே குஷ்டசொறி விரணம் வெள்ளை
நலமான கருமேகம் வாதவாய்வு
திண்ணவே கயரோகங் குன்மங் கூடத்
தீருமடா இன்னமொரு செய்தி கேளே. 511

கந்தகம், வெடியுப்பு, மனோசிலை வகைக்கு ஒரு பலம்; நவாச்சாரம், வீரம் வகைக்கு 20 குன்றிமணியெடை; பசுவின் வெண்ணெய் 4 பலம், இவைகளை முறைப்படி சுத்தி செய்து, தனித்தனியாகப் பொடித்து மனோசிலை நீங்கலாக மற்றவைகளைக் கலந்து வெண்ணெய்சேர்த்தரைத்து, கடைசியில் மனோசிலைப் பொடியையுஞ் சேர்த்தரைத்து, துணித் துண்டில் தடவி, திரியாகத் திரித்து, நெய் விளக்கேற்றி, திரிகளைக் கொளுத்தி சுடரடியில் ஒரு பீங்கானைப் பிடிக்கத் தையிலம் துளித்துளியாகச் சொட்டும். இவ்வாறே எல்லா மருந்தும் முடியுமட்டும் செய்யவும்.

தைலத்தை 3½ குன்றிமணியளவு சர்க்கரையிற் காலை மாலை இருவேளையாக 10 நாள் பத்தியமின்றிக் கொள்ள குஷ்டம், சொறி, இரணம், வெள்ளை, கருமேகம், வாதம், கயம், குன்மம் இவைகள் தீரும்.

குறிப்பு:-மருந்தளவு 1 முதல் 2 குன்றிமணியளவு வரையும். பத்தியம்; உப்பு, புளி நீக்கியதாக இருந்தாலும் நலம். இவ்விதி இக்காலத்துப் பழக்கத்திலுள்ளது.

## 8. கரப்பான் தயிலம்

பூரந் துடியிரு துத்தஞ் சசிசுசி போகிமிரு
தாரங் கடிநிசி நீர்முத்தங் காட்டசை சத்தியெல்லெண்
சேரங் கிளமரை நிட்கம் பொடிபடி தெங்குறும்பால்
வாரங்கி வைத்துநெய் வாங்கக் கரப்பனும்
வாங்குமன்றே. 512

இரசக்கற்பூரம், ஏலரிசி, மயில்துத்தம், பால்துத்தம், கர்ப்பூரம், இரசம், கார்போகரிசி, மிருதார்சிங்கி, கத்தூரி

மஞ்சள், நீரடிமுத்துப் பருப்பு, காட்டுச் சீரகம், கந்தகம் ஆகக்கூடி 12 சரக்குகளும் வகைக்கு ½ வராகனெடை. இவைகளைப் பொடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு, அதில் தேங்காய்ப்பால் 1 படி ஊற்றிக் கலக்கிச் சிறுதீயிலெரித்து வடிக்கவும். இதனைக் கோழி இறகினால் கரப்பான் உள்ள இடங்களில் தடவி ஊற வைத்து இள வெந்நீரில் குளிக்க வைக்க நீங்கும்.

## 9. கருடன் கிழங்கெண்ணெய்

தொழிலான தொழிலொன்று விளம்பக் கேளாய்
தேர்ந்திதனைச் செய்தவர்க்கு மெத்த நன்று
வழியான கருடனுட கிழங்கு தன்னை
வயணமுடன் கண்ணிலிடு மைபோற் கொய்தே
யழியாமல் நிழலில்வைத் துலர்ந்த பின்ன
ரடைவுடனே பன்னிரண்டு பலந்தான் தூக்கு
விழியதனால் பார்த்துநன்றாய் வினவ தாக
வியல்புடனே கடைச்சரக்கைக் கூட்டு வீரே. 513

கடைச்சரக்காம் வாய்விளங்கம் வாலுளுவை யோடு
கனமான திரிகடுகு கரியசீ ரகமு மொக்க
நடையாக வகைக்கு மொரு பலமதாக
நாடியே யிடித்ததனைச் சேர்த்துக் கொள்ளு
தடையறவே யகன்றதொரு பாண்டத் திட்டுத்
தனியான விளக்கெண்ணெ யரைப்படிதான் சேர்த்தங்
கெடையான வெங்காய மிடித்துக் கூட்டி
இன்பமுட னடுப்பேற்றி யெரிப்பீர் தாமே. 514

அடுப்பேற்றித் தீயதனை மெதுவ தாக்கி
அமர்ந்து மெள்ளப் பார்த்திறக்கு புனல்தங் காமல்
கடுப்பேற்றி யனல்மெத்த மீறி நின்றால்
காய்ந்தபதம் சரியாக வரமாட் டாது



எடுத்துவிடு கைவரிசை நிதானங் கண்டிங்
கேற்கெனவே வடித்திறுத்து வைத்துக் கொண்டு
தொடுத்தபொல்லாக் கிரந்திகுட்டம் கரிமே கங்கள்
தொலையாத வெள்ளையரை யாப்புக் கென்றே 515

அரையாப்பு மேகரணம் விஷபா கங்கள்
அலைவான மேகத்தி னூரல் வெப்பு
திறையான புழுவெட்டு மலத்தின் சிக்கல்
தோராய மானதொரு நோய்க ளெல்லாம்
மறைவாகப் பதுங்கிவிடு நேர்ந்து பாரு
மலக்கட்டு வயிற்றிரைச்ச லுளிர ணங்கள்
குறையாமல் தீர்க்குமப்பா அறிந்து செய்யில்
கோடான கோடிபிணி அகன்று போமே. 516

இதற்குப் பத்தியம்.

பிணியதற்குப் பத்தியத்தில் வைத்திங் கேற்றம்
பிழையகலச் செய்வதனால் தர்ம மாகும்
அணியான வார்த்தை சொல்லிப் பணத்தைக்கேட்டு
மவர்செலவுக் கேற்றபடி செய்து கொண்டால்
மணியான வொளிமீதில் நின்ற தாய்தான்
மனமகிழ்ச்சி யாகாமல் சிரிப்பா ளப்பா
கணிதமுடன் கடும்பத்ய மாக வைத்துக்
கடந்தபின் பிச்சாபத்திய மிருக்கச் செய்யே. 517

நன்றாக முற்றின கருடன் கிழங்கைத் தோல்நீக்கி நிழலில் உலரவைத்தது 12 பலம்; வாய் விளங்கம், வாலுளுவை, திரிகடுகு, கருஞ்சீரகம் வகைக்கு ஒரு பலம்: இவைகளைப் பொடித்து ஒரு பாண்டத்தில் சேர்த்து, அத்துடன் சிற்றாமணக்கெண்ணெய் ½ படி சேர்த்து, வெங்காயம் 12 பலம் இடித்துச் சேர்த்து, அடுப்பேற்றி மெல்ல எரித்துப் பக்குவத்தில் வடிக்கவும்.

இதனை அளவுப்படி கொடுத்து கடும்பத்தியம் வைக்கவும். மறுபத்தியத்தில் இச்சாபத்தியமாக இருக்கச்செய்யவும். இதனால் கிரந்தி, குட்டம், கருமேகம், தீராவெள்ளை, அரை

யாப்பு, மேகரணம், விஷபாகம், மேகஊறல், வெப்பு, புழு வெட்டு, மலச்சிக்கல், வயிற்றிரைச்சல், உள்ரணங்கள் இவைகள் தீரும்.

## 10. கழற்சித் தயிலம்

கழலடியஞ் சலியைந்தம் பாறுபடி
யேற்றழற்கே கங்காண் டத்துட்
கண்ணிபற ழைந்துமிது னந்துவைத்திட்
டேரண்டங் கான்ற நேயம்
விழலடியெண் டொந்தமுண ராஞ்சிமதுஸ்
மிகிதோகை விளங்க ழற்காய்
மெல்லிலவங் கத்துரியுந் தனித்தனிக்கங்
கஷ்டமிகை வெவ்வே ருகத்
தழலடி யுருதுவெதுப் பிப்பரா
கம்புரிந்தத் தாளி சேர்த்தச்
சரணநலி லாக்கிவடி சுத்திரே
சகம்பூரந் தாக்க தற்குட்
சுழலடியாந் திரமருத்தும் பீஜமருத்
தும்மவற்றின் சுரப்பு நோயுந்
துவிதாங்க சப்ததா துக்களிற்கட்
டுங்கனப்புஞ் சுடரலாமே. 518

அருந்தும் முறையும் பத்தியமும்.

வச்சிரபீஜ நெய்யை மார்த்தாண்ட னுதயந் தன்னில்
வெச்செனவெதுப்பி யஷ்டமிகைப் பலம் பாலாகக்கொள்
வைச்சநாள் மூன்றைந் தேழா மணப்புளி நிஷ்பாவத்தோ
டுச்சித முருங்கை யாகு முறையிச்சா பத்திய மென்றே 519

அரைவீசை கழற்சிவேர்ப் பட்டையை இடித்து, ஒரு பாத்திரத்தில் சேர்த்து, நீர் 6 படி விட்டு, அடுப்பிலிட்டு ஒரு படி குடிநீராகக் குறுக்கி, அதில் கழற்சி இலைக்கற்கம் 5 பலம்



கழற்சிப் பருப்புக் கற்கம் 2 பலம் சேர்த்துக் கரைத்து, சிற்றாமணக்கு நெய் 1 வீசை சேர்த்து, பிறகு ஏலரிசி பறங்கிப் பட்டை வால்மிளகு சன்னலவங்கப்பட்டை வகைக்கு ½ பலம் இடித்துப் பொடித்து மேற்படியில் சேர்த்து, அடுப்பிலிட்டுச் சிறு தீயாக கழற்சி வேரால் எரித்து வடித்து, அதில் சுத்தித்த வாளப்பருப்பு ½ பலம், சுத்தித்த ரசக்கற்பூரம் ½ பலம், இவைகளை அத்தயிலத்தால் மைபோலரைத்துக் கலக்கவும்.

அளவு,—¼ முதல் ½ பலம். உபயோகிக்கும் முறை:—அனலில் வெதுப்பிக் காலையில் உட்கொள்ளவும். தீரும் நோய்:—அடிக்குடலில் பற்றிய வாயு, விதைவாய்வு, விதை வீக்கம், கீல்வீக்கம்.

நாளளவு;—நோய்க்கும், உடல் வன்மைக்கும் தக்கவாறு 3, 5 அல்லது 7 நாட்கள், பத்தியம்; இச்சாபத்தியம். பழையபுளி, அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சும் ஆகும்.

## 11. காதுநோய்த் தயிலம்

விளங்கவே காதிலுள்ள நோய்களுக்கு
விதமான மரமஞ்சள் வெள்ளைப் பூண்டு
அளங்கவே சுக்கோடு வலம்புரிக்காய்
அடைவான கரியசீ ரகதிதி னேடு
முழங்கவே நண்டிறைச்சி நத்தை யோடு
முசுறுமுட்டை கருங்கோழி முட்டை யோடு
புழங்கவே யிவையெல்லாம் விராக ளென்று
புதுமையிலைக் கள்ளிபுனல் முருங்கைச் சாறே 520

சாறென்ன வகைக்குவகை படிதான் வீசம்
சார்வான பசுவின்னெய் படிதான் காலும்
வாறென்ன வேப்பெண்ணெய் படிதான் காலும்
வளமாக விட்டெரித்துக் காதி லூற்றப்

பாறென்ன பஞ்சு கொண்டு மூடச் சொல்லு
பாங்காக ஈராறு நாள் தான் வாரு
கூறென்ன காதிலுள்ள வியாதி யெல்லாங்
குணமாகும் போகருட கடாட்சந் தானே. 521

மரமஞ்சள், வெள்ளைப்பூண்டு, சுக்கு, வலம்புரிக்காய், கருஞ்சீரகம், நண்டு இறைச்சி, நத்தை இறைச்சி, முசுறு முட்டை, கருங்கோழி முட்டை மஞ்சட்கரு, இவை வகைக்கு 1 வராகனெடை, இலைக்கள்ளி, புனல், முருங்கைப் பட்டை இவைகளின் சாறு வகைக்கு 1/16 படி, பசுவின் நெய் ¼ படி, வேப்பெண்ணெய் ¼ படி இவைகளைச் சேர்த்துப் பக்குவ பாகத்தில் எரித்து வடித்து, செவி நோய்களுக்குச் செவியில் விட்டு பஞ்சுகொண்டு அடைக்கவும். இவ்வாறு 12 நாள் செய்ய, காதில் வரும் நோய்கள் எல்லாம் தீரும்.

## 12. கையான் தயிலம்

தேகரா சச்சுரதந் தில்லியநேர் நேர்கூட்டிப்
பாகமுறக் காய்ச்சிப் பருகுவார்—காகமுணுங்
காசத்தைக் காணுரக் காசமுற்று ரிப்பிருங்க
ராசத்தைக் காணுர் நவில். 522

கரிசாலை இரசம், எண்ணெய் சமஅளவு சேர்த்து பாகத்திற் காய்ச்சி, அளவுப்படி உண்ண, சளியைத் துப்பச் செய்கின்ற இருமல் நோய் போகும்.

## 13. சித்தாதி எண்ணெய்

சீர்சிறந்த உடல்தனிலே கவிசை ரோகஞ்
சிரசுகளிற் குடியிருந்த மற்ற ரோகம்
பார்தனிலே விழுந்தெழுந்த சூலை ரோகம்
பம்பரம்போ லாடுகின்ற வீராம்பற் கட்டி
வீரிழிந்த கற்கூடு நிர்மலத்தின் கட்டு
நேரான சொறியோடு ரணங்கள் தானும்
பேர்பெரிய பெரும்பாடு நாவ டைப்பு
பின்னுமொரு கிரந்தியோடு மேகந் தானே. 523



தானென்ற தலையிடிகள் வாயிற் புண்ணுந்
தளம்புகின்ற கண்ணெரிவு ஊது வாய்வும்
ஊனென்று உயிரெழுந்து குடி போகாமல்
உத்தமனே எண்ணெயொன்று வுரைக்கக்கேளு
வேனென்ற காயமொடு உள்ளி வாளம்
விரும்பியே வெண்காரங் காட்டெருமைப் பாலுங்
கானென்ற கடுக்காயு மிந்துப் பாகுங்
கறுத்ததொரு சீரகமுந் திப்பிலியுஞ் சேரே. 524

சேரேநீ தினுசுக்கு ஓர்க ழஞ்சு
சேகரமாய் வாளமொடு பலமொன் றாகும்
காரேநீ உள்ளிச்சேர் கணக்காய் வாங்கு
கடுக்காயு மப்படியே வாங்கு வாங்கு
சீரேநீ சித்தண்ட வெணெய்சே ரெட்டாம்
சிறப்பாகத் தேங்காய்ப்பால் சேரெட் டாகும்
வாரேநீ வேலிபருத் திச்சா றுந்தான்
வகையுடனே சேரெட்டு வாங்கு வாங்கே. 525

வாங்குவாய் கண்டதொரு சரக்கை யெல்லாம்
வகைவகைக்கு ஓர்கழஞ்சு மைந்தா கேளு
பாங்குடனே கலுவமிட்டு மைபோ லாட்டி
பாலகனே பாண்டத்திற் பால்சா றெண்ணெய்
தேங்கியே சரக்கையெல்லாங் குழப்பிக் கொள்ளு
தயங்காமல் வேகமுள்ள விறகால் நீயும்
சாங்கமாய் தீமூட்டு சட்ட மாக
சம்பிரமுடன் வெந்திறக்கச் சரிசொல் வேனே. 526

சொல்லுவேன் யெண்ணெய்தனைத்தொட்டுப்பார்த்தாற்
சுந்தரனே சுத்தஜலம் போலி ருக்கும்
மல்லுவேன் மறுபாண்ட மிறுத்துக் கொள்ளு
மைந்தனே உண்பதற்கோ கழஞ்சு யெண்ணெய்

வெல்லுமே பறக்குமடா ரோக மெல்லாம்
வேகமென்றே சிறங்குமுதல் விரண்டு ஓடும்
அல்லவே தொட்டிட்டால் பசாசு போகும்
அப்பனே அழலையென்ற தாகம் போமே. 527

போமேதான் விக்கல்சத்தி குன்மம் போகும்
புத்தியுள்ள புலத்தியனே கவசை போகும்
போமேதான் கிரந்தியரை யாப்புப் போகும்
பொல்லாத பொருமலோடு பயித்தியம் போகும்
போமேதான் சூலையொடு பறங்கிப் புண்ணும்
பொல்லாத உட்கவுசை விக்கல் தானும்
போமேதான் நாவடைப்புக் கெர்ப்ப சூலை
போகுமடா வலியுந்தான் பறந்து போமே. 528

தானுமே காதடைப்பு வயிற்றில் ரோகம்
தாங்காது கண்ணெரிவு பூச்சி வெட்டு
வானுமே மயங்குமடா குன்ம மெட்டும்
வகைகெட்டு சூதகத்தின் வெட்டை போகும்
நானுமே கிரந்திமா மிசங்க ளெட்டு
நசித்திடவே கலங்குமடா பவுத்ர ரோகம்
பாருமே யின்னூலைச் சித்தர் கூடி
பட்சமுடன் மகிழவே பேரிட்டாரே. 529

பேரிட்ட சித்தாதி யெண்ணெய் தன்னை
புலத்தியனே பூசைசெய்து பூரணமாய் வாங்கு
நேரிட்ட சிறியோர்க்கும் பெரியோர்க்கு மாகும்
நிலைமையாய் அவபத்தியங்கள் நீகூட் டாதே
வாரிட்ட விந்நூலை வெளியி டாதே
வாங்காதே தோடத்தை வாங்கி டாதே
காட்டிட்ட பண்டிதங்கள் கருத்தாய்ப் பார்த்து
சண்டுகொள்ளு இவ்வெட்டுங் கடாட்ச முற்றே. 530



பெருங்காயம், வெண்காரம், சதுரக்கள்ளிப்பால் (காட்டெருமைப் பால்), இந்துப்பு, கருஞ்சீரகம், திப்பிலி இவை வகைக்கு 1¼ வராகனெடை, நேர்வாளம் 1 பலம், வெள்ளைப் பூண்டு 1 சேர், சடுக்காய் 1 சேர், சிற்றாமணக்கு நெய், தேங்காய்ப்பால், வேலிப்பருத்திச் சாறு இவை வகைக்கு 8 சேர். சரக்குகளை கல்வத்திட்டு மேற்படிச் சாற்றால் நன்றாக அரைத்துக் கலக்கிச் சிறு தீயில் காய்ச்சி இறக்கவும்,

மூன்று முதல் ஐந்து துளி நிசித் தண்ணீரிலேனும், சோம்புக்குடி நீரிலேனும் கொடுக்கப் பேதியாகும். மிகுதியாக பேதியாகின் சீரகக் குடிநீர், பழ இரசம், மோர் இவை கொடுக்கப் பேதி நின்றுவிடும். அதிலும் பேதி நிற்காவிடில், வசம்பைச் சாம்பல் செய்து சீரகக் குடிநீரில் கலந்து கொடுக்கப் பேதி நின்றுவிடும்.

கவிசை, தலைநோய்கள், சூலை, நீராம்பல், கட்டி, மலக் கட்டு, சொறி, இரணம், பெரும்பாடு, நாவடைப்பு, கிரந்தி, மேகம், வாய்ப்புண், கண்ணெரிவு, ஊது வாய்வு, தாகம், விக்கல், சத்திகுன்மம், அரையாப்பு, பொருமல், பைத்தியம், பறங்கிப்புண், சூதகவாய்வு, வலிப்பு வாய்வு, காதடைப்பு, வயிற்றுநோய், பூச்சிவெட்டு, எண்வகைக் குன்மம், சூதக வெட்டை, நெறிவீக்கங்கள், பவுத்திரம் இவைகள் தீரும். இதற்குப் பத்தியம் மோரும் சோறும்.

## 14. சித்திரமூலத் தயிலம்

கருதுகின்ற கொடிவேலி பலந்தா னென்று
கற்றாவின் பாலைவிட் டரைத்துக் கொண்டு
சுருதிபெற நல்லெண்ணெய் படியி லிட்டுச்
சுகமாக மெழுகுபதந் தன்னில் வாங்கி
நிருதியென்ற தலையிலிட்டு முழுகும் போது
நெறியோடே யிடித்தவிடி மண்டைக் குத்து
பருதிகண்ட பனிபோலப் பறக்கு மப்பா
பண்பாக வின்னமொன்று பகரக் கேளே. 531

ஒரு பலம் கொடிவேலி வேர்ப்பட்டையை பசுவின் பாலில் விட்டு நன்ருக மைபோல் அரைத்து, ஒரு படி எண்ணெயில் இட்டு மெழுகு பதத்தில் காய்ச்சி வடித்து முழுக, மண்டையிடி சூரியனைக்கண்ட பனிபோல் விலகும்.

## 15. சீரகத் தயிலம்

அசைத்தொடி யொன்றெண்ணெய் யரைக்குளகம் பாண்டத்
திசைத்தொடியக் காய்ச்சி யிறுத்தா-டசைத்தொடியத்
தள்ளும்பித் தக்கிச்சூர் சர்த்திதலை நோயலச
மள்ளும்பித் துக்கொள்ளு மால். 532

சீரகம் 1 பலம், எண்ணெய் 1 படி, இவைகளை ஒரு பாண்டத்தில் சேர்த்து, சீரகம் ஒடியும் பக்குவத்தில் காய்ச்சி வடித்து மூழ்க பித்த மயக்கம், கண்ணோய், வாந்தி, தலை நோய், மந்தம், அள்ளுநோய் இவைகள் தீரும்.

## 16. சுக்குத் தயிலம்

சீரமிர்த மூடுவிட மஃதையவ் விடமறச்
சீவுதறி முட்டி யெண்பான்
சேராற் றறற்கடன தட்டமதி லொன்ருய்ச்
சிறுக்கிவிடு திலநெய் யமிர்தம்
வாரநீர்க் கரையரை யரத்தைமுக் கடுமுஸ்தை
மஞ்சிட்டி முப்ப லமகில்
வரிவரி யெருக்கடி குலாதினி கதாகுவயம்
வலிவன்னி தாரு சந்தம்
காரமூறு தேவதூ பஞ்சமிகை தலரூப
கத்தாதி லொத்து கத்தோல்
கர்ச்சூர் பலோத்தமையோ டிந்துகத் துரிகாஸ்
மீரமிரு பத்தா றையு



மாரநுண் டுகள் புரிப தப்பலமெண் ணெய்பிலிட்
டந்தச்ச ரக்கி ரண்டு
மடியிலிடு கலகசத்து ளரைநிட்க மிதையெரித்
தாந்தைல மக்க டமிடே. 533

### இதன் மகிமை

கடத்திலிடு நாகரா தித்தைலஞ்
சுத்திமதி களம மிட்டாற்
காசினியி லதன்பெருமை யெமைவினவே
லதுதொழிலிற் காட்டு மாயின்
சடத்திலுறு மாவர்த்த வாதமெலாந்
துவாலையாற் றங்கா நாசி
தனிலசியம் புரிந்திடினே பீன்சமுந்
தலைநோயுந் தரியா மூர
லிடத்திலடர் காலொடுபல் லரணையுங்கொப்
பளிக்கவறு மிருசெ விக்கு
ளிருதுளிவிட் டிடக்குத்தல் விடுஞ்சிரநோய்
தோற்பைக்கு ளிட்டிட் டாற்போந்
திடத்திடுகோ ழைக்கட்டுங் குரற்கம்ம
லும்முழுகிற் றீரு மின்னுஞ்
செப்பின்மிகப் பெருகுமிதன் பத்தியமிச்
சாபத்தியந் தேர்ந்தி டாயே. 534

தோல் சீவின சுக்கு பலம் 80 ஐ துண்டு துண்டாக நறுக்கி ஓர் பாத்திரத்தில் சேர்த்து, ஆற்று நீர் 8 மரக்கால் ஊற்றி, அடுப்பிலிட்டுக் காய்ச்சி ஒரு மரக்காலாக குறுக்கி வடித்து, அதில் பசும்பால் 2 படி, எள்நெய் 2 படி சேர்த்து, சிற்றரத்தை, திரிகடுகு கோரைக்கிழங்கு, மஞ்சிட்டி, திரிபலை, தண்ணீர்விட்டான் கிழங்கு, அகிற்கட்டை எருக்கன் வேர், கடுகரோகணி, கோட்டம், கொடிவேலிவேர், தேவதாரம், சந்தனம், வெள்ளைக்குங்கிலியம், செவ்வியம், ஆமணக்குவேர், வெள்ளலத்திப்பட்டை, பேரீச்சங்காய், திராக்ஷை,

இந்துப்பு இவை வகைக்கு ¼ பலம்: கஸ்தூரி, குங்குமப்பூ இவை வகைக்கு ½ வராகனெடை: கடைசி சரக்குகள் இரண்டு நீங்கலாக மற்றவைகளை நன்றாகப் பொடித்து ஷெ எண்ணெயில் கலந்து, சிறு தீயில் எரித்து வடித்து, வடி கடத்தில் கஸ்தூரியையும் குங்குமப் பூவையும் சேர்க்கவும்; இத்தைலத்தை ஒரு பாத்திரத்தில் ஊற்றி வாய் பொருத்த மான ஓடுகொண்டு மூடிச் சீலைசெய்து, ஒரு மாதம் நெற்புடம் வைத்து எடுக்கச் சுத்தியாம்.

உடலில் உண்டாகும் ஆவர்த்த வாதம் துவாலையிடத் தீரும். நசியமிடத் தலைநோயும், பீனசமும் போம். பல்வாயு வும் பல்லரணையும் கொப்பளிக்கத் தீரும். செவியிலிட செவிக்குத்தல் தீரும். தோல்பையிலிட்டுத் தலையில் வைக்க தலைநோய் போம். மார்பில் கட்டிக்கொள்ளும் கோழை, குரல்கம்மல் இவைகள் முழுகத் தீரும். பத்தியம்:—இச்சா பத்தியம்.

## 17. சூலைகுடாரத் தயிலம்

கடுநளி கடுக்கை வில்வங் கனற்சுவா தறுப லார்த்தங்
கம்படி யிருமூன் றங்கிக் கஞ்சது ரத்தொன் றீதே
விடுமணி யவிழும் மூர்த்தி வெள்ளுள்ளி சயிந்த வம்விட
விரேசனி கடுகை யேழும் வீதத்திற் கிருக மூஞ்சா
யடுபுன விழைத்தாக் குண்மூன் றல்கல்மும் முறையுண்பத்தி
யங்கடி தெளிமை யாயு மகர்முகந் தொடிகா லாகக்
கொடுவிட வனிலச் சூலைக் குலங்குக னெதிர்சூர்ப் போலாங்
கூறுநூ லிதனைச் சூலைக் குடாரவன் றயில மென்றே. 535

கடுக்காய், வெண்சாரடை, சரக்கொன்றை, வில்வம், சித்திரமூலம், ஆடாதோடை இவற்றின் வேர்கள் வகைக்கு 1 பலம், இடித்து ஓர் பாண்டத்திலிட்டு, நீர் 6 படி விட்டு அடுப்பிலிட்டுக் காய்ச்சி 1½ படியாகக் குறுக்கிய குடிநீரில், சிற்றாமணக்கு நெய் 1½ படி சேர்த்து, திரிகடுகு, வெள்ளைப்



பூண்டு, இந்துப்பு, நேர்வாளப் பருப்பு, கடக ரோகிணி, இவை வகைக்கு 2½ வராகனெடை பொடித்து, மேற்படி குடிநீரினால் நன்றாக அரைத்துக் கலக்கி, சிறுதீயில் எரித்து வடித்து ½ பலம் வீதம் காலையில் மாத்திரம் 3 நாட்களுக்குக் கொடுக்கவும்.

பத்தியம்:—நோய் வன்மைக்கும் உடல் வன்மைக்கும் தக்கவாறு உப்பில்லாப் பத்தியமாவும் இச்சாபத்தியமாயும் வைக்கவும். இவ்விதம் 3 முறை கொடுக்க, வாதசூலை முத லாகவுள்ள சூலைநோய்க் கூட்டங்கள் எல்லாம் தீரும்.

## 18. நாசிரோக நாசத் தயிலம்

மாறுச்சி நேகபல நேயமவு தசியமுகிர்
வாங்குமய மூவட்சி நீர்
வகைவகைக் கொருபடி யிதிற்பட ரங்கஞ்ச
வளையமிரு வேர்மணநிசி
தேறுற் கனித்தவித் தேஸமுத் தக்காசு
சீரகங் கிச்சிலியடை
செங்குவளை யலர்பீரு தந்தியதி மதுரமஞ்
சிட்டிசண பககன்னிகை
நாறுப்பி லாளக மிரத்தமொரு பானெடிரு
நான்குமொவ் வொருநிட்கமா
நன்குறத் துகள்புரிந் திட்டெரித் துப்பருவ
நாடிவாடி யாடிவரவே
ஏறுத்த டைப்பீன சஞ்சோரி வீழல்பக்
கெழறிரித் தொன்றல்விழிமா
செனுநோய்க டெறுநா சிரோகநா சத்தைலம் 536
மீதிலிச் சாப்பத்யமே.

எள்நெய், பசும்பால், வழுக்கையுடைய இளநீர் இம் மூன்றும் வகைக்கு 1 படி ஓர் பாத்திரத்தில் ஊற்றி, அதில்,

சந்தனம், தாமரைவளையம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கத்தூரிமஞ்சள், தேற்றாங்கொட்டை, ஏலம், கோரைக் கிழங்கு, சீரகம், பூலாங்கிழங்கு, பச்சிலை, செங்கழுநீர்க் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, அதிமதுரம், மஞ்சிட்டி, சண்பக மொக்கு, புனுகுச் சட்டம், குங்குமப்பூ இவை வகைக்கு 1 வராகனெடை: கடைசி இரண்டு சரக்குகள் தவிர மற்றவைகளை இடித்துப் பொடித்து மேற்படியில் கலந்து, மெல்ல எரித்து, கடைசியாகக் கூறப்பட்ட குங்குமப் பூவையும் புனுகுச் சட்டத்தையும் பொடித்து வடிகடத்தில் இட்டு, தைலத்தை வடித்து மூழ்கி வர மூச்சைத் தடுக்கின்ற பீனசம், இரத்த பீனசம், பக்கு பீனசம் ஆகிய பீனச நோய்களும், மாசு என்கிற கண்ணில் வரப்பட்ட திமிர நோய்களும் விலகும்.

## 19. சகதேவித் தயிலம்

ஒருதேவ கந்தச்சா றொருபடிநெய் வெண்ணெய்
யுரைத்ததினேர் நேரஷ்டி யுயராரநாரி
யிருமூலந் தன்மூலம் பாசகுசு மம்விட் [நிட்க
டிளக்கரிஷ்டைநெய்தலொன் பானிவையொவ்வோர்
மருமாவின் பாலிழைத்துப் பதத்திறுத்தோர் கரண்டி
யயிலினுமா டினும்விழியை யடர்புகைமெய் யெரி
பொருசீர ணச்சுரமு மாதவத்தே சனியாம் [வும்
புகழ்ச்சகதே வித்தைலம் புரிவர்மருத் துவரே. 537

தேவகந்தச்சாறு 1 படி, பசுவின் நெய் 1 படி, எள் நெய் 1 படி, இவைகளை ஒன்றாகக் கலந்து, அதில் அதிமதுரம், சந்தனம், நன்னாரிவேர், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், திப்பிலி மூலம், இலவங்கம், கடகரோகணி, நெய்தற்கிழங்கு இவை வகைக்கு ஒரு வராகனெடை பசுவின்பால் விட்டரைத்து, மேற்படி சாற்றில் கலந்து அடுப்பிலிட்டு எரித்து



பதத்தில் வடித்துக் காலை மாலை பொட்டுக்கரண்டி வீதம் உள்ளுக்குச் சாப்பிட்டுக் கொண்டும், நான்கு நாட்கொரு முறை தலை முழுகிக்கொண்டும் வர, கண் புகைச்சல், உடல் எரிச்சல், தீரா சீரணச் சுரம் இவைகள் தீரும்.

குறிப்பு:—இதனை ஆணுக்கும் பெண்ணுக்கும் பித்தத் தால் உண்டாகும் பால் நிறமுள்ள மூத்திரநோய் (Leucorrhoea and Chyluria) தீர்க்க உபயோகிக்கிறார்கள். நற்பலனையும் அளிக்கிறது.

## 20. நொச்சித் தயிலம்

சிதசுரச மார்க்கவஞ் சங்குசா றடைமுட்டி
தேட்கடை பெரும்புன் முள்ளி
சிம்மமுகி பொடுதலை தமாலகி யளர்க்கமெண்
டெரிபனிரு வகையி ரதமு
மததரைப் படிகருமை யமுதெணெய் யிரண்டிரண்
டணைகடுகு பஞ்சாக் கினி
யரேணுகஞ் சவ்வியம் பூதநா சினியோம
மதிவிடைபா ரங்கி முஸ்தை
மதகரிக் கணைவச்ச கத்தண்டு லம்பரு
மரத்துரி நறுக்கு மூலம்
வாய்விளங் கங்கடுகை கொடிவேலி மதுரசை
வசம்பிரு பதிற்றி ரண்டும்
பதமுறவவ் வமுதிழை வகைக்கரை வராகனெடை
பாய்ச்சதி லெரித்து ணடைப்
பஞ்சகா சங்கயஞ் சரபமெதிர் சிங்கமாம் 538
பகருநிற் குண்டி யிஃதே.

வெண்ணொச்சி, கரிப்பான், முட்சங்கு இலை, வெள்ளைச்சார் வேளை, பேருமுட்டி, தேட்கொடுக்கிலை, பெரும் புல், கண்டங்கத்திரி, ஆடாதோடை, பொடுதலை, கீழா

நெல்லி, தூதுவளை, இவைகளின் சாறு ½ படி, வெள்ளாட்டுப்பால் 2 படி, எள் நெய் 2 படி, இதில் திரிகடுகு, சீரகம், ஏலம், காட்டுமிளகு, செவ்வியம், பெருங்காயம், ஓமம், அதிவிடயம், கண்டு பாரங்கி, கோரைக் கிழங்கு, யானைத்திப்பிலி, வெட்பாலை அரிசி, பெருமரப்பட்டை, திப்பிலிக்கட்டை, வாய் விடங்கம், கடகரோகணி, கொடிவேலிவேர்ப்பட்டை, பெருங்குரும்பை, வசம்பு, இவைவகைக்கு ½ வராகனெடை: இவைகளை வெள்ளாட்டுப் பாலால் மைபோல் அரைத்து அதில் கரைத்துக் காய்ச்சி பதத்தில் வடித்து காசளவு உள்ளுக்கும் சாப்பிட்டு, முறைப்படி தலைமுழ்கியும் வர 5 வகை காச நோய்களும், கயமும் தீரும்.

## 21. நொச்சித் தயிலம்-வேறு

ஒருபடி நோச்சிச் சாறோ டொப்பெண்ணெய் சடையைந்து
திரிகடுகு சிங்கி குஷ்டந் தேக்குமுப் பலைவியாக்கிரி [ப்பு
யொருபதினாறுஞ் சேர்த்தட் டொவ்வொரு கஃசாடுண்ணில்
திரிகபங் கடுப்பு மேகுஞ் சிறியநிற் குண்டி யீதே. 539

நொச்சியிலைச்சாறு 1 படி, எண்ணெய் 1 படி, இவைகளை ஒரு பாத்திரத்தில் சேர்த்து, அதில் சடாமாஞ்சில், கல்லுப்பு, வளையலுப்பு, பூநீறு, வெடியுப்பு, அட்டுப்பு, திரிகடுகு கற்கடக சிங்கி, கோஷ்டம். சிறுதேக்கு, முப்பலை, கண்டங்கத்திரி வேர், இவை வகைக்கு ¼ பலம்; இவைகளை மேற்படி சாற்றில் அரைத்துக் கரைத்து அடுப்பிலிட்டுப் பக்குவத்தில் எரித்து வடித்து, அளவுப்படி உள்ளுக்குஞ் சாப்பிட்டு மூழ்கியும் வர திரிகபங்கள் என்று சொல்லப்பட்ட காச, சுவாச, க்ஷயம் மூன்றும், உடற்கடுப்புந் தீரும்

## 22. பீனசத் தயிலம்

எண்சுரசஞ் சாலையிம்மூன் றிரத
மொன்றிற் கிருபடிகா ணிந்தரத்தை
யுண்சரமா மணக்குடசந் தகரமதகங்
கோட்ட முதக சுத்தி



யண்சதபுட்பிகைவிளங்க மதுரமுன்னுன் கரைப்பலம்
வெள்ளைப்பா லாட்டட்
டெண்சதுநாட் கொருமுழுக்கு நசியமுஞ்செயப்
பீனசநோய்க் கியமன் மன்னே. 540

எண்ணெய், நொச்சிச்சாறு, கரிசாலைச்சாறு இவை வகைக்கு 2 படி, இந்துப்பு, சிற்றரத்தை, திப்பிலி, ஆமணக்குவேர், குடசப்பாலைவேர், கிரந்திதகரம், சுக்கு, கோட்டம், தேற்றான்கொட்டை, சதகுப்பை, வாய்விடங்கம், அதிமதுரம், இவை வகைக்கு ½ பலம்; வெள்ளாட்டுப் பாலால் அரைத்து மேற்படிச் சாற்றில் கரைத்து அடுப்பில் ஏற்றிக் காய்ச்சி, பக்குவத்தில் வடித்து, 8 நாட்களுக்கு ஒருமுறை மூழ்கியும், 4 நாட்களுக்கு ஒரு முறை நசியம் செய்தும் வர, பீனச நோய்கள் தீரும்.

## 23. கலிங்காதித் தயிலம்

வாருகச்சா றீருளிச்சா றருணச் சாறு
வரைநிம்பச் சாறுவர்த்த மான நேயஞ்
சேருகச்சா வளவனலூற் றைந்து மட்டத்
தின்மூன்றங் குப்பகற்றிச் சேர்காலாக
வாருகசா ருந்தனத்தார்க் கிதுக லிங்க
மாத்தைல மலடொழிக்கு மாதாந் தச்செந்
நீருகக்சா டாவிரத்த குன்மம் போக்கு
நிலைமலட்டுப் புழுக்களையு நீக்குங் காணே. 541

வரிக்குமட்டிச்சாறு, வெங்காயச்சாறு, எலுமிச்சம்பழச் சாறு, மலைவேப்பிலைச் சாறு, சிற்றாமணக்கு நெய் இவை வகைக்கு கச்சா 1 படி: இவைகளை சேர்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்து, பருவப் பெண்களுக்கு மாதவிடாய் காலத்து 3 நாட்களிலும் காலையில் மாத்திரம் ¼ சேர் தயிலத்துடன் சேர் நீராகாரம் சேர்த் ½ துகி குடிக்க வைத்து, உப்பில்லாப்

பத்தியம் வைக்க, மலட்டு நோய்கள் தீரும். இரத்த குன்மம், மலட்டுப் புழு ஆகிய இவைகளும் தீரும்.

## 24. மாந்த எண்ணெய்

முத்துக் கிருதமு மீயச் சுரதமு
மூட்டெரி யொன்றிரண் டாம்படி முற்பரு
வத்துக் கருநிறச் சீரக மோர்தொடி
மாவிட்டளாவி மயனத் தொருகல
சத்துக்கு ளேநல் லுரோசனை நிட்கந்
தனையிட் டிறுத்துவை சந்ததி யைத்தொட
ரெத்துக்க மாந்தப் பிணியுங் கபங்களு
மிந்திர விற்செய லென்ப ரறிஞரே. 542

சிற்றாமணக்கு நெய் 1 படி, ஈயக்கொழுந்து சாறு 2 படி ஒரு பாத்திரத்தில் சேர்த்து சிறு கொதியாக கொதிப்பித்து, சாறு சுண்டியதும் கருஞ்சீரகம் 1 பலம் இடித்துப் போட்டுப் பக்குவத்தில் காய்ச்சி வடிகடத்தில் கோரோசனம் ஒரு வராகன் எடை பொடித்துப்போட்டுத் தைலத்தை வடித்து குழந்தைகளுக்குக் காலையில் ¼ பலம் வீதம் கொடுத்து தாய்க்குப் பத்தியம்வைக்க மாந்தங்கள், கபநோய்கள் தீரும்.

## 25. சிறு மாந்தத் தயிலம்

ஆமண்டத் தவிப்படியொன் றறுகுதிரி
நிசியுசிலத் ததளிண் டைந்தும்
போமண்டத் தனுவினரை வகைக்கிரண்டு
பலங்கலிங்கப் பொடித்துண் டிட்டே
தீமண்டச் சதுக்கனியுஞ் சிவக்கில்வடி
யொருகஃசாச் சேய்க்கூட் டுள்ளே
தாமண்டத் தலஜமுமென் மாந்தமுமிற்
சிறுமாந்தத் தயில மீதே. 543



சிற்றாமணக்கு நெய் 1 படி, அறுகம்புல், வெள்ளைப் பூண்டுத்திரி, மஞ்சள், உசிலம்பட்டை, ஈயக்கொழுந்து, இவை வகைக்கு 2 பலம், நன்றாக இடித்துப் பொடியாக்கி, நான்கு குமட்டிக் காய்களை நறுக்கி அதில் போட்டு எரித்து, அத்துண்டுகள் சிவந்த பதத்தில் வடித்து குழந்தைகளுக்கு காலையில் ¼ பலம் கொடுக்க, எண மாந்தம், அலசம் மற்ற மாந்த ரோகங்கள் முதலியவை தீரும்.

## 26. மிளகாய்த் தயிலம்

வாரேநீ யின்னமொன் று சொல்லக் கேளு
வளமாக துலாமிளகாய் நிறுத்துப் போடு
சேரேநீ தூணிநீ ரெட்டொன் றாக்கிச்
செப்பமுடன் மண்சட்டி தனிலி றுத்து
காரேநீ எள்ளெண்ணெய் நாழி விட்டுக்
கனிவாக மிளகுபல மரைத்து போடு
தீரேநீ மெழுகுபதந் தனில்வ டித்து
தீர்க்கமாய் முழுகிவரப் பலனைக் கேளு. 544

கேளேநீ நீர்ச்செரிப்பு திமிரு வாதங்
கெணிதமாய்ச் சோகையொடு மண்டைக்குத்து
வீளேநீ மேல்வலிகள் சூலை நோயும்
விதமான புடைசூலை மேக வாயும்
பாளேநீ சொறிசிரங்குந் தீரும் பாரு
பண்பான காதடைப்புக் காது குத்து
சூளேநீ யிவையிவைக ளெல்லாந் தீருஞ்
சுகமான போகருட கடாட்சத் தாலே. 545

மிளகாய் 1 துலாம் (100 பலம்) நீர் 1 தூணி அடுப்பிலிட்டு எட்டில் ஒன்றாகக் குறுக்கி வடித்து, எள் நெய் படி

ஒன்று அதில் சேர்த்து, 1 பலம் மிளகை அதில் அரைத்துப் போட்டு அடுப்பிலிட்டுக் காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து முறைப்படி முழுகிவர நீர்ச்செரிப்பு, திமிர்வாதம், சோகை, மண்டைக்குத்து, உடல்வலி, சூலே, புடைசூலே, மேக வாய்வு, சொறி சிரங்கு, காதடைப்பு, காதுகுத்து ஆகிய இவைகள் தீரும்.

## 27. மெருகுள்ளித் தயிலம்

முசலமுள்ளி நோநேர்நேர் முத்தவியிட் டாக்கி
லசலமுள்ளி லாக்குங்கீ லேயுங்—கிசல
மெனவாம்புண் மேக மெறும்வாத வீக்கம்
கனவாம் புளியுப்பிற் காண். 546

மெருகன் கிழங்கு பங்கு ஒன்று (தோல்சீவி துண்டுதுண்டாக நறுக்கியது), உறித்த பூண்டு 1 பங்கு, இவ்விரண்டும் சேர்ந்த எடை ஆமணக்கு நெய் அடுப்பிலிட்டுக் காய்ச்சி இரண்டு சரக்குகளும் சிவந்து மிதக்கும் பக்குவத்தில் வடித்து இத்தைலத்தை உடல்வன்மை, நோய்வன்மைக்குத் தக்கவாறு காலேயில் மாத்திரம் கொடுத்து உப்பில்லாப் பத்தியம் வைக்க கீல்வாய்வு, விரணநோய், வாதவீக்கம் முதலியவை தீரும்.

## 28. மெருகுத் தயிலம்

பருமுசலி முட்டியையம் பானசுவ கந்தியதி
பலேகோரை நாராயணி
பலமுஞன் கொவ்வொன்றி ஞுக்கைந்து மிடிதூணி
பத்தசா ரத்தட்டநீ
ரிருபடிநெய் யமுதஃ தஃதரக் கம்பொன்
றிருந்ததிப் புனலேம்பத
மிலவங்க வரியவிலே யிருதாரு கேசர
மரேணுக மரத்தைதகர



மரநிசி யகிற்சந்து ரோகணி விலாமிச்சை
மதுரமுயர் கோரோசனம்
மந்திட்டி மருண்மூல மொருபாஞே டேழாம்
வகைக்கிரு வராகனமுதா
லரையெலா மதிலிட் டெரித்திறிது கஜகற்ணி
யாந்தயில மாடல்லதுண்
ணகலருஞ் சகலசுர முங்கடற் காயமா
மாமிலமி லறிபத்யமே. 547

மெருகன் கிழங்கு 50 பலம், அமுக்கிருக் கிழங்கு, பேருமுட்டி, கோரைக்கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு இவை வகைக்கு 12 பலம் இடித்து ஒரு பாத்திரத்தில் சேர்த்து காடி நீர் 8 படி ஊற்றி இரண்டு படியாக குறுக்கிய நீரில், எண்ணெய் 2 படி, பசும் பால் 2 படி, அரக்குக் குடிநீர் 2 படி, தயிர்த்தெளிவு நீர் 1 படி, இலவங்கப்பட்டை, இலவங்க இலே, தேவதாரம், சரள தேவதாரம், சிறுநாகப்பூ, காட்டு மிளகு, பேரரத்தை, கிரந்தி தகரம், மரமஞ்சள், அகிற்கட்டை, சந்தனம், கடகரோகணி, விலாமிச்சை, அதிமதுரம், கோரோசனம், மஞ்சிட்டி, மருட் கிழங்கு இவை வகைக்கு இரண்டு வராகனெடை மேற்படி பாலால் அரைத்து அதில் சேர்த்து எரித்து, பக்குவத்தில் வடித்து முறைப்படி நெற்புடம்வைத்து எடுத்து மூழ்கிஞலும், துட்டெடை உள்ளுக்குச் சாப்பிட்டாலும், வாதவெப்பு முதலிய சகல காய்ச்சலும் தீரும்.

## 29. மேகநாதத் தயிலம்

சீர்மேவு நான்முகத்தோன் சிந்தைமகிழ்ந் தேபடைத்த
பார்மேவு மானிடர்க்குப் பண்பாக—வேர்மேவும்
மாத்திரைக ளுண்டை மருந்துபற்ப சூரணங்கள்
சேர்ந்தவெண்ணெய் லேகியங்கள் செய்வதிலே-நேர்த்தியாய்
ஆகமத்தி லுள்ளபடி யன்பாய் மதுரமுறை
மேகநா தத்தயிலம் விள்ளுகிறேன்—பாகமுடன்

புங்குபிராய் மாவிறுப்பைப் பொற்புரச ழிஞ்சியெட்டி யொதி
சங்குவழை யூழலாத்தித் தன்னுடனே—பொங்குமொழி
நூற்றாண்டின் வேம்பு நெடுங்காலப் பூவரசும்
வாற்ற நிலவிளாசி வன்வேம்பு—மீராமல்

பத்துடனே ஐந்துமவைப் பட்டைவகைகால் வீசை
[தூக்கியதை
உத்தமனே மெத்தெனவே தானிடித்து மேலவி—டுத்தபுனல்
ஊனமிலா தேகுருணி யூற்றியபின் னும்பன்முகத்
தானை வழுத்தியுத் தானமிட்டு—மானக்
குழம்பாக வெந்தபின்பு கோதுதனை நீக்கித்
தழும்பாமற் றளிதனி லூற்றிச்—செழும்பாகக்
கற்றோரே இன்னங் கருது முறையதனை
யுற்றே யுரைப்பே னுகந்துணர்வீர்—சித்தர்தொழும்
ஆடுதீண்டாப் பாளை கழற்கொடியும் வெள்ளறுகும்

தேடுசங்கன் குப்பிச் செருப்படையும்—நாடுவளர்
கொட்டைக் கரந்தை குளிர்ந்த பொடுதலையும்
கட்டாக வேழு கணத் தொகையுஞ்—சித்தரிரு
மெய்ப்பதத்தைத் தான்றொழுது வேண்டியபின் சாறதனை
வைத்தடுப்பி லேற்றி வகையாக—நந்தியெரி
சுண்டிக் குழம்பாய்ச் சுருங்கையிலே நல்லெண்ணெய்
விண்டே யிரண்டுபடி மேலவிட்டுக்—கொண்டபின்
பட்டைப் பலமிரண்டு பரிவாய்ப் பொடிசெய்து
கொட்டைபல மொன்று குமிழ்போக்கிக்—கட்டையுரல்
தன்னிலிடித் துக்கிண்டித் தாவியே தெள்ளியதை
முன்னீரி னெண்ணெயிலே மேலவிடு—வன்னியினாற்

கீழடிபற் றாமற் கிளறநன்றாய்த் தேன்மெழுகாம்
தாழ இறக்கையிலே சாற்றக்கேள்—வாழையிலை
தக்கணையும் பாக்கிலையுந் தேங்காய் பழங்கடலை
அக்கணமே வைத்தங் கவல்படைத்துப்—பக்கமுடன்
அச்சமற நோயாளிக் கந்திசந்தி நேரமுமே
கற்கமுட னெண்ணெய் கரண்டியிடு—பொற்கொடியே



கால்முடக்குக் கைமுடக்குக் கட்டிவெடி சூலையுடல்
மேல்தடிப்பு மெய்சுறுப்பு மேவுகுட்டம்—சேல்நேர்
அரையாப்பு லிங்கப்புற் றாழ்ந்த பவுத்திரமும்
விரையாப்பு வாதம்விரைந் தோடும்—குறையாமல்

வாய்த்த வரிகிரந்தி வந்திடுங்கண் காமாலை
மாய்த்துவிடும் மான்விழியாள் மாயமெல்லாம்—சாற்றக்கேள்
மாதுமே கங்கிட்டா மாதுவிஷ மொட்டாது
சாதுகுண மாகிவருந் தையலே—மோதிவரும்
தித்திப்பு நீரும் தினவுமுதல் மீன்கவுச்சு
வத்து முகமுட்டை வன்கவுச்சும்—தத்திவரும்
வற்றாக் கிரிச்சனங்கள் வாராது முத்தேகேள்
சத்தியிரு மல்குன்மஞ் சண்ணுமடா—ரத்தபித்தம்
வண்டு மெலிக்கடியும் வாய்ந்தவரி குட்டமுடன்
கண்டமாலைமுதலாக் காணாது—விண்டிடுவேன்

பள்ளம் விழுந்த படர்தா மரைமுதலாய்
கள்ளத் தவமெழுந்த கட்டிகளும்—மெள்ளவே
கால்மறைகள் கைமறைகள் கண்டவொரு மெய்ம்மறைகள்
பால்மறைக ளெல்லாம் பறந்தோடும்—வேல்விழியார்
ஒக்கத் தொடர்ந்துவரு மொட்டியபுண் ணீராம்பல்
பக்கப் பிளவை படுசூலை—கொக்கரிக்கும்
அண்ணாக்குத் தூறும் அழியும் பிரமேகம்
உண்ணாக்குத் தொண்டையடைப் புப்போம்—வண்ணா
வருஞ்சிக்க ரோகமுதல் வாய்த்தகன்னப் புற்றும்
பருஞ்சொல் வயிறூதற் பாண்டும்—இரிந்துவிடும்

வாதமோ ரெண்பதுவும் வந்தபித்த நாற்பதுவும்
தோதசிலேத் மங்கள்தொண் ணூற்றாறும்—சாதகமாய்
ஆறாய் விழுகரப்பான் அம்புவி யோரறிந்த
வேறாய் முளைத்ததொரு வியாதியெல்லாம்—நீறாகும்
பத்தியங்கே ளுப்புமொச்சை பாசிப் பயிற்றுவரை
முத்தா முளைக்கீரை முன்கூட்டு—புத்தியுடன்

ஆறுநாள் போகவிட் டாவின்மோர் தான்கூட்டு
சேருமு வைந்துநாட் சென்றக்கால்—நீருமோ
ரிரண்டுநாள் போகவிட்டு நல்லெண்ணெ யால்மூழ்கு
அண்டாத வெற்பி லமர்ந்தருளும்—தண்டமிழை
என்குரு வாமுனிவ னேற்பா வுலகர்க்கு
நன்றெனவே சொன்னு னயந்து. 548

புங்கம்பட்டை, பிராயம்பட்டை, மாம்பட்டை, இலுப் பைப்பட்டை, புரசம்பட்டை, அழிஞ்சிப்பட்டை, எட்டிப் பட்டை, ஒதியம்பட்டை, சங்கம்பட்டை, சுரபுன்னைப் பட்டை, ஊழலாத்திப்பட்டை, நூற்றாண்டு வேம்பின் பட்டை, முதிர்ந்த பூவரசம்பட்டை, நிலவிளாப்பட்டை, சிவன் வேம்புப்பட்டை இவை வகைக்கு 10 பலம்; நன்றாக இடித்து ஒரு பாண்டத்தில் சேர்த்து, ஒரு குருணி நீர் விட்டு அடுப்பிலிட்டு நன்றாகக் குழம்பாக வெந்த பின்பு வடித்து ஒரு பாண்டத்தில் இட்டு, அதில் ஆடு தீண்டாப்பாளைச்சாறு, கழற்கொடிச்சாறு, வெள்ளறுகுச்சாறு, சங்கன்குப்பிச் சாறு, செருப்படைச்சாறு, கொட்டைக் கரந்தைச்சாறு, பொடுத லைச்சாறு, இவை வகைக்குப்படி ¼ மேற்படி சாற்றுடன் சேர்த்து, அடுப்பில் வைத்துச் சுண்டிக் குழம்பாக அடையும் பொழுது நல்லெண்ணெய் 2 படி சேர்த்து, பரங்கிப்பட்டை 2 பலம் பொடித்துப் போட்டு, சுத்தித்த சேங்கொட்டை 1 பலம் இடித்துப் போட்டு மெல்ல எரித்து, அடிபற்றாமல் மெழுகு பதத்தில் இறக்கி வைக்கவும்.

முட்டைக் கரண்டியளவு இருவேளைக் கற்கத்துடன் கொடுக்க, கால்முடக்கு, கைமுடக்கு, கட்டி, வெடிசூலை, உடல்மேல் தடிப்பு, கறுங்குட்டம், அரையாப்பு, இலிங்கப் புற்று, பௌத்திரம், வாதம், கிரந்தி, காமாலை, மதுமேகம், தினவு, கவிசை, கிரீச்சரம், வாந்தி, இருமல், குன்மம், இரத்த பித்தம், வண்டுக்கடி, எலிக்கடி, வரிக்குட்டம், கண்ட மாலை, படர்தாமரை, கரும்புள்ளி நோய், ஒட்டுப்புண், நீராம் பல், பக்கப்பிளவை, படுசூலை, அண்ணப்புற்று, தொண்டை



அடைப்பு, உண்ணுக்கு வளர்ச்சி, கன்னப்புற்று, பெரு வயிறு, பாண்டு, வாதம் 80, பித்தம் 40, சிலேத்துமம் 96, கரப்பான் முதலியவைகள் தீரும்.

உப்பு, மொச்சை, பாசிப்பயறு, துவரை, முளைக்கீரை இவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம். 5 நாள் மருந்துண்டு பின்னர் பசுமோர் கூட்டலாம். பதினைந்து நாள் சென்றபின் எண்ணெயிட்டு மூழ்கலாம்.

## 30. மேகநாதத் தயிலம்

### (வேறு வகை)

பூவரசம் பட்டைச் சாறு, சோற்றுக்கற்றாழைச் சாறு, வெள்ளறுக்குச்சாறு, பிரம்மதண்டுச்சாறு, வெள்ளை வெங் காயச்சாறு, சிற்றாமணக்கு நெய், இவை வகைக்கு 1 படி. இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி வடித்து அதில் இரசக்கற்பூ ரம் 1 பலம் நன்றாகப் பொடித்துக் கலக்கவும். சிலாசத்துப் பற்பம் 1 பலம். கல்நாற்பற்பம் 1 பலம் இவைகளையும் சேர்த்துக் கலக்கவும்.

அளவு:—கால்முதல் 1 அவுன்ஸ். பத்தியம்:—இச்சாபத் தியம். நோய்கள்.—வெள்ளை, வெட்டை, மேகம், கட்டி, வயிற்றுநோய், மூத்திரக் கிரீச்சரம் இவைகள் தீரும்.

## 31. மயனத் தயிலம்

சித்தக மனற்கலுப் பயிரோம மரிசனந்
தேப்பிசா சேழு முறையே
சேர்தொடி சதுப்பதி ற்றஃதஃ ததிற்பாதி
செப்பரைக் கால ரைக்கா
லொத்தொகை யிற்பாதி யிவைகளை நெடுங்கடத்
துள்ளடைத் தொரு கலசமே
லுறவைத்து மண்ணிட்டு நூல்வரிந் தெழுசீலை
யொவ்வப் புரிந்தி ரண்டின்

சுத்தமத் தியமீது கீழ்பெரிது சிறிதாய்த்
துவாரமிட் டுயர்வழி யின்வாய்த்
தூமமே காவண முலோட்டமொடு கோமயந்
தோயப் பொதிந்தி வணமே
சத்தமுறு முத்தான மிட்டதோ முகவழி
தனிற்பாத் திரஞ்சேர்த் துதா
சனனையங் குலவவிடு முச்சாம மாவியொடு
தைலம் பிறந்தி ழியுமே. 549

மகிமை

இழியுமிந்த வள்ளியத்தாந் தைலப் பேரை
யியம்புங்கா லர்த்தாங்க மிசிவு வீக்கம்
வழியுமுதி ரங்கொடுத்த வெட்டுக் காயம்
வளியதப்பு நரித்தலையின் வாய்வு சந்நி
அழியுமட வார்குறியாண் குறித்த ளர்ச்சி
யத்திசந்தி தசைநரம்பிற் கிளைத்த வூதை
யொழியுமிதைப் பட்டிகட்டிற் கைகால் சோர்வு
முறங்குவர் கனுப்பொருளா மோதுங் காலே. 550

மஞ்சள்மெழுகு 1 வீசை, சக்கிக்கல் 1 வீசை, உப்பு 1 படி, மணல் ½ படி, ஓமம் கப்புமஞ்சள் இவ்விரண்டும் ½ வீசை, சடாமாஞ்சில் ½ பலம்; இவைகளைத் தனித்தனி இடிக்க வேண்டியவைகளை இடித்தும் துண்டிக்கவேண்டி யவைகளைத் துண்டித்தும் கழுத்து நீண்ட ஒரு பானையில் முறைப்படி அடைத்து, வாய்ப் பொருத்தமான மற்றொரு சிறு கலசத்தைக் கவிழ்த்து மூடி, பொருத்துவாய் மறைய அரைத்த களிமண்ணால் பூசி, நூற்கயிற்றால் வரிந்து கட்டி, அதன்மேல் ஏழு மண் சீலை செய்து, இவ்விரண்டு கடத்தின் நடுமையங்களில் மேற்புறம் பெரிதாகவும் கீழ்ப்புறம் சிறிதாக வும் இரண்டு துவாரங்கள் இட்டு, மேல் துவாரத்தில் புகை வெளிவரா வண்ணம் ஒரு சிறு ஓட்டுத்துண்டினால் துளையை மறைத்து, அதன் மீது பசுச்சாணத்தை அப்பி, கடத்தை ஒரு பக்கம் சரித்தவண்ணம் அடுப்பில் வைத்து கீழ்த்துவார வழி யில் ஒரு பாத்திரத்தை வைத்து, தீமூட்டி மூன்று சாமம்



நன்றாக எரிக்கில், புகையுடன் கூடிய தயிலம் வடிந்து இறங்கும்.

இதை மேற்பூசாக உபயோகிக்க, அர்த்தாங்க வாத நோய், குழந்தைகளுக்குண்டாகும் இசிவுகள், வீக்கங்கள், இரத்தம் ஒழுகுகின்ற வெட்டுக்காயம், நோயுடன் கூடிய அண்டவீக்கம், நரித்தலைவாதம், சன்னிவாதம், பெண்குறித் தளர்ச்சி, ஆண்குறித் துவளல், கீல், எலும்பு, தசை, நரம்பு இவைகளைப் பற்றிய வாய்வு முதலியவை நீங்கிப்போம். இதை பட்டிகட்டினால் கைகால்களில் உண்டாகின்ற சோர்வு தீரும்.

## 32. வாதகேசரித் தயிலம்

குடமொடு நொச்சித் தழுதாழை
கொச்சை யருக்கெண் ணேரண்டம்
கூறியவேழின் முதன்மூன்றுங்
கோமிது னம்பா லுவிநேயம்
படிபடி தத்தம் முறவேபெய்
பண்டித வாயும ரேணுகையும்
பருமர சோனங் கமழ்சரணம்
பரையரு ணுதம் புட்கரமுக்
கடுகடு கீரைந் தஃதஃதோர்
காசெடை மும்மூன் றிழையமுதாற்
கரையடு வடியித னபிதானங்
கண்டுகொள் வாத கேசரியாம்
பிடிபிடி நற்றயி லந்தடவிப்
பேரா வாதக் குழுவுடனே
பிசறிய கருமத் திமிர்வாய்வும்
பீடுறு மிற்புலி யணைசுகமே. 551

சதுரக்கள்ளி, நொச்சி, தழுதாழை இவற்றின் சாறுகள்; வெள்ளாட்டுப்பால், எருக்கம்பால், எண்ணெய், ஆமணக்கு

நெய் இவை வகைக்குப்படி ஒன்று;ஒரு பாத்திரத்தில்சேர்த்து, அதில் கடுக்காய், காட்டுமிளகு, பருத்த வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், கந்தகம், கோஷ்டம், திரிகடுகு, கடுகு இவை வகைக்கு மூன்று காசெடை, மேற்படி பால் விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சிப் பதத்தில் வடிக்கவும், இதைப் பிடித் தயிலமாக உபயோகிக்கத் தீரா வளிநோய்க் கூட்டங்கள், ஏழு உடற்கட்டுகளிலும் கலந்த திமிர்வாதமும் போம்.

## 33. வாத நாசத் தயிலம்

சுரச மிந்திர வல்லி விழுதிசு
வேத மூலையுத் தாமணிப் பர்ப்பணந்
தோய பாணமிவ் வேழி ரதத்தொடு
சோசப் பாலிரத் தாகத் தமிர்தமுஞ்
சரிச ரிப்படி யாகத் துழாவிடுஞ்
சமயஞ் சுக்குவ சம்புநற் சீரகந்
தாரு பீதத் துவயம்வெள் ளுள்ளியுத்
தாம ணிச்சடி லத்தோடி ராமட
மரிசி கச்சபத் தோடொரு நிட்கமாம்
வகைவ கைக்கொரு பாலுடொன் றுஞ்சுதை
வார்த்தி ழைத்திட் டெரித்திறுத்தேற் றுவை
மாந்த நோயில் வருந்தி யயர்வொடு
வருசு தர்க்குத யஞ்சிறு பாலடை
வாரந் நோய்முழு துஞ்சுடரப் பூச்சியாம்
வாத நாசத் தைலமி தைப்புவி
வாழ்த்திடு மாமத் தைலமென் றெங்குமே. 552

நொச்சி, முடக்கற்றான், வீழி, வெண்சாரணை, உத்தாமணி, பாவட்டை, பொடுதலை இவ்வேழின் சாறும்; தேங்காய்ப்பால், சிற்றாமணக்குநெய் ஆக ஒன்பதும்; வகைக்குப் படி ஒன்று. ஒரு பாத்திரத்தில் ஊற்றி, அதில் சுக்கு, வசம்பு, சீரகம், தேவதாரம், கப்புமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், வெள்ளைப்பூண்டு, உத்தாமணிவேர், பெருங்காயம், மிளகு, ஆமை



ஓடு இவை வகைக்கு வராகனெடை ஒன்று: இவைகளைத் தேங்காய்ப்பாலால் அரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து, குழந்தைகளுக்குண்டாகும் மாந்த நோய்களுக்கு ஒரு சிறு பாலாடையளவு காலையில் கொடுக்க, மாந்தம் தீரும்.

### வேறு

வாதநாராயண இலைச்சாறு 1 படி, வெள்ளைவெங்காயச் சாறு 1 படி, ஆமணக்குநெய் 1 படி, இவைகளை ஒரு பாத்திரத்தில் சேர்த்து,பக்குவத்தில் காய்ச்சி வடித்து,அதில் $\frac{1}{4}$ பலம் இரசக் கற்பூரத்தை நன்றாக மைபோல் பொடித்துக் கலக்கவும். $\frac{1}{4}$, $\frac{1}{2}$, 1, அவுன்ஸ் அளவாகக் காலையில் மாத்திரம் கொள்ளப் பேதியாகும். கீல்வாயு, பக்கவாயு, பக்கசூலை, குன்மம் இவைகள் தீரும்.

## 34. விரணசஞ்சீவித் தயிலம்

காற்புத்தி யோரை நீயோர் காசென மதித்துக் கிட்டாக்
கனிக்கொட்டை யரிபிறப்பைக் கண்டரை நறுக்கிச் சேரு
நாற்புத்தி யொடுவாற் கிண்ண நாவுநெய்த் தொடிபதிற்றுண்
ணேற்றெரி கழுநீரப்பு ஞுண்மையாய்ச் சாய்த்துக் காய்ச்சின்
மேற்புத்தி யென்கொ லங்க விரணங்கண் முழுதுந் தீர்த்த
வேதியர் தமையுள் ளாத விலங்கின ரினமு நோயி
னூற்புத்தி ராதி யோடே நாளுக்கு நாட்டேய் வுற்று
நமபுரத் தேகு வார்போ னுட்டைவிட் டேகு மாதோ. 553

இதன் மகிமையும்-விநியோகமும்

மாதவத்தா லித்தைல மமையினுக
வல்லியிற்றேய்த் தருந்துசந்நி வருக்கந்திரு
மோதகமிட் டலிபுரா தனத்தொன்றேனு
மூரிமங் கல்லியத்தான் மோட்டைத் தூர்த்து
மீதிறகா லுதயமப்பி யாமப்பின்னர்
மென்கலிகை யரைப்பிட்டு வெச்சுநீராட்
டேதமிலை யெழுதிவச மிவ்வண் ணஞ்செய்
யிதுவிரண சஞ்சீவி யிதயத் துன்னே. 554

நீண்ட காம்புடைய அகலக் கரண்டியில் (வாற்கிண்ணம்) எண்ணெய் 10 பலம் விட்டு, அதில் பொடி செய்த தாளகம் காசெடை ஒன்றும், இரண்டிரண்டாக நறுக்கிய சேங்கொட்டை பத்தும் சேர்த்து, இவற்றின் சத்துக்கள் எண்ணெயில் இறங்கும்படி மென்மையாகப் பாகத்துடன் காய்ச்சி, கழுநீர் சேகரித்துவைத்த ஒரு பாத்திரத்தில் ஊற்றி, மறுநாள் அவ்வெண்ணெயை வழித்து, மறுபடியும் காய்ச்சி வடிக்கவும். இதை மேற்பூச்சாக உபயோகிக்க விரணங்கள் தீரும். வெற்றிலையில் தோய்த்துத் தின்ன சன்னிபாதங்கள் தீரும். இத் தயிலத்தை விரணங்களின்மீது பூசுவதற்கு முன்பு, தோசை, இட்லி, பழையசாதம் இவற்றில் ஏதேனும் ஒன்றை எருமைத்தயிருடன் வயிறு நிறைய உண்ண வேண்டும், உடலில் தயிலம் ஒரு சாமம் ஊறியபின் உசில் அரைப்பிட்டு, இளவெந்நீரினால் குளிக்கவேண்டும். இவ்வாறு 7 நாள் செய்ய விரணங்கள் தீரும்.

## 35. லகு விஷமுட்டித் தயிலம்

தயிலமிரு படிபாநாள் வெள்ளைப்பா லிட்டுத்
தங்கெட்டி விதைச்சீவ லுரிதிரியா யிற்றேற்
பயிலுமவற் றொதிநடு வையரைய யரைகாண்
பக்கலொன்று மூவரையாம் பலமிடுகைப் பாகங்
குயிலுவதென் னவைசிவக்கும் பருவமுணர்ந் திறுத்துக்
குடிவழியா யுருங்கன்மக் கொடும்பாவ மகற்றி
வெயிலிலிட்டப் பிப்பிடிக்கக் கனவாதக் குழுப்போ
மிக்கிலகு விடமுட்டி மென்றயில மிஃதே. 555

எண்ணெய் 2 படி, அதில் வெள்ளாட்டுப்பாலில் 30 நாழிகை ஊறிய எட்டிக்கொட்டைச் சீவல் 2½ பலம், வெள்ளைப்பூண்டுத் திரிஉரித்தது 2½ பலம், ஆயில் பட்டைத்தூள் 1½ பலம், இவைகளை ஒரு பாத்திரத்தில் சேர்த்து, அடுப்பிலிட்டு எரித்து, அம்மூன்று சரக்குகளும் சிவக்கும் பதத்தில் வடிக்கவும். பிறகு இதை வெய்யிலில் வைத்து பிடித்தயிலமாகப் பயன்படுத்த, கனத்த வாயுவின் கூட்டம் விலகும்.

# 17. குடிநீர்கள்

## 1. வளிவெப்புக் (வாதசுர) குடிநீர்

பெருங்காஞ்சொறிவேர், திப்பிலிமூலம், சித்திரமூலம், சங்கன்வேர், வெள்ளறுகு, நிலவேம்பு, முருக்கம்வித்து, கழற்சிவேர், கண்டங்கத்தரி, பேருமுட்டி, சிற்றரத்தை, மாவிலிங்கவேர், பேரரத்தை, சிறுகாஞ்சொறி, சதகுப்பை, விஷ்ணுகிரந்தி, சிறுதேக்கு, சுக்கு, திப்பிலி, செவ்வியம், கோஷ்டம், இவைகளையெல்லாம் நன்றாய் இடித்து, இருபத்தொரு பாகங்களாக்கி, ஒரு பாகத்திற்கு மூன்றுசேர் நீர் சேர்த்து முப்பது நாழிகை ஊறவைத்தபின், அடுப்பேற்றி கால் சேராகச் சுண்டக்காய்ச்சி இறக்கிக் கொள்க. வாத ராக்ஷசக் குளிகை பணவெடை பொடித்து, தேன் கழஞ்சு சேர்த்து இழைத்து, மேற்படிக் கியாழத்துடன் இருநேரந்தர, வாத சுரங்களும், நடுக்கு வாதமும் போம்.

## 2. பித்தவெப்புக் (பித்தசுரக்) குடிநீர்

விலாமிச்சை, சிறுகாஞ்சொறிவேர், வில்வவேர், பாதிரிவேர், அதிமதுரம், கோஷ்டம், நன்னாரி, நிலாவாரை, சீரகம், கொத்துமல்லி, தும்பைவேர், பேரீச்சங்காய், யானைத்திப்பிலி, நெல்லி முள்ளி, சுக்கு இவை வகைக்கு ஒரு பலம் எடுத்து இடித்து, 16 பங்குசெய்து, ஒரு பங்கை 3 சேர் நீர்விட்டு 30 நாழிகை ஊறவைத்து, முன்போல் காய்ச்சி, கோரோசனை

மாத்திரையை தேனில் இழைத்துக் கொடுப்பதுடன், இக் கஷாயத்தையும் கொடுக்கவும். இதனால் பித்தசுரம் 21-ம் தீரும்.

## 3. ஐயவெப்புக் குடிநீர்

சுக்கு, திப்பிலி, கிராம்பு, சிறுகாஞ்சொறிவேர், அக்கிரா காரம், முள்ளிவேர், கடுக்காய்த்தோல், ஆடாதோடை, கற் பூரவல்லி, கோஷ்டம், சிந்தில், சிறுதேக்கு, நிலவேம்பு, வட் டத்திருப்பி, முத்தக்காசு, இவை வகைக்கு 1 பலம் எடுத்து இடித்து, 15 பங்கு செய்து, ஒரு பங்கிற்கு 2 படி நீர் விட்டு முன்விதிப்படி கஷாயமாக்கி, சந்திரோதய மாத்திரை அல்லது கோரோசனை மாத்திரையைப் பொடித்து, தக்க அளவில் தேன் சேர்த்து இழைத்து, இருவேளை முன் கஷாயத்துடன் தர, கபசுரம் அனைத்தும் போம்.

## 4. நிலவேம்புக் குடிநீர்

நிலவேம்பு, வெட்டிவேர், விலாமிச்சன்வேர், சந்தனத் தூள், பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, பற்பா டகம் இவை வகைக்குக் கால்பலமெடுத்து, கியாழ முறைப் படிக் காய்ச்சி, கால்முதல் அரையாழாக்குத்தர சுரம் நீங்கும்.

## 5. நொச்சிக் குடிநீர்

நொச்சிக் கொழுந்து ஒரு பிடி, மிளகு கால்பலம், பூண்டு அரைக்கால் பலம், கம்மாறு வெற்றிலை பத்து இவைகளைக் கியாழம் செய்து, கால் முதல் அரை யாழாக்கு வீதம் காலை மாலை இருவேளையும் தர, குளிர்சுரம் போகும்.

## 6. ஆடாதோடைக் குடிநீர் (1)

ஆடாதோடையிலை இரண்டு அல்லது மூன்று எடுத் துச் சிறுக அறிந்து, தேன்விட்டு வதக்கி, அதிமதுரம், தாளிச பத்திரி, அரிசித்திப்பிலி இவை வகைக்கு அரை வராகனெடை தட்டிச் சேர்த்து, விதிப்படி குடிநீரிட்டுக் காலை மாலை இரு வேளையும் கால் முதல் அரையாழாக்கு வீதம் கொடுக்க, இரு மல், காசம், சுவாசம், பசியின்மை முதலியவை தீரும்.



## 7. ஆடாதோடைக் குடிநீர் (2)

ஆடாதோடையிலை மூன்று அல்லது நான்கு எடுத்து, குறுக அறிந்து, தேன்விட்டு வதக்கி, ஏலக்காய், வால்மிளகு இவை வகைக்குக் கால் விராகனெடை, கடுக்காய்த்தோல், கடுகரோகணி, தாளிசபத்திரி இவை வகைக்கு ¼ பலம் இவை களை ஒன்றிரண்டாய் நசுக்கிச் சேர்த்து, விதிப்படி குடிநீர் செய்து, காலை மாலை இருவேளையும் ¼ முதல் ½ ஆழாக்கு வீதம் தர, மேற்குறித்த நோய்களுடன் நீர்க்கட்டு, மலச்சிக் கல், சுரம் முதலியவைகள் நீங்கும்.

## 8. நீர்முள்ளிக் குடிநீர்

நெருஞ்சி, நெல்லிவற்றல், நீர்முள்ளி, பறங்கிச்சக்கை, மணத்தக்காளிவற்றல், சரக்கொன்றைப்புளி, சோம்பு, வெள் ளரிவித்து, சுரைக்கொடி, கடுக்காய், தான்றிக்காய், இவை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்து, குடிநீர் விதிப்படி நீர் விட்டுக் காய்ச்சி வடிகட்டி, காலைமாலை இருவேளையும் ½ ஆழாக்கு வீதம் தர, நீரைப் பெருக்கிக் கழித்து, சோபை ரோகத்தைப் போக்கும். நீர்க்கட்டுக்கும் உபயோகிக்கலாம்.

## 9. பிடங்க (புறங்கை) நாறிக் குடிநீர்

புறங்கை நாறியிலை மூன்று அல்லது நான்கு எடுத்து, கடுக் காயின் தோல் 1 வராகனெடை கறிமஞ்சள் ½வராகனெடை இவைகளுடன் சேர்த்துக் குடிநீர் செய்து, ¼ முதல் ½ ஆழாக் குத் தரசுரக்கட்டி (பிலீகவிருத்தி) போகும்.

## 10. மண்டூராதி அடைக் குடிநீர்

மண்டூரம், செங்கல்கிட்டம், சங்கன்வேர், நெருஞ்சி சமூலம், சார்வேளைவேர், கோவைத்தண்டு, நீர்முள்ளி சமூலம், தான்றிக்காய், கடுக்காய், நெல்லிக்காய், புளியிலை, வேப்பம் பட்டை, பிரமியிலை, கரிமஞ்சள், மணலிக்கீரை, நன்னாரி, வழுதுணை, கொன்றைப்பட்டை, கற்றாழை, ஆடுதீண்டாப் பாளை, சங்கத்தாரி, சிறு குறிஞ்சான், சுரைக்கொடி, பாதிரி வேர், புறங்கை நாறி இவை வகைக்குப் பலம் 1. இவைகளை இடித்து, ஒரு பானையில் இட்டு, வெள்ளாட்டுநீர் 2 படி, பசு நீர் 2 படி அதில் சேர்த்து அடுப்பிலிட்டு நன்றாகக் கொதிக்க வைத்து, பிறகு தணலிலேயே வைத்திருக்க வேண்டும். வேண்டும்பொழுது, வேண்டிய அளவை வடித்துக்கொள்ள வேண்டும்.

அளவு:—¼ ஆழாக்கு விதம் நாள் ஒன்றுக்கு இரண்டு அல்லது மூன்று வேளையாகக் கொடுக்க, பாண்டு, சோகை, காமாலை, பல்வகைப்பட்ட மகோதரங்கள் தீரும். உப்பில்லாப் பத்தியம். கஞ்சி வடிவான உணவைத் தரவேண்டும்.

## 11. நாக்குப்பூச்சிக் குடிநீர்

சுத்தித்த பலாசு வித்து 4 பலம், கருஞ்சீரகம் 4 பலம், வாய்விடங்கம் 4 பலம், ஓமம் 4 பலம், சிவதைவேர் 4 பலம், நிலாவாரை 4 பலம், சோம்பு 4 பலம், கடுகரோகணி 2 பலம்! இவைகளை ஒன்று இரண்டாக இடித்து முறைப்படி குடி நீர் செய்து ¼ முதல் ½ ஆழாக்கு கொடுக்கப் பேதியாகும். எண்ணெய்களையேனும் மாத்திரைகளையேனும் அளவுப்படி கொடுக்க நாகப்பூச்சி, திமிர்பூச்சி, கொக்கிப்புழு முதலிய குடற்கிருமிகள் வெளிப்படும்.

## 12. தமரகக் குடிநீர்

வெள்ளாட்டின் தமரகம் (மார்பிலுள்ள குண்டிக்காய்) ஒன்றை எடுத்து, துண்டு துண்டாக நறுக்கி, நீரிலிட்டுக்



கழுவி, நீரை நீக்கி, ஒரு பீங்கான் சாடியிலிட்டு, அத்துடன் சிறிது உப்பு, மிளகு 10, இலவங்கப்பட்டை 1 துண்டு, சீரகம் 1 சிட்டிகை, சோம்பு 1 சிட்டிகை, சாதிக்காய்த்தூள் 1 சிட்டிகை, இவைகளையும் சேர்த்து, மேல்மூடி பொருத்து வாய்க்கு உளுத்தமாவு அல்லது கோதுமை மாவு நீர்விட்டுப் பிசைத்து பூசி, ஒரு வாய் அகன்ற சட்டியில் சாடியை வைத்து, அதன் கழுத்தளவுக்கு நீர் ஊற்றி, மேற்சட்டி மூடி 3 மணி நேரம் எரித்தெடுத்து வடித்து உட்கொள்ளவும். இது தமரக நோயில் உண்டாகும் படபடப்பு, வன்மையின்மை, மூச்சுவாங்கல் முதலியவற்றை நீக்கும்.

# 18. தீநீர்கள்

## 1. ஓமத் தீநீர்

பொட்டு நீக்கிய ஒரு வீசை ஓமத்தைச் சீலையில் முடிந்து, வாலை பாத்திரத்தில் நான்கு படி நீர்விட்டு இரண்டு நாள் ஊறியபின், வாலையேற்றி எரித்து, வரும் திராவகத்தை புட்டியிலடக்கஞ் செய்து, கால் முதல் அரை ஆழாக்கு வீதம் தர, வாதக் கிரகணி, ஐயக்கிரகணி, வாதமந்தம், சூலை, வயிற்றுப்போக்கு நீக்கிப் பசியை யுண்டாக்கும்.

## 2. சோம்புத் தீநீர்

2 சேர் சோம்பை உடைத்து, பதக்கு நீரில் கலந்து, இரு தினம் ஊறியபின், வாலைப் பானையிலிட்டு வடித்து, அரைக் கால் முதல் காலாழாக்கு வீதம் உட்கொள்ள, வயிற்று வலி, அசீரணம், வயிற்றுப்பிசம், சுவாசம், இருமல், அதிதும்மல், பீனசம், சுரம் முதலியவைகள் நீங்கும்.

## 3. நண்டுத் தீநீர்

வரப்பு நண்டு 4 வீசை, சோம்பு, ஓமம், சீரகம், இலவங் கப்பட்டை இவை வகைக்கு 2½ பலம், நீர் 12 படி வாலையி விட்டுத் தீநீரிறக்கவும்,

அளவு:—½ முதல் 1 அவுன்ஸ் வரை சிறிது நீரில் கலந்து சாப்பிடுவதற்குமுன் ஒரு நாளைக்கு இருவேளை உட்கொள்ள இளைப்பு நோயில் (க்ஷயம்) உண்டாகும் பசியின்மையை நீக்கி, உடற்கு ஊட்டத்தைத் தரும்.

# 19. புகை நீர்கள்

## 1. சங்கத் திராவகம்

வெடிமதி கூர்மை சாரம் விதமன பேதி நீலி
படிகிபூ நாத நீறு பல்பொரிகார மீதோ
டதுதிரி யுபய மேக மையரை கால தோர்கால்
பதமரை கால்மூ வேக மரைபொடி படுவ தாக
அடைகட மரைய தாக வதில்வனை கடமு மேல்வை
இடைவழி பந்தி திராவ மிவை வருமே பொலாறு
தரையினில் நீர்கள் சேருந் தனியினி லோக தாது
உரமது நீற தாகு முபரச நீற தாகும்
மார்வலி வாயு குன்ம வலியறு மேக சங்க
நீரினி லனேக மேகு மாதவ ஞேது மாறே. 556

வெடியுப்பு 3 பங்கு, இந்துப்பு 2 பங்கு, சோற்றுப்பு 1 பங்கு, நவாச்சாரம் 2½ பங்கு, அன்னபேதி ½ பங்கு, துருசு ½ பங்கு, படிகாரம் ½ பங்கு, பூநீறு ¾ பங்கு, வெங்காரம் 1 பங்கு, இவைகளைத் தனித்தனிப் பொடித்து, எல்லாவற்றையும் ஒன் ருகச் சேர்த்துக் கலந்து, ஒரு திராவகப் பானையில் பாதியிருக் கும்படி போட்டு, வாய்ப் பொருத்தமான வாலையினுல் மூடி, சிறுதீயில் எரித்து, முறைப்படி திராவகம் வடித்துக்கொள் ளவும். இதனுல் உலோகங்கள், தாதுக்கள், இரசம், உபரசம் ஆகிய இவைகள் நீறும்.

ஒரு துளி திராவகத்தை ஒரு கோப்பை நீரில் கலந்துண்ண மார்புவலி, வாய்வு, குன்மவலி ஆகிய இவைகள் தீரும்.

## 2. வெடியுப்புத் திராவகம்

பொட்டலையும் பலமாறு இந்துப்பு மூன்று
புகலரிய சாரமிரண்டு பேதி ஒன்று
கட்டளையாய்ப் படிகாரம் பதினைந் தாகும்
கருதுமொரு பூநீறு பொரியு மொன்று
திட்டமுட னடிகடத்தி லரையு மிட்டுச்
சீர்பெறவே வாலையிட்டு அடுப்பி லேற்றிச்
சட்டமுட னெரித்திடவே புகைநீ ராகும்.
சரியான பாகமிது சார்ந்து பாரே. 557

திரிகடுகு வகைக்கொன்று தூக்கு மிட்டு
திட்டமாய்க் கல்லுரலி லிடித்து நைய்ய
வரிசையுடன் பொட்டலையின் திராவ கத்தை
வண்மைபெற விரட்டிப்பா யிட்டு மூன்று
உரிசைபெற நாள்வைத்துக் கலையத் திட்டு
உகந்ததொரு வாலையிட்டுத் தீநீர் வாங்கே
பரிசைபெற யிறக்கியே சீசா தன்னில்
பரிவுடனே தானடைக்கச் சொன்னார் பாரே. 558

அடுத்துநின்ற திரிகடுகு பொடித்து நன்றாய்
அதைச்சேர்த்து யிட்டுமெள்ள உண்ணச் சொல்லு
தொடுத்து நின்ற குன்மமெல்லாங் கடலே புக்கும்
துடியான மகோதரத்துக் கொரு சொட் டிட்டுப்
படுத்துவருங் கதிரோனைக் கண்டு நீங்கும்
பனியதுதான் விலகுமது போலே யாகும்
உடுத்துநின்ற வாயுவெல்லாங் கதறி யோடும்
உற்றதொரு யாக்கோபு உரைத்த வாறே. 559



பொட்டிலுப்பு 6 பலம், இந்துப்பு 3 பலம், நவாச்சாரம் 2 பலம், அன்னபேதி 1 பலம், படிகாரம் 15 பலம், பூநீறு 1 பலம், வெங்காரம் 1 பலம்: இவைகளை ஒரு பானையில் பாதியிருக்கும்படி போட்டு, வாலையினால் மூடிச் சீலை செய்து, அடுப்பேற்றி எரிக்கத் திராவகம் இறங்கும். திரிகடுகு தூக்கு ஒன்று கல்லுரலில் இட்டு, பூணில்லா உலக்கையால் இடித்து ஒரு பாத்திரத்தில் சேர்த்து, இச்சரக்கிடைக்கு இரண்டு பங்கு மேற்படி திராகவத்தை ஊற்றி மூன்று நாள் ஊறவைத்து, வாலைப் பானையிலிட்டுத் தீநீரைவாங்கி சீசாவில் அடைக்கவும். இதனை ஒன்று முதல் மூன்று துளி திரிகடுகுத் தூளில் கலந்து உண்ணக் குன்மம் தீரும். மகோதரத்திற்கு ஒரு சொட்டு நீரில் கலந்து கொடுக்கத் தீரும். வாய்வும் தீரும்.

---

# 20. கண்ணிலிடு மருந்துகள்

## 1. கிராம்பு பக்குவ வெண்ணெய்

ஏற்றயிலே சலதோஷ மண்டைக் குத்து
ஏற்றமென்ற நீரேற்ற மெல்லாந் தீரும்
பார்த்திபனே கண்ணிலுள்ள வியாதி தீரப்
பாடுகிறேன் சம்பழத்தில் நூற்றி னெட்டுத்
தோற்றாமல் துளை துளைத்து லவங்கம் நாட்டித்
துரிதமுடன் கயிர்கோத்துச் சட்டியிலே தாக்கிப்
பார்த்தாலே விளாங்காய்போற் பசுவின் வெண்ணெய்
பாலகனே லவங்க மெல்லாம் பரப்பி மூடே. 560

மூடியே அடிச்சட்டி தனிற்ப டாமல்
மூர்க்கமுடன் சுத்தகங்கை விட்டு வைநீ
நாடியே நாற்பதுநாள் வேறு வேறு
நலமான சுத்தகங்கை விட்டு வைத்துத்
தீடியே பிறகுவெண்ணெய் தனையெடுத்துத்
திறமான தாம்பிரத்தின் பரணில் வைத்துச்
சாடியே பழமுடனே லவங்கப் பூவும்
தள்ளிவிடு வெண்ணெய்தனைக் கண்ணில்தீற்றே. 561

தீற்றிடவே சலம்வீழும் எரிப்பு முண்டாம்
திறமாகச் சீலையினால் துடைக்க நிற்கும்
மாற்றிடவே மண்டலந்தான் கண்ணில் தீட்ட
மாறாத நேத்திரநோய் மாறு மென்றும்



போற்றிடவே யென்குருவே தியர்தா னிந்தப்
புத்தகத்தின் பெருமையினால் கண்டதப்பா
தோற்றிடா வுலகத்தில் எளியோ ருண்டு
துரையான துரைமக்க ளரச ருண்டே. 562

தேறின பருத்த எலுமிச்சம் பழத்தில் 108 துளைசெய்து, முற்றின பூநீக்கிய இலவங்கங்களை அத்துளைகளில் செருகி, விளாங்காயளவு பசுவெண்ணெயினால் இலவங்கம் தெரியாமல் அப்பி, சட்டியில் சுத்தநீர் விட்டு, அதில் போட்டுவைக்கவும். நாற்பது நாட்களுக்கு நீரை நாள்தோறும் மாற்றவும். நாற்பது நாள் ஆனபிறகு வெண்ணெயை மாத்திரம் வழித்து எடுத்துத் தாம்பிர பரணியில் வைக்கவும். இதைக் கண்ணில் மையாகத் தீட்ட நீர்வடியும், எரிப்புண்டாகும். சீலையினால் துடைத்துவிட நீங்கும். ஒரு மண்டலம் பயன்படுத்தத் தீராத கண்ணோயெல்லாம் தீரும்.

## 2. நீலாஞ்சன மை

கருங்கல் கண்டொவ் வொன்றுதொடி
கனகச் சகலை துருக்கமலர்
பரும்படி கல்வெளை பனிமீனும்
பகர்முறை நிட்கம தொன்றேகால்
வருமை யரைக்கா லஃதையரை
வளர்வில் வையிரு குரக்கத்தம்
தருவெண் சாரணை பெண்ணைமடல்
சாலைச் சேப்பூ வரையிரண்டே. 563

சாம மரைதனிக் காயவிடு
தன்னை யளிக்கோ டன்னிலரை
ஆமஃ தேகுழம் பாயினெடு
வதுகண் ணிடுகண் பூபடலம்

நாம முத்துக் காசபிலம்
    நன்றாய்த் தீருஞ் சின்னாளில்
நாம மஞ்சனக் கண்மையென
    நாட்டி னுரெம் முனிவ ரரே. 564

அஞ்சனக்கல் 1 பலம், சீனாக்கற்கண்டு 1 பலம், பீதரோகணி 1¼ வாரகனெடை, குங்குமப்பூ 5/8 வராகனெடை, படிகபற்பம் 5/8 வாரகனெடை, பச்சைக் கற்பூரம் 2¼ வாரகனெடை.

அரைப்பு:—வில்வ இலைச்சாறு, முசுமுசுக்கைச் சாறு, வெள்ளைச் சாட்டறணைச்சாறு, பனைமட்டைச் சாறு, கரிசாலைச் சாறு, நந்திப்பூச்சாறு இவை வகைக்கு 2 சாமமரைத்து உலர்த்தி, தேனில் அரைத்து மையாக்கவும். கண்ணிலிட, பூ, படலம், முத்துக்காசம், பில்லம் முதலியவை போம்.

## 3. கலிக்கம்

விழியிடு கலிக்கமேல் விளம்புதுங் கேண்மோ
    கரிகலை துவரை'யக்கரா காரந்துடி
நறியதாம் புலிநீர் நாடவிட் டரைத்துப்
    பின்னரு மசகப் பிரசமு மேற்படி
யானபினது தனை யடைவினி லுருட்டிப்
    பீனமா யுலர்ந்தபின் பெருமுலைப் பாலிழைத்திடத்
தலைவலி யிடிப்படர் சன்னி
    தழைத்திடு பிணியெலாஞ் சாடுமுட்டணம்
        போம். 565

மிளகு, திப்பிலி, துவரம் பருப்பு, அக்கராகாரம், ஏலரிசி இவைகளைச் சமமாகச் சேர்த்து, வெற்றிலைச் சாறு, கொசுத் தேன் ஆகிய இவைகளைத் தனித்தனியிட்டு நன்றாக அரைத்து, நீளக் குளிகைகளாக உருட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு,



முலைப்பாலிலே இழைத்துக் கண்ணிலிடத் தலைவலி, மண்டைக்குத்து, கபாலசன்னி, உடற்காங்கை முதலியன ஒழியும்.

## 4. மை

பையுளாகிய விழிப்படல நோய் முதற்கு
    மையெனப் பெயர்பெறு வகையினைக் கேளாய்
சீதைவேர் முசுமுசுக்கைவேர் சீந்தில்வேர் துத்த
    மோதுமிந் நான்கு நேரொத்திடக் கருக்கித்
தாம்பிர பாத்திரந் தனினடு நெய்யுட
    னேம்பலுற் றிழைத்தவை யெடுத்திடச் சிமிளினி
லதுதனை யஞ்சன மாநய னத்திடக்
    கதுமெனவே யறும் கண்பிணி யெல்லாம்
பகலெதிர் பார்க்கவும் பார்வையா மப்பால்
    இகலுற நசியமே லியம்புதும் கெண்மோ. 566

பொன்னாங்காணிவேர், முசுமுசுக்கைவேர், சீந்தில்வேர், மயில்துத்தம் ஆகிய நான்கையும் சம எடையாய்க் கருக்கி, ஓர் செப்புத்தகட்டின் மத்தியிலே வைத்து, சிறிது பசு நெய்யும் சேர்த்து, மற்றோர் செப்புப் பாத்திரத்தால் நன்றாக இழைத்து எடுத்து, செப்புச் சிமிழில் வைத்துக் கொண்டு, அதனை அஞ்சனமாகக் கண்ணிற்குத் தீட்டிவர, கண்நோய்களெல்லாம் அற்று ஒளி உண்டாகும்.

## 21. மூக்கிலிடும் மருந்துகள்

### 1. ஆக்ராணம்

போமப்பா வாக்ராணஞ் சொல்லக் கேளு
புகழான சுண்டைவேர் தும்பை மூலம்
நாமப்பா விலுப்பைப்புண் ணாக்கும் சுட்டு
நலமாக முன்னிரண்டும் ரவியு லர்த்தி
சேமப்பா பொடிசெய்து வடிகொண் டேதான்
திறமான குழலடைத்தாக் கிராணஞ் செய்யத்
தாமப்பா தலையிலுள்ள தோஷ மெல்லாம்
சண்ணுண்டு போகுமடா வின்னங் கேளே. 567

சுண்டைவேர், தும்பைவேர், இலுப்பைப் பிண்ணாக்கு இவை சம அளவு. முதல் கூறிய இரண்டையும் உலர்த்திப் பொடித்து, இலுப்பைப் பிண்ணாக்கைச் சுட்டுப் பொடித்து, துணியில் வடித்துக் குழலில் அடைக்கவும். அளவுப்படி ஆக்ராணம் செய்யத் தலையில் உள்ள தோடமெல்லாம் போகும்.

### 2. நசியம்

தும்பையினலர் மழை துணர் சிந்துவார
வெம்புன லிவைகளில் வெடியிந்து மிளகு
சீரகமோமம் மிச்சிறு பொருண் மதித்துச்
சேரமாலலங் கனீர் சேமித்து நையவும்
காற்பாச முற்றிடக் கைகொடு நாசி
யேற்புறப் பிழிந்திட விரிந்திடு நோயெலாம். 568



தும்பைச்சாறு, நொச்சிக் கொழுந்துச் சாறு ஆகிய இவற்றில், வெடிப்பு, மிளகு, சீரகம், ஓமம் ஆகிய இவைகளைச் சமமாகச் சேர்த்து அரைத்து, மாத்திரையாகச் செய்து வைத்துக்கொண்டு, வேண்டும் பொழுது துளசிச்சாற்றில் உரைத்துப் பஞ்சில் நனைத்து நாசியிற் பிழியத் தலைவலி முதலிய சிரோ நோய்களெல்லாம் விலகும். இவ்வாறே குப்பைமேனிச் சாற்றிலும் உரைத்து உபயோகிக்கலாம்.

### 3. நாசிகா பரணம்

நாசிகாபரண நவில லுற்றனமா
விலுப்பையுஞ் சுண்டையும் இயலுறபாலையு
மூலமோர் பொடிதனை முன்னமே நாசிக்
கேலவே யிடப்பிணி யினமெலா மகலும்
பின்னரும் வல்லெருப் பிதிர்பொடி யிடலுமாம்
பொன்னெனு முனுமரிப் பொடியுமா முற்ற. 569

இலுப்பைவேர், சுண்டைவேர், பாலைவேர் இவைகளைப் பொடிசெய்து, நோய்களுக்குத் தக்கவாறு ஆக்ராணம் செய்ய எல்லா நோய்களும் நீங்கும். இல்லையேல், எருமுட்டைத் தூள், புகையிலைத் தூள் இவைகளையும் உபயோகித்துக் கொள்ளவும்.

# 22. வெளிமருந்துகள்

## 1. படிகார நீர், வெங்கார நீர்

படிகாரம் அல்லது வெங்காரம் பலம் ஒன்றுக்கு எட்டுப் படி நீர் விட்டுக் கலக்கிக்கொள்ளவும். வாய் கொப்பளிக்கவும், புண்களைக் கழுவவும் உதவும்.

## 2. வீரநீர்

வீரம் கிரெயின் ஒன்றுக்கு எட்டு அவுன்ஸ் நீர்விட்டுக் கலக்குவதே வீரநீர். பூச்சிகளைக் கொல்லவும் இரணங்களைக் கழுவவும் உபயோகிக்கலாம்.

## 3. வெங்காரப் பொடி

பச்சை வெங்காரத்தைச் சாணிப்பாலில் தோய்த்துத் துடைத்து உலர்த்தி நுண்ணிய பொடிசெய்து, புண்புரை புடைகளின்மீது தூவ, அவைகள் மாறும்.

## 4. புண் பொடி

சுத்தித்த கெந்தியை ஊமத்தங்காயுட் செலுத்தி,சாணத்தால் கவசித்து, இரண்டு வறட்டியிற் புடமிட்டெடுத்து, சாணத்தையும் காயின்மீதுள்ள முட்களையும் கத்தியால் நீக்கி, நிறுத்து, இதன் எடைக்கு நான்கு பங்கு துளசி



இலையைச் சேர்த்து, நனியரைத்து, வெயிலிலுலர்த்தி, சொறி, சிரங்குகள்மீது தேங்காயெண்ணெய் பூசியபின் தூவிவர ஆறும்.

## 5. ஓட்டு எருவை

தேங்காயெண்ணெய் 10 பலம், வெண்மெழுகு 4 பலம் ஆகிய இவ்விரண்டையுஞ் சேர்த்து உருக்கி, அதில் பூரம் 1 பலம், மிருதார்சிங்கு ½ பலம், துருசு ½ பலம் இவைகளைத் தனித்தனியே நுண்ணிய பொடியாகச் செய்து முறையே தூவித்தூவிக் கிண்டிப் பொங்குதல் நீங்கி எண்ணெய் தெளிந்தவுடன், ஒரு வாயகன்ற மட்பாத்திரத்தில் அரைப்பாகத்திட்டம் தண்ணீர்விட்டு, வாய்க்குச் சீலைகட்டி அச்சீலையி லாற்ற, எண்ணெய் கீழிறங்கிச் சரக்குகள் மாத்திரம் சீலையிற் றங்கும், இதை எடுத்துக் கல்வத்திலிட்டு வெண் குங்கிலியம் 4 பலம் சேர்த்து ஒரு சாமமட்டும் அரைத்து, பிறகு, சுத்தநீர் விட்டு 2 சாமமரைத்து, அந்நீரை வெளிப்படுத்தி, மேலும் இவ்வாருகவே 6 முறைசெய்து, எருவையைப் புட்டியில் அடக்கஞ் செய்து, வேண்டியபொழுது சீலையில் தடவி, சிறிது அனலில் வாட்டி, இரணங்களின்மீது போட்டுவர, அவைகள் ஆறும்.

## 6 பச்சை எருவை

வெள்ளைப்பாடாணம் 4 பலம், அரிதாரம் 4 பலம், சுண்ணும்பு 8 பலம், குங்கிலியம் 16 பலம் ஆகிய இவைகளை நல்லெண்ணெய் விட்டு மைபோலரைத்து, பிறகு நீர் விட்டரைத்து நீரை வெளிப்படுத்தி, மீண்டும் இவ்விதம் 9-முறை செய்யவும். இதை ஊன்வளரும் கட்டி, புண் முதலியவைகட் கிட ஆறும்.

## 7. வங்க வெண்ணெய்

வங்கச்செந்தூரம், மிருதார்சிங்கு வகைக்கு 5 பலம், துருசு 2½ பலம், ஆகிய இவைகளைக் கல்வத்திட்டு நுண்

பொடிசெய்து, ஒரு வீசை வெண்ணெய் சேர்த்தரைத்துக் கொள்ளவும். இரணங்கட்குத் தடவிவரக் குணமாகும்.

## 8. குங்கிலிய வெண்ணெய்

சுத்திசெய்த குங்கிலியம் 1 பலம், வன்னியிலைச்சாறு 1 ஆழாக்கு, பசுவின் நெய் 1 ஆழாக்கு ஆகிய இவைகளைக் கலந்து, சட்டியிலிட்டு எரித்து, சிறிதாறினபின் நீர் நிறைந்த ஓர் வாயகன்ற மட்பானையில் கொட்டி, மத்திட்டுக்கடையக் கட்டிகட்டியாக வெண்ணெய் திரளும். இதை ஓர் பாத்திரத்திட்டு, நீரைக்கொட்டி, ஒவ்வொரு தினமும் பழையநீரை நீக்கிப் புதுநீர் சேர்த்துவருக. இதில் நாளொன்றுக் கிருமுறையாகக் கொட்டைப் பாக்களவு கொடுக்க, பிரமேகம், மேகவிரணம், கீல்பிடிப்பு, வாதவித்திருதி, காசரோகம், நகங்களைப்பற்றி உண்டாகும் விரணங்கள் முதலியன நீங்கும்.

## 9. கிளிஞ்சல் மெழுகு

சிறு கிளிஞ்சலைச் சேர்த்து கரி நெருப்பிற் காய்ச்சி பச்சை நெல்லிக்காய்ச் சாற்றில் துவைக்கவும். இப்படி 3 முதல் 5 முறை செய்து, கல்வத்திட்டு சிற்றாமணக்கெணெய் சிறுகச் சிறுக விட்டு மெழுகு பதம் வருமட்டும் அரைக்கவும். இதைக் கால் வெடிப்புக்குப் பூசிவரத் தீரும்.

## 10. மிளகு மெழுகு

10 பலம் மிளகை 5 பலம் நெய் விட்டு மைபோல் அரைத்துத் தடவிவர புடைகள் நீங்கும். தலைவலிக்கும் தடவலாம்.

## 11. மேக விரணக் களிம்பு

இலிங்கம், சூதம், பூரம், வீரம், பால்துத்தம், மயில் துத்தம், மிருதார்சிங்கு, நீரடிமுத்து, கார்போகவரிசி, கசகசா, மஞ்சள் மெழுகு இவை வகைக்கு ½ பலம், மெழுகு



நீங்க மற்றவைகளைக் கல்வத்திட்டுப் பொடித்து, மெழுகு சேர்த்தரைத்து, பிறகு தேங்கா யெண்ணெய் விட்டரைக்கவும். இதைத் தடிப்புள்ள விரணங்கட்குத் தடவிவரத் தடிப்புக் கரைந்து ஆறும்.

## 12. வெள்ளை மெழுகு

..............................................................

வேகுமே வரையாப்புத் தீரவென்றால்
வெள்ளைப்பா டாணமதை மெழுகி லூட்டி
ஏகமே வில்லைதட்டி வெதுப்பிக் கட்ட
விருந்தவிடந் தெரியாம லேகும் பாரே. 570

மஞ்சள் மெழுகை உருக்கி, இளஞ்சூடாயிருக்கும் பொழுது வெள்ளைப்பாடாணப் பொடியைச் சேர்த்துக் கிண்டி, வேண்டியளவு எடுத்து, வில்லைதட்டி அனலில் காட்டி அரையாப்பு மீது போடத் தீரும். அதாவது அழுந்திவிடும்.

குறிப்பு:—மெழுகு 1 எடை, தேங்காய் நெய் ½ எடை, வெள்ளைப் பாடாணம் 1/10 எடை; இந்த அளவில் கூட்டி மேற்சொன்ன விதிப்படி செய்துகொள்ளவும். தடித்த துணித்துண்டில் வேண்டியவளவு தடவி, கட்டிகள், பிளவைகள், ஆறாத இரணங்கள் ஆகிய இவைகள்மீது போடலாம்.

## 13. (அமிர்தமெழுகு) வீரக்குழம்பு

செய்யடா சவ்வீரக் குழம்பு தன்னைத்
திறமாக வோர்கழஞ்சு சிந்தி டாமல்
பையடா நுணுக்கியபின் ஞவின் வெண்ணெய்
படிகால் வாங்கிப் பண்பாய்க் கூட்டி
நையடா விருசாம மொன்று யாட்டி
நலமான பரணியிலே யடைத்து வைத்து
வையடா பிளவைமுதல் மார்பிலாணி
மகத்தான புண்பொடிக ளாறுந் தானே. 571

ஆறுந்தா னிச்குழம்பி லெல்லாம் போகும்
அப்பனே பழங்காடி புளியிலே வெந்த
கூருக வந்திசந்தி காடியாற் கழுவிக்
கூட்டுவாய் சீலைகொண்டே யந்நீர் மாற்றி
வேறுபடி யிளஞ்சீலை களிம்பை யூட்டி
விரைந்துநீ போடுபுண்க ளாறு மட்டுந்
தாறுமா றுய்ப்புரையும் புண்ணு மாறித்
தழும்புகடுத் தளர்ந்துவிடுந் தண்மை பாரே. 572

தண்மையாச் சொல்லிவிட்டோ மடக்கம் விட்டு
சாத்திரத்தை யொருவருக்குங் காட்டவேண்டாம்
உண்மையாய்ப் பட்சத்தோர்க் குரைக்க நன்றும்
முத்தமியாள் தசதீட்சைக் குள்ளே சொக்கி
வண்மையாங் கபடற்ற பேர்க்கு மைந்தா
வகை பிரித்துக் காட்டினுல் மகிமை யுண்டு
பண்மையா யிந்நூலைப் பார்த்த பேர்கள்
பண்டித சிரோமணியாம் பாரு பாரே. 573

1½ வராகனெடை வீரத்தைக் கல்வத்திட்டு நன்றாகப் பட்டுப்போல் பொடித்து, பசு வெண்ணெய் ½ படி கொண்டு சிறிது சிறிதாக கல்வத்திற் சேர்த்து வீரத்துடன் 2 சாமம் கலந்தரைத்து, பிறகு ஏழுமுறை நீர்விட்டரைத்துக் கழுவி, நீரை நீக்கிப் பரணியில் அடைக்கவும். இதனை மேற்பூச்சாக பிளவை, மார்பாணி, புண் ஆகிய இவைகட்குப் போடக் காயும். கழுநீராக புளியிலையை பழங்காடியிற் சேர்த்துக் கொதிக்க வைத்துப் பயன்படுத்தவும். இக்களிம்பைச் சீலையி லூட்டி புரையோடும் புண்களுக்கிட ஆறும்.

## 14. குன்றிப் பத்து

தீர்த்திட வாயுப் பிடிப்புடனே
தீரவு நானோர்பற்று சொல்வேன்
பார்த்திடச் சூதம் வராகனிரண்டு
பண்பான வங்கப் பொடியிரண்டு



கார்த்திட விரத்த பாளமுடன்
கண்டு பாரங்கி குன்றிவித்து
சார்த்திடச் சஞ்சீவி யாளிவிதை
சண்டாள மூதேவி எட்டிவித்தே. 574

வித்தே அண்ட வெண்கருவை
விட்டரை சாம மாட்டினபின்
சற்றே நல்லெண்ணெய் கொஞ்சம்விட்டுச்
சடாட்சர காயம் வராகன்போட்டு
மத்தைக் கொண்டோ றரைப்பரைத்து
மைந்தா வினைமேல் பூசிடவே
கத்தேகதறி யோடிவிடும்
கர்ம வினையுடன் ஊழ்வினையே. 575

கர்மப் பிடிப்பு வீக்கமுடன்
கன்னியர் கர்ப்பக் கால்வீக்கம்
தர்மக்கு டைச்ச லிடுப்புளைப்பு
தண்ணீர் தேங்கின மேகவாயு
மர்ம மரை யினுப்புடனே
மகிழ்ந்த நரம்புத் தொடைவாழை
வர்மம் வம்பு சூந்யமும்
வாரா தென்றே யுரைத்தோமே. 576

இரசம் 2 வராகனெடை, வங்கப்பொடி 2 வராகனெடை: வங்கத்தை உருக்கி, இரசத்தைத் தொந்தித்து, கல்வத்திட்டுப் பொடித்து, அத்துடன் மூசாம்பரம், கண்டு பாரங்கி, குன்றிவித்து, ஆளிவித்து, எட்டிவித்து வகைக்கு 2 வராகனெடை எடுத்து, பொடித்து சேர்த்து, கோழிமுட்டை வெண்கருவால் குழியம்மியில் ஒரு சாமம் நன்றாக அரைத்துச் சற்று நல்லெண்ணெய் விட்டுப் பெருங்காயம் வராகனெடை ஒன்று சேர்த்து, அரைத்து வைக்கவும்.

இதனை மேற்பூச்சாகப் பூச, பிடிப்பு, வீக்கம், பெண்கள் கர்ப்பகாலததுண்டாகும் கால்வீக்கம், குடைச்சல், இடுப்பு

உளைப்பு, மூட்டுகளில் நீர்தங்கின மேகவாய்வு, அரையாப்பு தொடைவாழை இவைகள் தீரும்.

## 15. படை சங்காரன்

............ .. ..............................................

................................ ..................

" சாவதில்லை யிவைக்கெல்லாம் படர்தா மரைக்குச்
சாதகமா யைங்கோல வேரின் பட்டை
காவதிக மருக்காரை வேரின் வித்து
கழஞ்சிரண்டு பழச்சாற்றிற் கரைய ஆட்டே. 577

ஆட்டியே பாக்களவாய் மூன்றுங் கூட்டி
அப்பனே யுள்ளுக்கு மேலும் பூசு
வாட்டியே யுதிர்ந்திவிடு மின்ன மொன்று
வளரெருக்கு வேர்ப்பட்டை கம்பின் பட்டை
நாட்டியதோர் தகரைவிதை சேரக் கூட்டி
நாழிப்பால் தன்னிலிட்டுக் காய்ச்சி யாற்றித்
தாட்டியே யரைத்தருந்த மேலும் பூசத்
தனித்தனியே திருமடா சாற்றக் கேளே. 578

அழிஞ்சில்வேர்ப்பட்டை, மருக்காரைவேர், மருக்காரை வித்து, இவை வகைக்கு 2½ வராகனெடை: இவைகளைப் பொடித்துக் கல்வத்திட்டுப் பழச்சாற்றினுல் நன்ருக மை போலாகும்படி அரைத்து, உள்ளுக்கும் கொடுத்து, மேலுக்கும் பூசப் படைகள் உதிர்ந்து விடும்.

### வேறு

எருக்கன்வேர்ப்பட்டை, கம்பின்பட்டை, தகரைவிதை ஆகிய இவைகளைச் சம அளவு கூட்டிப் பசும்பாலில் காய்ச்சி, அப்பாலில் அரைத்து உள்ளுக்கும் சாப்பிட்டு மேலுக்கும் பூசப் படைகள் எல்லாம் தீரும்.

# மருந்துகள் அகரவரிசை

[ எண் — பக்க எண் ]


### அ

அகத்தியர் குழம்பு 197
அப்பிரக சுத்தி 114
அப்பிரக பற்பம் 115, 128
அப்பிரகச் செந்தூரம் 151
அமுர்தாதி குளிகை 1
அமுக்கராச் சூரணம் 248
அயக்காந்தச் செந்தூரம் 155
அயச்சுத்தி 84
அயச் செந்தூரம் 153
அய பற்பம் 85, 89
அயபிருங்கராஜ கற்பம் 272
அயவீரச் செந்தூரம் 156
அயஜம்பீரக் கற்பம் 271
அர்க்கக்ஷீராதித் தயிலம் 305
அரக்குத் தயிலம் 303
அர்த்த நாரீஸ்வரம் 611
அன்னபேதிச் செந்தூரம் 159
அஷ்ட பயிரவ குளிகை 2

### ஆ

ஆக்ராணம் 354
ஆடாதோடைக் குடி நீர் (1) 342
ஆடாதோடைக் குடி நீர் (2) 343
ஆடாதோடை நெய் 290
ஆடாதோடை மணப் பாகு 301
ஆமை ஓடு பற்பம் 147
ஆறுமுகச் செந்தூரம் 151
ஆனந்த பயிரவம் 3

### இ

இஞ்சி இரசாயனம் 249
இஞ்சிச் சூரணம் 259
இஞ்சி இலேகியம் 288
இஞ்சி வடகம் 268
இடிவல்லாதி 207
இம்பூரல் இலேகியம் 289
இம்பூரல் வடகம் 268
இரசகந்தி மெழுகு 204
இரசச் செந்தூரம் 160
இரசத் தயிலம் 306
இரச பூபதி 4
இரச மெழுகு 203
இரத சிந்தாமணி மாத்திரை 59
இராம பாணம் 6
இராஜ ராஜேஸ்வரம் 6
இருமல் மாத்திரை 62
இலங்கேஸ்வரம் 83
இலவங்காதி மாத்திரை 58

இலிங்கச் செந்தூரம் 159
இலிங்கப் பதங்கம் 192
இலிங்க பூபதி 7

உ

உப்புச் செந்தூரம் 163, 164
உலோக மண்டூரச் செந்தூரம் 164
உழுந்துத் தயிலம் 307

ஊ

ஊழி காலன் 55
ஊழி மாத்திரை 57

எ

எமதண்டக் குளிகை 8

ஏ

ஏலாதிச் சூரணம் 250

ஐ

ஐய வெப்புக் குடிநீர் 342

ஒ

ஒட்டு எருவை 357

ஓ

ஓமத் தீநீர் 347

க

கடக்ரோகணி வடகம் 263
கட்டுவாங்கத் தயிலம் 308
கணத் தயிலம் 309
கணேசக் குளிகை 10
கண்காச மாத்திரை 9
கத்தூரிக் கருப்பு 187
கத்தூரி மாத்திரை 13
கந்தகச் சுடர்த் தயிலம் 310
கந்தகச் செந்தூரம் 165
கந்தக பற்பம் 150
கந்தக வடகம் 270
கந்தக இரசாயனம் 275
கந்தி மாத்திரை 69
கந்தி மெழுகு 235
கபாட மாத்திரை 10
கரப்பான் தயிலம் 311
கரவால வயிரவம் 11
கரிசாலை இலேகியம் 278
கரிப்வேப்பிலை வடகம் 269
கருடன் கிழங்கெண்ணெய் 312
கருணை இலேகியம் 281
கலிக்கம் 352
கலிங்காதித் தயிலம் 327
கலியாண வயிரவம் 12
கல்லுடைக் குடோரி 56
கல்நாரு பற்பம் 125
கழற்சித் தயிலம் 314
காக்கண மாத்திரை 72
காடிகாரச் செந்தூரம் 183
காதுநோய்த் தயிலம் 315
காந்த சுத்தி 119
காந்தச் செந்தூரம் 165
காந்த பற்பம் 89
காரீய சுத்தி 104
காரீய பற்பம் 100
காருண்ய வயிரவம் 14
கிராம்பு பக்குவ வெண்ணெய் 350
கிளிஞ்சல் மெழுகு 358
குங்கிலிய பற்பம் 148
குங்கிலிய வெண்ணெய் 299, 358
குங்குமப்பூ மாத்திரை 58
கும்மட்டிக் குழம்பு 210
கும்மட்டிச் சூரணம் 251
குன்ம குடோரி 235



குன்றிப் பத்து 360
குஷ்ட கஜகேசரி 15
கேசரி இலேகியம் 289
கையான் தயிலம் 316
கோடாசூரிக் குளிகை 15
கோரோசனத் துகள் 188
கோரோசன மாத்திரை 20
கௌசிகர் குழம்பு 235
கவுரி சிந்தாமணிச் செந்தூரம் 167

ச

சகதேவித் தயிலம் 324
சங்கத் திராவகம் 348
சங்கர வயிரவம் 21
சங்கு பற்பம் 140
சஞ்சீவி மாத்திரை 22
சண்டரச பற்பம் 131
சண்ட மாருதம் 172
சந்நிபாத வயிரவம் 23
சரபங்கவில்வாதி லேகியம் 282
சாதி சம்பீரக் குழம்பு 213
சாதிலிங்க பற்பம் 130
சாந்த சந்திரோதயம் 24
சாம்பிராணிப்பூக் குளிகை 25
சாம்பிராணிப் (பூ) பதங்கம் 194
சித்த வயிரவம் 27
சித்தாதி எண்ணெய் 316
சித்திரமூலத் தயிலம் 319
சிருங்கிச் செந்தூரம் 184
சிருங்கி பற்பம் 141
சிலாசத்து பற்பம் 126
சிவதைச் சூரணம் 252
சிவனார் அமிர்தம் 189
சிவனார்வேம்புச் சூரணம் 252
சிறுமாந்தத் தயிலம் 328
சிற்றண்ட மெழுகு 214
சீந்திற் சூரணம் 254
சீரகச் சூரணம் 246
சீரகத் தயிலம் 320
சுக்குத் தயிலம் 320
சுண்டைவற்றல் சூரண 255
சுயமாக்கினி செந்தூரம் 172
சுவச்சந்த வயிரவம் 28
சுவாச குடோரி 73
சூதப் பற்பம் 131
சூலைக் குடாரம் 29
சூலைக்குடாரத் தயிலம் 322
சூலை பூபதி 29
சேங்கொட்டை நெய் 298
சோம்புத் திநீர் 347

த

தங்க பற்பம் 143
தங்கச் செந்தூரம் 173
தமரகக் குடிநீர் 344
தயிர்ச்சுண்டிச் சூரணம் 256
தாம்பிரசுத்தி 119
தாம்பிரச் செந்தூரம் 174
தாம்பிர பற்பம் 119
தாழம்பூ மாத்திரை 30
தாளகச் செந்தூரம் 175
தாளக பற்பம் 133
தாளகக் கருப்பு 188
தாளிசாதிச் சூரணம் 263
தாளிசாதி வடகம் 270
திப்பிலி இரசாயனம் 275
திராட்சாதி சூரணம் 262
திரிதோட மாத்திரை 73
திரிலோக ரட்சாமணி 31
திருமூர்த்திப் பதங்கம் 192
தீபாக்னிச் சூரணம் 247
துருஞ்சி மணப்பாகு 302
துருசுச் செந்தூரம் 185
தூதுவளை நெய் 291

தேங்காய்க் குழம்பு 209
தேற்றுங்கொட்டை இலேகியம் 284

ந

நண்டுக்கல் பற்பம் 146
நண்டுத் திநீர் 347
நந்திமை 215
நசியம் 354
நவகண்ட பூபதி 63
நவக்கிரக பூபதி 65
நவநீதப் பற்பம் 133
நவரசத் துவையல் 224
நவலோகாக்கினி குமாரன் 33
நவவுப்பு மெழுகு 222
நவாச்சாரக் குழம்பு 225
நன்னாரி மணப்பாகு 301
நாகச் செந்தூரம் 178
நாக பற்பம் 139
நாக்குபூச்சிக் குடிநீர் 344
நாசிகாபரணம் 355
நாசிரோக நாசத்தயிலம் 323
நாயுருவி உப்பாதிக் குழம்பு 226
நாரத்தை இலேகியம் 285
நிலவாகைச் சூரணம் 258
நிலவேம்புக் குடிநீர் 342
நீர்க்கோவை மாத்திரை 74
நீர்முள்ளிக் குடிநீர் 343
நீலாஞ்சனமை 351
நொச்சிக்குடிநீர் 242
நொச்சித் தயிலம் 325, 326

ப

பச்சை எருவை 357
பச்சைக்கற்பூரமாத்திரை 34
பஞ்சசூத மெழுகு 227
பஞ்சதீபாக்கினிச் சூரணம் 257
பஞ்சதீபாக்கினி இலேகியம் 277
பஞ்சமூலச் சூரணம் 266
பஞ்சலவணபற்பம் 136
பட்டுக்கருப்பு 190
படிக வெங்கார பற்பம் 149
படிகாரச் செந்தூரம் 185
படிகலிங்கச் செந்தூரம் 184
படிகார நீர் 356
படைசங்காரன் 362
பரங்கிப் பட்டைச் சூரணம் 259
பருத்தி (விதைச்) சூரணம் 259
பலகறைப் பற்பம் 144
பவள பற்பம் 142
பறங்கிப்பட்டைப் பதங்கம் 192
பாகற்கடுக்காய் 272
பால சஞ்சீவி 35
பாஷாண மாத்திரை 37
பிடங்க (புறங்கை) நாறிக் குடிநீர் 343
பித்தவெப்புக் (பித்தசுரக்) குடிநீர் 342
பிரண்டைச் சூரணம் 260





பிரண்டைவடகம் 267, 269
பிரதா பாக்கினி குமாரன் 38
பிரதாபாக்கினி பூபதி 66
பிரமார்நந்த வயிரவம் 36
பிரமி நெய் 298
பிரளயகால ருத்திரன் 55
பீனசத் தைலம் 326
புண்பொடி 356
புளியாரை நெய் 293
புன்கம்பூச் சூரணம் 260
பூத வயிரவம் 40
பூமணி மாத்திரை 68
பூர மாத்திரை 41
பூரணச் சந்திரோதயம் (செந்) 179
பூரணச் சந்ரோதயம் (மாத்) 69
பேரண்டப் பற்பம் 138

ம

மகா ஏலாதிக் குளிகை 41
மகாராஜ மிருகாங்கம் 75
மகா வசந்த குசுமாகரம் 77
மகா வீர மெழுகு 234
மண்டூரச் செந்தூரம் 180
மண்டூராதி அடைக் குடிநீர் 344
மதகஜ கண்டீரவம் 81
மதன வயிரவம் 43
மயனத் தயிலம் 335
மயிலிறகாதிச் சூரணம் 261
மலக்குடார மெழுகு 234
மனோகர வயிரவம் 44
மாதுளை மணப்பாகு 302
மாந்த எண்ணெய் 328
மாந்தத்தயிலம் (சிறு) 328
மிளகாய்த் தயிலம் 329
மிளகு மெழுகு 358
முத்துச் சிப்பி பற்பம் 145
முத்துப் பற்பம் 127
முருக்கம்விதை (மாத்) 45
மூக்கிரட்டைச்சூரணம் 261
மெருகுத் தயிலம் 330
மெருகுள்ளி தயிலம் 330
மேகநாதக் குளிகை 46
மேகநாதத் தயிலம் 331
மேக விரணக் களிம்பு 303
மை 358

ல

லகு விஷமுட்டித் தயிலம் 340

வ

வங்கவெண்ணெய் 351
வங்க சுத்தி 95
வசந்த குசுமாகரம் 47
வரணைத் தயிலம் 111
வல்லாரை நெய் 294
வளிவெப்புக் (வாத சுர) குடிநீர் 342
வாதகேசரித் தயிலம் 337
வாதநாசத் தயிலம் 338
வாதராட்சசன் 48
வாலை சிந்தாமணி 83
வாழை வடகம் 267
வான் மெழுகு 230
விதாரண வயிரவம் 49

விரணசஞ்சீவித் தயிலம் 339
விரேசன பூபதி மாத்திரை 50
விஜய வயிரவம் 51
விஷக் குழம்பு 233
விஷ்ணு சக்கர மாத்திரை 52
வீரக் குழம்பு 359
வீர நீர் 356
வெங்கார பற்பம் 150
வெங்காரப் பொடி 356
வெங்கார மாத்திரை 52
வெடியுப்புச் சுண்ணம் 186
வெடியுப்புத் திராவகம் 348
வெண்பூசனிக் கிருதம் 297
வெண்பூசனை இலேகியம் 287
வெள்ளிச் செந்தூரம் 185
வெள்ளி பற்பம் 128
வெள்ளீய பற்பம் 87
வெள்ளை மெழுகு 359
வெற்பேந்தி எண்ணெய் 101

ஜ

ஜலோதாரிமணி 54

க்ஷ

க்ஷய குலாந்தகச் (செந்) 182

No. 103660